வெளியீடு 24-11-84] [Issued 24-11-84

ஆணையர்
8 MAR 19
2777

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 21, 1984 - தொகுதி LXII எண் 2
Wednesday, the 21st March 1984 - Volume LXII No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரு. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

2777

T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: LXII NO: 2

March 21st 1984

©

V211,31 N84
N84.62.2;1
136238

D
V211.31 N84
N84.62.231
136238
600 008.

# உள்ளடக்கம்.

21—3—1984

பக்கங்கள்.

1. இரங்கல் குறிப்பு :

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. சாமியா கூறாயர் மறைவு குறித்து.. .. 313

2. வினாக்கள்—விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 314—352

3. ஒத்திவைப்புத் தீர்மானம் :

உறுப்பினர்கள் விடுதிக்கு முன் நிறுத்தப்படுகிற வாடகை ஆட்டோ, கார் ஓட்டுநர்களின் நடத்தை குறித்து .. .. 352—362

4. அறிவிப்புகள் :

(அ) சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி வராண்டா வளாகம் பாதுகாக்கப் பெறுவது .. .. 363

(ஆ) முன்பண மானியக் கோரிக்கைகள் 1984-85 (ஆ.இ.) .. .. .. .. .. 363

(இ) இறுதித் துணை நிதிநிலை அறிக்கை 1983-84 (ஆ.இ.) .. .. .. .. 363

5. கவன ஈர்ப்புகள் :

(அ) எண்ணூர் ஸ்டீல் எண்டர்பிரைசஸ் தொழிற் சாலையில் ஏற்பட்ட விபத்து .. .. 364—366

(ஆ) கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்த கைத்தறித் துணிகளுக்குப் பணம் கொடுக்காமல் இருப்பது .. .. .. 366—370

ழ2 A 20—1

பக்கங்கள்

6. வரவு செலவுத் திட்டம், 1984-85 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண் 20—வேளாண்மை .. 370—371, 446

(ஆ) கோரிக்கை எண் 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. .. .. .. 371—372, 446—447

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து 372
திரு. ரா. பெரியசாமி 372—378
திரு. தி. அன்பழகன் 378—382
திரு. த. வேணுகோபால் 382—387
திரு. ஏ. பாலுச்சாமி 387—391
திரு. எம். செல்லமுத்து .. .. .. 391—397
திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி 397—400
திரு. பொ. உத்திராபதி 400—406
திரு. ரா. கு. பெருமாள் 406—408
திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் 408—409
திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் 409—416
திரு. ஆ. வெள்ளைச்சாமி 416—419
திரு. இரெ. இராசமாணிக்கம் 419—424
திரு. மா. சின்னராசு 424—429
திரு. இரா. கருப்பையா 429—430
திரு. எஸ். சிவராமன் 430—437

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. 447

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984, மார்ச் 21, புதன்கிழமை

பங்குனி 8, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்;

''சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை''

உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும், ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது. அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

## 1. இரங்கல் குறிப்பு.

### முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. சாமியா கூறாயர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஜி. சாமியா கூறாயர் அவர்கள் 16—3—1984 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. சாமியா கூறாயர் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை, தஞ்சாவூர் மாவட்டம் சாலியமங்கலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்).

## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சித்தப்பட்டினம் கால்வாய்த் திட்டம்.

382—(*வினா எண் 19337)—திரு. ஆர். சுந்தரமூர்த்தி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூர் தாலுகா முகையூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ''சித்தப்பட்டினம் கால்வாய்த் திட்டம்'' செயல்படுத்தத் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அந்தக் கால்வாய்க்கு சாத்தனூர் அணையிலிருந்து தண்ணீர் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.
(ஆ) ஆம்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்வாய்த் திட்டம் நல்ல முறையில் விவசாயிகளுக்கு உதவும், அங்கு உணவு உற்பத்திக்கு உபயோகமாக இருக்கும் என்று சொல்லியும், நீண்ட காலதாமதம் ஆவதற்கு, என்ன காரணம் ? இல்லையென்றால், என்ன காரணத்தினால், அது அமல் படுத்தப்படாமல் இருக்கிறது?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் தாலூகா, முகையூர் ஊராட்சி ஒன்றிய பகுதியில் ''சித்தப்பட்டினம்'' ஏரியை நவீனப்படுத்துவதில் எந்தவிதமான சிக்கலும் இருப்பதாகத் தெரியவில்லை. தலைமைப் பொறியாளர் ஆய்வில் இத்திட்டம் இருக்கிறது. ஆய்வு முடிந்த பிறகுதான் எதையும் சொல்லமுடியும்.

### சாத்தூர் ஏரிக்கு வரும் வரத்துக் கால்வாயில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள்.

383—(*வினா எண் 19923)—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தாலுகா சாத்தூர் ஏரிக்கு வரும் மூன்று கண்மாய்களையுடைய வரத்துக் கால்வாயைப் பக்கத்திலுள்ள பட்டாதாரர்கள் தங்களுடைய நிலத்தோடு ஆக்கிரமித்து, கால்வாயைத் தூர்த்துவிட்டதை அரசு அறியுமா?



(ஆ) ஆக்கிரமிப்புக்காரர்களை அகற்றி நீர்வரத்தைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.

(ஆ) இக்கால்வாய் தற்போதைய நிலையில் தேவையான தண்ணீரை எடுத்துச் செல்லும் திறனுள்ளதால், இதற்கு மேம்பாடு மற்றும் மராமத்துப் பணிகள் எதுவும் தேவையில்லை; இருப்பினும் இக்கால்வாயிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

### விளாத்திகுளம் தொகுதியிலுள்ள கிராமங்களில் புதிய குளங்கள் அமைக்கும் திட்டம்.

384—(*வினா எண் 22653)—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, குமாரசக்கனாபுரம், முத்தையபுரம், சுப்பலாபுரம், சின்னூர் ஆகிய கிராமங்களில் புதிய குளங்கள் அமைக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவைகளின் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் வட்டம், சுப்பலாபுரம் கிராமத்தில் ரூ. 3.35 லட்ச மதிப்பீட்டிலும், சின்னூர் கிராமத்தில் ரூ. 7 லட்ச மதிப்பீட்டிலும் குளங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளன. குமாரசக்கனாபுரம் மற்றும் முத்தையாபுரம் கிராமங்களில் குளங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் ஆய்வில் இல்லை.

(இ) ஆய்வில் உள்ள திட்டங்கள் இறுதியாக்கப்பட்டு அரசின் ஒப்புதல் அளித்த பின் வேலைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்மாய்களின் மூலமாக எத்தனை ஏக்கர் நிலங்கள் சாகுபடி பெறும்? அவற்றிற்கு எந்தக் கால்வாய் மூலமாக தண்ணீர் வரும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

[1984 மார்ச் 21

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, சின்னூர் கிராமத்தில் ரூ. 7 இலட்சம் மதிப்பீட்டில், அங்கு உள்ள குளத்தின் வாயிலாக 143 ஏக்கர் 64 சென்ட் நிலம் பாசன வசதி பெறும். எதிர்பார்க்கப்படும் உணவு உற்பத்தி 102.21 டன்கள்.

## திருச்சி-தஞ்சை மாவட்டங்களில் பால்பண்ணை அமைக்கும் திட்டம்.

369—(*வினா எண் 17230)—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் பால்பண்ணை அமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ), (ஆ) மற்றும் (இ)—தஞ்சை மற்றும் திருச்சி மாநகரங்களில் நாளொன்றுக்கு 16,000 லிட்டர் பாலைப் பக்குவிக்கும் திறன் கொண்ட பால் பக்குவிக்கும் ஆலைகள் தற்சமயம் இயங்கி வருகின்றன. திருச்சியிலுள்ள பால் பக்குவிக்கும் தொழிற்சாலையை மேலும் விரிவாக்க ரூபாய் 266.13 இலட்சம் மதிப்பீட்டுக்குத் திட்ட அறிக்கை ஒன்று, பால் பெருக்குத் திட்டம் 2-ன் கீழ் அமைக்க, ஒப்புதல் வேண்டி, இந்திய பால்பண்ணை கழகத்துக்கு அனுப்பப்பட்டு அதன் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டையில் நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று ரூ. 19.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. இது 1984-85-ம் ஆண்டு செயல் படவுள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி, தஞ்சை பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் பால் பண்ணை அமைப்பது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவரங்களைத் தெரிவித்தார்கள். இன்னும் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் உள்ள பல்வேறு இடங்களில் பால் பண்ணை அமைக்கவேண்டும் என்ற கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்து அதை அரசு ஆய்வு செய்துள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



1984 மார்ச் 21]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தேவையான விவரங்களை அளித்து இருக்கிறேன்.. முதல் கட்டமாக அங்கு அமைக்கப்படும். பிறகு தேவைகளை அனுசரித்து, தேவையான இடங்களில் தொடங்கப்படும்.

## மேட்டு சக்கனாக்குப்பத்திலிருக்கும் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம்

378—(*வினா எண் 17011)—திரு. பி. சுந்தரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி ஜோலார்பேட்டை பேரூராட்சியில் உள்ள மேட்டு சக்கனாகுப்பத்தில் இருக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை உடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) வீட்டு மனைக்கான நில ஆர்ஜிதத்தை எதிர்த்து நில உரிமையாளர்கள், சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கின் மீது, நில உரிமையாளர்களுக்குச் சாதகமாக உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து, தமிழக அரசு உச்சநீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளது. உச்சநீதி மன்றத்தில் தீர்ப்பு அளிக்கப்பட்டவுடன் மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு.எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது, உச்ச நீதி மன்றத்தில் வழக்கிருப்பதாகத் தெரிவித்தார்கள். இந்த ஒரு மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகத்தில் உள்ள எல்லா இடங்களிலும் இந்த மக்களுக்கு இடம் எடுத்துக்கொடுக்கின்ற திட்டத்தை அரசாங்கம் நல்ல எண்ணத்தோடு கொண்டு வந்திருக்கிறது. ஆனால் இந்தத் திட்டத்திற்கு இடையூறு செய்யும் வகையில் நில உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லுகிறார்கள். எனவே அரசாங்கம் தக்க வல்லுநர்களைக் கொண்ட குழுவை வைத்து செயல்படாத காரணத்தால், நீண்டகாலமாக இது போன்ற ஆயிரக்கணக்கான மனுக்கள் உச்ச நீதிமன்றத்திலே இருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. எனவே இதை ஸ்பெஷல் ஸ்கீமாக எடுத்து, அரசாங்கமே நேரடியாக நல்ல

வல்லுநர்களைக் கொண்டு, அட்டவகேட்டுகளைக் கொண்டு இதைச் செய்வதற்கு, ஒரு ஸ்பெஷல் ஆபீசரை அனுப்பி, இதைக் கண்காணிப்பதற்கு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, நில ஆர்ஜிதங்கள் செய்கிறபோது, அவை விரைவாகவும், அதே நேரத்தில் அந்த மக்களுக்குப் பயன்படுகிற விதத்திலேயும் இருக்கவேண்டும் என்றுதான் இந்த அரசு புதிய சட்டத்தைக் கொண்டு வந்தது. ஆனால் அந்தச் சட்டம் செல்லாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்ததினால், தற்போது அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திலே இருக்கின்றது. தமிழக அரசு, அதற்கான மேல் முறையீட்டைச் செய்துள்ளது. குறிப்பாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் 93 வழக்குகள் தற்போது நிலுவையில் இருக்கின்றன. இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், தமிழக அரசைப் பொறுத்தவரையில் நேரடியாக இதிலே ஈடுபட முடியாது என்ற நிலை இருந்தாலும், கூட, புது டெல்லியில் உள்ள தமிழக அரசின் வழக்கறிஞரைக் கலந்து பேசி, எந்த அளவிற்கு விரைவான நடவடிக்கைகளை எடுக்கமுடியுமோ, அந்த அளவிற்கு, அவர்களைக் கேட்டுக் கொள்வதன் மூலமாக அரசு இதை ஆராயும்.

(முற்பகல் 9-10)

**திரு. க. ரங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்குச் செய்யப்படுகிற அந்த நில ஆர்ஜிதத்தை எதிர்த்து, நில உரிமையாளர்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பதாக சொல்கிறார்கள் நில ஆர்ஜிதம் செய்யப்படுகிறபோது அவர்களுக்கு கொடுக்கப்படுகிற நஷ்ட ஈடு, மார்க்கெட்டில் இருக்கிற நிலவரத்திற்கும், மிகக் குறைவாக இருப்பதன் காரணத்தால், அவர்கள் இப்படி நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதில் காலதாமதம் ஏற்படுவதன் காரணமாக, நாளுக்கு நாள், விலையும் அதிகமாகிக் கொண்டே போகிறது. ஆகவே, ஓரளவிற்கு மார்க்கெட் விலையை ஒட்டி, அந்த நஷ்ட ஈட்டை வழங்க, மாவட்ட அளவிலே கமிட்டி அமைத்து உடனடியாக நில ஆர்ஜிதம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய நிலங்களை ஆர்ஜிதம் செய்கிறபோது, அதற்கென்று தனியாக தொகை அளவு வகுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான், தற்போது அந்த நிலச்சொந்தக்காரர்களுக்கு அந்த நஷ்ட ஈட்டுத் தொகை கொடுக்கப்படு



கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல மார்க்கெட் வேல்யூபடி கொடுக்க வேண்டும் என்று பல மாவட்டங்களில் இருந்து வரக்கூடிய கோரிக்கைகள் அமைந்திருக்கின்றன. அத்தகைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைமையிலே இருந்தாலும் கூட, அரசு தனியாக குழுவை அதற்காக அமைக்கவேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, நிலச் சொந்தக்காரர்கள் அரசுக்கு அது குறித்து விவரங்களை எடுத்துச் சொல்வார்களேயானால், அதன் மீது நடவடிக்கை எடுத்து, மார்க்கெட் வேல்யூவிற்கு ஏற்ற அடிப்படையில் அவர்களுக்குத் தேவையான நிதிஉதவி அளிக்கக்கூடிய வகையில் நடவடிக்கைகள் எடுக்கலாம்.

**திரு. த. வேணுகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் 93 வழக்குகள் நீதிமன்றத்திலே இருப்பதாகச் சொன்னார்கள். அவை முடிந்தும் கூட இன்று வரையில் அந்த வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள, தாழ்த்தப்பட்ட அரிசன மக்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வீட்டு மனைகள் அரசாங்கத்தால் ஒதுக்கித் தரப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதே போல நீதிமன்றத்திற்கே செல்லாமல் உரிய நடவடிக்கை எடுக்க அரசுமுன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** அரசு நிலங்களை எடுத்துவிட்ட பிறகும் கூட, அளந்து கொடுக்கப்படாத இடங்கள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் அத்தகைய நிலைமைகள் வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் அல்ல, வேறுசில இடங்களிலும் இருப்பதாக உணர்ந்து, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், அத்தகைய நிலைமைகளை உடனே போக்கவேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. மன்றத்திற்கே அவர்கள் செல்லக் கூடாது என்று சொல்வதற்கு அரசைப் பொறுத்த வரையில் எந்தவிதமான அதிகாரமும் கிடையாது.

**திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்கு நில ஆர்ஜிதம் செய்கிறபோது, நில உரிமையாளர்கள் அதை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வதற்கே வழி இல்லாமல் சட்டம இயற்ற அரசு முன்வருமா அல்லது அந்தச் சட்டத்தை மத்திய அரசுதான் இயற்ற வேண்டும் என்ற நிலை இருந்தால், மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 21

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய நடவடிக்கைகளை நம்மால் எடுக்க முடியாது.

**திரு. என். வரதராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் பழங்குடியினருக்கு செய்துவரக் கூடிய சீரிய ஏற்பாடுகளைத் தடுக்கக்கூடிய முறையிலே ஆயிரக்கணக்கான ரிட் பெட்டிஷன்கள் நீதிமன்றத்தில் தேங்கிக்கிடக்கின்றன. ஆகவே, அபிவிருத்தித் திட்டங்களைத் ஆதி திராவிட மக்களுக்கு நன்மை கொடுக்கக்கூடிய திட்டங்களை, நில ஆர்ஜிதம் செய்கிற திட்டங்களை, எதுவுமே செயல்படுத்த முடியவில்லை என்றால், இருக்கின்ற சட்டம் பொருத்தமானதாக இல்லை என்று தானே தெரிகிறது. ஆகவே இருக்கின்ற சட்டத்திற்குத் திருத்தத்தைக் கொண்டுவர, அல்லது அதற்காக மத்திய அரசை வலியுறுத்த, தீவிரமாக நடவடிக்கை எடுத்தால் தானே, சாதாரணமாக இத்தகைய காரியங்களை நிறைவேற்ற முடியும். அதற்கு நம்முடைய மாநில அரசு ஆலோசிக்குமா, முயற்சிக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதம் செய்கிற போது தமிழகத்திலே இருக்கிற ஆதி திராவிட மக்களுக்கு நிலங்களை விரைவாகக் கொடுக்க வேண்டும் என்ற உணர்வோடு தான் ஒரு புதிய சட்டத்தை 1978 ஆம் ஆண்டிலே இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கொண்டு வந்தது. ஆனால் அந்தச் சட்டம் செல்லாது என்ற அளவிலே உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்ததன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தற்போது இருக்கக் கூடிய நிலைமையை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது 1894-ஆம் ஆண்டு ஆக்ட்படி, அகில இந்திய ரீதியில் இருக்கக் கூடிய இந்தச் சட்டத்தின் அடிப்படையிலேதான் நாம் தற்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒட்டு மொத்தமாக இந்தியா பூராவுக்கும இருக்கக்கூடிய சட்டத்தின் அடிப்படையில் தான் நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள், மலை வாழ் மக்கள் ஆகியவர்களுக்காக நில ஆர்ஜிதம் செய்கிற நேரத்திலே நி[illegible] சொந்தக்காரர்கள் வழக்கு மன்றத்திற்குச் [illegible] விடுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் [illegible]. இப்படி நிலங்களை ஆர்ஜிதம் செய்கிற நேரத்[illegible] லேயே அந்த நிலச் சொந்தக்காரர் விட்டுக் [illegible] சட்டத்[illegible] அப்படி [illegible] நிறைவேற்ற [illegible] முறையிலே அரசு ஏதாவது வழிவகை செய்யுமா?



1984 மார்ச் 21]

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** தலைவர் அவர்களே, நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கு முன்னர் நிலச் சொந்தக்காரர்களை அணுகி என்குயரி நடத்தப்பட்ட பிறகு தான் நாம் நிலங்களை எடுத்துக் கொள்கிறோம். இருந்தாலும் நிலச் சொந்தக்காரர்கள் தங்களுக்கு இருக்கிற பிரச்சினைகளைச் சொல்கிற போது அரசு அதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து அவர்கள் சொல்கிற காரணங்கள் சரியான காரணங்களாக இருக்கின்றனவா என்பதைப் பார்த்துதான் நடவடிக்கை எடுக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதிலே நீண்ட கால தாமதம் ஆகிறது. என்னுடைய தொகுதியிலே— நான் நான்கு தடவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறேன்— தொடர்ந்து கேட்டும் மனை கொடுக்கப்படவில்லை. நடவடிக்கை எடுக்கவில்லை. அதில் அரசியல் சட்டத்தினால் ஏதோ தடங்கல் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்ன தடங்கல் இருந்தாலும் அதைப் போக்கக்கூடிய முறையிலே அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு மத்திய அரசை வற்புறுத்தி ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகவே வீட்டுமனைகள் கொடுப்பதிலே இருக்கிற நீண்டகால தாமதத்தைப்போக்குவதற்குத் துரிதமாக நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையிலே வேறு ஏதாவது வழிவகைகள் பற்றி அரசு ஆராய்வதற்கு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதில் அளித்ததைப் போல் தற்போது நடைமுறையில் இருக்கிற 1894 ஆம் ஆண்டு சட்டத்தின்படி கால தாமதம் ஆகிறது என்ற அடிப்படையிலே நீண்ட பல ஆண்டுக் காலமாக அந்த மக்களுக்கு கொடுக்கப்படுகிற அந்தச் சலுகைகள், குறிப்பாக வீட்டுமனைகளைப் பொறுத்த வரையில், காலதாமதம் ஆகிறது என்றுதான் இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு அந்தச் சட்டத்தை மாற்றி 1978 ஆம் ஆண்டிலே ஒரு புதிய சட்டத்தை கொண்டுவந்தோம். புதிய சட்டத்தின் மூலமாக விரைவான நடவடிக்கை எடுத்து அந்த மக்களுக்கு வீட்டுமனை அளிக்கக்கூடிய விதத்தில் இருந்தது. ஆனால் அந்தச்சட்டம் செல்லாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்ததன் காரணத்தினாலே— ஒரே நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு இரண்டு சட்டங்கள் கூடாது என்று சொல்லிவிட்ட காரணத்தினாலே— தமிழகத்தைப் பொறுத்த வரையில் 1894 ஆம் ஆண்டு சட்டத்தை காலதாமதம் ஆகக் கூடிய சட்டத்தின்படியே தான் நிலங்களை ஆர்ஜிதம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த அரசு அப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க வேண்டுமென்ற உணர்வோடு தான் புதிய சட்டத்தைக் கொண்டு வந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1984 மார்ச் 21

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, சில சமயங்களில் நிலச் சொந்தக்காரர்கள் எங்களுடைய நிலங்களை அரிசன மக்களுடைய வீட்டு மனைகளுக்காகத் தருகிறோம் என்று சொன்னாலும் கூட மார்க்கெட் ரேட்டிற்கு அவைகளைக் கொடுக்கிறோம் என்று சொன்னாலும் கூட, அங்கேயுள்ள அதிகாரிகள் விலையை 4, 5 மடங்கு குறைத்துப் போடுகிறார்கள் என்ற காரணத்தினால் அவர்கள் கோர்ட்டிற்குப் போகக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அது மாத்திரம் அல்ல, அரிசன மக்கள் வீட்டு மனைகளைப் பெற்றுக்கொள்கிற முறையிலே அரசுப் புறம்போக்கு இடங்கள் இருந்தாலும் அவைகளை எடுக்காமல் நல்ல விவசாயம் செய்யக் கூடிய நிலங்களை எடுக்கிறார்கள். அதனால் தான் பெரும்பாலானவர்கள் கோர்ட்டிற்குப் போகிறார்கள். ஆகவே அதைத் தடுப்பதற்கு அப்படிப்பட்ட அதிகாரிகளை எல்லாம் அழைத்துப் பேசுவதற்கு அரசு ஏற்பாடுகள் செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, இந்த அரசு, அரசு நிலங்கள் இருக்கிற இடங்களில் அந்த நிலங்களை எடுக்க வேண்டுமென்று உத்திரவிட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு நிலங்கள் இருக்கிறபோது தனியார் நிலங்களை எடுப்பதாகவும் மார்க்கெட் ரேட்டைக் குறைத்து அதிகாரிகள் போடுவதால் அவர்களுக்கு நட்டம் ஏற்படுவதாகவும் அதனால் உயர்நீதிமன்றத்திற்கு அவர்கள் போவதாகவும் சொன்னார்கள். அத்தகைய நிலைமைகள் இருக்கக் கூடாது என்பதை அரசு ஏற்றுக்கொள்கிறது. அத்தகைய நிலைமைகள் இருக்குமானால் சட்டமன்ற , உறுப்பினர் அவர்கள் அதை எடுத்துச் சொல்வார்களானால் அத்தகைய நிலைமைகள் இல்லாமல் இருப்பதற்கு அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்.

### பழனி வட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்க ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம்.

379—(*வினா எண் 17979)—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பழனி தாலுகாவில் ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனை வழங்க எந்தெந்த ஊரில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது?

(ஆ) எந்தெந்த ஊரில் வழக்குமன்றம் சென்றுள்ளது?

(இ) அந்த வழக்குகளை விரைவில் முடித்து ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனை கொடுக்கப்படுமா ?



1984 மார்ச் 21]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) பழனி வட்டத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்க கீழ்க்கண்ட கிராமங்களில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது.—

1. மொல்லம்பட்டி.
2. மேல ஆயக்குடி.
3. வடகரை
4. கலிக்க நாயக்கன்பட்டி.
5. ரெங்கநாதபுரம் உட்கடை லக்கயன் கோட்டை.
6. சங்கம்பாளையம்.
7. பூசாரி கவுண்டன் வலசு உட்கடை வாகரை.
8. கரடிகட்டம் உட்கடை நெய்க்காரப்பட்டி.
9. காப்பிடியாப்பட்டி.
10. குப்பாயவலசு உட்கடை பொருளூர்.
11. குத்திலுப்பை.
12. புதுக்கோட்டை.
13. தொப்பம்பட்டி.
14. கிழக்கு ஆயக்குடி.
15. பெரிய கலையம்புத்தூர்.
16. வடகாடு.
17. பெரிய அம்மாப்பட்டி.
18. சங்கம்பாளையம்.
19. நரிப்பாறை உட்கடை ஆண்டிப்பட்டி.
20. அய்யம்புள்ளி.
21. டி. கே. என். புதூர்.
22. ஒட்டன்சத்திரம்.
23. விருபாட்சிசு.
24. பொருளூர்.
25. ஆலம்பாடி மற்றும்
26. வெள்ளமபட்டி.

(ஆ) மொல்லம்பட்டி, மேல ஆயக்குடி, வடகரை, கலிக்க நாயக்கன்பட்டி, ரெங்கநாதபுரம, சங்கம்பாளையம், பூசாரி கவுண்டன்வலசு, கரடிக்கட்டம் உட்கடை நெய்க்காரப்பட்டி, குப்பாய வலசு உட்கடை பொருளூர், புதுக்கோட்டை, தொப்பம்

பட்டி, கிழக்கு ஆயக்குடி, அய்யம்புள்ளி, விருபாட்சி ஆகிய கிராமங்களில் நில உரிமையாளர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் நில ஆர்ஜித் நடவடிக்கையை எதிர்த்து வழக்கு தொடர்ந்து வழக்குகள் உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் இருக்கின்றன.

(இ) மேற்படி வழக்குகளில் எதிர் ஆணையுறுதிப் பத்திரங்கள் விரைவில் தாக்கல் செய்து வழக்குகளை முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வழக்குகள் முடிவு ஆனவுடன் பட்டா வழங்க மாவட்ட ஆட்சியாளர் நடவடிக்கை எடுப்பார்.

(முற்பகல் 9—20)

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பழனி தாலுகாவில் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனை வழங்க நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்ட ஊர்கள் என்று விவர அறிக்கையில் இங்கே கொடுத்து இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே 26 ஊர்களிலே ஆர்ஜிதம் செய்து 16 ஊர்களில் வழக்கு மன்றம் சென்று இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த வழக்குகள் தற்போது எந்த நிலையில் இருக்கின்றன. மீதி 10 ஊர்களுக்குப் பட்டா கொடுத்து ஆகிவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 12 ஊர்களைப் பொறுத்தவரையில் அந்தக் கிராமங்களில் இருக்கக்கூடிய நிலைமைகளை அறிந்து இது குறித்து வழக்குகளில் எதிர் வழக்கு ஆட எதிர் ஆணை உறுதிப் பத்திரம் (Counter affidavits) தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் தற்போது இருந்துக் கொண்டிருக்கின்றன. இந்த வழக்குகள் மீது தகுந்த முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்பு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முன்னர் அறிவித்து இருக்கக்கூடிய வகையில் அந்த 10 ஊர்களுக்கு ஏறத்தாழ அனைத்து ஊர்களுக்கும் வீட்டு மனை அளிக்க வேண்டும் என்ற உணர்வோடு நாம் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இருக்கிறோம். டி.டி. பிரேரணை பரிசீலனையில் இருந்துக் கொண்டிருக்கிறது என்ற அளவுக்கு என்னிடத்தில் குறிப்புகள் இருக்கின்றன.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகள் கொடுத்த குறிப்புகளை இங்கே வாசித்துக் கொண்டு இருக்கிறார்கள். நீதி மன்றத்திற்குப் போகாத ஊர் என்று தரப்பட்டு இருக்கிற கிழக்கு ஆயக்குடி நான் இருக்கக்கூடிய





சொந்த ஊர். அந்த ஊரில் உள்ள 150 பேர்களுக்கு நீதி மன்றத்தில் இருப்பதாக அங்கே சொல்கிறார்கள். இங்கே நீங்கள் நீதி மன்றத்தில் இல்லாத லிஸ்டில் சொல்லியிருக்கிறீர்கள். இது எப்படி நியாயம் ஆகும்? இது சம்பந்தமாக நீங்கள் நேரில் கொண்டு விசாரிக்க வேண்டும். நீதிமன்றம் சென்ற நிலச் சொந்தக்காரர்கள் அந்த நிலங்களில் தென்னங் கன்றுகள் போட்டு இன்றைக்கு அவைகள் காய்க்கு வரக்கூடிய தென்ன மரங்களாக இருக்கின்றன. இன்றைக்கு இவ்வளவு செலவு செய்து கடைசியில் அந்த வழக்குகளில் வெற்றி பெற்றாலும் தென்ன மரங்களை அழிக்கக் கூடாது என்று சொல்வார்கள். இதை எல்லாம் பரிசீலித்து இதற்கு ஒரு சரியான நிவாரணம் கண்டு பிடித்து இந்தத் தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்களுக்கு நிலம் வாங்கிக் கொடுப்பதற்கு வேறு மாற்று வழி ஏதாவது கண்டுபிடிக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய ஊரைப்பற்றி குறிப்பிட்டுச் சொல்லி அது கொடுக்கப்பட்டு இருக்கக்கூடிய பட்டியலில் இடம் பெறவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அது என்ன என்பது குறித்து நான் தகுந்தபடி விசாரித்து நடவடிக்கை எடுக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல ஒரு குறிப்பிட்ட நிலத்தை நாம் ஆர்ஜிதம் செய்வதற்கு அரசு மூலமாக நோட்டிபிகேஷன் கொடுக்கப்பட்ட பிறகு அதிலே எந்தவிதமான நடவடிக்கையிலும் நிலச் சொந்தக்காரர் அல்லது நிலத்தை எடுக்கக்கூடிய அதிகாரிகள் ஈடுபடக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல எடுக்கப்பட்ட லிஸ்டில் உள்ள நிலங்களில் தென்னை மரங்கள் நடுகின்ற ஒரு நிலைமை இருப்பதாக சொன்னார்கள். ஆனால் அது எந்த இடம் என்று குறித்து எடுத்துச் சொல்வார்களானால் அதன் மீது நடவடிக்கை எடுத்து அத்தகைய நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடக்கூடாது என்ற வகையில் அறிவுரைகள் வழங்கிடுவது மட்டும் அல்லாமல் அதன் மீது நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

## தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கு இலவசமாக வீட்டு மனைகள் வழங்கும் திட்டம்.

380— (*வினா எண். 1844)— திரு. க. பரமலை : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட மற்றும் மலை வாழ் மக்களுக்கு வீட்டு மனைகள் இலவசமாக வழங்கும்போது அவைகளில் வீடுகளும்

கட்டிக் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் இருந்து தமிழக அரசிற்குப் பரிந்துரைகள் ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கு வீட்டுமனைகள் இலவசமாக வழங்கும்போது அவைகளில் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும என்று மத்திய அரசிடமிருந்து தமிழக அரசிற்குப் பரிந்துரைகள் ஏதும் வரவில்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. க. பாரமலை ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மத்திய அரசிடமிருந்து தகவல் எதுவும் வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் மலைவாழ் மக்களுக்கு மத்திய நலவாழ்வு கமிஷனர் பரிந்துரையை (R port of th Commission r for S.Cs. and S.Ts., Delhi.) மத்திய அரசு எல்லா மாநில அரசுகளுக்கும் கொடுத்து இருக்கிறது. அவர்கள் அறிக்கை புத்தகவடிவில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதேபோல் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது கூட நகர்ப்புறங்களில் நில உடமை யாளர் சட்டத்தில் கையகப்படுத்துகிற நிலங்களுக்குத் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது என்றார்கள். மத்திய நலவாழ்வு கமிஷனர் அவர்கள் பரிந்துரையை மத்திய அரசு கொடுக்கின்றது. அதன் மீது எந்த இலாக்கா—அதன் நடவடிக்கைகளைப் பரிசீலிக்கிறது ? அதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமையில் உள்ள இலாக்கா பரிசீலிக் கிறதா ? அப்படி இருந்தால் அதைத் தயவுசெய்து மறுபடியும் தேடிக் கண்டுபிடித்து அமுல் நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, மைய அரசைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று பிரத்தியேகமாகச் சொல்லாமல் நிலமற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனை ரூ. 250 மதிப்பிலும் வீடு கட்டும் பொருள்கள் ரூ. 500 மதிப்பிலும் வீட்டுமனை மற்றும் குடிசை அமைக்கும் திட்டம் ஒன்றை, ஹவுஸ் சைட் கம் ஹட் கன்ஸ்ட்ரக்ஷன் என்ற திட்டத்தை 1981 பெப்ரவரி மாதத்தில் தெரிவித்து அதை மாநில அரசுகள் அமல்படுத்த வேண்டுமென்று மைய அரசு கோரியிருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் திட்டத்தைப் பற்றித்தான் எடுத்துச் சொல்லி





யிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ரூரல் ஹவுஸிங் ஸ்கீமின் கீழ் வரக்கூடிய வகையில் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று மைய அரசு அறிவுறுத்தி இருந்தது. ஆனால் தமிழக அரசைப் பொறுத்த வரையில் ஏற்கனவே ரூரல் ஹவுஸிங் ஸ்கீம் மூலம் மொத்தம் ரூ. 4,500 மதிப்பில் கடன் மற்றும் மானியமாகவும் பயனடைவோர் பங்கு ரூ. 1,500 ஆகவும் மொத்தம் ரூ. 6,000 மதிப்பில் கடன், மானியம் மற்றும் பயனடைவோர் பங்கு என்ற வகையில் வீடு கட்டும் பணிகள் கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் மூலம் ஏற்கனவே மாநில அரசு மூலம் செய்து வருகிறோம். ஆகவே அத்தகைய ஹவுஸ் சைட் கம் கன்ஸ்ட்ரக்ஷன் ஸ்கீமின்படி நாம் செய்ய வேண்டிய தேவை இல்லை என்ற அளவில் இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது.

திரு. க. பாரமலை: தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக என்று தனியாகவே வீடுகள் கட்ட வேண்டும் என்று மைய அரசு ஆணை பிறப்பித்திருப்பதாக தகவல் இருக்கிறது. இருந்தாலும் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது சென்ற ஆண்டு கி.பி. 2000 க்குள் அனைவருக்கும் நல் வாழ்வு, சுகாதார வசதி என்ற அடிப்படையில் அறிவிப்பு வந்தது. ஆகவே, கி.பி. 2000-க்குள் தாழ்ந்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் வீட்டு வசதி என்ற அடிப்படையில்—இலட்சக்கணக்கான மனைப் பட்டாக்கள் வழங்கியும்கூட வீடுகள் கட்ட முடியாது இருக்கிற காரணத்தினால்—அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுக்கக்கூடியதொரு திட்டத்தை அரசாங்கம் தயாரித்து இந்த ஆண்டிலிருந்து அமல்படுத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத் துச் சொன்னது என்னிடம் இருக்கக்கூடிய குறிப்புகளில் அது இல்லை. அது என்ன என்றளவில் விசாரித்து நடவடிக்கைகளை நான் எடுக்கிறேன் என்று சொல்லி இந்த அரசைப் பொறுத்த வரையில் 24—2—1984 வரை ஏறக்குறைய 3,79,881 வீட்டு மனைப் பட்டாக்கள் தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய மக்க ளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அனைவருக்கும் வீடு கள் கட்டித் தர வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருந்தாலும் கூட ஆண்டு நிதி ஒதுக்கீட்டை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். வீடுகள் கட்ட ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்குகிறது. அப்படி ஒதுக்கக்கூடிய நிதி யைக் கொண்டு வீடுகள் கட்டுகிற நிலைதான் தற்போது இந்த அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, தாழ்த்தப்
பட்ட மக்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும் இலவசமாக வீட்டு
மனைகள் கொடுக்கும் நிலை தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத்
திட்டத்தின் கீழ் இருந்தது. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும்
30 வீடுகள் என்றும், மலைவாழ் மக்கள் வாழும் ஒன்றியங்களுக்கு
ஒன்றியம் ஒன்றுக்கு 50 வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தைப்
பொறுத்தவரையில் அந்தத் திட்டத்தின் மூலம் வரும் ஆண்டு
களில் இன்னும் அதிகப்படியான வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு
முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே,
தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தமிழகம் முழு
வதும் இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் 10,000 வீடுகள்
மொத்தத்தில் கட்ட வேண்டும் என்றும் ஒரு வீட்டின் மதிப்பு
ரூ. 6,000 என்ற அளவிற்கு நாம் நடவடிக்கைகள் எடுத்துக்
கொண்டிருக்கிறோம். அந்த 10,000 வீடுகளில் 9,000 வீடுகள்
ஆதி திராவிட மக்களுக்கும், ஆயிரம் வீடுகள் பழங்குடி மக்களுக்
கும் என்று விதிமுறைகள் விதித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
அதன் மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.
உயர்த்துகிற எண்ணம் இருக்கிறதா என்று உறுப்பினர் அவர்கள்
கேள்வி கேட்டிருக்கிறார்கள். அத்தகைய எண்ணம் தற்போ
தைக்கு இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, மலை
வாழ் மக்கள் பல்லாண்டுக்காலமாக மலைகளில் காலியாக உள்ள
இடங்களில் வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த மலை
வாழ்மக்களில் ஆதி திராவிட மக்கள் என்ற ஒரு பிரிவினர்
இருக்கிறார்கள். அவர்கள் அங்கே வீடுகள் கட்டிக்கொண்டிருக்
கிறார்கள். காலியிடங்களில் குச்சு வீடுகள் கட்டிக்கொண்டு வாழ்
கிறார்கள். அவர்களுக்கு அந்த இடங்களை பட்டா செய்து
கொடுக்க, மனைப்பட்டா செய்து தர அரசு நடவடிக்கை எடுக்
குமா ? அதை பாரஸ்ட் லான்ட் என்ற காரணம் காட்டி கொடுக்க
மறுக்கிறார்கள். அதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க
முன்வருமா ?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே,
மலைகளில் வாழக்கூடிய பழங்குடி மக்களைப் பொறுத்து,
பாரஸ்ட் லான்டில் வாழ்கிற அவர்களைப் பொறுத்தவரையில்
அவர்கள் இருக்கக்கூடிய இடங்களையும் விவசாயம் செய்யக்கூடிய
இடங்களையும் அவர்கள் எவ்வளவு காலம் அங்கு இருக்கிறார்
களோ அந்த அளவிற்கு அவர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும்
என்றும், அதில் இருக்கக்கூடிய இலாபத்தை அவர்கள்
எடுத்துக் கொள்ள முடியும் என்றும் அரசு மூலம் அறிவுரைகள்
வழங்கியிருக்கிறோம் குறிப்பாக வனத்துறை பொறுத்த அளவிற்கு





வனத்துறை சம்பந்தப்பட்ட நிலங்களில் இருக்கக்கூடிய பழங்
குடி மக்களுக்கு, ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனை நிலங்களை
கையகப்படுத்தி வழங்கிக் கொண்டிருக்கும் அதே அளவில்
ஆங்காங்கே நிலங்களை கையகப்படுத்தி வழங்குவதோடு, அரசு
நிலங்கள் இருக்கக்கூடிய இடங்களையும் எடுத்து அசைன் நட
வடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். பழங்குடி மக்களைப்
பொறுத்த வரையில் உள்ள பிரச்சினையை, அவர்கள் நிலையை
உணர்ந்து பார்த்து, அரசு இதுவரையில் அவர்கள்மீது எந்த
அளவுக்கு பரிவுடன் இருக்கிறதோ, அதே அளவிற்கு வருங்காலத்
திலும் தொடர்ந்து இருக்கும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் இரண்டு
கோடி ரூபாய்தான் இதற்காக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்
னார்கள். 2,000 கோடிக்கு மேலாக வரும் தமிழகத்தின் வரு
மானத்தில் இந்த ஏழை எளிய மக்களுக்கு 2 கோடி ஒதுக்குவது
போதாது, அதைக் கொஞ்சம் மறுபரிசீலனை செய்து 5
கோடி ரூபாயாக உயர்த்துவதற்கு வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, வருங்காலத்தில் அரசினுடைய நிதி நிலைமை
யைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு மேலும் உதவ நடவடிக்கை
எடுக்க அரசு பரிவோடு அதனைப் பரிசீலனை செய்யும்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியர்களுக்குப்
உதவித் தொகை அளிக்கும் திட்டம்.

370—(* வினா எண் 4537—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படிக்கும் மாணவ மாண
வியர்களுக்கு அரசு உதவித் தொகை அளிக்கும் திட்டம் கைவிடப்
பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணமென்ன ?

(இ) மேற்படி ஆசிரியர் பயிற்சியில் பயிலும் ஆசிரியர்,
ஆசிரியைகள் அரசிற்குத் தங்கள் குறைகளைத் தீர்க்கக் கோரிக்கை
கள் ஏதும் அனுப்பியுள்ளனரா—

(ஈ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பற்றாக்குறை இருந்த காலத்தில் ஆசிரியர் பயிற்சிக்கு அதிக எண்ணிக்கையில் வந்து சேர்வதற்காக மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு உதவித் தொகை அளித்து வந்தது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் பற்றாக் குறை நீங்கி வேலையற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியபோது ஆசிரியர்கள் பயிற்சிக்கு உதவித் தொகை அளித்து ஊக்குவிக்க வேண்டிய அவசியம் இல்லாததால் 1973-74-ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டது.

(இ) ஆம்.

(ஈ) இக்கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு அவைகள் நிராகரிக்கப்பட்டு விட்டன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் அதிகமாக பயிற்சி பெற்று சர்பிளஸ்ஸாக இருக்கின்ற காரணத்தால், இந்த ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த உதவித்தொகை நிறுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி உதவி தொ நிறுத்தப்படும் என்றால் இப்போது ஆங்காங்கு தனியார் நடத்திக் கொண்டிருக்கிறார்களே, அங்கே ஏழைகள் சேரும்போது, பணம் கட்டி படிக்க முடியுமா என்று அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்த்தார்களா ? இன்றைக்கு ஆசிரியர்கள் சர்ப்பிளசாக இருக்கின்ற காரணத்தினால், ஒவ்வொரு ஊரிலும், 30 குழந்தைகளுக்கு குறையாமல் இருக்கின்ற ஊர்களில், நர்சரி பள்ளிகளை ஏற்படுத்தி, இந்த ஆசிரியர்களுடைய குறைகளைத் தீர்க்கக்கூடிய வகையில் அவர்களுக்கு உத்தியோகம் கொடுக்கக்கூடிய வழி வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. அதைப் பயன்படுத்தி ஏழை எளியவர்கள் படிக்கலாம். மற்றபடி ஊக்குவிக்கின்ற தொகையாக உதவித் தொகை தருவதற்கில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சர்ப்பிளசாக இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு மீண்டும் உத்தியோகம், — வேலை வாய்ப்பு கொடுக்கின்ற அளவிலே நர்சரி பள்ளிகளை அதிமாக ஆரம்பித்து 10, 15 ஆண்டுகள் ஆசிரியர் பயிற்சியைப் படித்துவிட்டு, வீட்டிலே இருக்கிற அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கும் திட்டங்கள் ஏதாவது வகுக்கப்படுமா என்று அறிய நான் விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்காக புதிய பணி இடங்களை தோற்றுவித்து வருகிறோம். ஆசிரியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்று விலகுகின்ற இடங்களில் அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். நர்சரி பள்ளிகளை ஆரம்பித்து, 'அதிலே அவர்களைப் போடவேண்டும் என்று சொல்வது சரியாக இருக்காது. காரணம், அவர்களுக்குத் தருகின்ற பயிற்சி வேறு ; நர்சரி பள்ளிகளிலே சொல்லிக் கொடுப்பதற்குக் கொடுக்கின்ற ஆசிரியர் பயிற்சி வேறு.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சி பெறக்கூடியவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுவதை நிறுத்தி விட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படிப் பார்த்தால், இன்றைக்குப் பல்வேறு துறைகளில் படித்துவிட்டு, வேலையில்லாமல் இருக்கிறார்கள். கல்வியிலும் இன்னும் பொறியியல் துறைகளிலும் இருக்கின்றவர்களுக்கு நாம் உதவித் தொகை கொடுப்பதை நிறுத்த முடியுமா? ஆகவே ஆசிரியர்களுக்குக் கொடுக்கின்ற பயிற்சி உதவித் தொகையை உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் உதவித் தொகை என்பதை எந்தப் பொருளிலே நினைத்துக் கொண்டு பேசுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இங்கே சொல்லப்படுகின்ற உதவித் தொகை என்பது ஸ்டைஃபன்ட் என்ற பெயரில் எல்லா மாணவர்களுக்கும் ஒரு தொகை தருவது. அப்படி மற்ற கல்விக்கு நாம் தருவதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே. அப்படிப்பட்ட நிலைமைகள் கூடாது என்றுதான் நாம் இப்பொழுது இதில் முடிவெடுத்திருக்கிறோம். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குத் தரப்படுகின்ற ஸ்காலர்ஷிப் போன்றவைகள் இருக்கின்றன. அது இந்த ஆசிரியர் பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கும் தரப்படும்.

371—

## 1982 ஆம் ஆண்டு முடிய தமிழகத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை.

*வினா எண். 19268—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982 ஆம் ஆண்டு முடிய தமிழகத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) இவர்களில் வேலையின்றி இருப்போர் எத்தனை ?

(இ) இவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

[1984 மார்ச் 21

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) 1971 ஆம் ஆண்டு முதல் 1981 ஆம் ஆண்டு வரை ஓர் ஆண்டு விட்டு மறு ஆண்டு ஆசிரியர் பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்றவர்கள் 19,227 நபர்கள். 1982 ஆம் ஆண்டில் பொதுத் தேர்வு இல்லை.

(ஆ) பயிற்சி பெற்று வேலை இல்லாமல் இருப்போர் சுமார் 7,682 நபர்கள்.

(இ) ஒவ்வொரு ஆண்டும் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. 1983–84ல் 1,250 ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டன.

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறபோது இதுவரையில் ஏழாயிரம் பேர் வேலையில்லாமல் இருப்பதாகச் சொன்னார்கள். இந்த ஆசிரியர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்கின்ற அடிப்படையில்—இன்றைக்கு நாம் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை இந்த ஆசிரியர் பயிற்சி தருகிறோம். எனவே, தொடர்ந்து வேலையில்லாத ஆசிரியர்கள் பெருகிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, முழுமையாக இந்த ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு தரும் விதத்தில், மாணவர்கள்-ஆசிரியர்கள் விகிதாச்சாரத்தை மாற்றியமைத்துத் துரிதமாக இவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவரவர்களே. நம்முடைய நிதியாதாரங்களுக்கேற்ப அதிகமான பணியிடங்களைத் தருவதற்கு ஒவ்வொரு ஆண்டும் இந்த அரசு முயற்சியெடுத்து வருகிறது. ஆசிரியர்கள் அரசு பள்ளியிலே ஊராட்சி அல்லது நகராட்சி, மாநகராட்சி பள்ளிகளிலே வேலைக்கு அமரலாம். அதுவும் இல்லாமல் தனியார் பள்ளிகளிலேயும் வேலையில் சேருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இவைகளுக்குப் பணியிடங்களை ஒதுக்குகிறோம். இதற்கு அப்பாற்பட்டு நம்முடைய உதவி பெறாத பள்ளிகளும் இருக்கின்றன. அவைகளிலேயும் வேலைவாய்ப்பு இருக்கின்றன. அரசுப் பள்ளிகள். மாநகராட்சி, நகராட்சி உதவி பெறும் பள்ளிகள் போன்றவைகளில் உள்ள நிலைமைகளின் கணக்கைத்தான நாம் கொடுத்திருக்கிறோம். இது தவிரவும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு இருக்கிறது.

**திரு. நி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. கர்நாடக மாநிலத்தில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்குத் தற்போது வேலை வாய்ப்பு நிறுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் வேலையின்றி அவதியுறுகிறார்கள். எனவே. அவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1984 மார்ச் 21]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவரவர்களே, அதில் சில பிரச்னைகள் இருப்பதால் அதை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதில் மிகவும் முக்கியமான ஒன்று, நாம் குறிப்பிட்ட அளவு மார்க்குகள் பெற்ற—அதாவது 50 மார்க்குகளுக்குக் குறையாத மார்க்குகள் பெற்ற மாணவர்களைத்தான் என்று நினைக்கிறேன்—அவர்களைத்தான் இந்த ஆசிரியர் பயிற்சிக்குச் சேர்க்கிறோம். காரணம் என்னவென்றால், சொல்லித் தருகின்றவர்களுக்குக் கொஞ்சம் படிப்பு அதிகமாக இருக்க வேண்டுமென்ற முறையில் அந்த வழக்கத்தை வைத்திருக்கிறோம். ஆனால், கர்நாடகத்தில் அப்படியிருப்பதாகத் தெரியவில்லை. அத்துடன். இன்றைக்குப் பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள். கேரளா கல்வியமைச்சர் அவர்கள் கர்நாடகத்திலிருந்து போலிச் சான்றிதழ் வாங்கிவந்து இங்கே நிறைய சேர்த்திருக்கிறார்கள், விசாரிக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சந்தேகங்கள் கர்நாடக மாநிலத்தில் இருந்து வருகின்ற சான்றிதழ்களைப் பொறுத்தவரையில் இருப்பதால் இதில் கொஞ்சம் எச்சரிக்கையோடு நடக்க வேண்டியிருக்கிறது. அதே நேரத்தில் இங்கே படித்து நல்ல முறையில் தேறி இருக்கின்ற—அவர்களும் நம்முடைய மாணவர்கள்தான் என்றாலும்—நம்முடைய பள்ளியிலே பயிற்சி பெற்று தமிழில் சொல்லித் தருகின்ற பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்பதுதான் இதற்கு முன் கேட்கப்பட்ட இந்தக் கேள்வியின் அடிப்படைக் கருத்து. ஆகவே. இந்தப் பின்னணியில் நாம் அவர்களைப் பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டில் அதிகமான அளவிற்கு வேலையில்லாத ஆசிரியர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்றபோது நர்சரி பள்ளிகளில் இவர்களை அனுப்ப முடியாது என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்குத் தனியார் நடத்துகின்ற நர்சரி பள்ளிகளில் எம்.ஏ. படித்தவர்கள் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே. இப்படிப்பட்ட நிலையில் இந்தப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்க சிபார்சு செய்ய கறாராக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-40]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே. நர்சரி பள்ளிகளைப் பொறுத்தவரையில் நாம் எந்தக் கட்டுப்பாடும் விதிக்கவில்லை. அவர்கள் இப்படிப்பட்ட ஆசிரியர்கள் பலபேர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். பல பேர் வேலை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, இளம் சிறார்களுக்குக் கல்வி சொல்லிக் கொடுப்பதில் ஆசிரியர்களின் கல்வித் தரம் உயர்வாக இருக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் இடைநிலை ஆசிரியர்கள் பயிற்சியை முற்றிலுமாக நிறுத்திவிட்டு எலிமென்டரி எஜுகேஷன் லெவலிலும் பட்டதாரி ஆசிரியர்களையே நியமிக்கக்கூடிய அளவில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே. அது எஸ்.எஸ்.எல்.சி. படித்ததற்குப் பிறகு ஆசிரியப் பயிற்சி பெறக்கூடியவர்களுக்கு உள்ள வேலைவாய்ப்பைத் தடுத்து விடக்கூடிய நிலைமையை ஏற்படுத்தும். ஆகவே. தான் செகண்டரி கிரேட் பணியிடத்திற்கு பி.ஏ., பி.எட். படித்த ஆசிரியர்கள் விண்ணப்பித்திருந்தாலும் கூட அங்கே செகண்டரி கிரேட் ஆசிரியர்களைத்தான் எடுக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்தி வருகிறோம். இப்போது கூட பல பட்டதாரி ஆசிரியர்கள் செகண்டரி கிரேட் பணியில் வேலை செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். இருந்தாலும் நாம் அதைத் தவிர்ப்பதற்குக் காரணம், செகண்டரி கிரேட் படித்தவர்களுக்கு 'வேலை வாய்ப்பு இல்லாமல் போகும் என்பதால்தான்.

திரு. ஓ.ரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே. தமிழகத்தில் இடைநிலை ஆசிரியர்கள் 7,682 பேர் வேலை இல்லாமல் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். படித்துவிட்ட பிறகு ஆசிரியர் பயிற்சியினையும் பெற்றதற்குப் பிறகு இப்படிப் பலபேர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு ஆசிரியர் பயிற்சியையும் பெற்றுவிட்டு வேலைவாய்ப்பு இல்லாமல் இருப்பதன் காரணத்தால் பட்டதாரிகளுக்கு அரசு உதவித் தொகை வழங்கப்படும் என்று சொன்ன அந்த அடிப்படையில் இவர்களுக்கும் உதவித்தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இவர்களுக்கு உதவித்தொகை வழங்குவது பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் அதற்குரிய பதிலை அதற்குரிய அமைச்சர் அவர்கள் சொல்வார்கள்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, வேலையில்லாமல் இருக்கின்ற ஆசிரியர்களைப் பற்றிய கணக்கு கொடுக்கின்றபோது, வருடம் ஒன்றுக்கு 2 ஆயிரம் பேர் பயிற்சி பெறுகிறார்கள் என்பதும், வருடம் ஒன்றுக்கு இவர்களில் ஆயிரம் பேர்கள்தான் வேலை பெறுகிறார்கள் என்ற உண்மையும் வெளிவருகின்றது. இப்போது சுமார் 8,000 என்ற அளவுக்கு ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். தனியார் துறையிலும், உள்ளாட்சித் துறையிலும் பணிகள் நிரப்பப்படுகின்றன





என்று சொல்லப்படுகின்றது. கல்வித்துறையில் இருந்து ஒதுக்கப்படுகின்ற பணிகள்தான் நிரப்பப்படுகின்றன. அப்படியானால் வேலையில்லாமல் இருக்கின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை சுமார் 8 ஆயிரம் என்பது உண்மையானால் ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக அவர்கள் அனைவரையும் அப்சார்ப் பண்ணிக் கொள்கின்ற வகையில், பணிகளுக்கு ஏற்றுக்கொள்கின்ற வகையில் ஒரு மாஸ்டர் ப்ளான் தயார் செய்து மனிதாபிமானத்தோடு இவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நமக்கும் ஆசிரியர்கள் தேவை இருக்கின்றது. நமக்குத் தேவையில்லாத நிலையில் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற நிலைமை இல்லை. ஆசிரியர்களின் தேவையும் இருக்கின்றது. அவர்களும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இப்போது அவர்களுக்கு வேலைதர முடியாமல் இருப்பதற்கு ஒரே காரணம் நிதிப்பற்றாக்குறைதான். ஆகவே அரசைப் பொறுத்தவரையில் இவர்களுக்கெல்லாம் வேலை தரக்கூடிய தேவை இருப்பதால் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டுதான் வருகிறோம். ஆனால் நிதியாதாரங்களைப் பொறுத்து அவர்களுக்கு எவ்வளவு வேகமாக வேலை கொடுத்து அவர்களை இழுத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவுக்கு இழுத்துக்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறோம்.

### காட்பாடி அருகே 'மாருதி பொறியியல் கல்லூரி' ஆரம்பிக்கும் திட்டம்.

372—(* வினா 21276)—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் காட்பாடி அருகே ''மாருதி பொறியியல் கல்லூரி'' ஆரம்பிக்க அரசு அனுமதி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) எத்தனை மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள் ?

(ஈ) அரசு மான்யம் வழங்குகிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) விவரமில்லை.

(ஈ) இல்லை.

வர்கள் இங்கே வந்து படிக்கின்ற அளவுக்கு ஓரளவு தரம் உயர்ந்திருக்கிற காரணத்தால்தான் இங்கே வருகிறார்கள். பொதுவாக, ஏ.எம்.ஐ.இ. பரிட்சையின் முடிவு வருகிறபொழுது 100 பேர்கள் தேர்வு எழுதினால், 10 பேர்கள், 15 பேர்கள் கூடத் தேறுவதில்லை. ஆனால், சென்னை நகரில் 20, 25 சதவீதம் பேர்கள் தேறுகிற காரணத்தால், வெளியேயிருந்து இங்கே வந்து படிக்கிறார்கள்.

இன்னொன்று, வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் இங்கே வருவதற்குக் காரணம், உலகத்திலேயே தமிழ்நாடு ஒன்றுதான் கொஞ்சம் மலிவாக, இருப்பதற்கும் படிப்பதற்கும் ஏற்ற இடம்.

**காஞ்சிபுரம் நகராட்சியைத் தேர்வுநிலை நகராட்சியாக்கும் திட்டம்.**

373—(*வினா எண். 14430)—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முதல் நிலைநகராட்சியாக உள்ள (Special Grade) காஞ்சிபுரம் நகராட்சியைத் தேர்வுநிலை (Selection Grade) நகராட்சியாக மாற்றும திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9-5-1983 நாளிட்ட அரசாணையின் மூலமாக, அரசு காஞ்சிபுரம் நகராட்சியை முதல் நிலையிலிருந்து தேர்வு நிலைக்கு உயர்த்த ஆணையிட்டுள்ளது.

**கல்ராயன்மலை ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் திட்டம்.**

374—(*வினா எண். 15082)—திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியைச் சார்ந்த கல்ராயன் மலை ஊராட்சி ஒன்றியம் அமைத்துச் செயல்படாமல் போனது அரசுக்குத் தெரியுமா ?





(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) மற்றும் (ஆ), கல்ராயன் மலை ஊராட்சி ஒன்றியம் இதுவரையில் அமைக்கப்படவில்லை. வருவாய் கிராமங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இப்பணிகள் முற்றுப்பெற்றதும் ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**சுயவேலை வாய்ப்புப் பயிற்சிக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம்.**

375—(*வினா 18016)—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சுயவேலைவாய்ப்புப் பயிற்சிக்கு உதவித்தொகை வழங்கப்படுகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அந்த உதவித்தொகை உயர்த்தப்படுமா ?

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(ஆ) 1983 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வரையில் பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊரிலேயே பயிற்சி நடத்தப்பட்டால் மாதம் ரூ. 50 என்றும், பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊர் அல்லாமல் வெளியூரில் பயிற்சி நடத்தப்பட்டால் மாதம் ரூ. 100 என்றும், பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊர் அல்லாமல் வெளியூரில் பயிற்சி நடத்தப்பட்டு அந்தப் பயிற்சி நிலையத்தில் தங்கும் வசதி செய்யப்படாதிருந்தால் மாதம் ரூ. 125 என்றும், 1983 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்குப் பின் பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊரிலேயே பயிற்சி நடத்தப்பட்டால் மாதம் ரூ. 75 என்றும், பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊர் அல்லாமல் வெளியூரில் பயிற்சி நடத்தப்பட்டு அந்த பயிற்சி நிலையத்தில் தங்கும் வசதி இருந்தால் மாதம் ரூ. 150 என்றும், பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊர் அல்லாமல் வெளியூரில் பயிற்சி நடத்தப்பட்டுத் அந்தப் பயிற்சி நிலையத்தில் தங்கும் வசதி செய்யப்படாதிருந்தால் மாதம் ரூ. 200 என்றும் கொடுக்கப்பட்டு வருகிறது.

[1984 மார்ச் 21

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, வடாற்
காடு மாவட்டம் காட்பாடி பகுதியில் இப்படி ஒரு பொறியியல்
கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதாக எங்களுக்கு
எல்லாம் தகவல் தெரிந்துள்ளது. நம்முடைய மாநிலத்திலே
இப்படி ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்படும் என்று பெரிய விளம்பரங்
கள் எல்லாம் பத்திரிகைகளில் வந்தன. இதனுடைய திறப்பு
விழா நிகழ்ச்சி பற்றிக்கூட பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்
பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட நிலைமை இருக்கும்போது
அரசுக்குத் தெரியாமல் இப்படிப்பட்ட கல்லூரிகள் எல்லாம்
திறந்து அதிலே மாணவர்கள் படிக்கின்ற நிலைமையில் அங்கே
படிக்கின்ற மாணவர்களுக்கு வேலை உத்தரவாதம் உள்ளதா
என்பதை நான் அறிய விரும்புகிறேன். அரசாங்கத்திற்குத் தெரி
யாமல் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற காரணத்
தால் இவைகளை எல்லாம் தடை செய்ய ஏதாவது சட்டமியற்றி
அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே,
எனக்குத் கிடைத்திருக்கின்ற தகல்படி ஆந்திரப்பிரதேச எல்
லைக்குள் சித்தூர் மாவட்டத்தில் பல்லுரு என்ற இடத்தில்
''மாருதி பொறியியல் கல்லூரி'' துவங்கப்பட்டு இருப்பதாகத்
தான் தகவல் கிடைத்திருக்கின்றது. அது தமிழ்நாட்டு எல்லைக்
குள் இருப்பதாகத் தெரியவில்லை. அதுமட்டுமல்ல. அந்தக்
கல்லூரியை நம்முடைய தமிழக எல்லைக்குள் துவங்க வேண்டும்
என்றால் நம்முடைய பல்கலைக் கழகத்தினுடைய அனுமதியைப்
பெறவேண்டும். அரசினுடைய அனுமதியைப் பெற்றால்தான்
அவர்களுக்கு உதவி கிடைக்கும். ஆகவே இப்படிப்பட்ட கல்லூரி
களை இங்கே யார் ஆரம்பித்தாலும் அதுபற்றி நமக்குத் தெரியக்
கூடிய நிலைமை இருக்கின்றது. ஆகவே பல்கலைக் கழகத்திற்
குத் தெரியாமல் யாரும் இன்ஜினியரிங் கல்லூரி ஆரம்பிக்கவும்
முடியாது; பட்டமும் தர முடியாது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே,
இப்பொழுது நம்முடைய தமிழக எல்லைக்கருகில் ஆந்திர
மாநிலத்திலே ஆரம்பித்துள்ளதாகத் தகவல் உள்ளதாக மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஒருக்கால் அப்படி
யும் இருக்கலாம். ஆனால், நாங்கள் எல்லாம் பார்த்த விளம்
பரம் எங்களுடைய மாவட்டத்திலே ஆரம்பிப்பதாகத் தானி
ருந்தது. அந்த விளம்பரத்தை ஒட்டித்தான் இந்தக் கேள்வியை
எழுப்பினேன். ஏற்கனவே, இங்கே விதி 54-ன் கீழ் கவன ஈர்ப்
புத் தீர்மானத்திற்குப் பதில் அளிக்கும்போது மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் மைனாரிட்டி சமுதாயத்தினர் என்ற காரண



1984 மார்ச் 21]

ணத்தாலே அரசுக்குத் தெரிவிக்காமலே கூட ஆரம்பிக்கலாம்.
ஆசிரியர் பயிற்சிப் பள்ளி என்ற ஒரு விதி இருக்கிறது என்று
தெரிவித்தார்கள். அந்த விதியின் அடிப்படையிலே இதை
ஆரம்பித்தார்களா என்று எனக்கு ஏற்பட்டிருக்கிற சந்தேகத்தை
நிவர்த்திக்கத்தான் இதனைக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, இப்படிக் கேள்விகள் கேட்பதும், சந்தேகத்தைத்
தீர்ப்பதும் மேற்கொண்டும் தனிப்பட்டவர்கள் ஆரம்பிப்பதற்கு
துணைபோகுமே தவிர, நாம் விரும்பாத அந்த நிலைமையைத்
தடுப்பதற்கு அது உதவாது. நம்முடைய சட்டமோ அல்லது
விதியோ அல்ல; அரசியல் சட்டப்படி சிறுபான்மை மக்களுக்கு
அந்த உரிமை இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய சென்னை நகரிலேயே நூற்றுக்கணக்கான
டிகிரிகள், இனஜினீயரிங் டிப்ளமோக்கள் அளிப்பதற்குச் சில
தனியார் கல்லூரிகள் இருக்கின்றன. அவர்கள் பல்வேறு நாடுகளில்
விளம்பரம் செய்கிறார்கள். இந்திய நாட்டுப் பத்திரிகைகளில்
விளம்பரம் செய்வதில்லை. வெளி நாட்டுப் பத்திரிகைகளில்—
ஆப்பிரிக்க நாட்டு பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறார்கள்.
ஏராளமான ஆப்பிரிக்க நாட்டுப் மாணவர்கள், அது உண்மை
என்று நம்பி, இங்கே வந்து படிக்கிறார்கள். அவர்களிடம்
அதிகமான பணம் இவர்கள் வாங்குகிறார்கள். இப்படி முறை
கேடான காரியங்கள் சென்னை நகரிலேயே நடைபெறுகிற கார·
ணத்தால், இதைப்பற்றி முழுமையாக விசாரித்து, உரிய
நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா
என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர்
அவர்களே, இப்பொழுது ஏ.எம்.ஐ.இ. போன்ற டிகிரிக்கான
வகுப்புகளை யார் வேண்டுமானாலும நடத்தலாம் என்று இருக்
கிறது. அது அசோசியேஷன் ஆப் இன்ஜினீயர்ஸ் நடத்துகின்ற
ஒரு பரிட்சை. அது பரவலாக நடத்தப்படுகிறது. நாம்கூட
அந்தப் பரிட்சை எழுதுவதற்கு நம்முடைய கல்லூரிகளிலே படிப்
பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறோம். அதைத் தடுக்க
வேண்டிய அவசியமும் இல்லை. அது பி.இ.க்கு ஈக்குவலாகச் சொல்
லப்பட்டிருக்கிறது. இதிலே இடம் கிடைக்காதவர்கள் அதிலே
போய் சேர்ந்து படிக்கிறார்கள். (குறுக்கீடு) பி. இ. டிகிரி யார்
வேண்டுமானாலும் தர முடியாது. ஏ.எம்.ஐ.இ. தான் பி.இ-க்கு
ஈக்குவலாக (Equal) இருக்கிறது. சென்னையிலே
இருக்கிற இரண்டு மூன்று கல்லூரிகள், இந்தியாவிலேயே கொஞ்சம்
பிரபலமான கல்லூரிகள். இப்பொழுது ஒரிசா போன்ற வட
பகுதியைச் சேர்ந்த பல்வேறு மாநிலங்களிலிருந்து கூட மாண.

[1984 மார்ச் 21

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுயவேலை வாய்ப்பு பயிற்சி மூலம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் எத்தனை பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது? மேலும் எந்த அடிப்படையில் அவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பதையும் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சுயவேலைத் திட்டம் என்பது ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சி திட்டத்தின் அடிப்படையில் செய்யப்படுகிற திட்டம், இதன் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஒன்றியத்தில் 600 குடும்பங்கள் அவர்கள் முன்னுக்கு வருவதற்கு, அவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு இந்தத் திட்டம் உதவிகரமாக இருந்து வருகிறது. அதேபோல் தமிழகம் முழுவதும் 1 லட்சத்து 26 ஆயிரத்து 800 குடும்பங்கள் பயன்படுகிற வகையில் ஆண்டு ஒன்றுக்கு 90 கோடி ரூபாய் செலவழிக்கும் திட்டமாக ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் நடந்து வருகிறது இந்தத் திட்டத்தின் மூலமாக சிறிதளவு படித்தவர்கள் கூட உதவியை பெறமுடியும. அப்படித்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சிக்காக அளிக்கப்படுகிற தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகஸ்ட் மாதம் முதல் உயர்த்தப்பட்டிருந்தாலும் அந்தத் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே அரசு இதை மேலும் உயர்த்துவதற்கு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆகஸ்ட் மாதத்திற்கு பின்னாலே உயர்த்தப்பட்டு கொடுக்கப்படும் தொகையை நான் ஏற்கனவே சொன்னேன். அந்தத் தொகையை மேலும் அதிகரிக்க வேண்டுமென்றால் மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெற வேண்டும். ஏனென்றால் இது அனைத்து மாநிலங்களிலும் செயல்படுகிற மத்திய அரசினுடைய திட்டம். ஆனால் பயிற்சிக்காலத்திலே கொடுக்கப்படுகிற தொகை மாநில அரசும், மத்திய அரசும் 50 சதவீதம் 50 சதவீதம் என்ற முறையில் கொடுத்து நடைபெற்று வருகிற திட்டமாக இந்தத் திட்டம் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு பரிசீலனை செய்யும்.



1984 மார்ச் 21]

மாவட்டந்தோறும் காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் திட்டம்.

376—(*வினா 18156)—டாக்டர் கே. சமரசம். திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுத் திட்டத்திற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் உள்ள சென்னை, நீலகிரி தவிர்த்து 14 மாவட்டங்களிலும் காய்கறி உற்பத்தி செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த தக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு முறையில் காய்கறி உற்பத்தி செய்பவர்களுக்கு மானியமும், மற்ற அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு உள்ளன.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பிலே அமைக்கப்பட்டுள்ள இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் எந்தெந்த வகையிலே சிறப்பான இயல்புகளைப் பெற்றுள்ளன ? அவைகள் அரசிற்கு உதவியாக இலாபகரமாக இயங்குகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் சத்துணவுத் திட்டத்திற்காக தமிழகம் முழுவதும் 44 காய்கறி கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இன்றைக்கு நீலகிரி, சென்னை தவிர, பாக்கியிருக்கின்ற அனைத்து மாவட்டங்களிலும் இந்தச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் இதற்கு வேண்டிய உதவிகளை செய்து கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்காக தராசு, எடைபொருட்கள் வாங்குவதற்கு 2,500 ரூபாய் உதவியும், கணக்கருக்கு மாத சம்பளம் 300 ரூபாய் கொடுக்கிற வகையில் வருடத்திற்கு 3,600 ரூபாய் மானிய உதவியாக கொடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் மூலம் கொடுக்கப்படுகிற உணவு சத்துள்ள உணவாக இருக்க வேண்டுமென்ற முறையில் வெங்காயம், வெண்டை, கத்தரி, முருங்கை, கீரை, முள்ளங்கி போன்ற காய்கறிகள் உற்பத்தி செய்யப்பட்டு கொடுக்கப்பட்டு வருகின்றன.

[1984 மார்ச் 21

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக அமைக்கப்பட்டிருக்கிற காய்கறி சங்கங்கள் இருந்தாலும் தனியார்களிடத்தில் காய்கறிகளை வாங்குகின்ற பழக்கம் சத்துணவு அமைப்பாளர்களிடம் தொடர்கிறதா ? ஆமெனில், அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்னவென்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது பற்றிய குறிப்புக்கள் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடத்தைத் திருச்சிக்கு மாற்றும் திட்டம்.

(*309—வினா 17996) திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடத்தைத் திருச்சிக்கு மாற்றும் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

(ஆ) தாமதத்திற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையிலிருந்து திருச்சிக்கு மாற்றும் திட்டத்தினை தற்போது அரசு தள்ளி வைத்துள்ளது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடத்தை திருச்சிக்கு மாற்றும் திட்டம் இருப்பதாகவும், ஆனால் அது தற்போது அரசால் தள்ளிவைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருச்சி தமிழகத்தின் மையப் பகுதியாக இருப்பதால் நிர்வாக சௌகரியத்திற்கும் அது வசதியாக இருக்கும் என்ற காரணத்தால் அத்திட்டம் போடப்பட்டது என்று கருதுகிறேன். ஆகவே, அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1984 மார்ச் 21]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, திருச்சி மாநிலத்தின் மையப் பகுதி. மாண்புமிகு உறுப்பினரின் ஊருக்குப் பக்கத்தில் இருக்கிற காரணத்தாலும் அதை அங்கே கொண்டு வந்துவிட வேண்டும் என்ற எண்ணம் இருக்கலாம். ஆனால் அந்தக் கழகத்திலே இருக்கும் பணியாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் அவர்களுக்கு இருக்கும் பல்வேறு சிரமங்களை எடுத்துச் சொன்ன காரணத்தாலும், அதிலே தாய்மார்கள் அதிகமான அளவில் இருப்பதால் அவர்களுக்கு இருக்கும் சங்கடங்களை எடுத்துச்சொன்ன காரணத்தாலும், மனிதாபிமான அடிப்படையில் அதைத் தள்ளிவைத்து இருக்கிறோம். அதை இப்போது கைவிட்டு விட்டாலும், பின்னர் அந்தத் தொழிலாளர்களோடு பேசிப் பார்த்து, அதற்குப் பிறகு ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடத்தை திருச்சிக்கு மாற்றுவது குறித்த முடிவு அதிலே உள்ள தொழிலாளர்களின் நலன் கருதி, அவர்களுக்கு இருக்கும் கஷ்டத்தினை மனதில் கொண்டு, அதிலே உள்ள தாய்மார்களின் சௌகரியத்தை முன்னிட்டு, அதை ஒத்திப்போட்டு இருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் அங்கே எத்தனை தாய்மார்கள் பணிபுரிகிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ? இப்படி ஒவ்வொரு பிரச்சனைக்கும் தொழிலாளர்கள், தொழிலாளர்கள் என்று சொன்னால், அந்தப் பகுதி மேம்படுவதற்கும், பொது மக்களுக்கு சௌகர்யம் கிடைப்பதற்கும் பாதகம் ஏற்படுமே, ஆகவே, அதை மறுபரிசிலனை செய்து, அந்தக் கழகத்தின் தலைமை அலுவலகத்தை அங்கே மாற்றிக்கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எத்தனை தாய்மார்கள் அங்கே இருக்கிறார்கள் என்ற கணக்கு தற்போது என்னிடத்தில் இல்லை. ஆனால் அங்கே நிறைய தாய்மார்கள் பணிபுரிகிறார்கள் என்பதை மட்டும் என்னால் இப்போது சொல்ல முடியும். அவர்களுக்கு ஏற்படுகின்ற சிரமங்களை பார்த்து, அவர்களுடைய நலன் கருதி அந்தத் திட்டத்தைத் தள்ளிப்போட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இங்கேயே அதை வைத்துக் கொண்டு சிறப்பாக நடத்த முடியுமா என்றும் பரிசீலித்து வருகிறோம். ஒருவேளை சற்று காலம் கடந்து அவர்களோடு பேசினால் மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல் நிறைவேற்ற முடியும் என்று கருதுகிறேன். இருந்தாலும் அவர்களுடைய நலனைக் கருத்தில் கொண்டுதான் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1984 மார்ச் 21

## நெரிசல் நேரங்களில் அண்ணா சாலையில் லாரிப் போக்குவரத்தைத் தடை செய்யும் திட்டம்.

*377—(*வினா எண் 12517)* திரு. இரா. தாமரைக்கனி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

*சென்னை, அண்ணா சாலையில் அதிக அளவில் விபத்துக்களைத் தடுப்பதற்கு நெரிசல் நேரங்களில் லாரிகளை ஓட்டிச் செல்வதற்குத் தடை விதிக்கும் எண்ணம் அரசு ஆய்வில் உள்ளதா?*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அண்ணா சாலையின் இரு பகுதிகளில் காலையிலும் மாலையிலும் இரண்டு மணி நேரம் லாரிப் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காலையிலும், மாலையிலும் இரண்டு மணி நேரம் லாரிப் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். முழு நேரமும் தடை செய்யப்படுமா? ஆட்டோ, சைக்கிள் ரிக்ஷா, எருமை மாடு எல்லாம் போகின்றன. அதனாலும் விபத்து ஏற்படுகிறது. சிலுக்கு சுமிதா, அனுராதா போன்றவர்களுடைய கவர்ச்சிப் படங்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ளதால் அதைப் பார்த்துக் கொண்டே ஓட்டும்போது விபத்து ஏற்படுகிறது. தனியார்கள், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் அடிக்கடி அந்த வழியாக ஊர்வலம் நடத்துவதினாலும் விபத்து ஏற்படுகின்றது. சினிமா கொட்டகைகள் நிறைய உள்ளன....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை எல்லாம் மானியக் கோரிக்கையில் விரிவாகப் பேசலாம். இது மானியக் கோரிக்கை இல்லை. விபத்து ஏற்படுவதற்கான காரணங்களை எல்லாம் இப்போது சொல்லிக் கொண்டிருக்க முடியாது. சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: ஓட்டல்கள் நிறைய அந்தப் பகுதியில் இருக்கின்றன. பெரிய அளவுக்கு நெரிசல் ஏற்பட்டு அதனாலும் விபத்து ஏற்படுகிறது. ஆகவே, சினிமா கொட்டகை, பெரிய ஓட்டல்கள் லைசென்ஸ்கள் ரத்து செய்யப்படுமா? லாரிப் போக்குவரத்தை முழு நேரமும் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



1984 மார்ச் 21]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, எத்தனையோ ஆண்டுகாலமாக நடந்துகொண்டிருக்கின்ற இந்தக் காரியங்களை ஒரே நிமிடத்தில் ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லி முடித்துவிட்டார்கள். அவர்கள் மூலக் கேள்வியில் கேட்டிருப்பது லாரி போக்குவரத்துப்பற்றியது. அது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையைத் தெரிவித்தேன். மற்றப் பிரச்சினைகளையும் மூலக் கேள்வியில் கேட்டிருந்தால் பதில் சொல்லியிருக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதில் பெரும்பாலானவைகளுக்கு நம்மால் நடவடிக்கை எடுக்க முடியாது; எடுக்கின்ற வாய்ப்பும் இல்லை. லாரிப் போக்குவரத்தை குறிப்பிட்ட நேரத்திற்குத் தடை செய்திருப்பதால் இப்போது விபத்துக் குறைந்திருக்கிறது. முழு நேரமும் தடை செய்வதற்கான வாய்ப்பு இல்லை; நெரிசல் நேரத்தில் மட்டும் தடை செய்யப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, அண்ணா சாலையில் பாதாளப் போக்குவரத்து சாலை ஒன்று அமைத்தால் நெரிசல் குறைந்து விபத்துக்களைத் தடுக்க முடியும். அது மட்டுமல்ல. அண்ணா சாலையை விரிவுபடுத்த வேண்டும். இரண்டு பக்கங்களிலும் இருக்கின்ற கட்டிடங்கள் மிகவும் பழமையானவை. அவைகளை எல்லாம் இடித்து எறிந்துவிட்டு, அகலமான புதிய சாலை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அண்ணாசாலைப் பக்கமே போகாமல் இருக்க முடிவு செய்துவிட்டார்கள் என்று கருதுகிறேன். அவ்வளவு கட்டிடங்களையும் நம்மால் இடித்தெறிய முடியாது. இந்தப் பிரச்சினையை வேறு எப்படித் தீர்ப்பது என்பதுபற்றி அரசு ஆலோசனை செய்யும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, லாரிகளைப் பொறுத்தவரையில் அதிக உயரத்தில் லோடுகள் வைத்து, அதன் காரணமாக விபத்துகள் ஏற்படுகின்றன. அதைப் போன்று இரவு நேரங்களில் ஒரே டிரைவர் 8 மணி நேரத்திற்கு மேல், தூங்காமல் தொடர்ந்து ஓட்டக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதனாலும் அதிர்ச்சி ஏற்பட்டு, விபத்து ஏற்படுகிறது. அதைத் தடுக்க, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா? அதைப்போன்று இரவு நேரங்களில். லாரிகளில் இரண்டு டிரைவர்களை கட்டாயமாக வைத்து ஓட்ட வேண்டுமென்ற விதி தீவிரமாகச் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அண்ணாசலையில் ஏற்பட்ட விபத்து பற்றியது மூலக் கேள்வி. நீங்கள் இரண்டு டிரைவர்களை வைத்து ஓட்டச் சொன்னால் என்ன பதில் கிடைக்கும்?

[1984 மார்ச் 21

திரு. கே. சௌந்திரராசன்: தலைவர் அவர்களே, திருச்சி வர இருந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமை அலுவலகத்தை தற்போது தள்ளி வைத்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தொழிலாளர் நலன் கருதியும், அங்கேயுள்ள தாய்மார்களின் நலன் கருதியும் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். நாட்டின் நலன் கருதுகின்றபோது அந்தத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் திருச்சியில் இருப்பதுதான் நியாயம் என்று நாட்டு மக்களால் உணரப்படுகின்றபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு உடனடியாக அதை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே நாட்டின் நலனிலே அந்தத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் சென்னையில் பணியாற்றுவதால் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. திருச்சியிலே இருந்தாலும், இங்கேயிருந்தாலும் அது பொது மக்களுக்கு செய்ய வேண்டிய பணிகளைச் சிறப்பாகச் செய்து கொண்டுதான் இருக்கும். இங்கே இருப்பதை விட திருச்சியில் இருந்தால், தமிழகத்தின் மையப் பகுதியாக திருச்சி இருக்கிறது என்பதால், நிர்வாக வசதி கூடுதலாக இருக்கும் என்பதால் திருச்சிக்கு மாற்றவேண்டும் என்று பரிசீலித்தோம். மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல் அது மக்களுக்கு ஏதேனும் பிரச்சினையை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொன்னால் அதை அன்றைக்கே செய்து இருப்போம். தொழிலாளர்களின் நலனைப் பொறுத்து நிர்வாகம் சற்று சிரமத்தை எடுத்துக் கொண்டாலும், நாம் இந்த நிலையை எடுக்கவேண்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோழன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்தமைக்கும் திட்டம்.

310—(*வினா எண் 22346) திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சோழன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்து, திருச்சியைத் தலைமையாகக் கொண்டு ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?



1984 மார்ச் 21]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ): சோழன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: தலைவர் அவர்களே, சோழன் போக்குவரத்துக் கழகம் மிகப் பெரிய போக்குவரத்துக் கழகம். காரணம், திருச்சி, தஞ்சை ஆகிய இரண்டு பெரிய மாவட்டங்களிலும் அது ஓடிக்கொண்டிருக்கின்றது. அந்த இரண்டு பெரிய மாவட்டங்களுக்கும் ஒரு போக்குவரத்துக் கழகம் இருப்பதோடு மட்டுமல்லாமல், தஞ்சையின் கிழக்குப் பகுதியான கும்பகோணத்தில் அதன் தலைமை அலுவலகம் இருப்பதால், சில சிரமங்கள் இருக்கின்றன. என்னைப் போன்று திருச்சியின் மேற்குக் கடைகோடி பகுதியில் இருப்பவர்களுக்கு சரியான முறையில் போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்ததைப் போல, அதை இரண்டாகப் பிரிப்பதற்கு உடனடியாக முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும்.

(முற்பகல் 10-00.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே. சௌந்திரராசன்: தலைவரவர்களே, சோழன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரிக்கின்ற திட்டம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நிதிநிலை அறிக்கையில் கூட சொல்லப்பட்டிருந்தது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அடிக்கடி இந்த உறுதிமொழியைக் கொடுத்தார்கள். ஆனால் அந்த உறுதிமொழி செயல்வடிவத்திற்கு இன்னும் வரவில்லை. அந்த உறுதிமொழி எப்போது செயல்படும் என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, அவர்கள் இப்படிப்பட்ட ஒரு கேள்வியைக் கேட்கவேண்டும் என்பதற்காகத்தான் காத்துக்கொண்டிருந்தோம். விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும். விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்றால், அடுத்த நிதிநிலை அறிக்கை என்று போகாமல் அதற்கு முன்னாலேயே செய்யப்படும்.

[1984 மார்ச் 21

திரு. மி. வின்செண்ட்: தலைவரவர்களே, சென்னை அண்ணாசாலையில் அதிக அளவில் ஏற்படுகின்ற விபத்துக்களைத் தடுக்க காமராஜர் சாலையில் இரும்பு சுவர் போட்டிருப்பது போன்று அண்ணாசாலையிலும் அண்ணா சிலையிலிருந்து கலைக்கல்லூரி வரையில் இருமபு சுவர் போடப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, லாரி விபத்தைப் பற்றித்தான் கேட்டிருக்கிறார்கள் மூலக்கேள்வியில். அண்ணாசாலையின் நடுவில் இரும்புக்கமபி போடுவதாக இருந்தால் இரண்டு பக்கமும் அகலம் குறைந்து போக்குவரத்துக்கு சிரமமாக இருக்கும். அதை பரிசீலனை செய்து பார்த்து, தேவை என்றால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ப. தீர்த்தராமன்: தலைவர் அவர்களே, அண்ணா சாலையின் இரு மருங்கிலும் இருக்கின்ற நடைபாதைகளில் கடைகளும், அதற்கு மேலாக, பிச்சைக்காரர்களின் நெரிசலும் அதிகமாக இருக்கிறது. அதனால் நடைபாதைகள் தடுக்கப்பட்டு, பொதுமக்கள், வாகனங்கள் செல்லவேண்டிய இடங்களில் நடக்கவேண்டியுள்ளது. அவைகளையெல்லாம் அகற்றி நடைபாதையில் மக்கள் நடப்பதற்கும், வாகனங்கள் செல்லும் பாதையில் வாகனங்கள் செல்வதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவையெல்லாம் உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டிய கேள்வி.

### பெரியகாடம்பட்டியில் ஆரம்பிக்கப்பட்ட சேகோ (Sago) தொழிற் கூட்டுறவுச் சங்கம்.

385—(*வினா எண். 18201) திரு. செ. செம்மலை: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம தொகுதியில் பெரிய காடம்பட்டியில் ஆதிதிராவிடர்களுக்கென்று ஆரம்பிக்கப்பட்ட சேகோ (Sago) தொழில் கூட்டுறவுச் சங்கம் எப்போது பணியைத் தொடங்க உள்ளது ?

(ஆ) மேலும் அந்தத் தொகுதியில் எத்தனை இடங்களில்—அதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?



1984 மார்ச் 21]

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: (அ) பெரிய காடம்பட்டி அரிசன ஸ்டார்ச்சு மற்றும் சவ்வரிசி தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கம் 8–6–1982 அன்று பதிவு செய்யப்பட்டது. இது இன்னமும் உற்பத்தியைத் துவங்கவில்லை.

(ஆ) இப்பகுதியில் இந்த மாதிரி வேறு தொழிற் கூட்டுறவுச் சங்கம் தொடங்க தற்போது எதுவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திரு. செ. செம்மலை: இந்தத் தொழில் கூட்டுறவுச் சங்கத்தினுடைய முதலீடு எவ்வளவு என்ற விவரத்தையும், மேற்படி சங்கத்தில் எத்தனை உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக ஆகும் செலவு தற்போது ரூ. 7.05 இலட்சத்திலிருந்து ரூ. 16 இலட்சமாக அதிகமாகியிருக்கிறது. இதில் 50 ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, இன்னும் இந்தச் சங்கத்தினுடைய பணிகள் துவங்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் தாமதத்திற்கான காரணம் என்ன? அந்தக் காலதாமதம் இப்போது தவிர்க்கப் பட்டுவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: காலதாமதத்திற்கான காரணம் நிலம் கிடைக்காமல் இருந்தது. தற்போது நிலம் கிடைத்திருக்கிறது. இந்தத் திட்டம் விரைவில் செயல்படத் துவங்கும்.

### வேர்கிளம்பி என்னுமிடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள தொழிற் கூட்டுறவு இரப்பர் தொழிற்சாலை.

386—*(வினா எண். 21302) திரு. டி. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்டத் தொழில் மையத்தின் கீழ் வேர்கிளம்பி என்னுமிடத்தில் தொழிற் கூட்டுறவு ரப்பர் தொழிற்சாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) அத் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) அரசு பங்கு மூலதனம் ரூ. 2.00 இலட்சம்.

(ஆ) விரைவில் கட்டுமானப் பணி துவங்கும்.

திரு. ஜே. ஹேமசந்திரன் : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைக்கான கால் கோள் நடு விழா 13—6—1983 அன்று நடைபெற்றது என்றாலும், இன்று வரையில் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அந்தக் காலதாமதத்தைத் தவிர்த்து, உடனடியாக கட்டிடங்களை ஆரம்பிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய தற்போதைய மதிப்பீடு ரூ. 34 இலட்சமாகும். இதற்கான நிலம் 21—2—1983-ல் வாங்கப்பட்டது. திருத்திய திட்டத்தின்படி கட்டிட வரைபடம் மற்றும் மதிப்பீடு ஏற்கப்பட்டு, இத்துறையின் கட்டுமானப் பிரிவில் இருக்கிறது. இந்தத் திட்டத்தினை 1984—85 ஆம் ஆண்டில் முடிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

## தொண்டாமுத்தூரில் பிற்பட்டோர் நல மாணவர் விடுதிக்கான கட்டிடம் கட்டும் திட்டம்.

381 (*வினா எண். 17786) திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர், பிற்பட்டோர் நல மாணவர் விடுதிக்கான கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) தொண்டாமுத்தூர் தொகுதி சின்னத்தடாகம் பிற்பட்டோர் நல மாணவியர் விடுதிக்குக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) இல்லை.

(ஆ) இல்லை.





திரு. மா. சின்னராசு : என்னுடைய தொண்டாமுத்தூர் தொகுதியில் கடந்த 10 ஆண்டுகாலமாக பிற்பட்டோர் நல விடுதி நடந்து வருகிறது. இது ஒரு வாடகைக் கட்டிடத்தில் நடந்தது. அதையும் சென்ற ஆண்டு அதனுடைய உரிமையாளர் அதைக் காலி செய்யவேண்டுமென்று கேட்டு, தற்போது வசதி குறைந்த கொட்டகையில் நடந்து வருகிறது. ஆகவே அங்குள்ள மாணவர்களின் வசதிகளை கருத்தில் கொண்டு, விரைவில் தொண்டாமுத்தூரிலும், சென்ற ஆண்டு துவங்கப்பட்ட மாணவியர் விடுதிக்காக சின்னத்தடாகத்திலும் விடுதிகளை கட்டுவதற்கான உத்தரவை அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் தொண்டாமுத்தூரிலும், சின்னத்தடாகத்திலும் கட்டிடங்கள் கட்டுகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. எனவே இந்த ஆண்டு அது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

(முற்பகல் 10—10)

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சரிடம் இதற்காக கோரிக்கை வைத்த போது, அது பரிசீலனையில் இருக்கிறது என்று எனக்குப் பதில் வந்திருக்கிறது. ஆகவே இப்போதாவது அதைத் தீவிரமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, இந்த ஆண்டு, அதற்கான கட்டிடங்கள் கட்டிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன். அத்தோடு, தமிழக அரசு பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக, சென்ற ஆண்டு எத்தனை விடுதிகள் கட்டியிருக்கின்றன என்ற விவரத்தையும் அளிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களும், மாணவியர்களும் தங்கி கல்வி பயில வசதியாக இருக்கும் பொருட்டு, பிற்படுத்தப்பட்ட, மற்றும் டி. அன்ட் சி, மாணவர்கள், மாணவியர்களுக்காக 36 விடுதிகள் கட்டிக்கொண்டு வருகிறது. 1981—82-லேயிருந்து, 1982—83 வரை, 11 விடுதிகள் கட்ட, 94.45 இலட்சம் ரூபாயை அரசு அனுமதித்து விடுதிகள் கட்டும் வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. இந்த தொண்டாமுத்தூர், சின்னத்தடாகத்தில் மாணவர்கள் விடுதிக்கான கட்டிடம் கட்டுவதற்கு இந்த ஆண்டு தீவிரமாக அரசு பரிசீலனை செய்து முடிவு செய்யும்.

[1984 மார்ச் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### உறுப்பினர்கள் விடுதிக்குமுன் நிறுத்தப்படுசிற வாடகை, ஆட்டோ, கார் ஓட்டுநர்களின் நடத்தை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள், இரெ. இராசமாணிக்கம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், ஜே. ஹேமச்சந்திரன், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் ''சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்கும் விடுதியின் முன் நிறுத்தப்பட்டுள்ள வாடகைக் கார் டிரைவர்கள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் அழைக்கும் இடத்திற்கு வர மறுப்பதோடு, மீட்டர் கட்டணமும் வாங்குவதில்லை. கேட்கும் சட்டப் பேரவை உறுப்பினர்களைக் கேவலமாகப் பேசுவதோடு டிரைவ்ர்கள் ஒன்று சேர்ந்து மிரட்டவும் செய்கிறார்கள். சட்டப் பேரவை உறுப்பினர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய அவசியம் குறித்தும், ஆட்டோ வாடகைக்கார் நிறுத்தும் இடம் மாற்ற வேண்டிய அவசியம் குறித்தும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தைமொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்கும் விடுதியின் முன்பு நிறுத்தப்பட்டு இருக்கும் வாடகைக் கார் டிரைவர்கள், முறை தவறி நடக்கிறார்கள் என்பதைப் பற்றி இந்த அவையில் விவாதிக்க வேண்டும் என்று நான் 6–3–84 அன்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு தலைவர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். அதன் மீது இன்றைய தினம் எங்களுடைய கருத்துக்களைக் கூறுவதற்காக அனுமதி அளித்தமைக்கு ஆரம்பத்தில் நான் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





பொதுவாக சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்கும் விடுதிக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருக்கிற வாடகைக் கார், ஆட்டோ, இதனுடைய டிரைவர்கள் நாங்கள் அழைக்கும் இடத்திற்கு வருவதில்லை. அப்படி வருகிறேன் என்று சொன்னாலும், அவர்கள் மீட்டர் கட்டணம் வாங்குவதில்லை. அவர்களுக்குத் தேவையான கட்டணத்தைக் கேட்கிறார்கள். பொதுவாக எழும்பூர் ரயில்வே நிலையத்திற்குச் செல்லவேண்டும் என்றால், 10 ரூபாய்க்குக் குறையாமல் அவர்கள் கட்டணம் கேட்கிறார்கள். மீட்டரைப் போடுங்கள், மீட்டர் கட்டணத்தைத் தருகிறேன் என்று சொன்னால், அவர்கள் கேலி பேசுவதோடு மட்டுமல்லாமல் 4, 5 பேர்களோடு சேர்ந்து கொண்டு, தகராறு செய்கிறார்கள். இப்படிச் சட்டமன்ற உறுப்பினர்களையே கேலியாகப் பேசக்கூடிய அளவிற்கு நிலைமைக்ள் இருக்கின்றன. இது முறையல்ல. எனவே இதைத் தடுத்து நிறுத்த வேண்டியது நம்முடைய கடமையாகும்.

அதோடு மட்டுமல்லாமல், இந்த டிரைவர்கள், எம். எல். ஏக்கள் செல்லக்கூடிய பாதையில் கூட்டமாக 10, 20 பேர்கள் அமர்ந்து கொள்கிறார்கள். இன்னும் மதுகூட அருந்தியிருக்கிறார்கள். அங்கே செல்லுகின்ற பெண்களைப் பார்த்து சில டிரைவர்கள் கிண்டலாகப் பேசுவதைக் கூட நான் கண்டிருக்கிறேன். இப்படிப்பட்ட நிலையைக் கட்டுப்படுத்தி, அதை தடுத்து நிறுத்தியாக வேண்டும். இதையெல்லாம் கேட்டால், அங்கேயிருக்கின்ற டிரைவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டு மிரட்டுவது போல் பேசுவதைக் கூட, எல்லா உறுப்பினர்களும் கண்டிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகையினாலே முறையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த அவையில் பல நேரங்களில் இது சம்பந்தமாக அவைத் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட ஒரு முக்கியமான பிரச்சினையாகும். இதுபோன்ற நிலைமைகள்தான் சட்டப்பேரவை உறுப்பினர்கள் உள்ள பழைய கட்டிடத்தில், அண்ணா சிலை அருகே உள்ள இடத்திலும் இப்படிப்பட்ட நிலைமைகள் தான் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

ஆகவே, சட்டப்பேரவை உறுப்பினர்களுக்காக நிறுத்தப்பட்டிருக்கக்கூடிய வாடகைக் கார்களை, நம்முடைய காம்பவுண்ட் வளாகத்திற்கு அப்பால் வேறு இடத்தில் நிறுத்த உடனடியாக ஏற்பாடு செய்தாக வேண்டும். அப்படி நிறுத்தக்கூடிய இடத்தில் போக்குவரத்துத் துறை போலீசாரை நிறுத்தி, முறையாக பொதுமக்கள் அழைக்கக்கூடிய இடத்திற்கு அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் அழைக்கக்கூடிய இடத்திற்குச் செல்லக்கூடிய வகையில், ஏற்பாடு செய்வதற்கும், மீட்டர் காட்டு

[திரு. இரெ. இராசமாணிக்கம்] [1984 மார்ச் 21

கின்ற உரிய கட்டணத்தை வாங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி தவறு செய்வார்களேயானால் அதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் விடுதியின் முன்பாக வாடகைக் கார்களை நிறுத்துவதற்குப் பதிலாக, அரசின் சார் பாக 10, 20 வாடகைக் கார்களை வாங்கி உறுப்பினர்களுக்கு வாடகைக்கு விடுவதற்கு கூட முயற்சிக்கலாம், சரியாக இருக் கும் என்று நான் கருதுகிறேன். முறைமீறாமல், நியாயமான முறையில் நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக வாட கைக் கார்களை வாங்கி விடுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு மட்டும் அல்லாமல், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் உள்ள வராண்டாக்களில் எங்குமே லைட்டுகளே எரிவது இல்லை. லைட்டுகள் எரிவதில்லை என்பதோடு மட்டுமல்ல. அந்த வராண்டாக்களில் இரவு நேரங்களில் முழு போதை யோடு யார் யாரோ படுத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே சீட்டு விளையாடுகிறார்கள். * * *

இது பற்றி நமது சட்டமன்றப் பேரவைத் துறையிலும், அங்கேயே இருக்கக்கூடிய அதிகாரிகளிடத்திலும் முறையிட்டிருக்கி றேன். ஆனால் இது சம்மந்தமாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

* * * * *

அதையெல்லாம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கண்டிக்க வேண்டும் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு ஆட்டோவோ, டாக்சியோ, வாங்கிக் கொடுத்துவிடலாம் போல் இருக்கிறது. போதையிலே வருகிறவர்கள் முழு போதை யிலேதான் வருவார்கள். போதையிலே " அரை போதை " என்று வேறு இருக்கிறதா என்ன ?. குடிகாரர்களைப் பற்றி பேச ஆரம்பித்தால் இங்கே பேசி முடிக்க முடியாது. (குறுக்கீடு)

* * * * *

இது எல்லாம் சரியல்ல. அவைகளை நீக்கிவிடுகிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் ; சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்கியிருக்கக்கூடிய விடுதியில் வெளியிலே இருந்து வரக்கூடியவர்கள் நிறையபேர் உள்ளனர். எல் லோருமே வருகிறார்கள். நான் சொல்வது அவைகளை யெல்லாம் முறைப்படுத்த வேண்டும் என்பதற்காகச் சொல்கி றேன்.

* * * * *

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1984 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறக்கூடாது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பெயரை வேண்டுமானாலும் நீங்கள் நீக்கிவிட கேட்டுக் கொள்கிறேன். அடுத்து வராண்டாக்களில் படுத்திருக்கக் கூடியவர்கள், நான் முன்பேயே உங்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். **இவைகளை தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவைகள் எல்லாம் வேண்டாம். ஆட்டோ, டாக்சியைப் பற்றி சொல்லி முடிக்க வேண்டும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ, டாக்சிகளை முறைப்படுத்துகின்ற வகையில் புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியாக இருந்தாலும் சரி, அல்லது பழைய சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியாக இருந்தாலும் சரி, போக்குவரத்து போலீசாரை வைத்து, அந்த டாக்சி, ஆட்டோ டிரைவர்களை கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, உறுப்பினர்களுக்கு தொல்லை கொடுக்காத வகையில் தவறு நடக்காத முறையில், கண்காணிக்க வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த ஆட்டோக்களையும் டாக்சிகளையும் வேறு இடத்திலே நிறுத்தும் வகையில் அமைக்கவும் நம்முடைய தலைவர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும். இது குறித்து எல்லா உறுப்பினர்களும் விவாதிக்கக் கூடிய வகையில், கருத்துக்களை தெரிவிக்கக் கூடிய வகையில், இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைக்குமாறு கேட்டு, முடிக்கிறேன்.

(முற்பகல் 10-20)

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆட்டோ கிடைப்பதிலே விடுதியிலே ஏற்படக் கூடிய பிரச்சினைகளைப் பற்றி விளக்கி இருக்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்களுக்கே இந்த நிலை என்றால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் மக்களுடைய நிலை என்ன என்பதை நிச்சயமாகப் பார்க்க வேண்டும். பூசல், பெட்ரோல் விலை அதிகப்பட்டதன் காரணமாக ரேட்டை அதிகப் படுத்த வேண்டிய நிலைமையில் நியாயம் இருந்தாலும் அந்த ரேட் எனார்மஸ் ரேட்டாகப் போகக் கூடிய நிலைமை இருக்கிறது

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இவ்வளவு அதிகமான ரேட்டைக் கொடுத்து இந்த நாட்டு மக்கள் ஆட்டோவிலே பிரயாணம் செய்ய முடியுமா என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக 3, 3½ ரூபாய் கேட்க வேண்டிய இடத்தில் 8 ரூபாய் 10 ரூபாய் கேட்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆட்டோ டிரைவர்களிடம் இது சம்பந்தமாக விசாரித்தபோது அதிலே சில திருட்டுத்தனங்கள் நடைபெறுவது தெரிந்தது. சில ஆட்டோக்களை முதலாளிகள் வாங்கி கூலிக்கு டிரைவர்களை வைத்து ஓட்டுகிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு பெரிய அளவுக்கு ஊதியம் கிடைக்காத அளவிலே மீட்டர் போடாத அளவுக்கு ஓட்ட வேண்டுமென்று சொல்வதால் ஆட்டோக்களிலே மீட்டர்களைப் போடாமல் 8 ரூபாய் 10 ரூபாய் தந்தால்தான் வர முடியும் என்று சொல்கிறார்கள். அண்ணா சாலைக்கு அருகில் உள்ள விடுதியாக இருந்தாலும் சரி, புதிய விடுதியாக இருந்தாலும் சரி, செக்ரடேரியட்டுக்கு வருவதற்கு ஆட்டோக்களையும் டாக்சிகளையும் கூப்பிட்டால் வருவதற்கு அவர்கள் மறுக்கிறார்கள். டாக்சிகளைப் பொறுத்த வரையிலும் இதே நிலைமைதான் இருக்கிறது. 7 ரூபாய் வாங்க வேண்டிய நிலையில் 20 ரூபாய் கேட்கிறார்கள். மீட்டரைக் கட்டாயப்படுத்திப் போட்டாலும் ஒரு வண்டியிலே உள்ள மீட்டரிலே ஒரு ரேட்டும் இன்னொரு வண்டியிலே உள்ள மீட்டரிலே இன்னொரு ரேட்டும் ஒரே டிஸ்டன்ஸுக்கு காட்டக் கூடிய முறையிலே மீட்டரிலே மோசடிகள் நடக்கின்றன.

அதிகாலை 5 மணிக்கு முன்னாலே சென்றால் அதற்காக எக்ஸ்ட்ரா ரேட்டுகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் காலை 6 மணிக்குக் கூப்பிட்டால் கூட அவர்கள் எக்ஸ்ட்ரா ரேட் கேட்கிறார்கள், கட்டாயப்படுத்தி வாங்குகிறார்கள். சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு 8 ரூபாய் வாங்குகிறார்கள். இது சட்டமன்ற உறுப்பினர்கள் பிரச்சினை மட்டுமல்ல, பொது மக்கள் பிரச்சினையாகவும் இருக்கிறது.

அதே நேரத்திலே 3 பேர்கள் ஏற்றிச் செல்ல வேண்டுமென்று கேட்டால் அவர்கள் மறுக்கிறார்கள். அமைச்சர் அவர்களால் இந்த அவையிலே 3 பேர்களை ஏற்றிச் செல்வதற்கான உத்திரவைப் போடுவதாக அல்லது அதைப் பரிசீலிப்பதாக வாக்குறுதி கொடுக்கப்பட்டது. அதிலே என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது? 3 பேர்களை ஏற்றிச் செல்வதற்கான நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் கோரிக்கை என்ற முறையிலே கேட்க விரும்புகிறேன். மீட்டர் போடுவதால் மட்டும் பிரச்சினை தீர்ந்து விடாது. இன்ன இடத்திலிருந்து இன்ன இடத்திற்கு இவ்வளவு ரேட் என்று பிக்ஸ் பண்ண வேண்டும். ஹாஸ்டலிலிருந்து செக்ரடேரியட்டுக்கு, ஹாஸ்டலிலிருந்து சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு, ஹாஸ்டலிலிருந்து பாரிஸீக்கு, ஹாஸ்டலிலிருந்து தேனாம்பேட்டைக்கு இவ்வளவு என்ற முறையிலே ரேட் பிக்ஸ் பண்ணுவதற்கு ஏற்பாடுசெய்ய வேண்டும். அப்படிச் செய்தால் மீட்டர் ளிலே உள்ள மோசடிகளைத் தடுக்க முடியும். ஆட்டோக்களை சில முதலாளிகள் வாங்கி கூலிக்கு வேலை வாங்கக்கூடிய முறையிலே நடைபெறுகிறது. எப்படி பேருந்துகளுக்கு போக்குவரத்துக் கழகத்தை அரசு அமைத்திருக்கிறதோ அதைப் போலவே ஆட்டோக்களுக்கு ஒரு போக்குவரத்துக் கழகத்தை ஏற்படுத்த தீவிரமாக ஆலோசிக்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் குறிப்பிட்டதைப் போல் அரசே ஆட்டோக்களை வாங்கி விட்டால் தான் இப்படிப்பட்ட நிலைமைகளைத் தீர்க்க முடியும். பினாமி பெயரில் கூட ஆட்டோக்கள் இருக்கின்றன. அரசே ஆட்டோக்ளைப் பொறுத்த வரையில் ஆட்டோ போக்குவரத்துக் கழகம் அமைக்க தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, பொது மக்கள் பிரச்சினையாகவும் இது இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக சில விவரமான கருத்துக்களை ஆராய்வதற்காக இந்த சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் இருக்கின்ற ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள் பற்றியும் அவர்கள் நடந்து கொள்கின்ற முறை பற்றியும் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஆட்டோ ரிக்ஷா ஆகட்டும், அல்லது டாக்சி ஆகட்டும் நடுத்தர மக்கள் பயன்படுத்துகிற வாகனம் என்பதை நாம் நன்றாக அறிவோம். அந்த ஆட்டோ ரிக்ஷா டிரைவர்களில் எல்லா டிரைவர்களையும் நாம் ஒரு சேர எடுத்துக் கொள்ள முடியாது. அவர்களில் நல்ல டிரைவர்களும் இருக்கிறார்கள். கொடுத்த காசை வாங்கிக் கொள்ளக் கூடிய டிரைவர்களும் இருக்கிறார்கள். ஆனால் சிலர் வேண்டும் என்றே இந்த மாதிரியான தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் என்று தெரிந்த பிறகு கூட குறைவான தொலைவிற்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால் இது அந்தப் பக்கம் போகிற வாகனம் அல்ல என்று சொல்லி அங்கே போய் கேளுங்கள் என்று சொல்லுகிறார்கள். அடுத்த பக்கம் போய்க்கேட்டால் இது வராது, ரிப்பேர் ஆகியிருக்கிறது என்று ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி தட்டிக் கழிக்கக் கூடிய நிலையை நானே பல்வேறு நிலைகளில் உணர்ந்து இருக்கிறேன். ஒரு சம்பவத்தைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் இன்று காலையில் கூட நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. இராசாராம் அவர்கள் காலில் ஆணி குத்தி நடக்க முடியாத

சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட அந்த ஓட்டுநரைப்பற்றி எழுதிக் கொடுத்திருந்தால் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருந்திருக்கும்.

மீட்டர் கட்டணத்தை முறைப்படி வாங்கவில்லை என்றும், தரக்குறைவாகப் பேசுகிறார்கள் என்றும், அழைத்த இடத்திற்கு வருவதில்லை என்றும் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே எதிர்காலத்திலே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற உணர்வினைக்கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம்.

குறிப்பாகச் சட்டப் பேரவையினுடைய விடுதிக்கு முன்னால் இருக்கும் அந்த இடம் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட இடமாக இருப்பதால், அத்தனை உறுப்பினர்களின் உணர்வுகளையும் தெரிந்த மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் அந்த இடத்தை மாற்ற வேண்டுமென்று உத்தரவிட்டால் உடனடியாகச் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆட்டோ ஓட்டுநர்களைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, அவர்களைப் பற்றி அரசுக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக, ஆட்டோ, பக்க எண்கள் குறிக்கப்பட்டிருக்கிறது ; ஓட்டுநர்கள் வில்லைகளை—பெயர் வில்லைகளை அணிந்து கொள்ள வேண்டுமென்ற உத்தரவு இருக்கிறது. அதையெல்லாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற உணர்விலே செய்யப்பட்டிருக்கிறது. இதுவரையில் சம்பந்தப்பட்ட காவல்துறைக்கோ, அல்லது போக்குவரத்துத் துறைக்கோ இதுபோன்ற கம்ப்ளெயிண்டுகளை யாரும் கொடுக்காமல் இருப்பதால் இதில் நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

மேலும், சமீப காலத்தில்தான் அந்த ஆட்டோ ஓட்டுநர்கள் ஒரு போராட்டத்தைத் துவங்கினார்கள். அதிலே அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்தியது. நான் ஒன்றை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்பொழுது பல்வேறு அரசியல் கட்சிகள் அவர்களுக்கு ஆதரவாக அறிக்கைகள் கொடுத்ததையும், பேசியதையும், இங்கே நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பேச்சுவார்த்தையில் 2–2–1984 ஆம் நாளன்று அந்த ஓட்டுநர்கள், அதனுடைய உரிமையாளர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் ஆகியவர்கள் அமர்ந்து பேசியதிலே கீழ்க்கண்ட வரைமுறைகளைத் தீவிரமாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதற்கான ஒப்புதலை அதன் ஓட்டுநர்களும், உரிமையாளர்களும், அரசுக்கு வழங்கியிருக்கிறார்கள். அந்த வரைமுறைகளாவன :—





(1) ஓட்டுநர்கள் வண்டி ஓட்டும்போது சீருடை அணிந்திருக்க வேண்டும். (2) ஓட்டுநர் இருக்கையில் இரண்டாவது நபர் உட்கார அனுமதிக்கக் கூடாது. (3) உரிமம் இல்லாத நபரை வண்டி ஓட்ட அனுமதிக்கக் கூடாது. (4) அதிகக் கட்டணம் கேட்கக் கூடாது. (5) குறிப்பிட்ட இடத்திற்குத் தான் வருவேன் என்று சொல்லக் கூடாது. (6) கட்டண மீட்டரில் தவறுகள் இருக்கக் கூடாது. (7) சாலை விதிகளைத் தீவிரமாகக் கடைப்பிடிக்க வேண்டும். (8) அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேல் பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடாது. (9) மோட்டார் வாகன விதி முறைகள் தீவிரமாகக் கடைப்பிடிக்க வேண்டும். (10) பொது இடங்களில் ஸ்டாண்டுகளில் வரிசையில் நின்று பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும். (11) தவறு இழைக்கும் ஓட்டுநர்கள், உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். (12) இனிமேல் போராட்டம் என்றால் 14 நாட்கள் முன்னறிவிப்புக் கொடுத்துத் தொடங்க வேண்டும்.

அந்த வரைமுறைகளை அவர்களிடத்திலே சொல்லி ஒப்புதல் வாங்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அவர்கள் வைத்த மூன்று முக்கியமான கோரிக்கைகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன் ; ஒன்றும் கட்டணத்தை உயர்த்தித் தரவேண்டும் ; இரண்டு, சென்னைப் பெருநகர் முழுவதும் ஓடிக்கொண்டிருக்கிற ஆட்டோக்கள் பெருநகர் வளர்ச்சித் திட்டப் பகுதிகள் முழுவதும் ஓட்டப்பட வேண்டும் ; மூன்று, மூன்றுபேரை அனுமதிக்க வேண்டும் ; இப்படி மூன்று கோரிக்கைகளை வைத்தார்கள்.

26 ஆம் தேதி தான் இந்தக் கட்டணத்தை நிர்ணயிக்கின்ற அந்த ஹியரிங் நடக்க இருக்கின்றது. அதற்குப் பிறகு அதற்குத் தேவையான அத்தனை உத்தரவுகளும் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்று பேர் செல்ல அனுமதிக்கப்படுகின்ற காரணத்தால் இங்கே சொல்லப்பட்டது போன்று அந்தக் கட்டணம் அதிகம் என்ற நிலைமை கூட இல்லை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். எனவே அப்படி மூன்று பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு 26 ஆம் தேதிக்கு மேலே உத்தரவு போடப்பட்டதற்குப் பிறகு இங்கே யாராவது தவறு செய்வார்களேயானால் அதாவது இங்கே உறுப்பினர்கள் பேசியதுபோல் ஓட்டுநர்கள் யாராவது தவறு செய்வார்களேயானால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சொன்னதுபோல் யாரோ ஒரு சிலர் செய்கின்ற தவறுதான் மற்றவர்களையும் பாதிக்கின்றது. ஆனால் தவறை யார் செய்தாலும் கடுமையான நடவடிக்கை நாம் எடுக்க இருக்கிறோம். அப்போது மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பி

[திரு. சு. முத்துசாமி] [1984 மார்ச் 21

னர்களும், அத்தனை அரசியல் கட்சிகளும் முழு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று, அதாவது பொதுமக்களின் நன்மை கருதி ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

ஆட்டோ ஓட்டுநர் தவறு செய்தால் உடனடியாகச் சுலபமாக காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்பதற்காக சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அதற்காக கார்டுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு இடத்திலும் பயணிகளுக்கு அவற்றை வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். உதாரணமாக பேருந்து நிலையங்கள், இரயில்வே ஸ்டேஷன், மற்றும் ஹோட்டல்கள் போன்ற முக்கியமான இடங்களில் இந்தக் கார்டுகளைக் கொடுப்பதற்காக காவல் துறையின் மூலமாக ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அது தமிழிலும் ஆங்கிலத்திலும அச்சடிக்கப்பட்டிருக்கின்றது. அதிலே மூன்று வரிகளைமட்டும் பில்அப் செய்து எங்களுக்கு அனுப்பினால்போதும். சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கின்ற வகையில், கடுமையான நடவடிக்கை எடுக்கின்ற வகையில் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

தொழிலாளர்கள் வைக்கின்ற கோரிக்கையைத் தீர்த்துவிட்டால் அதற்குப் பிறகு அவர்கள் தவறு செய்ய மாட்டார்கள். செய்யவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு வராது என்ற அடிப்படையில் அரசாங்கம். . . . . . . . . . . . (குறுக்கீடு). . . . எனவே அந்த வகையில் கடுமையான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க இருக்கின்றது. அதன்மூலமாக அதிலே இருக்கின்ற ஒரு பகுதி ஓட்டுநர்கள் கூட காப்பாற்றப்படுவார்கள் என்ற உணர்வை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்த நடவடிக்கை எடுப்பதற்கு முழு மனதோடு ஒத்துழைப்பு எதிர்காலத்தில் அரசியல் கட்சிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும் நிச்சயமாகத் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இப்படிப்பட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கின்ற காரணத்தால் இதன்மீது மேலும் விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.



## 4. அறிவிப்புகள்.

### (அ) சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி வராண்டா, வளாகம் பாதுகாக்கப் பெறுவது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், விளக்கத்திலே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அந்த விளக்கத்திலே அது என்னுடைய ஆளுகைக்கு உட்பட்டது என்று அவர்கள் குறிப்பிட்டதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். ஆகவே அந்த ஆட்டோ ரிக்ஷாக்களை, டாக்சிகளை உள்ளே நிறுத்துவது என்பதை மாற்றி இனிமேல் சுற்றுச் சுவருக்கு வெளியே தான் நிறுத்துவதற்குரிய ஏற்பாடு செய்யவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு ஹாஸ்டலில் சுற்றி நிறையபேர் அறைக்கு வெளியே படுக்கிறார்கள். அறைக்கு உள்ளே படுப்பவர்களைப் பற்றி பிரச்சினை இல்லை. அறைக்கு வெளியே படுப்பவர்களைத் தவிர்ப்பதற்கான ஏற்பாட்டை நான் மேற்கொள்ள இருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை அரசும் மேற்கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஆ) முன்பண மானியக் கோரிக்கைகள் 1984-85. [ஆ.இ.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 205 (1) மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 196 (1) ஆகியவற்றின் கீழ், 1984—85 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை, 23—3—1984 ஆம் தேதி வெள்ளிக்கிழமை, சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டுமென ஆளுநர் அவர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (இ) இறுதி துணை நிதி நிலை அறிக்கை 1983-84 [ஆ.இ.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 205 (1) மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 196 (1) ஆகியவற்றின் கீழ், 1983—84 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கையை 23—3—1984 ஆம் தேதி வெள்ளிக்கிழமை, சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டுமென ஆளுநர் அவர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலையில் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும் என்று கேட்ட நேரத்தில் மருத்துவமனைக்கு சென்று வரவேண்டும் என்றால் 5 ரூபாய் தந்தால்தான் வரமுடியும் என்று சொல்லி, வராது போகவே வேறு வழி இல்லாமல் 5 ரூபாய் கொடுத்து மருத்துவமனைக்கு அவர் போய் வந்து இருக்கிறார். இந்த மாதிரியான நிலை இன்று காலையில் ஏற்பட்டு இருக்கிறது. இந்த மாதிரியான நிலை சாதாரண மக்களுக்கு குடிமக்களுக்கு எந்த அளவுக்கு பாதிக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஆட்டோ ரிக்ஷாவில் இருக்கின்ற மீட்டர்கள் சரியாக இயங்குவதாக இல்லை. மீட்டர் பொருத்தப்பட்டு இருக்கிற முறையில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நான் பல்வேறு நிலையில் சொல்லி இருக்கிறேன். இதற்கு எல்லாம் ''பீரியாடிகல் செக்'' (Periodical check) என்று அவ்வப்போது முறையாக அதைப் பரிசீலனை செய்வதற்கான நிலை உருவாக வேண்டும். இங்கே எங்களுக்கு கிடைக்கின்ற தகவல்களைப் பார்த்தால் ஒரு வேளை ஆட்டோ ரிக்ஷா வைத்து இருப்பவர்கள் சில பேர் காவல் துறை அதிகாரிகளுக்குச் சொந்தமாக இருக்கும் என்ற அளவுக்கு எங்களுக்குச் செய்திகள் வந்து கொண்டு இருக்கின்ற காரணத்தால் இந்த ஏழை மக்கள் நடுத்தர மக்கள் பயன்படுத்துகின்ற வாகனங்களின் மீது காவல் துறை அதிகாரிகளும் அரசும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு சைக்கிளில் கூட 2 பேர் போகலாம் என்று சொல்லுகிறார்கள். ஆட்டோ ரிக்ஷாவில் 3 பேர் போவதற்கு அனுமதி வழங்கப்பட்டு இருப்பதாக நான் நினைக்கிறேன். அதே நேரத்தில் சமீபத்தில் கூட ஆட்டோ ரிக்ஷா கட்டண உயர்வுக்கு அரசு அனுமதித்து இருப்பதாகத் தெரிகிறது. அப்படி ஆட்டோ ரிக்ஷா கட்டண உயர்வுக்கு அரசு அனுமதிக்கிறபோது ஆட்டோ ரிக்ஷா டிரைவர்களையும், காவல் துறை அதிகாரிகளையும், அரசு அதிகாரிகளையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களை கலந்து கொண்டு பேசியதாக எனக்கு தகவல் கிடைத்து இருக்கிறது. அதில் பிரயாணம் செய்கின்ற அந்த மக்களையும் அழைத்துப் பேசியிருந்தால் அவர்களுடைய குறைகளை எடுத்து தெரிவித்து இருப்பார்கள். அந்த முறையில் வருங்காலத்தில் அரசு பேச்சு வார்த்தை நடத்துகின்றபோது அதில் பிரயாணம் செய்கின்ற அந்த மக்களையும் அழைத்துப் பேச நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆட்டோ ரிக்ஷாக்கள் பற்றி ஒரு புள்ளி விவரத்தை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எந்த ஆண்டு இவைகள் செய்யப்பட்டது ? அவைகள் எந்த மாடல்களில் இருக்கின்றன ? ஒரு நாளைக்கு எவ்வளவு பெட்ரோல் போடுகிறார்கள் ? சாதாரணமாக எவ்வளவு மைல்களுக்குப் போகிறார்கள் ? ஓட்டு



நர்களுக்கு எவ்வளவு வருவாய் வருகிறது ? என்ற புள்ளி விவரத்தை எடுக்க வேண்டும். அப்படி எடுத்தால் அவர்களுக்கு கூலி உயர்வு அதாவது கட்டணம் அதிகமாக வேண்டும் என்று கேட்கிறார்களே, இது நியாயமா ? என்பது போன்ற ஒரு புள்ளி விவரத்தை அரசு எடுத்துக் கொண்டதற்குப் பின்னாலே இந்த மாதிரியான கட்டணங்கள் உயர்த்துகின்ற முறையை எடுத்துக் கொண்டால் சரியாக இருக்கும். ஏதோ அவர்கள் கேட்கிறார்கள், அல்லது ஸ்டிரைக் செய்கிறார்கள். ஆங்காங்கே காவல் துறை அதிகாரிகளுக்கும் அல்லது பயணிகளுக்கும் அவர்களுக்கும் சண்டை வருகிறது, ஸ்டிரைக் செய்கிறார்கள் என்ற காரணத்தால் கட்டணத்தை உயர்த்துவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதியைப் பொறுத்த வரையில் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். டெல்லியிலே லோக்சபாவிலே, அங்கேயுள்ள நாடாளுமன்றத்திற்குள்ளே இதுபோன்ற ஆட்டோ, டாக்சிகள் அனுமதிக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு சபாநாயகர் அவர்களும் அறிவார்கள். எனவே, வளாகத்திற்கு வெளியே நிறுத்தி வைத்து மைக் அல்லது வேறு முறையின் மூலமாக அழைத்து உள்ளே வருவதற்கான முயற்சிகளைச் செய்தால் பொருத்தமாக இருக்கும்.

(முற்பகல் 10-30)

சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலிருந்து நகரத்தில் உள்ள பல்வேறு இடங்களுக்கும்—சட்டமன்றம் இருக்கும் நாளைத் தவிர மற்ற நாட்களிலேயும் பஸ்களை—விடுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, இப்படி முக்கியமான பிரச்னையாக இது இருப்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப் பற்றி விவாதிப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வாடகை வண்டி டிரைவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் பொதுமக்கள் அழைக்கின்ற இடங்களுக்கு வர வேண்டும். அவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமம்படி அவர்கள் வர மறுத்தால் அது குற்றமாகும். இத்தகைய குற்றங்களைப் பற்றிப் பொதுமக்கள் எங்களுக்கு அறிவிப்பு கொடுத்த உடனேயே தகுந்த நடவடிக்கைகளைக் காவல் துறையும், போக்குவரத்துத் துறையும் எடுத்துக்கொண்டிருக்கிறது.

(முற்பகல் 10-40)

## (5) கவன ஈர்ப்புகள்

### (அ) எண்ணூர் ஸ்டீல் எண்டர் பிரைசஸ் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, எம். செல்லமுத்து, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், என். பழனிவேல் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, "2—3—1984 அன்று எண்ணூரில் இரும்பு உருக்கும் தொழிற்சாலையில் உலைவெடித்து, அதனால் பல தொழிலாளர்கள் காயமுற்றது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

2—3—1984 அன்று காலை 7.15 மணி அளவில் எண்ணூர் 'ஸ்டீல் எண்டர்பிரைசஸ்' என்ற தொழிற்சாலையில் இந்த விபத்து நடந்தது. இந்த தொழிற்சாலையில் பழைய இரும்புகளை " ஆர்க் பர்னஸ் " என்ற மின்சார உலையில் போட்டு 1,400 சென்டி கிரேடு வெப்பத்தில் உருக்கப்பட்டு, அந்த உருகிய உலோக திரவம் மோல்டில் போடப்பட்டு ' பில்லட்ஸ் ' ஆக மாற்றப்படுகிறது. இந்த பில்லட்ஸ் என்ற இரும்பு உருக்கு ஆலையில் உருட்டுக் கம்பிகளாகவும், பட்டைக் கம்பிகளாகவும் தயாரிக்கப் பயன்படுகிறது.

2—3—1984 அன்று இந்த அதிக வெப்பமுள்ள உருகிய திரவம் உலையில் இருந்து ' லேடில் ' என்று சொல்லப்படும் உலோகப் பாத்திரத்தில் மாற்றப்பட்டது. இந்த உலோகப் பாத்திரம் 12' × 12' × 10' என்ற அளவுள்ள ஒரு பக்கத்தில் அமைக்கப்பட்ட குழியில் கிரேன் மூலம் தொங்க விடப்பட்டு இருந்தது. அப்படி அந்த உருகிய திரவத்தை மாற்றும்போது, அதிக அளவு திரவம் தரையில் கொட்டப்பட்டுவிட்டது. அதிக வெப்பத்தி-



-னால் இந்த உருகிய திரவம் தரையில் இருந்து அதிக சக்தியுடன் பீரிட்டுக் கிளம்பி கூரையைத் ( Asb stos Sheet ) தாக்கி இருக்கிறது. இப்படித் தாக்கியதினால் கூரைத் தகடுகள் சிதறி கீழே விழுந்துவிட்டன. கிரேன் அறையில் இருந்து தொழிலாளி பயந்து எதுவும் செய்ய முடியாமல் அப்படியே அமர்ந்துவிட்டார். தன்னுடைய சாட்சியத்தில் இந்தத் தொழிலாளி பெரிய தீயையும், புகையையும் கண்டதாகத் தெரிவித்துள்ளார்.

கூரைத் தகடுகள் சிதறி விழுந்ததினால், 17 தொழிலாளர்கள் காயமுற்றனர். இந்த உலை அமைந்திருக்கும் பணிமனையின் அளவு 150' × 55'. கூரையின் உயரம் 62'. காயமுற்ற 17 தொழிலாளர்கள் ஸ்டேன்லி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, அவர்களில் 16 தொழிலாளர்கள் உடனே கவனிக்கப்பட்டு வீடு சென்றுவிட்டனர். ஒரு தொழிலாளி மட்டும் தீவிர சிகிச்சையில் இருந்தார். அவரும் தற்பொழுது வீடு சென்றுவிட்டார்.

இந்த உருகிய உலோக திரவம் எந்தத் தொழிலாளியின் மீதும் படவில்லை. உயரே இருக்கும் கிரேன் அறையில் இருந்த தொழிலாளிக்கும் எந்தவிதமான காயமும் இல்லை. இந்த விபத்தின் காரணம் இன்னும் ஆராயப்பட்டு வருகிறது. எனினும் தொழிற்சாலை ஆய்வாளரின் பூர்வாங்க விசாரணையில் இந்த கிரேன் இயக்கும் தொழிலாளி தவறுதலாக கிரேன் கட்டுப்பாடு சுவிட்சுக்களை பயத்தினால் இயக்கியதைத் தொடர்ந்து லேடில் என்ற உலோகப் பாத்திரம் கவிழ்ந்து அதிக திரவம் தரையில் கொட்டியிருக்கலாம் என்று ஊகிக்கலாம். கொட்டிய தளத்தில் ஈரப்பதம் இருந்ததினால் உருகிய உலோகம் வெடித்துச் சிதறியிருக்கிறது.

மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து குறிப்பிட்ட விபத்து குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது என்பது புலனாகும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவைர் தலைமை)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் ;** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே வைத்திருக்கிற அறிக்கையைப் பார்த்தால், இந்த ஆலையிலே நிர்வாகம் கடைபிடிக்க வேண்டிய சேப்டி மெஷர்ஸை கடைபிடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட வேண்டும். ஆனால், அந்த சேப்டி மெஷர்ஸ் அவர்களால் எடுக்கப்பட்டனவா என்ற நியாயமான சந்தேகம் ஏற்படுகிறது.

அது மட்டுமல்ல, சமீபகாலத்தில் தொழிற்சாலைகளில் அதிகமான விபத்துக்கள் ஏற்பட்டு வருவதாகத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு சில நாட்களுக்கு முன்னால், இங்கே நெய்வேலியிலே ஏற்பட்ட விபத்தைப் பற்றி கூறப்பட்டது. ஆகவே, பேக்டரி இன்ஸ்பெக்டர் முன்கூட்டி, இது சம்பந்தமாக என்ன, என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, அவற்றை எடுத்து, சேப்டி மெஷர்ஸ் இம்ப்ளிமென்ட் பண்ணுவதில் ஒரு சில தயக்கங்களோ, அல்லது டிலேயோ அல்லது ஓமிஷன்ஸ் ஏற்படுவதாகச் சந்தேகிக்க வேண்டி இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சேப்டி மெஷர்ஸ் இம்ப்ளிமென்ட் செய்யாத பாக்டரி இன்ஸ்பெக்டர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. புதிதாக, (Chief Inspector of Factories Health and Safety) என்றே ஒரு பதவியை உருவாக்கி, அவர் இதையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று பணிக்கப்பட்டிருக்கிறார். இந்த விபத்தைப் பொறுத்தவரையில், தொழிற்சாலை ஆய்வாளர் பூர்வாங்க விசாரணை நடத்தியுள்ளார் உடனடியாக. இந்த விபத்தின் காரணம் இன்னும் ஆராயப்பட்டு வருகிறது. அது ஆராயப்பட்டு முழு அறிக்கை வந்த பிறகு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் படும்.

(ஆ) கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்த கைத்தறித் துணிகளுக்குப் பணம் கொடுக்காமல் இருப்பது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் இரா. தாமரைக்கனி, எம். சின்னசாமி, ப. வெங்கட்டசுப்பிரமணியம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டில் ரூ. 70 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதாலும், கொள்முதல் செய்த துணிகளுக்கு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பணம் கொடுக்காத காரணத்தாலும் நெசவாளர்கள் படும் இன்னல் குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.





அறிக்கை.

தமிழ்நாட்டில் தற்பொழுது 1529 பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச் சங்கங்களுக்கு தலைமைச் சங்கமாக, கோ-ஆப்-டெக்ஸ் எனப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் இயங்கி வருகிறது. இச்சங்கம் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மொத்த உற்பத்தியில் சுமார் 50 சதவிகிதத்தை கொள்முதல் செய்து தமிழ் நாட்டிலும் இதர மாநிலங்களிலும் உள்ள அதன் விற்பனை நிலையங்களின் மூலமாக விற்பனை செய்துவருகிறது.

1983 ஜுலை முதல் 1984 ஜனவரி வரை பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கோ-ஆப்-டெக்ஸினால் கொள்முதல் செய்யப்பட்ட கைத்தறி துணிகளின் மதிப்பு ரூ. 48.52 கோடியாகும்.

1983 ஜுலை முதல் 1984 பிப்ரவரி முடிய கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனை ரூ. 85.73 கோடியாகும். சென்ற ஆண்டைவிட இவ்வாண்டில் இக்காலத்தில் கூடுதலாக கைத்தறி துணிகளை கோ-ஆப்-டெக்ஸ் விற்பனை செய்திருந்தும் கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்தின் கையிருப்பில் ரூ. 70.00 கோடி மதிப்புள்ள கைத்தறி துணிகள் உள்ளன.

1984 பிப்ரவரி மாதத்தில் ரூ. 580 இலட்சம் கோ-ஆப்-டெக்சினால் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு துணி கொள்முதல் செய்தவகையில் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. மேலும் கைத்தறி துணிகளை கொள்முதல் செய்வதற்கும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்ற பேரவையில் வறட்சி பகுதியில் உள்ள நிலைமற்ற விவசாய தொழிலாளர்களுக்கு ஜனதா வேட்டிகள், சேலைகள் வழங்கப்படும் என்று அறிவித்ததற்கிணங்க ஜனதா ரக துணிகள் வழங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. அதன் மூலம் கணிசமான அளவிற்கு ஜனதா ரக துணிகள் விற்பனை செய்யப்பட்டன.

கோ-ஆப்-டெக்ஸிக்கு மத்திய அரசிடமிருந்து ஜனதா ரகத் துணிகளுக்கு வரவேண்டிய மான்யமும் தமிழக அரசின் ஆணைப்படி நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு ஜனதா துணிகள் வழங்கியதன் மூலம் வரவேண்டிய தொகை வெள்ளத்தால் பாதித்தோருக்கு வழங்கப்பட்ட கைத்தறி துணியின் மூலம் வரவேண்டிய தொகை மற்றும் அரசு ஊழியர்களுக்கு கடன் விற்பனையின் பேரில் வரவேண்டிய தொகை வரப்பெற்ற உடன் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் நிலுவை கணிசமான அளவு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1984 மார்ச் 21

நடப்பு மாத இறுதிக்குள் கணிசமான தொகை பட்டுவாடா
செய்யப்படும் என நம்பப்படுகிறது. தீபாவளி மற்றும் பொங்கல்
பண்டிகைக்குப்பின் உள்ள காலம் கைத்தறி துணிகளின் விற்பனை
யில் ஒரு மந்த காலமாகும்.

கைத்தறி துணிகளின் தேக்கத்தை குறைக்கும் விகிதத்தில்
அரசு உடனடி நிவாரணமாக 7—3—1984 முதல் 13—3—1984
வரை பிரதம சங்கங்களின் கைத்தறி துணி விற்பனையில் 20 சத
விகிதம் தள்ளுபடி அறிவித்துள்ளதன் மூலம் கைத்தறி துணிகளின்
தேக்கம் பெரும்பாலும் குறைக்கப்பட்டுவிடும் என்று எதிர்ப்பார்க்
கப்படுகிறது. மேலும் வரவிருக்கும் 30-வது அகில இந்திய கைத்
தறி இருவார விழா கண்காட்சி மூலம் கைத்தறி துணிகள் கணிச
மான அளவு விற்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

கோ-ஆப்-டெக்ஸ் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிட
மிருந்து அவ்வப்போது முடிந்தளவுக்கு கைத்தறி துணிகள் கொள்
முதல் செய்து வருவதாலும் பணம் பட்டுவாடா செய்யப் படுவ
தாலும் பிரதம சங்கங்களும் மத்திய வங்கிகளும சர்டிபிகேட்
கடன் முதலியவை பெற்று அங்கத்தினர்களுக்கு தொடர்ந்து
வேலை வாய்ப்பு அளித்து வருகின்றன. பிரதம சங்கங்களும்
கோவாப்டெக்சும் நேரடியாக விற்பதிலும் ஈடுபட்டுள்ளன.

பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இந்த சிறப்புத் தள்ளு
படி காலத்தில் கணிசமான அளவு விற்பனை செய்ய சாத்திய
கூறு உள்ளது. தவிர அவற்றினால் திறக்கப்பட்டுள்ள கிளை
விற்பனை நிலையங்கள் மூலமும், கணிசமான அளவு பட்டு துணி
விற்பனை நடைபெற்று வருகிறது. பட்டு நெசவாளர் கூட்டுறவு
சங்கங்களில் உறுப்பினர்களுக்கு வழங்கும் வேலைவாய்ப்புக்களில்
யாதொரு தேக்க நிலையும் இல்லை. தொடர்ந்து வேலைவாய்ப்பு
அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் கொடுத்த அந்த அறிக்கையில் கோ-ஆப்
டெக்ஸ்-க்கு மத்திய அரசிடமிருந்து ஜனதா துணிக்காக வர
வேண்டிய மானியத் தொகை வரவில்லையெனறும் மற்றும் நமது
தமிழக சர்க்கார் ஏழை, எளிய மக்களுக்கு ஜனதா துணி வழங்கிய
தற்கான அந்தத் தொகையும் வரவில்லை என்றும் கூறியிருக்கி
றார்கள். அது மட்டுமல்லாமல், அரசு அலுவலர்கள் வாங்கிய
அந்தத் தொகையும் வரவில்லையென்று கூறியிருக்கிறார்கள்.
இங்கே தான் நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இருக்கி
றார்கள்.



1984 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியாகக்
கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: நெசவாளர் சங்கம் பல இயங்
காமல் இருப்பதால் மாண்புமிகு கைத்தறி அமைச்சர் நமது
நிதி அமைச்சரிடமும் முதலமைச்சரிடமும் சீக்கிரமாகப் பேசி,
நெசவாளர் சங்கம் இயங்க மத்திய அரசோடு தொடர்பு கொண்டு
நமக்கு வரவேண்டிய மானியம் வருவதற்கு முயற்சி செய்வார்
களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு துணை
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்
கள் சொன்னதைப் போல் ஜனதா துணிகளுக்கான மானியம் மத்
திய அரசிடத்திலே இருந்து வரவேண்டியிருக்கிறது. அதைத் தவிர
ரிபேட் காலங்களில், ரிபேட் கொடுக்கிற பொழுது, அதிலே மாநில
அரசு 50 சதவீதமும், மத்திய அரசு 50 சதவீதமும் தருகின்றது.
அந்தப் பணமும் மாநில மத்திய அரசுகளிடமிருந்து வரவேண்டி
யிருக்கிறது. இவை தவிர, நிலமற்ற விவசாயிகளுக்கு ஆடைகள்
வழங்குவதன் மூலமாக சுமார் ரூ. 8½ கோடி வர வேண்டியிரு
கிறது. இதைத்தவிர வெள்ளம், புயல் போன்ற நேரங்களில் ஆடை
கள் வழங்கியதன் மூலமாக இரண்டு கோடி ரூபாய் பாக்கி வர
வேண்டியிருக்கிறது. இதைத்தவிர 70 கோடி ரூபாய் அளவில் கோ-
ஆப்டெக்ஸ் தலைமை சங்கத்தில் துணிகள் தேக்கம் இருக்கிறது.
இருந்தாலும் தற்போது நெசவாளப் பெருமக்களுடைய துயரைப்
போக்குவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு
இருக்கிறது. சமீபத்திலே 7-ஆம் தேதியிலிருந்து 13-ஆம் தேதி
வரையில் ஒரு வார காலம் 20 சதவீதம் சிறப்பு தள்ளுபடி-பிரதம
சங்கங்களிலேயே அவர்கள் விற்பனைசெய்கிற போது 20 சதவீதம்
தள்ளுபடி செய்து விற்கலாம் என்று அரசு அறிவித்து இருக்கிறது.
அதன் மூலமாக பிரதம சங்கத்தில் தேங்கி இருக்கிற துணிகளு
டைய தேக்கம் ஓரளவிற்கு குறையும் என்று எதிர்ப்பார்க்கப்படு
கிறது. அதுபோக வருகிற ஏப்ரல் 9-ஆம் தேதியிலிருந்து மே
மாதம் 10-ஆம் தேதி வரையில் ஒரு மாத காலம் 30-வது அகில
இந்திய கைத்தறி மாத கண்காட்சி ஒரு மாத காலம் நடைபெற
விருக்கிறது. அப்போதும் தேங்கி இருக்கிற துணிகள் விற்பனை
யாகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதைத்தவிர மாநில,
மத்திய அரசுகளிடமிருந்து வரவேண்டிய பணத்தைக் பெறுவ
தற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த
மாதத்தில் வருகிற பணத்திற்கு ஏற்றவாறு பிரதம சங்கங்களுக்கு
பட்டுவாடா செய்யப்படும்.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்கள் கோ-ஆப்டெக்சிற்குள்ள சங்கடங்
களைப் பற்றி சொன்னார்கள். 14—1—1984-ஆம் தேதியன்று
மத்திய அரசின் காமர்ஸ் மினிஸ்டர் அவர்கள் இந்தியாவில் வட
கிழக்கு மாநிலங்களில் இருக்கிற தறிகளை நவீனப்படுத்துவதற்கு

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1984 மார்ச் 21

50 சதவீதம் மானியம் அளிக்கப்படும் என்று சொல்லியிருப்பது நம்முடைய அரசிற்குத் தெரியுமா? அதை உறுதிப்படுத்துவதற்கு மத்திய காமர்ஸ் மினிஸ்டரோடு பேச்சுவார்த்தை நடத்தி, அந்த 50 சதவீத சலுகை நம்முடைய மாநிலத்தில் இருக்கிற கூட்டுறவு நெசவாளர்களுக்கும் கிடைப்பதற்கு முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நவீனப்படுத்துவதற்கு தரப்படுகிற மானியத் தொகை நம்முடைய மாநிலத்திற்கும் தரவேண்டுமென்று மத்திய அரசை நாம் கேட்டிருக்கிறோம். தொடர்ந்து வற்புறுத்துவோம்.

6. வரவு-செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.
(அ) கோரிக்கை எண் 20.—வேளாண்மை.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 91,02,38,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

Thiru N. S. V. CHITHAN : Sir, to discuss about the failure of the Government to utilise the large area of land available along the Tamil Nadu Coast, for planting cocanut trees, I move :-

That the allotment of Rs. 91,02,38,000 under Demand No. 20—Agriculture be reduced by Rs. 100.

திரு. ஏ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோவில்-சிதம்பரம் வட்டங்களில் இந்த ஆண்டு விடாது மழை பெய்து மூன்று முறை வெள்ளம் வந்து நெல், உளுந்து, பச்சைப் பயிறு ஆகியவைகள் நஷ்டம் ஆகி விட்டதால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டதால் வரும் பசலைக்கு மேற்கண்ட பகுதிகளில் விவசாயிகட்கு, விதை பூச்சி மருந்து மானியமாக வழங்க வேண்டியதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 91,02,38,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



1984 மார்ச் 21]

திரு. எம். செல்லமுத்து : துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்யும் விவசாயப் பொருட்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 91,02,38,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. பொ. உத்திராபதி : துணைத் தலைவர் அவர்களே, மானிய விலையில் விவசாயிகளுக்குக் கொடுக்கும் விதை, பூச்சி மருந்து, மற்ற பொருள்களும் கொடுப்பதற்கு முன்னதாக கிராமத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு தெரிந்த கொள்ளும் வகையில் தண்டோரா மூலம் விளம்பரம் செய்து அதன் பிறகு விவசாயிகளுக்குக் கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 91,02,38,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

(ஆ) கோரிக்கை எண். 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;—

"மானியக் கோரிக்கை எண் 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,02,80,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss policy, I move That the allotment of Rs. 5,02,80,000 under Demand No. 49 Capital Outlay on Agriculture be reduced by Rs. 100/."

(முற்பகல் 10-50)

திரு. சு. பாலன் : துணைத்தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,02,80,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. மு. அப்பாத்துரை : துணைத்தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு இராசாயன உரங்கள், பூச்சிகொல்லி மருந்துகள் போன்றவைகள் நியாயமான விலையில் தேவையான அளவு கிடைக்க வேண்டும் என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,02,80,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் சா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பை* நான் அவையில் ஆற்றிய உரையாக வைத்துக்கொண்டு, அவை நடவடிக்கைக் குறிப்பில் இணைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே முதலில் கருத்துக்களை வழங்கியதற்குப் பிறகு, நிறைவு உரையாக நான் என்னுடைய கருத்துக்களைக் கூறுகிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ரா. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1984—85 ஆம் ஆண்டு வேளாண்மை மானியக் கோரிக்கை மீது நான் சார்ந்திருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி உணர்வைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக அரசு இன்றைக்கு விவசாயிகளின் பக்கம் நிற்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் விவசாய இன்சூரன்ஸ் திட்டத்தை பயிர் பாதுகாப்புத் திட்டத்தை நான் மனதார வரவேற்கிறேன். ஏனென்றால் சென்ற வருடம் என்னுடைய தொகுதியில் புயலால் பல பகுதிகள் பாதிக்கப்பட்டன. காட்டுப் புதூர், முசிரி போன்ற பகுதிகள் புயலால் பாதிக்கப்பட்ட நேரத்தில் அன்றிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் சாந்தா ஷீலா நாயர் நேரடியாக அந்த இடங்களைப் பார்வையிட்டு நிவாரண நடவடிக்கைகளை எடுத்தார்கள். இன்றைக்கு மழை பெய்ததாலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடியதாலும தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, திருச்சி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் கடு

*பக்கங்கள் 448 முதல் 510 வரை இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.





மையான சேதம் ஏற்பட்டிருக்கிறது. வறட்சி வந்தாலும் சரி, வெள்ளம் வந்தாலும் சரி, புயல் அடித்தாலும் சரி அதனால் அதிகமாக பாதிக்கப்படுபவர்கள் விவசாயிகள் தான். வறட்சி வந்துவிட்டால் எந்தவிதமான விவசாயியும் விவசாயம் செய்ய முடிவதில்லை. வாழை, கரும்பு, நெல், மற்றும் பல விவசாயப் பொருட்கள் வாடிப்போய் விடுகின்றன. வறட்சி ஏற்படுகின்ற நேரத்தில் கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை என்கிற நிலைமை விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. இதையெல்லாம் எண்ணிப் பார்த்து இதற்கு முன்னால் இருந்த அரசாங்கம் இந்தப் பயிர் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டுவரவில்லை. இந்த மாமன்றத்தில் உள்ளவர்களில் 100-க்கு 75 பேர் விவசாயக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் அதைப்பற்றி யோசனை சொல்வதில்லை. ஆனால் தேர்தல் நடைபெறுகிறபோது எல்லாக் கட்சிகளும் வந்து விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பு என்று சொல்கிறார்கள். ஆனால், எங்களின் குரல் அவர்களின் காதில் பல நேரங்களில் எட்டுவதில்லை. 'மேழிச் செல்வம் கோழைப்படாது' என்று சான்றோர்கள்! சொன்னார்கள். ஆனால், விவசாயிகளின் குறைகளை யாரும் தீர்க்கவில்லை. ஆனால், இந்தப் பயிர்பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டுவந்ததற்காக இந்தப் புரட்சித் தலைவர் அரசுக்கு நான் மனதார உளமார நல்ல உள்ளத்தோடு பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, காங்கிரஸ் அரசாங்கம் காலத்தில் போட்ட பட்ஜெட் 190 கோடி ரூபாய்தான். இந்த 190 கோடி ரூபாய் பட்ஜெட்டில் வைகை, மணிமுத்தாறு, மலம்புழா போன்ற 13 பெரிய அணைக்கட்டுக்களைக் கட்டினார்கள். குந்தா அணைக் கட்டிலிருந்து தண்ணீரைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்திச் செய்தார்கள். அனல் மின்சார நிலையங்கள் கட்டினார்கள். காவேரி ஆற்றில் 'புள்ளம்பாடி அணையைக் கட்டினார்கள். காவேரியின் இரு பக்கங்களிலும் வடக்கும், தெற்கும் வாய்க்கால்கள் வெட்டி, இலட்சக்கணக்கான ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி செய்து கொடுத்தார்கள்.

அது மட்டுமல்ல, 1961 முதல் 1965 வரையிலே உள்ள காலத்தில் பார்த்தால் யாருக்கும் லோன் தேவைப்பட்டாலும் அவர்கள் பஞ்சாயத்து யூனியனுக்குப் போனால் போதும். யூனியனில் லோன் தாசில்தார் இருப்பார். கமிஷனர் இருப்பார். உரம் லோன், விதை லோன், எஞ்சின் லோன், பம்புசெட் லோன் எது வேண்டுமானாலும் தேவைப்பட்ட விவசாயிகள் அங்கே போய் சொன்னால் ஒரு வாரத்தில் அல்லது ஒரு மாதத்திற்குள் எப்படியும் அந்த லோன் கிடைத்துவிடும். நிலச் சீர்திருத்த லோன் வேண்டுமென்றாலும் உடனே கிடைத்துவிடும். குடியானவனுக்குப் பக்கத்தில்தான் யூனியன் ஆபீஸ் இருக்கும். 4 மைல், 5 மைல் தூரத்திற்குமேல் குடியானவன்

[திரு. ரா. பெரியசாமி] [1984 மார்ச் 21

போகவேண்டியதில்லை. அந்த அளவுக்கு உடனுக்குடன் கவ.
னித்து லோன் கொடுத்தார்கள். மனு கொடுத்த 15 நாட்
களுக்குள் லோன் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை விவசாயி
களுக்கு இருந்தது. இப்போது அந்த நிலைமை இல்லை;
ரொமப கஷ்டப்படவேண்டியிருக்கிறது.

அது மட்டுமல்ல. அன்றைக்கு காங்கிரஸ் அரசாங்கம் இருந்த
போது சேடர்பாளையத்திலிருந்து நாமக்கல் தொகுதியில்
நாமக்கல் யூனியன், எருமாடு யூனியன், தொட்டியம் தொகுதி
யில் தொட்டியம் யூனியன், உப்பிலியாபுரம் தொகுதியில் உப்பிலி
யாபுரம் யூனியன், துறையூர் யூனியன், பெரம்பலூர் தொகுதி,
வரகூர் தொகுதியில் வரகூர் யூனியன், அரியலூர் தொகுதி,
ஜெயங்கொண்டான் தொகுதி வரையில் ஒரு பெரிய கால்வாய்
வெட்டும் திட்டத்தை பரிசீலனை செய்தது. அது அப்படியே
நின்றுவிட்டது.

சேடர்பாளையத்திலிருந்து உடுமத்தூர், எம். களத்தூர்,
ரெட்டிக் களம்பத்தூர், ஏழூர்பட்டி பஞ்சாயத்து, கமலாபுரம்
பஞ்சாயத்து, சிவந்திபட்டி பஞ்சாயத்து, அம்முக்குடி பஞ்சாயத்து,
தொட்டியம் யூனியன் வரையில் உள்ளப் பகுதிகள் மிகவும்
வறண்ட பகுதிகள். திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள்
எல்லாம் 'வடக்கு வாழும்' தெற்கு தேயும்' என்று சொல்வார்
கள். அதைப்போல தொட்டியம் தொகுதியில் உள்ள 27
பஞ்சாயத்துக்களில் 14 பஞ்சாயத்துக்கள் மிகவும் வறண்ட
பகுதி. அந்தப் பகுதிக்கு காடாம்பூர் வழியாக காவேரியிலி
ருந்து ஒரு பெரிய கால்வாய் வெட்டி, தண்ணீர் கொண்டுவரும்
திட்டம் இருந்தது. அது நிறைவேற்றப்படாமல் போய்விட்டது.
அந்த திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் அந்தப் பகுதி மக்கள்
மட்டுமல்லாமல் பக்கத்துக் கிராமங்களிலுள்ள மக்களும்,
விவசாயப் பெருங்குடி மக்களும் நன்மை பெற்றிருப்பார்கள்.
இனிமேலாவது இந்தத் தி  ட்ஸ த நிறைவேற்றி அவர்கள்
நன்மைபெறச் செய்ய வே ்ற மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. அப்போதிருந்த காங்கிரஸ் அரசாங்கம்
எந்தத் திட்டத்தை எல்லாம் ஆய்வு செய்தார்களோ அதை
எல்லாம் மீண்டும் பரிசீலனை செய்து, நிறைவேற்றுவதற்கு
ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி நிறைவேற்றினால், கால்
வாய்கள் வெட்டப்பட்டால் இடையிலே இருக்கிற ஏரி
களுக்கும் தண்ணீர் விடப்பட்டு, விவசாய உற்பத்தியைப் பெருக்க
முடியும். குறிப்பாக எம். களத்தூர் ஏரி, ஏழூர்பட்டி ஏரி
போனற பல ஏரிகளுக்கு தண்ணீர் நிரப்ப வசதியாக இருக்குப.
அதைக் கருத்தில் கொண்டுதான் அனறைக்கு இருந்த காங்கிரஸ்
அரசாங்கம் பரிசீலனை செய்தது.



1984 மார்ச் 21] [திரு. ரா. பெரியசாமி]

அதற்கு இடையில் உப்பிலியாபுரம் தொகுதியில் வடக்கு
பகுதியில் பச்சமலையில் காஞ்சனா ஆறு இருக்கிறது. அங்கிருந்து
வாய்க்கால் வெட்டி தண்ணீர் கொண்டுவரும் திட்டத்தை முன்பு
இருந்த காங்கிரஸ் அரசாங்கம் பரிசீலனை செய்தது. ஆனால்
அது அப்படியே போய்விட்டது. பின்னாலே யாரும் அதைப்
பற்றி கவலைப்படவில்லை. அந்த வறண்ட பகுதிக்கு இது
பெரிதும் பயனுடையதாக இருப்பதால் மறுபரிசீலனை செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-00].

கொல்லிமலை அணைக்கட்டுத் திட்டம ஒனறு உள்ளது.
கொல்லிமலையிலிருந்து 3 மைலுக்குப் பக்கத்தில் என்னுடைய
சொந்த ஊர் இருக்கிறது. அந்த ஊரிலே அணைக்கட்டு கட்டு
கிறேன் எனறு சொல்லி காங்கிரஸ் அரசாங்கமும், அதற்குப் பிறகு
வந்த அரசாங்கமும், இப்போது இருக்கிற அரசாங்கமும் சொல்
கிறார்களே ஒழிய, காரியம் ஒன்றும் நடக்கவில்லை. அந்த நிலைமை
அப்படியே இருக்கிறது. விவசாயிகளுக்குத் தண்ணீர் கொடுக்கக்
கூடிய டேம் கட்டலாம். அதையும் கட்டவில்லை. காங்கிரஸ்
அரசாங்கத்தாலே நொய்யலாறு திட்டம், காட்டாறு திட்டம்
தீட்டப்பட்டு ஆய்வுக்கு எடுத்துக் கொளளப்பட்டது. அந்த
மாதிரி வேலைகளை எல்லாம், இந்த அரசாங்கம் செய்யவில்லை
என்ற எண்ணத்தில் தான் சொல்கிறேன். அதற்கு முனபிருந்த
அரசாங்கமும், இப்போதுள்ள புரட்சித் தலைவர் அரசாங்கமும்
செய்யவில்லை என்பதை கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதே போல உப்பிலியாபுரம் தொகுதியில், உப்பிலியாபுரம்
யூனியனில் பெரிய பெரிய ஏரிகள் கட்டுவதற்கு தகுதியான இடங்
கள் இருக்கின்றன. உப்பிலியாபுரம் யூனியனிலே முருங்கப்பட்டி,
பொங்கலாய்க் கோம்பை, ஆர். கோம்பை, அதே போல் துறையூர்
பகுதியில் கலிங்கமுடையானபட்டி போன்ற இடங்களில் பெரிய
பெரிய ஏரிகள் கட்டினால் நன்மை இருக்கும். இப்படி பெரிய
பெரிய ஏரிகள் கட்டினால், வருவாய் பெருகும் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

துறையூரில் செங்காட்டுப்பட்டியில் ஒரு ஏரி கட்டினால்
நன்மை பயக்கும்.

அடுத்து பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் எனறு அரசாங்கத்
தில் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு முன் ஒரு அக்ரீ கிராஜு
வேட் தான் ஒரு யூனியன் ஆபிசிலே இருப்பார். ஒரு பஞ்சாயத்
துக்கு ஒரு கிராம சேவக், அல்லது இரண்டு பஞ்சாயத்துக்களுக்கு
ஒரு கிராம சேவக் என்று இருப்பார்கள். அவர்கள் எல்லாம் ஒவ்

வொரு முறையும், ஐ. ஆர். 20, ஆடுதுறை 31 போன்ற புது
ரகங்களைக் கண்டுபிடித்தால், உடனேயே அவைகளைப் பற்றி
விவசாய மக்களுக்குச் சொல்வார்கள். இப்படித் தான் நட
வேண்டும், இத்தனை நாட்களில் நட வேண்டும். எந்தெந்த
காலத்தில் எந்தெந்த மருந்துகளை அடித்தால், இந்த நோய்
விலகும் என்று அன்றைக்கு இருந்தவர்கள், அந்த கிராம சேவக்
குகள் குடியானவர்களை அழைத்துப்போய் காண்பிப்பார்கள். அரசு
கண்டுபிடித்த வித்துக்களை காண்பிப்பது வழக்கமாக இருந்தது.
ஆனால் இப்போதோ, பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் என்று
சொல்லி, பேப்பரிலே போடுகிறார்கள், ரோடுகளிலே, கண்ட
கண்ட இடங்களிலே சுவற்றிலே எழுதியிருக்கிறார்களே ஒழிய,
அதனால் எந்தவிதமான பயனும் கிடைக்கவில்லை. ஏற்கனவே
இருந்த ஒரு அக்ரீயுடன் எண்ணெய் வித்துக்களுக்காக என்று ஒரு
அக்ரீ என்று ஒவ்வொரு யூனியனிலும் இரண்டு அக்ரீக்கள் இப்
போது இருக்கிறார்கள். கமிஷனர் உட்பட எல்லோரும் சேர்ந்து
இருந்தபோது, உடனேயே வேலைகள் நடந்தன. இப்போது
தனித் தனியாக இருக்கிறதால், அவர்கள் அந்தந்த அலுவலகத்
திலே நல்ல முறையில் செய்வார்கள் எனறு கருதினோம். ஆனால்
அப்படி ஒன்றும் நடக்கவில்லை. இப்போது எண்ணெய் வித்துக்
களின் நிலைமை அப்படியே தான் இருக்கிறது.

எங்கள் பகுதியில் கடலை நிறைய விளையும். முன்பெல்
லாம் அந்தப் பகுதியில் ஒரு ஏக்கருக்கு 40 மூட்டைகள் கிடைக்கும்.
ஆனால் இப்போது 20 மூட்டைகள் கூட கிடைக்கவில்லை. 40
மூட்டைகள் விளைந்த இடத்தில் இன்றைக்கு 20 மூட்டைகள்
கூட கிடைக்கவில்லை என்றால் அதற்கு என்ன காரணம்? முன்பு
இருந்த மண் தானே இருக்கிறது. ஏன் இப்போது விளைய
வில்லை என்று கேட்டால், அதைப் பற்றி எண்ணெய் வித்துக்கள்
அதிகாரியோ, அதற்குக் கீழே உள்ளவர்களோ சரியான விளக்கம்
கொடுப்பதில்லை. அதை எல்லாம் பார்ப்பதற்கு நமது அமைச்
சர் அவர்கள் ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொட்டியம் பகுதியில் தாத்தய்யங்கார்பேட்டை
பஞ்சாயத்து யூனியன் இருக்கிறது. அஞ்சலம் பஞ்சாயத்து நீரியம்
பட்டிக்குப் பக்கத்தில் தலைமலை என்ற ஊர் இருக்கிறது. தலை
மலையில் 1981-82 ஆவது வறட்சியிலே, ஒரு ஏரி திட்டம்
துவங்கி, ரூ. 5, ரூ. 6 இலட்சம் பெருமானமுள்ள வேலைகளை
செய்து முடித்ததாகச் சொல்கிறார்கள். அது 90 ஏக்கருக்கு
பாசன வசதி அளிக்கும். அங்குள்ள மக்களுக்கு நல்ல முறையில்
செய்ய முடியும் என்று சொன்னார்கள். இப்போது கட்டியிருக்
கின்ற நிலைமையைப் பார்த்தால், ஒரு ஏக்கர் கூட பாய்வதற்கு
வழியில்லை. அந்த ஏரி கண்மாய் கட்டினால், அந்தக் கடக்
காலை உள்ளே தான் வைப்பார்கள். கடக்காலுக்கு உள்ளே வைத்





தால் அந்தத் தண்ணீர் பாய்ச்சுவதற்கு அங்கே குமுழி இருக்கும்.
அதை கடக்காலுக்கு வெளியே வைத்திருக்கிறார்கள். நான்
போய் 2 மாதத்திற்கு முன்னாலே அந்த இடத்தைப் பார்வை
இட்டேன். இவ்வளவு மழை பெய்தும், ஒரு ஏக்கர் கூட பாய்
வதற்கு வழியில்லை. பக்கத்திலே ஒரு செங்கல், கல் எடுக்கிற
தனியார் தொழிற்சாலை ஒன்று அங்கே இருக்கிறது. இதிலே
தண்ணீர் தேங்கினால் பக்கத்திலே இருந்து கல்லை எடுக்க முடியாது
என்ற எண்ணத்திலே அந்த கல்லை எடுக்கின்ற முதலாளி, இந்த
வேலை செய்யக் கூடிய அதிகாரியைப் பார்த்து அதை இந்த
அளவிற்குச் செய்ய வேண்டியதில்லை, சிறுகக் கட்டினால்
போதும் என்று சொல்லி, அதை இப்படிச் செய்திருக்கிறார்கள்.
எனவே அமைச்சர் அவர்கள் நல்ல முறையிலே, சம்பந்தப்பட்ட
அதிகாரிகள் அல்லது தலைமைப் பொறியாளர் அவர்களைப்
போகச் சொல்லி, அந்த இடத்தைப் பார்வையிட்டு, அந்தப் பகுதி
மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன். காரணம் அங்கே தண்ணீர் தேங்கினால் கிட்டத்தட்ட
2 ஆயிரம் ஏக்கர் வரையிலே அந்தப் பகுதியில் உள்ள நிலங்
களுக்கு அது பாசன வசதிக் கொடுக்கும்.

அடுத்து, நீலியாம்பட்டி ஏரி மேலூருக்குப் பக்கத்திலே 1977-லே
ஏற்பட்ட புயலினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டு
அந்த ஏரி உடைந்தது. இப்போது நாம் தன்னிறைவுத் திட்டம்
என்று போடுகிறோம். வறட்சி நிவாரணப் பணிகளிலே நிறைய
பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கிறோம். மாநில அரசு,
மத்திய அரசு சேர்ந்து செய்யும், என். ஆர். இ. பி. திட்டம், மற்றும்
ரூரல் வொர்க்ஸ் ஸ்கீம் போன்ற பல வேலைகளைச் செய்கிறோம்.
என்னுடைய தொகுதியிலேகூட பல வேலைகளைச் செய்தார்கள்.
என் தொகுதியிலே உள்ள குட்டைகளில், பாண்ட் ஸ்கீம் என்ற
முறையிலே வேலைகளைச் செய்தார்கள். வேலைகளைச் செய்ய
வில்லை என்று நான் சொல்லவில்லை. அப்படிச் செய்தாலும்,
1977-லே உடைந்தது இது. நான் யூனியனிலேயும் சொல்லிப்
பார்த்தேன். அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இடத்திலேயும்
சொல்லிவிட்டேன். கலெக்டரிடமும் சொல்லிப் பார்த்தேன்.
இந்த மேலூர் குட்டை, அஞ்சலம் பஞ்சாயத்திலே இருக்கிறது,
இது 1977லே உடைந்தது, ஆனால் இது வரைக்கும் அதை கவனிக்க
வில்லை. எனவே அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து இதற்குத்
தனிக் கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுத்து, இந்த இரண்டு
ஏரித் திட்டங்களை நல்ல முறையிலே செய்வதற்கும் அங்கே
யுள்ள மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் செய்ய வேண்டும்
என்று அன்போடும் ஆசையோடும் கேட்டுக் கொள்கிறேன்
நம்முடைய விவசாய அமைச்சர் அவர்கள் சுறுசுறுப்போடும்,
விறுவிறுப்போடும் செய்யக் கூடியவர். ஆனால் எங்கள்
தொகுதியிலே அவர்கள் தனிக் கவனம் செலுத்தவில்லை. மற்ற
இடங்களிலே அவர்கள் செய்திருக்கிறார்கள். எனவே அமைச்சர்
அவர்கள் அருள் கூர்ந்து இதைக் கவனிக்க வேண்டும் என்று நான்

கேட்டுக் கொள்கிறேன். நான் எதிர்க் கட்சியில் இருக்கிறேன். நீங்கள் ஆளும் கட்சியில் இருக்கிறீர்கள். எவ்வளவோ வேலைகளைச் செய்திருக்கிறீர்கள். இல்லை என்று நான் சொல்லவில்லை. இந்த 2 ஏரிகளை அவசியம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யுமாறு அன்போடு கேட்டு, இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன், வணக்கம்.

*திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களாலே இங்கே வைக்கப்பட்டு இருக்கிற மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ''உழுபவரே உலகத்திற்கு ஆணி'' என்ற குறள் மொழிக்கு ஏற்ப, வேளாண்மைதான் ஒரு நாட்டினுடைய மேம்பாட்டிற்கும் ஒரு நாட்டினுடைய பொருளாதாரத்திற்கும் மிகப் பெரிய சாதனமாகும். இந்த அரசு வேளாண்மை அபிவிருத்திக்காக பல திட்டங்களைத் தீட்டி, உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையிலே நல்ல பல காரியங்களைச் செய்து கொண்டு வருகிறது. வேளாண் பெருமக்களுக்கு மிகுந்த நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று உணர்ந்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீரான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். புரட்சித் தலைவருடைய ஆட்சிதான் ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், ஆகியவர்களுக்கு பல நன்மைகள் பயக்குகின்ற திட்டங்களைத் தீட்டி அவைகளைச் செயல்படுத்தி வருகின்றது என்பதை விவசாயப் பெருமக்கள் நன்றாக அறிவார்கள்.

(முற்பகல் 11-10)

விவசாய சமுதாயத்திற்கு பல நன்மைகளை செய்திருக்கிற தமிழக அரசு வட ஆற்காடு மாவட்ட மக்கள் சார்பாக இன்னொரு நன்மையை செய்ய வேண்டும் என்று என்னுடைய கோரிக்கையை வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்ற பிறகு, எந்த அரசும் துவக்காத பல புதிய பல்கலைக் கழகங்களை தமிழகத்தில் துவக்கியிருக்கிறார்கள். பாரதியார் பல்கலைக் கழகத்தை கோவை மாவட்டத்திலும், பாரதிதாசன் பல்கலைக் கழகத்தை திருச்சி மாவட்டத்திலும். மகளிர் பல்கலைக் கழகத்தை மதுரை மாவட்டத்திலும், தமிழ் பல்கலைக் கழகத்தை தஞ்சாவூர் மாவட்டத்திலும் துவக்கி அந்தந்த மாவட்ட மக்களுக்கு பெருமை சேர்த்திருக்கிறது.





(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

ஆனால் எங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் அப்படிப்பட்ட பல்கலைக் கழகம் எதுவுமே இல்லை என்றாலும் கூட, அரசு ஆரம்பிக்க இருக்கும் வேளாண்மை விவசாயக் கல்லூரியையாவது எங்கள் மாவட்டத்தில் துவக்க வேளாண்மை துறை அமைச்சர் அவர்கள் கருணை காட்ட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். உணவு உற்பத்தியிலே தஞ்சைக்கு நிகராக இருக்கிற எங்கள் மாவட்ட மக்களுடைய உரிமையில் கேட்கிறேன். இதை இந்த அரசு நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தில் 70 சதவீதம் மக்கள் கிராமப்புறங்களில் விவசாயத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள்.

உழைப்பையே மூலதனமாகக் கொண்டு, பல இன்னல்களுக்கிடையே விவசாயிகள் தங்களுடைய வேளாண்மையை செய்து வருகிறார்கள். உழுபவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்று கிராமப்புறங்களில் பழமொழி சொல்வார்கள். அத்தகைய தியாகத்தின் அடிப்படையில் விவசாயிகள் தங்களுடைய வேளாண்மையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்ல வேண்டியது கடமை என்று கருதுகிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்கிற பொருளுக்கு போதிய விலை கிடைக்கவில்லை என்பதை அனைவரும் மிக நன்றாக அறிவார்கள். விவசாய இடு பொருள்களுடைய விலை அதிகமாகியிருக்கிறது. விவசாயி பயன்படுத்தக் கூடிய மற்ற அனைத்துப் பொருள்களின் விலையும் அதிகமாகி வருகிற நேரத்தில், விவசாயி உற்பத்தி செய்கிற உழவுப் பொருள்களுக்கு கிடைக்கக் கூடிய விலை மட்டும் கட்டுபடியாகக்கூடிய விலையாக இல்லை என்பதையும் சொல்லி, அதைக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லுக்கு மைய அரசு விலையை நிர்ணயம் செய்கிறபோது, மிகக் குறைவாக செய்திருக்கிறது. அதே நேரத்தில் கோதுமைக்கு அதிக விலையை தந்திருக்கிறது. கோதுமைக்கு தந்தது போல நெல்லுக்கும் அதிக விலை தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல கரும்புக்கு விலை நிர்ணயம் செய்தபோதும் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மைய அரசு கரும்பினுடைய விலையை ரூ. 135 என்று அறிவித்திருக்கிறது. தமிழக அரசு மேற்கொண்டு 25 ரூபாயை சேர்த்து 160 ரூபாயாக தருகிறது. அந்தந்தப் பகுதியில் இருக்கும் ரெக்கவரியை கணக்கில் கொண்டு பார்த்தால் சராசரியாக 186 ரூபாய்தான் கரும்புக்கு விலை நிர்ணயம் செய்கிறபோது, இந்தியா முழுவதற்கும் அந்தந்த மாநிலத்தினுடைய,

[திரு. தி. அன்பழகன்] [1984 மார்ச் 21

பகுதியினுடைய செக்கவரியை கணக்கில் எடுத்துக்கொண்டு விலை நிர்ணயம் செய்கிறது. இந்தியாவிலே, உத்திரப்பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கரும்பினுடைய உற்பத்தி செலவும் குறைவு, செக்கவரியும் அதிகமாக இருக்கிறது. ஆனால் தமிழகத்தில் செக்கவரியும் குறைவாக இருக்கிறது. அதே நேரத்தில் உற்பத்தி பொருளினுடைய செலவும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, ஒட்டு மொத்தமாக விலையை நிர்ணயிக்கிறபோது, தமிழகத்தில் இருக்கிற விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, மைய அரசு கரும்புக்கு ரூபாய் 250 என்று விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 3 ஆண்டு காலமாக தமிழகம் தொடர்ந்து வறட்சியினுடைய கோரப் பிடியிலே தவித்தபோதும், இந்த ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோதும் உற்பத்தி திறன் குறைந்துவிட்டது. வறட்சியினுடைய கோரப்பிடியிலே சிக்கித் தவித்த தமிழகம் இன்று ஓரளவிற்கு அதிலிருந்து மீண்டு, கணிசமான உற்பத்தியை வேளாண்மைத் துறை செய்துகொண்டிருக்கிறது. வான் பொய்த்த நேரத்திலும் துயர் துடைப்பு பணிகளை சிறப்பாக செய்ததன் விளைவாக, சிறிய விவசாயிகளுக்கும், மிகச் சிறிய விவசாயிகளுக்கும் சலுகைகளையும் உதவிகளையும் செய்ததன் விளைவாக, தற்போது விவசாயிகள் ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் விவசாயம் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

அவர்களுக்கு மேலும் ஊக்கத்தையும், ஆர்வத்தையும் உண்டாக்குகிற அளவுக்கு மேலும் சில சலுகைகளை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். பருவ மழை பொய்க்கும்போதும், வெள்ளத்தால் பாதிக்கும் போதும் பெரும்பான்மையான இடங்களில் விதைகள் கிடைக்கவில்லை. இந்த நிலைமையை சமாளிக்க தனியார்களிடமிருந்து விதைகளை வாங்கி நேரிடையாக விற்பனை செய்தபோது, அங்கே தரமான விதைகள் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட நேரங்களில் தரமான வீரிய விதைகளை, மானிய விலையில் தர அரசு முன் வரவேண்டும். கொடுக்கின்ற விதைப் பொருள்களை உரிய நேரத்தில் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளுக்கு அத்தியாவசியத் தேவையாக இருப்பது பாசன வசதி. நிரந்தரமான நீர்ப்பாசனத் திட்டங்கள் செய்வது, கழிவு நீர் குட்டைகள் அமைப்பது, ஏரி குளம் கண்மாய்களில் தூர் எடுப்பது போன்ற பாசன வசதிகளை சிறப்பாக செய்வதன் மூலமாக, விவசாயிகள் தங்களுடைய தொழிலை சிறப்பாக செய்வதற்கு அது வழிவகை தரும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1984 மார்ச் 21] [திரு. தி. அன்பழகன்]

விவசாயி தான் உற்பத்தி செய்த பொருள்களை பாதுகாத்து வைப்பதற்கு இடம் இல்லாமல் அலைகின்ற நிலைமை இருக்கிறது. பல இடங்களில் நாம் களம் அமைத்திருப்பதைப்போல நில நகரப் பகுதிகளில் மார்க்கெட் கமிட்டியின் மூலமாக கிடங்குகள் ஏற்படுத்தி இருப்பதுபோல கிராமப்புறங்களிலே கிடங்குகளைக் கட்டி விவசாயிகள் விளைபொருளைப் பாதுகாத்து பயன் அடைகிற வகையில் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள டிராக்டர்கள் பல செயல் படாமல் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அவைகளை ஒழுங்குபடுத்தி சீர்படுத்தி விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளு கிற வகையில் ஏற்பாடு செய்யவேண்டும். அதைப்போலவே, வேளாண்மைத் துறையின் பராமரிப்பிலே இருக்கிற டி , துளைபோடும் சாதனங்கள் மற்ற சாதனங்கள் கூட பல இடங் களில் பழுதடைந்திருக்கின்றன. இவைகளை சீர்படுத்தி சுலப மாக அதை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளவும் குறைந்த வாடகைக்கு விடவும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சர்க்கரை ஆலையில் கரும்பு பதிவு செய்திருக்கிற விவசாயி களுக்கு மேலும் பலவகையில் சலுகைகள் அளித்து உதவிகள் செய்து அவர்களை ஊக்குவிக்கலாம். கிணறு ஆழப்படுத்தும் போது கம்ப்ரசர் மூலம் வெட்ட கடன் வழங்கலாம். விதைக் கரும்பை மானிய விலையில் தரலாம். போக்குவரத்து செலவை ஆலையே ஏற்றுக்கொள்ளலாம். ஆலையிலேயே உர கிடங்கை ஏற்படுத்தி உரிய நேரத்தில் உரத்தை ஆலையின் மூலமாகக் கடனாக வழங்கலாம். பூச்சிக்கொல்லி மருந்து போன்றவற் றையும் வழங்கலாம். கொடுக்கிற கடனை கரும்பு அனுப்பும் பொழுது பிடித்துக்கொள்ளலாம்.

கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கரும்பு ஆலைகள் செயல்படும் பகுதிகளில் புதிய சாலைகளும், பாலங் களும் அமைக்கப்படுகின்றன. 1984-85-இல் புதிய சாலைகள் அமைத்திட ரூ. 200 லட்சமும், சாலைகளைப் பராமரித்திட ரூ. 50 லட்சமும் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் என்னுடைய தொகுதியில் பாலாற்றின் பகுதியில் தம்மாம் பேட்டையிலிருந்து நாராயணபுரம் வரை செல்லும் சாலையில், மூன்று பாலங்கள் கட்டவேண்டியிருக்கின்றன. இவைகளைக் கட்டி முடித்தால் அந்தப் பகுதியிலிருந்து பல்லாயிரக்கணக்கான டன் கரும்பு திருப்பத்தூர் சர்க்கரை ஆலைக்கு வருகிற நல் வாய்ப்பு ஏற்படும். அதை உடனடியாக நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டத் திலே எந்த எந்தப் பகுதிகள் விடப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்த்து அந்தப் பகுதிகளையும், ஊராட்சி ஒன்றியம், நெடுஞ் சாலைத் துறையைக் கலந்து கொண்டு இந்தக் கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தை முதன்முதலாக துவக்கிய
பெருமை இந்த அரசுக்குச் சாரும். எனக்கு முன்னாலே பேசிய
காங்கிரஸ் உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்களும் அதைப்
பாராட்டினார்கள். இந்தத் திட்டம் இப்போது பல தாலுக்கா
க்ளில் செயல்படுத்தப்படுகிறது. இந்தப் பயிர்ப் பாதுகாப்புத்
திட்டத்தை அனைத்துப் பயிர்களுக்கும் அனைத்து மாவட்
டங்களிலும் செயல்படுத்த அரசு ஆவனசெய்யவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன் இதற்காக அதிக அளவு நிதி ஒதுக்கி
வறட்சி, வெள்ளத்தால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு மறு
வாழ்வு அளிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

வேளாண்மைத் துறை பெரிய துறையாக இருக்கிறபோது
நீர்ப்பாசனத் துறையோடு கலந்து வறட்சிக் காலங்களிலே எப்
படி கசிவுநீர்க் குட்டைகள் போன்ற திட்டங்கள் நிறைவேற்
றப்படுகின்றனவோ அதைப்போன்று நீர்ப்பாசனத் துறை
யோடு கலந்துகொண்டு வருங்காலத்திலே நன்மைகள் செய்யக்
கூடிய முறையிலே விவசாயிகள் பயன் அடைகின்ற வகையிலே
சிறப்பான திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை
அமைச்சரின் தலைமையில் இந்தத் துறை மிகவும் சிறப்பாக
செயல்படுகிறது. தமிழகத்திலே உணவு உற்பத்தியிலே எப்
படிப்பட்ட சிக்கல் ஏற்பட்டாலும் நிறைவேற்றுகின்ற வகையில்
தன்னுடைய கடமையைச் செய்துவருகிறது, நிறைவேற்றி
வருகிறது என்பதைச் சொல்லி இந்த கோரிக்கையை வரவேற்று
என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி.
**வணக்கம்.**

(முற்பகல் 11-20)

***திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு பேரவையின் மாற்றுத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத்துறைஅமைச்சர்
அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த வேளாண்மைத்துறை
மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்து இருக்
கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்
னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த கொள்கை விளக்க
புத்தகத்திலே எல்லா விவசாயிகளுக்கும் வேளாண்மைத் துறை
மூலம எல்லா நன்மைகளும் கொடுக்கிறோம் என்று தெள்ளத்
தெளிவாக எல்லாப் பக்கங்களிலும் சொல்லியிருக்கிறார்கள்.
ஆனால் இன்றுள்ள நிலமைகள் என்ன என்று கேட்டால், கடந்த
2 ஆண்டுகளாக வறட்சியால் தமிழக முழுவதிலும் எல்லா
விவசாயிகளும் பெரும் பாதிப்புக்கு உள்ளானார்கள். குறிப்
பாக வட ஆற்காடு மாவட்டம் அதிகமான பாதிப்பு ஏற்பட்ட



மாவட்டம். அதிலே குறிப்பாக என்னுடைய தொகுதியான
தண்டராம்பட்டு மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட தொகுதி
யாகும். நம்முடைய தமிழகத்திலே புயல், வெள்ளம் போன்று
எப்பேர்ப்பட்ட மழைக் காலங்களிலும் வடஆற்காடு மாவட்டத்
தில் ஒரு சிறிய அளவில்தான் மழை பெய்யும் என்பதை இந்த
நேரத்தில் கூறிக்கொள்ளக் கட்மைப்பட்டிருக்கிறேன். அதிலும்
குறிப்பாக தண்டராம்பட்டுத் தொகுதியில் கடந்த 2 ஆண்டுக் கால
மாக குடிநீர் ஒரு குடம் 10 பைசா கொடுத்து வாங்கி சாப்பிடக்
கூடிய நிலைமை (என்னுடைய தொகுதியில்) இருந்து இருக்கிறது.
பாதிப்பை ஈடுகட்டும் வகையில் பொருளாதார நெருக்கடி
நிலைமை இருந்தாலும் கடன் வாங்கி விவசாயம் செய்த விவசாயி
களின் நிலைமை என்ன என்பதை நாம் சற்று சிந்தித்துப்பார்க்க
வேண்டும்.

வாடிய பயிரைக் கண்டு வாடினார் வள்ளலார். ஆனால் இன்
றைய அரசின் நிலைமை என்ன? பருவ மழை தவறி பெய்த கார
ணத்தால் வட ஆற்காடு மாவட்டத்தில் பயிற்சி வழித் தொடர்புத்
திட்டத்தின் மூலம் ஐ.ஆர். 50 என்ற நெல் அறிமுகப்படுத்தப்
பட்டது. அந்த நெல்லை எல்லா விவசாயிகளும் பயிர் செய்து
அவைகள் அனைத்தும் இந்த பருவ மழை தவறி பெய்த் காரணத்
தால் அழிந்துவிட்டன. நெல் பயிர் அழிந்ததோடு மட்டும் அல்
லாமல் மணிலா, எள்ளு, உளுந்து போன்ற பயிர்களும் முழுவதும்
அழிந்து விட்டன. அதேபோல் திருநெல்வேலி, இராமநாதபுரம்,
மதுரை, திருச்சி, தஞ்சை போன்ற 6 மாவட்டங்களில் ஏற்பட்ட
பெரும் மழையின் காரணமாக அறுவடைக் காலத்தில் மிகப்
பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. தமிழகத்தின் தெற்குப் பகுதியில்
பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, பயிர்ச் சேதங்களுக்கு எந்த எந்த
வகையில் அரசு என்ன என்ன உதவிகளைச் செய்ததோ அதாவது
கூட்டுறவு துறை மூலமாகக் கொடுத்த கடல், நிலவள வங்கிகள்
மூலமாக கொடுத்த கடன், அரசாங்கத் துறை மூலமாக வழங்கிய
கடன்கள் ஆகியவற்றை தள்ளுபடி செய்ததுபோலவும் உரம்,
யூரியா போன்ற பலவகையான இடு பொருள்களுக்காக விவசாயி
களுக்கு வழங்கப்பட்ட கடன் தள்ளுபடி செய்யப்பட்டது போல
வும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எந்த வகை
யில் சலுகைகளை அளித்தீர்களோ அத்தனை சலுகைகளையும்
வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள எல்லா விவசாயிகளுக்கும்
கொடுக்கவேண்டும். நிலவள வங்கியின் மூலம் வாங்கிய கடனைத்
தள்ளுபடி செய்ய வேண்டும். கூட்டுறவுத் துறையின் மூலம
வாங்கிய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அல்லது மற்ற
வேறு எந்த அரசுத்துறையின் மூலமாக வாங்கிய கடன்களையும்
இந்த அரசு வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில்
தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்
கொள்கிறேன். ஏன் என்றால் வட ஆற்காடு, மாவட்டத்
திலும் இன்றைக்கு மழையினால் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிற
காரணததால் இந்த மாவட்டத்திற்கும் எல்லாச் சலுகைகளையும்
செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. த. வேணுகோபால்] [1984 மார்ச் 21

அதோடு நிலவரியையும் ரத்து செய்து தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். 'பட்ட காலிலேயே படும், கெட்ட குடியை கெடும்' என்பது போல வட ஆற்காடு மாவட்டத்தில் இன்றைக்குப் பல பயிர்கள் நஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கின்றன. விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே இவைகளை எல்லாம் மனதில் கொண்டு அரசு இந்தத் திட்டங்களை எல்லாம் செவ்வனே செய்வதற்கு முன் வரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகள் தற்போது எங்கள் மாவட்டத்தில் பயிற்சி வழி தொடர்புத் திட்டத்தின் மூலம் பல புதிய ரகங்களை அறிமுகப்படுத்துகிறார்கள். இந்தப் பயிர்களைச் செய்தால் விவசாயிகளுக்கு எல்லாம் பெரும நன்மைகள் ஏற்படும் என்று சொல்லி அறிமுகப்படுத்தி நாங்கள் எல்லாம் அந்தப் பயிர்களைச் செய்து இப்போது அந்த பயிர்கள் எல்லாம் அழிந்துவிட்டன. அதிகாரிகள் இப்போது வானொலியில் விளம்பரம் செய்கிறார்கள். இந்த நேரத்தில் ஐ.ஆர். 50 நெல்லைப் பயிரிடக்கூடாது. அதற்குத் தண்ணீர் நிறைந்த பகுதியாக இருக்கக்கூடாது. களர் பூமியாக இருக்கக்கூடாது என்று இப்போது வானொலியில் விளம்பரம் செய்கிறார்கள். ஏற்கெனவே அவைகளைப் பயிர் செய்தால் அதிக மகசூலைத் தரும என்று விளம்பரம் எல்லாம் செய்து அதிகமான அளவில் அந்த நெல்லைப் பயிர் செய்து பெரும் இழப்புக்கு விவசாயிகள் ஆளானார்கள், என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக கடமைப் பட்டிருக்கிறேன். உழவர்களை உயர்ந்தவர்களாக ஆக்குவோம் என்று தேர்தல் நேரத்தில் சொன்னர்கள். ஆனால் பட்ஜெட்டைப் பார்த்தாலும சரி, இந்த கொள்கை விளக்கப் புத்தகத்தைப் பார்த்தாலும் சரி, விவசாயிகளுக்கு என்று எந்த நன்மைகளும் இல்லை. விவசாயிகளுக்கு என்று என்ன நன்மையை நீங்கள் செய்து இருக்கிறீர்கள், சொல்லி இருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் ஒன்றை மட்டும அந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள், விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்திருக்கிறோம் என்று. கூட்டுறவுக் கடன்களை என்ன ரத்து செய்திருப்பதாக நாங்கள் செய்தித் தாள்களில் பார்த்தோம் என்றால். கூட்டுறவுக் கடன்களில் ஒரு கோடி ரூபாய் அளவிற்கான கடன்களை ரத்து செய்ததாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால் கூட்டுறவுக் கடன் என்ற முறையில் விவசாயிகள் பெற்ற கடன்கள் ஏராளமாக இருக்கின்றன. அதையெல்லாம் இந்த இழப்பைக் கருதித் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நோய்களைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், அது மிகவும், முக்கியமான நிலைமையாக இருக்கிறது. சாதாரணமாக விவசாயிகள் பயிர் செய்தோம், நிலங்களுக்கு உரங்களை இட்டோம், அறுவடை செய்தோம், அதனால் நன்மை ஏற்பட்டது என்ற நிலைமை இந்தக் காலத்தில் விவசாயிகளுக்கு இல்லை. கொடிய பல நோய்கள் தாக்குகின்றன, விவசாயிகள் பயிரிடுகின்ற நெல், மணிலா, கரும்பு, தென்னை, மா, முருங்கை போன்ற எந்தவிதமான பயிர்களாக இருந்தாலும் சரி, மருந்து தெளிக்காமல் பயிர் அறுவடை செய்தோம் என்ற நிலைமை இப்பொழுது இல்லை. ஆனால் மருந்துகளின் நிலைமை என்னவென்று பார்த்தால், அது என்ட்ரினாக இருந்தாலும் அல்லது தூள் மருந்தாக இருந்தாலும் அல்லது வேறு எந்த மருந்தாக இருந்தாலும் தரம் குறைந்திருக்கின்றன. எல்லா மருந்துகளும் கலப்பு மருந்துகளாக இருக்கின்றன. மேலும், விவசாயிகளுக்குக் குறிப்பிட்ட நேரத்திலும் மருந்துகள் கிடைப்பதில்லை. அடி உரம் போன்ற யூரியா சாம்பளக்ஸ் கலப்பு உரங்கள் போன்ற எந்த உரமாக இருந்தாலும் ஒரு மூட்டையிலே பாதி அளவிற்கு மணல் கலந்த உரங்களாகத்தான் இருக்கின்றன. இவைகளையெல்லாம் பற்றி நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் நன்றாகக் கவனித்து, அரசாங்கத் துறையிலே வழங்குவதானாலும் சரி, அல்லது தனியார் கடைகளிலே விநியோகிக்கின்ற மருந்துகளாக இருந்தாலும் சரி அவைகளையெல்லாம் நன்றாகப் பரிசீலித்து நல்ல மருந்துகளாகவும, யூரியா போன்ற உரங்களை நல்ல உரங்களாகவும் தருவதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



1984 மார்ச் 21] [திரு. த. வேணுகோபால்]

அத்துடன், வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்பதோடு, பருவ மழை தவறிய காரணத்தால் பல விவசாயிகள் நஷ்டத்தால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அங்கே தற்போது விலைகளெல்லாம் குறைந்து விட்டது. விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்கும்பொழுது விலை குறைந்து விடுகிறது. விவசாயிகளுக்கு உற்பத்தி இல்லை என்ற நேரத்திலும் விலைகளைக் குறைத்து விடுகிறார்கள். இப்படிப் பல நெருக்கடிகள் ஏற்பட்டு விடுகின்றன. இப்படி முன்னுக்குப் பின்னாக வருகிறது. இந்த நேரத்தில் விவசாயிகளுக்கு விலை கட்டுப்படியாகும் விதத்தில் ஒரு மூட்டை நெல்லுக்கு கிட்டத்தட்ட 180 ரூபாய்க்குக் குறையாமல் விலை கிடைக்க வேண்டும்.

கரும்பைப் பொறுத்தவரையில், சாதாரணமாகக் கரும்பு பயிரிடுவது என்றால் ஒரு ஏக்கருக்கு கிட்டத்தட்ட 200 ரூபாய் 300 ரூபாய் அளவிற்கு செலவாகிறது. ஆனால் அரசு கரும்புக்கு டன் ஒன்றுக்கு 186 ரூபாய் நிர்ணயித்து இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் கரும்புக்கு டன் ஒன்றுக்கு 250 ரூபாய் கொடுக்க வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. த. வேணுகோபால்] [1984 மார்ச் 21

என்னுடைய தண்டராம்பட்டு தொகுதியில் வாழவச்சனூர் என்ற இடத்தில் அரசாங்கப் பண்ணை ஒன்று இருக்கிறது. சாத்தனூர் அணையிலிருந்து அதற்குத் தண்ணீர் வருகிறது. ஆனால் அங்கே ஏராளமான அளவிற்கு விதைகளை உற்பத்தி செய்வதில்லை. அங்கே தரமான எல்லாவிதமான விதைகளையும் உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது. நிலம இருக்கிறது. எனவே, அங்கே தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலையில் அத்தியந்தலில் அரசு விதைப்பண்ணை ஒன்று இருக்கிறது. அங்கேயும் நல்ல விதைகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டையிலே நவ்லாக் பண்ணை இருக்கிறது. அங்கே வீரிய தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்கிறார்கள். அந்தப் பண்ணையில் பீல்ட்மேன் பயிற்சி கொடுத்து வருகிறார்கள். ஆனால் அதற்கு ஆண்டு ஒன்றுக்கு 50 பேர்களைத்தான் பயிற்சிக்காக எடுக்கிறார்கள். அந்த எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பல ஊராட்சி ஒன்றியங்களில் நெற்களம் விவசாயிகளுக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. அவைகள் இப்பொழுது மோசமான நிலையில் பழுதடைந்து இருக்கின்றன.

(முற்பகல் 11-30).

அவைகளை எல்லாம் செப்பனிட வேண்டும். விவசாயிகளுக்கு அப்போதுதான் நன்மை ஏற்படும. அப்பொழுதுதான் அவர்களுடைய மகசூலை சுத்தப்படுத்தக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அதை விட்டுவிட்டு பல துறைகளில் பல வேலைகளை எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி பல வேலைகளைச் செய்ய வேண்டியதில்லை என்று நான் சொல்லவில்லை. விரைவாகச் செய்ய வேண்டிய இந்தப் பணிகளை முதலிலே செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இருக்கின்ற நெற்களங்களை செம்மைப்படுத்தவும நெற்களம் இல்லாத கிராமங்களில் நெற்களங்களை அமைத்தும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் முதலமைச்சருக்கு விண்ணப்பித்துள்ளபடி அங்கே ஒரு வேளாண்மைக் கல்லூரியை அமைத்துக் கொடுக்க வேண்டும். மற்ற மாவட்டங்களில் வேளாண்மைக் கல்லூரி பல இடங்களில் இருக்கின்றது. வட ஆற்காடு மாவட்டம், நஞ்சைக்கு அடுத்தபடியாக நஞ்சையை உற்பத்தி செய்யக்கூடிய மாவட்டமாகும். இறவைப் பாசனத்தைக் கொண்டு நெல் உற்பத்தி செய்கின்ற



1984 மார்ச் 21] [திரு. த. வேணுகோபால்]

மாவட்டமாகும். அப்படிப்பட்ட எங்களுடைய மாவட்டத்திற்கு ஒரு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கட்டாயமாக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அரசுத் தரப்பில் சொல்லுப் படுகின்ற சொற்கள் எல்லாம் பயனுள்ள சொல்லாக இருக்க வேண்டும் என்றும் அவை நடைமுறையில் இருக்கக் கூடிய சொல்லாக இருக்க வேண்டும் என்றும் கூறிக் கொண்டு இந்த வாய்ப்பை அளித்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. ஏ. பாலுச்சாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1984—85 ஆம் ஆண்டுக்கான விவசாயத்துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்ற கருத்திற்கு மாறாக நாட்டில் விவசாயிகள் மற்றவர்களைத் தொழுது விவசாயம் செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருந்தார்கள். அந்தச் சூழ்நிலையை மாற்றி விவசாயிகள் இன்று நல்ல நன்மைகளைப் பெறக் கூடிய வகையிலே காரியங்களைச் செய்கிறார், அந்தப் பொறுப்பினை ஏற்று இருக்கின்ற மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அதாவது புரட்சித் தலைவரின் பின்னணியில் இருக்கக் கூடிய வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விவசாயத் துறை மானியத்தைக் கண்டு ஒரு சில எதிர்க்கட்சிகள் மாற்றுக் கருத்துக்களைச் சொல்வார்கள் என்று நான் எண்ணினேன். ஆனால் அவர்களே இன்று விவசாயத் துறை மானியக் கோரிக்கையைப் பற்றிப் புகழ்ந்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன், தமிழ்நாட்டிலே வாழ்கின்ற விவசாய பெருமக்களுக்கு இது ஒரு கலங்கரை விளக்கமாகவும், ஏழை விவசாயிகளை ஏத்துகின்ற ஏணிப்படியாகவும் இருக்கின்றது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விவசாயத் துறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு விவசாயிகளுக்காக புரட்சித் தலைவரின் ஆலோசனையின்படி. விவசாயிகள் வெள்ளக் தாட்சிபாதிக்கப்பட்ட நேரத்தில் தஞ்சாவூர் மாவட்டம், திருச்சி மாவட்டம், மதுரை மாவட்டம், இப்படி பல மாவட்டங்கள் மாவட்பட்ட நேரத்தில் உடனே புரட்சித் தலைவர் அவர்களுடன் கஷ்டப்பேசி மூலமாகத் தொடர்பு கொண்டு ரூபாய் நாற்பத்தி தொலை லட்சத்தை நிவாரண உதவியாகப் பெற்று அந்த ஏழை எட்டு இ

[திரு. ஏ. பாலுச்சாமி] [1984 மார்ச் 21

விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுத்தவர்கள்தான் இன்றைய விவ
சாயத் துறை அமைச்சர் அவர்கள் என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன். பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் என்ற சிறந்த
திட்டத்தைக் கொண்டு வந்தவர்தான் நம்முடைய விவசாயத்
துறை அமைச்சர் அவர்கள். முன்பெல்லாம் விவசாயிகள் அதி
காரிகளைத் தேடி அலுவலகங்களுக்குச் செல்வார்கள். இப்போது
இந்த பயிற்சிவழித் தொடர்புத் திட்டம் வந்ததற்குப் பிறகு
அதிகாரிகள் அனைவரும் விவசாயிகளின் வீடுகளுக்குத் தேடிச்
சென்று ''உங்களுடைய குறைகள் என்ன என்ன'' என்று கேட்டு
அந்தக் குறைகளை எல்லாம் போக்குகின்ற அளவுக்கு இன்றைக்
குத் தமிழகத்தில் விவசாயம் முன்னேறிக் கொண்டிருக்கின்றது
என்பதை நான் பெருமையாக இந்த மன்றத்தில் எடுத்துச்
சொல்லிக்கொள்கிறேன்.

இரண்டு வருட காலமாக வறட்சியால் தமிழகம் பாதிக்கப்
பட்டிருந்தது. அந்த வறட்சிப் பாதிப்பில் 3¼ இலட்சம் தென்னை
மரங்கள் தமிழகத்திலே பாழாகி இருக்கின்றது. இவ்வாறு
தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டு அவற்றின் எண்ணிக்கை குன்றி
விடக் கூடாது என்பதற்காக மாண்புமிகு விவசாயத் துறை
அமைச்சர் அவர்கள் 36 இலட்சம் தென்னங் கன்றுகளை விவ
சாயிகளுக்கு மானியமாக கொடுத்திருக்கிறார்கள். அந்தப்
பெருமை மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களுக்கே
சாரும.

ஏழை விவசாயிகள் விவசாயம் செய்து மேலும் நன்மை
அடைகின்றவகையில் இது போன்ற இன்னும் பல நன்மைகளைச்
செய்வதற்குக் காத்திருக்கிறார் புரட்சித் தலைவர் அவர்கள்
என்பதை மெத்த பெருமையாகச் சொல்லிக்கொள்கிறேன்.

மேலும் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வந்து
இருக்கிறார்கள். ஏழை விவசாயிகள் விவசாயம் செய்கின்ற
நேரத்தில் கையிலே இருக்கும் பணத்தைச் செலவு செய்து நட்டம்
ஏற்படுவதை மனதிலே எண்ணி பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ்
திட்டத்தை புரட்சித் தலைவர் இந்திய துணைக் கண்டத்திலேயே,
முதன் முதலாக, இந்தத் தமிழ் மாநிலத்திலே கொண்டு வந்து
இருக்கிறார்கள் என்றால், ஏழைகள் மீது எவ்வளவு பற்றும்
பாசமும் வைத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் எல்லாம் உணர
வேண்டுமென்று உங்களை நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்
கிறேன்.

ஏழை விவசாயிகளின் உயிர் உடமைக்கு ஆபத்து ஏற்பட்டால்
ரூ. 10,000 வழங்கும் திட்டத்தைப் புரட்சித் தலைவர் அறிமுகப்
படுத்தி இருக்கிறார்கள். இந்தத் திட்டம் எல்லாம் தேர்தல்
காலத்தில்கூட சொல்லப்படாத திட்டம். ஆனால் விவசாயி
களின் நன்மையைக் கருதி, விவசாயிகளின் கஷ்டங்களை எண்ணி,
இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார் என்பதை நான்
உங்களுக்கு மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.



1984 மார்ச் 21] [திரு. ஏ. பாலுச்சாமி]

மேலும் இந்த நிதிநிலை அறிக்கையில் புரட்சித் தலைவர்
விவசாயிகளுக்கு நன்மை எதுவும் செய்யவில்லை, அதில் எந்தவித
அறிவிப்பும் இல்லை என்று மாற்றுக் கட்சிக்காரர்கள் கூறி இருக்கி
றார்கள். புரட்சித் தலைவர் அவர்கள், விவசாயிகள் கடனை
நீக்குவேன் என்று கூறினார். ஆனால், விவசாயிகளுக்குக் கடனை
நீக்கவில்லையென்று எதிர்க்கட்சிக்காரர்கள் கூறினார்கள். அது
உண்மைதான். இதை காங்கிரஸ்காரர்கள் கூறி இருக்கிறார்
கள். நான் மெத்த வருத்தப்படுகிறேன். தொட்டிலையும் ஆட்டி
விட்டு, குழந்தையையும் கிள்ளுவதைப் போன்று, காங்கிரஸ்
காரர்கள் விவசாயிகளுக்குக் கடனைத் தள்ளுபடி செய்யவில்லை
என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் எந்தத் தன்மையிலே
அதைப் புரிந்து கூறியிருக்கிறார்கள் எனறு நான் கேட்க விரும்பு
கிறேன்.

புரட்சித் தலைவர் தேர்தல் காலத்தில் என்ன வாக்குறுதி
கொடுத்தார்கள்? விவசாயிகள் வாங்கிய கூட்டுறவுக் கடனைத்
தள்ளுபடி செய்வோம் என்று கூறினார். அவர் ஒவ்வொரு வருஷ
மாக 5 வருஷங்களுக்குத் திட்டம் தீட்டி, ரூ. 100 கோடி விவசாயி
கள் வாங்கிய கடனைத் தளளுபடி செய்தார்கள். ஆனால்,
மத்திய அரசு அதைச் செய்ய விட்டதா என்பதைச் சிந்தித்துப்
பார்க்க வேண்டும். நானும் செய்ய மாட்டேன், உன்னையும்
செய்ய விடமாட்டேன் என்ற கூற்றுக்கு ஒப்பாக வேறு எந்த
மாநிலத்திலும் இது போன்று விவசாயிகள் வாங்கிய கடனைத்
தள்ளுபடி செய்யவில்லை. ஆகவே, தமிழகத்தில் நீங்கள் தள்ளு
படி செய்யக் கூடாது என்று மத்திய அரசு நமது தமிழக அரசைக்
கண்டித்தது. புரட்சித் தலைவர் இந்தத் திட்டத்தினை தேர்தல்
காலத்தில் வாக்குறுதி கொடுத்தேன். ஆகையினால் இந்தத்
திட்டத்தை எப்படியும் நான் நிறைவேற்றுவேன் என்று கூறிய
நேரத்தில், மைய அரசு, உங்களது தமிழ்நாட்டில் இந்தத்
திட்டத்தை மேலும் நீங்கள் கொண்டு வந்தீர்கள் என்றால்
உங்களைக் கறுப்புப் பட்டியலில் காட்டுவேன் என்று கூறிய
காரணத்தாலே மேலும் மைய அரசின் மனோபக்குவத்தைக்
கண்டு, புரட்சித் தலைவர் அவர்கள் வயிற்றிலே இருக்கும்
பிள்ளையை நம்பி, தலைப் பிள்ளையைக் கொல்லக் கூடாது
என்று நினைத்து, அதைத் தள்ளிவிடவில்லை. மேலும் காலம்
வரும், அதை அப்பொழுது செய்வோம் என்று நினைத்து முடிக்கக்
கூடிய வகையில் எண்ணிக் கொண்டு தானிருக்கிறார்கள் என்
பதைத் தவிர, இந்தக் கடன் திட்டத்தைக் கை விட்டுவிடவில்லை
என்று நான் சொல்லிக் கொள்கிறேன். ஏதோ திராவிட முன்
னேற்றக் கழக அரசு விவசாயிகளுக்கு பல நன்மைகளைச் செய்தது
என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால், அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்தவித நன்மையும்
செய்யவில்லை என்று சொல்லி, சில வாசகங்களை அள்ளி வீசு
கிறார்கள். இங்குள்ள திராவிட முன்னேற்றக் கழக நல்ல
சட்டமன்ற உறுப்பினர்களை அருள்கூர்ந்து, தங்கள் ஆட்சிக்
காலத்தை சற்றுத் திரும்பிப் பாருங்கள் என்று வேண்டி விரும்பி

[திரு. ஏ. பாலுச்சாமி] [1984 மார்ச் 21

கேட்டுக் கொள்கிறேன். தங்களது காலத்தில் விவசாயிகளுக்குப் பன்னீர் தெளித்து, பாதங்களில் மலர் தூவி வாழுங்கள் என்று வாழவிடவில்லை. தாங்கள் இந்தத் தமிழகத்திலே ஆட்சி செய்த நேரத்தில், விவசாயிகளுக்குப் போதுமான உரம் வழங்கப்பட்டதா? விவசாயிகளுக்குப் போதுமான உரம் வழங்கப்படாத காரணத்தினால் விவசாயிகள் ஒவ்வொருவரும் கிராமம், கிராமமாக உரம் கிடைக்காதா, என்று தலையிலே சாக்குத் தூக்கி, உரம் எங்கு கிடைக்கிறது என்று தேடி அலைந்தார்கள். விவசாயிகள் அதை மறுக்கவில்லை. ஆனால் நீங்கள் மறந்துவிட்டீர்கள். கோவை மாவட்டத்தில் விவசாயிகள் ஒரு யூனிட்டு மின்சாரத்திற்கு 5 பைசா குறைக்க வேண்டுமென்று சொல்லவில்லை. ½ பைசா ஒரு யூனிட்டுக்குக் குறையுங்கள் என்று தங்களிடம் கேட்டு போராட வரவில்லை, விவசாயிகள் உரிமையைக் கேட்டார்கள். உரிமையைக் கேட்ட நேரத்தில் அதற்காக ஊர்வலம் வந்தார்கள். ஆனால், வாய் பேசாத விவசாயிகளை நீங்கள் துப்பாக்கி ரவைகளினால் தூக்கி வைத்தீர்கள் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன.

(முற்பகல் 11-40)

கருணாநிதி அவர்களிடத்தில் நியாயம் கேட்டு, நீதி கேட்டு விவசாயிகள் ஒரு தூதுக் குழுவை அனுப்பினார்கள். அந்த ஏழை விவசாயிகளிடம் கூறிய வாசகத்தை மறந்து விட்டீர்களா? தமிழகத்து விவசாயிகள் மறந்துவிட்டார்கள் என்று எண்ணுகிறீர்களா? சர்வாதிகாரி ஹிட்லர், முசோலினியைப் போல் உங்களை இரும்புக் கரகங்கள் அடக்கும் என்று ஆணவமாக, அகந்தை வார்த்தைகளை அள்ளிவிடவில்லையா? இரும்புக் கரங்களை ஏவிவிடவில்லையா? வாய் பேசாது, உழைப்பையே உயர்ந்த லட்சியமாகக் கொண்டு விவசாயிகளுடைய உயிரைப் பறித்த காரணத்தால்தான், அந்தத் தாய்மார்கள் தங்கள் தாலிகளைப் பறிகொடுத்த காரணத்தால்தான் அவர்கள் இந்தப் புனித கோட்டையில் தமிழக் முதலமைச்சராக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை அமர்த்தினார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நல்ல பல திட்டங்களை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். மத்திய அரசு வடமாநிலங்களில் விளைகிற கோதுமைக்கு உயர்ந்த விலையைக் கொடுக்கிறார்கள். ஆனால் இங்கே தமிழகத்தில் விளைகிற நெல்லுக்கு விலை மிகவும் குறைத்துக் கொடுக்கிறார்கள். ஆகவே மத்திய அரசை நெல்லுக்கு அதிக விலை கொடுக்கவேண்டுமென்று கேட்கவேண்டுமென்று நம்முடைய அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். கரும்பு விவசாயம் செய்கிற விவசாயிகளுக்கு ஊதிய உயர்வு வழங்கி கரும்பை மேலும் தமிழ் நாட்டிலே விவசாயம் செய்ய அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும்



1984 மார்ச் 21] [திரு. ஏ. பாலுச்சாமி]

அளிக்கவேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் கரும்பும் விவசாயம் செய்யக்கூடிய பகுதியில் உள்ள ரோடுகள் அனைத்தையும் விவசாயத் துறை மூலம் போட்டுக் கொடுக்கிறார்கள். மதுரை மேற்கு ஒன்றியத்திலே கரும்பு விவசாயம் செய்யக் கூடிய பகுதியில் ரோடுகளைச் செப்பனிட்டுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய சமயநல்லூர் தொகுதியில் மின் நிலையம் ஒன்று இருந்தது. அந்த மின் நிலையத்தை ஏலம் விட்டு அந்த இடம் 10. 15 ஏக்கர்கள் இப்போது வெற்றிடமாக இருக்கிறது. ஆகவே அங்கே நம்முடைய விவசாயத் துறை மூலமாக ஏதாவது திட்டங்களைக் கொண்டு வந்து அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விவசாயத் துறை மானியத்திலே அமைச்சர் அவர்கள் ஏழை, எளிய விவசாயிகளுக்கு ஊக்கத்தை அளிக்கிற வகையிலே பலவிதமான நன்மைகளைச் செய்யக்கூடிய திட்டங்களை வைத்திருக்கிறார்கள். அதற்காக அமைச்சர் அவர்களைப் பாராட்டி, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

*திரு. எம். செல்லமுத்து: மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மை மற்றும் மூலதனச் செலவு குறித்த கோரிக்கையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே சென்ற ஆண்டு ஏற்பட்ட வறட்சி, இந்த ஆண்டு ஏற்பட்ட பெரு மழை வெள்ளம் இவைகளின் காரணமாக தமிழகத்தின் பொருளாதாரமே சீரழிந்திருக்கிற சூழ்நிலையைப் பற்றி கவர்னர் உரையிலும் அமைச்சர் அவர்களுடைய கொள்கைக் குறிப்பிலும் பல்வேறு விபரங்களை கூறி இருக்கிறார்கள். நட்ட பயிர்களை இழந்து பாதிக்கப்பட்ட விவசாயிகள், உடைமைகளை இழந்து அவர்களுக்கு அரசாங்கம் எந்தவிதமான உருப்படியான நஷ்டயீட்டையும் அளிக்காது இருக்கக்கூடிய சூழ்நிலையில் அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கிற வகையிலே நஷ்டயீடுகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகம் முழுவதும் அனைத்து விவசாயிகளும் விவசாய இடுபொருள்களின் விலை உயர்ந்திருக்கிற காரணத்தால் விவசாயிகளுடைய உற்பத்திப் பொருள்களுக்கு கட்டுப்படியான விலை வேண்டுமென்று அனைத்து விவசாயிகளும், விவசாயச் சங்கங்களும் கேட்கிறார்கள். நெல்லுக்கும், கரும்பிற்கும் கட்டுபடியான விலை கிடைக்காமல் விவசாயிகள் இன்றைக்கு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நெல்லுக்கும், கரும்பிற்கும் உரிய விலை நிர்ணயித்து அவர்களுக்கு அதிகமான விலை கொடுக்கவேண்டும். அவர்கள் உற்பத்தி செய்கிற அனைத்துப் பொருள்களையும் அரசாங்கமே

[திரு. எம். செல்லமுத்து] [1984 மார்ச் 21

கொள்முதல் செய்து சரியான முறையில் விநியோகம் செய்ய வேண்டும். விவசாயத்திற்கு மிக முக்கியமானது தண்ணீர். அந்த முறையில் தஞ்சை, திருச்சி மாவட்ட விவசாயத்திற்கு மட்டுமல்லாமல், தமிழகத்தின் விவசாயத்திற்கே பயனளிக்கிற வகையில் காவேரி நீர் பிரச்சினையை மத்திய அரசோடு பேசித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சமுதாயக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அதற்காகப் பலகோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கொள்கைக் குறிப்பிலே கூறப்பட்டு இருந்தாலும், ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள சமுதாயக் கிணறுகள் சரிவர நிர்வகிக்கப்படாமல், சரியாக செயல்படாமல் இருக்கின்றன. ஆகவே, அவற்றைச் சரியாக நிர்வகிக்கவும், செயல்படச் செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அது மட்டும் அல்லாமல், மேலும் அதிகமான அளவில் சமுதாயக் கிணறுகளை அமைப்பதற்கும் அரசு ஏற்பாடு செய்யவேண்டும். தஞ்சை மாவட்டத்தில் 5,000 குழாய் கிணறுகள் அமைப்பதற்கு உத்தரவுகள் போடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இத்தகைய கிணறுகள் அனைத்து விவசாயிகளுக்கும் நன்மை தரும் வகையில் அரசாங்க செலவில் அமைத்து, விவசாயிகள் நன்மை அடைய வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருள்கள் எல்லாம் தரமானதாக இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லாமல் இருக்க முடியவில்லை. குறிப்பாக வறட்சியைத் தாங்கி நிற்கும் விதைகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்கிற எண்ணம் விவசாயிகளிடத்தில் இருக்கிறது. அதைப்போலவே தண்ணீர் தேங்கினால் அதைத் தாங்கி நிற்கும் விதைகளும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற குறையும விவசாயிகளிடத்தில் இருக்கிறது. எனவே அவைகளை எல்லாம் விரைவாகக் கண்டு பிடித்து நல்ல முறையில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, தரமான விதைகளை விவசாயிகளுக்குத் தருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும. அப்படிப்பட்ட விதைகளை விரைவில் உற்பத்தி செய்து கொடுக்கவும் தக்க நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது அரசாங்கம் தரும் பூச்சி மருந்து, உரம் ஆகியவையும் தரமானதாக இல்லை. மானிய விலையில் இவைகள் கொடுக்கப்படுகின்றன என்று சொன்னாலும், அவைகள் எப்படி இருக்கின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும்



1984 மார்ச் 21] [திரு. எம். செல்லமுத்து]

நன்கு தெரியும் என்று நினைக்கிறேன். இன்றைக்கு அரசாங்க
டெப்போவுக்கு வருகிற இந்த உரங்கள் பூச்சிமருந்துகள் தர
மானதாக இல்லை. இன்றைக்கு மானிய விலையில் கொடுக்கப்
படும் உரமாக இருந்தாலும் சரி, விதையாக இருந்தாலும் சரி
அவைகள் தரமானதாக இருக்கவேண்டும் என்பதோடு மட்டு
மல்லாமல், விவசாயிகளுக்கு நேரடியாகப் போய்ச் சேரும் அள
விற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

இன்றைக்கு மருந்து அடித்தால்தான் விவசாயம் பிழைக்
கும் என்ற நிலை இருக்கிறது. அப்படிச் செய்யாவிட்டால்
விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய எல்லாப் பயிர்களும் முழு
வதும் பாதிக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறது. ஆகவே,
அரசாங்கமே மருந்துகளை விவசாயிகளுக்கு அடித்துக் கொடுத்து
அந்த விவசாயிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தைப் பற்றி இங்கே வரவேற்றுப்
பேசினார்கள். அது நல்ல திட்டமாக இருந்தாலும தமிழகத்
தைப் பொறுத்த மட்டில் அது எங்கே அமலில் இருக்கிறது
என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. தஞ்சை மாவட்டத்
தைப் பொறுத்த அளவில் அது எங்கே இருக்கிறது என்று புரிந்து
கொள்ள முடியவில்லை. அமுலில் இருப்பதாகச் சொல்லப்படும்
திருநெல்வேலி மாவட்டங்களில் கூட, அது சரியாக நிறைவேற்
றப்படவில்லை. அம்பாசமுத்திரம் தாலுக்காவில் ஆழ்வார்
குறிச்சியில் 74 விவசாயிகள் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில்
சேர்ந்து அதற்காக பணம் கட்டியிருந்தும் கூட பாதிப்பு ஏற்
பட்ட போதிலும் கூட பணம் கொடுக்கப்படவில்லை. இதை
அமைச்சரவர்கள் கருத்தில் கொண்டு அவர்களுக்கு இன்
சூரன்ஸ் பணம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். அதிலே
ஏதோ சட்டச் சிக்கல் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். குறிப்
பாக, அந்த தாலுக்காவில் ஒரு பகுதியில் மட்டும்தான் இன்
சூரன்ஸ் செய்யப்பட்டு உள்ளது என்று சொல்கிறார்கள்.
தாலுக்கா முழுவதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று வில்லேஜ்
ஆபீசர்ஸ் சான்றிதழ் கொடுத்திருந்தாலும் இன்சூரன்ஸ் பணம்
கொடுக்கப்படவில்லை. என்று சொல்லப்படுகிறது.
இதிலுள்ள சிக்கலை களைந்து, அந்தத் திட்டத்தைச் சிறப்பாக
அமல் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு
அந்தத் திட்டம் வெறும் பிரச்சாரத்திற்காகத்தான் சொல்லப்
படுகிறது. அதை நாட்டு மக்களுக்குப் பயன்படும் வகையில்
செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் பற்றி விரிவாகப் பேசப்
பட்டது. எல்லா இடங்களிலும் ஒழுங்கு முறை விற்பனைக்
கூடங்கள் கட்டப்படவேண்டும். கட்டப்பட்ட விற்பனை கூடம்
கூட களியக்காவிளை பகுதியில் இன்னும்
திறக்கப்படாமல் இருக்கிறது. விரைவாகத் திறக்கப்

படவேண்டும். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு நெல் மற்றும் பல பொருள்கள் கொண்டுவருபவர்களுக்கு அட்வான்ஸ் கொடுப்பதற்காக, முன் பணம் கொடுப்பதற்காக, வங்கியின் கவுண்டர்களை அங்கங்கே ஏற்படுத்த வேண்டும் என்று கேட் டுக் கொள்கிறேன்.

பொறியியல் துறையை எடுத்துக் கொண்டால் அதிலே இருக் கும் டிராக்டர்கள், மருந்துத் தெளிப்பான், துளை போடும் பவர் டிரில்வர் முதலியன பழுதடைந்து, விவசாயிகளுக்குப் பயனில்லாமல் இருக்கின்றன. அவைகள் சாதாரண விவசாயி களின் உபயோகத்திற்குக் கிடைப்பதில்லை. அதிகாரிகளுக்கு நெருக்கமான அளவில் தெரிந்திருப்பவர்களுக்கு, அதிகாரி களைக் கவனிப்பவர்களுக்குக் கொடுக்கிறார்களே தவிர மற்ற வர்களுக்குக் கொடுப்பதில்லை. இது அனைவருக்கும் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குடிமராமத்து என்பது இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் செய்யப்படாமல் இருக்கிறது. அதனால் வடிகால்கள், வாய்க் கால்கள் தூர்ந்துபோய் இருக்கின்றன. விவசாயிகள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே அரசாங்கமே இந்தக் குடிமராமத்து வேலை செய்ய ஏற்பாடு செய்து விவ சாயிகளுக்கு நன்மை பயக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

அதைப்போன்று இன்றைக்கு குளங்கள் எல்லாம் மேடாகிக் கிடக்கின்றன. ஏதோ ஒரு காலத்தில் அவை வெட்டப்பட்டவை. கசிவுநீர் குட்டைகள் அமைக்கும் திட்டம் பற்றி இன்றைக்கு விரிவாகச் சொல்லப்படுகிறது. எல்லா இடங்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கப்போவதாகச் சொல்கிறார்கள். அதோடு ஏற்கெனவே தூர்ந்து போய் இருக்கிற குளங்களை தூர் வாரி, 10 அடி, 15 அடி தண்ணீர் தேக்கி வைக்கக்கூடிய அளவுக்கு ஆழப்படுத்தினால் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அது பேருதவியாக இருக்கும். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்ட மக்கள் இன்றைக்கு விவசாயப் பொருளா தாரத்தையே நம்பி இருக்கிறார்கள். ஆகையால் அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சரவர்கள் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயிகள் பயிர் செய்து, அறுவடை செய்கிற போது மழைக்காலங்களில் சரியான களம் இல்லாத காரணத் தால் சக்தியிலே சிக்கி சிரமிந்து கொண்டிருக்கிறார்கள். எனவே ஆங்காங்கே சிமின்ட் களங்கள் நல்லமுறையில் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில இடங்





களில் களம் அமைக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் அவை அமைக்கப்பட்ட அடுத்த ஆண்டிலேயே இருந்த இடம் தெரியாமல் போய்விடுகின்றன. அப்படி இல்லாமல் நல்லமுறை யில் சிமின்ட் களங்களை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பசுந்தாள் உரம், கம்போஸ்ட் உரம் உற்பத்திச் செய்யும் திட்டம் இருந்தது. ஆனால் இன்றைக்கு கம்போஸ்ட் உரம் கிராமப்பகுதிகளில் தயாரிக்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடுகள் இல்லை; எனவே கிராமங்களில் கிடைக்கக்கூடிய கழிவுப் பொருள்கள், தழைகள், தொழு உரங்களை எல்லாம கொண்டு கம்போஸ்ட் உரம் தயாரிக்க தகுந்த ஏற்பாடு செய்து, அதற்கு மானியமும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலைகளிலிருந்து வரும் கழிவுநீர் பற்றி இங்கே விரிவாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக திண்டுக்கல்லைப்பற்றி நாங்கள் சொல்லியிருக்கிறோம். அமைச்சர் அவர்களும் நட வடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆலைகளி லிருந்து வருகின்ற கழிவு நீரைக் கட்டுப்படுத்தி, விவசாயம் பாதிக்காமல் இருக்க தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தோட்டக்கலை பற்றி கொள்கை விளக்கக் குறிப்பிலே இருந்தாலும் இன்றைக்கு நடைமுறையில் இல்லை என்று சொல்லக்கூடிய அளவிலேயே இருக்கிறது. ஆகவே, தோட்டக் கலையை விரிவுபடுத்தி, தமிழ்நாடு முழுவதும் நடைமுறைப் படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகளுக்கு பயிற்சிவழித் தொடர்பு திட்டம் பற்றி பெரிய அளவுக்கு பேசப்படுகிறது. அதனால் விவசாயி களுக்கு எதிர்பார்த்த பயன் இருக்கிறதா என்றால், இல்லை. ஏதோ சில இடங்களில் சிலருக்கு பயிற்சிக் கொடுக்கப்படு கிறது என்று சொல்லப்படுகிறதே தவிர அதனால் என்ன பயன் என்ன நன்மை என்பதை பற்றி ஒன்றும் இல்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் அதுபற்றி விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இந்த பயிற்சிவழித் தொடர்புத் திட்டத்தை சரியான முறையில் செயல்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த அழுகும் பொருள் என்று சொல்கிறபோது
இன்றைக்கு காய்கறி, பழவகைகள் எல்லாம் இருக்கின்றன
அவைகளை உற்பத்திச் செய்கின்ற விவசாயிகளுக்கு பாதுகாப்
பாக வைத்துக்கொள்ள கிட்டங்கி வசதி இல்லை. இந்த காய்கறி
உற்பத்திச் செய்கிற விவசாயிகளைப் பாதுகாக்க, அவர்களுக்கு,
கிட்டங்கி வசதி, குளிர்சாதன வசதிகளை எற்படுத்திக் கொடுக்க
துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

கரும்பு மேம்பாட்டுச் சாலை போடும் திட்டம் இருக்கிறது.
அது இன்றைக்கு கரும்பு உற்பத்திச் செய்யும் விவசாயிகளுக்குப்
பயன்படுவதாக இல்லை. குறிப்பாக, கிழக்குத் தஞ்சையில்
வடபாதிமங்கலத்தில் ஆரூரான் சர்க்கரை ஆலை இருக்கிறது.
அந்த ஆலைக்கு கரும்பு உற்பத்திச் செய்யும் விவசாயிகள்
கரும்பை எடுத்துச்செல்ல சரியான சாலை வசதி இல்லை.
நல்ல சாலை வசதி இருந்தால்தான் ஆலைக்கு கரும்பை எடுத்
துச்செல்ல வசதியாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்ய
வேண்டும். எனது தொகுதியில் மாயூரம், திருத்துறைப்பூண்டி
ரோட்டை நல்லமுறையில் சீர் செய்ய வேண்டும். உத்திரங்குடி
யிலிருந்து நமசிவாயபுரம் வழ்குடி சிவனாண்டர் கோவில்
வழியாக வடபாதிமங்கலம் வரையில் நல்ல சாலை வசதி இல்லை.
அங்கே சிறந்தமுறையில் சாலை அமைக்க ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடபாதிமங்கலத்தில் உள்ள தமிழ்நாடு கரும்புப்பண்ணைக்
கழகத்தைப்பற்றி அமைச்சரவர்கள் வலியுறுத்திச் சொல்லி
யிருக்கிறார்கள். 4,000-க்கு மேற்பட்ட ஏக்கர் நிலம் அதற்கு
இருக்கிறது. வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியாருக்குச்
சொந்தமான நிலத்தை எடுத்து, அந்த நிலத்தைக்கொண்டு
கரும்புப்பண்ணை கார்ப்பரேஷன் அமைத்தார்கள். கார்ப்ப
ரேஷன் அமைக்கப்பட்ட பின்னால் சுமார் 80 இலட்சம் ரூபாய்
நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. கரும்பு சரியாக உற்பத்திச் செய்யப்
படவில்லை. நெல்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. கழகம்
சரியாகச் செயல்படவில்லை. எனவே அந்தப் பகுதியிலுள்ள
அதாவது கார்ப்பரேஷனுக்காக எடுத்துக் கொண்டிருக்கிற
அந்த நிலத்தை அந்தப் பகுதியிலிருக்கிற விவசாயத் தொழி
லாளர்களுக்கு குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, ஆதி
திராவிட மக்களுக்கு, பிற்பட்ட மக்களுக்கு, அதிலே பணிபுரியக்
கூடிய ஊழியர்களுக்கு பிரித்துத் தரவேண்டுமென்ற கோரிக்கை
நீண்டநாட்களாக இருந்துகொண்டிருக்கிறது. அந்த வகையிலே
அவர்களுக்கு பிரித்துக் கொடுத்து, உற்பத்தியைப் பெருக்கு
கின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். கரும்பே இல்லை
என்று சொல்லுகின்றபோது கரும்புப் பண்ணைக் கழகம்
எப்படி நடக்கும்? ஆகவே, அந்த நிலங்களை எல்லாம் பிரித்துக்
கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.





அந்த நிலங்களைப் பிரித்துக் கொடுக்கும்போது, நிலமற்ற
விவசாயிகள் அந்தக் கழகத்தில் நீண்டகாலமாகப் பணிபுரியும்,
தொழிலாளர்கள், பிற்பட்ட மக்கள் ஆகியோருக்குப் பிரித்துக்
கொடுக்க வேண்டுமென்று, கேட்டு, நன்றி தெரிவித்து முடித்துக்
கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி :** மாண்புமிகு
பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்
பட்டிருக்கின்ற மான்யத்தை ஆதரித்துப் பேச வாய்ப்பு அளித்த
மைக்கு தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தேர்தல் வாக்
குறுதியாக விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடன்களை ரத்து
செய்வதாகச் சொன்னார்கள். அந்த அடிப்படையில் அவர்கள்
பொறுப்பேற்றவுடன் சிறு விவசாயிகளுக்குக் கூட்டுறவுத் கடன்
களை ரத்து செய்தார்கள். படிப்படியாக கூட்டுறவுக் கடன்
களை ரத்து செய்வதாக அறிவித்தார்கள். அந்தச் சூழ்நிலையில்
வறட்சி, வெள்ளம் போன்ற பல சங்கடங்கள் உருவாகி இன்று
வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களை
அந்தந்த இடங்களிலே, போய் பார்த்து அவர்களுக்கு கூட்டுறவுக்
கடன்களையும், வரி மற்றும் பல கிஸ்திகளையும் தள்ளுபடி
செய்யவேண்டுமென்று அறிவித்துள்ளார். அதற்காக ஒவ்வொரு
வரும் இந்த அரசை பாராட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது
என்பதை மனதார கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே
போல இன்று பயிற்சி வழித் திட்டம் என்று உருவாக்கி, அதன்
மூலமாக சிறு விவசாயிகளுக்கு உரம், விதை, பூச்சி மருந்து
போன்றவைகளை மான்ய விலை அடிப்படையில் கொடுக்க அரசு
முன்வந்துள்ளது என்பதை மனதாரப் பாராட்டக் கடமைப்பட்
டிருக்கிறேன்.

அதேபோல் இன்று தமிழகத்தில் ஒவ்வொரு யூனியனிலும்
விவசாயக் கிடங்கு அல்லது விவசாய டெப்போ ஆரம்பித்து,
அதன் மூலமாக விவசாயிகளுக்கு நல்ல தரமான விதைகள் உரங்
கள் போன்றவைகளையும் வழங்குகின்ற அடிப்படையில் செய்
துள்ளதை நான் உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

அதேபோல தமிழகத்தைப் பொறுத்தவரையில், 51 விதை
மையங்கள் அமைத்து, அதன் மூலமாக தரமான விதைகளை
உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு தரமான விதைகளை
கொடுக்கக் கூடிய அடிப்படையிலே இன்று செயல்படுகிறது.
இதை மனமுவந்து பாராட்டுகிறேன்.

பயிர் காப்புறுதித் திட்டம் ஒன்றை இந்த அரசு கொண்டு வந்துள்ளது. இதனால் சிறு விவசாயிகளுக்கு பாதிக்கப்பட்ட இடங்களில், நன்மை பயக்கும் வகையில் சில நன்மைகளை இந்த அரசு கொண்டுவந்திருக்கிறது என்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

அதேபோல் விதைகள் வழங்கப்படும்போது, சில இடங் களில் தரமான விதைகள் கொடுக்கப்படவில்லை. அந்த விதைகள் முளைப்பதில்லை. அதை அமைச்சரவர்கள் கருணை கூர்ந்து கவனித்து, வேறு புதிய விதைகளை வழங்கக்கூடிய சூழ் நிலையை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

ஆக விவசாயிகளைப் பொறுத்தமட்டிலும், இந்த நாட்டிற்கு அவர்கள் முதுகெலும்பு என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது; அந்த வகையிலே இன்று சில விவசாயிகள் இன்னல்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. மின்சாரத்தைப் பொறுத்த மட்டிலும், இரவில் வருகிறது. விவசாயிகள் இரவிலே மின்சாரத்தைப் பயன்படுத்தி, தண்ணீர் பாய்ச்சுவதிலே மிகவும் சங்கடமான சூழ்நிலை இருக்கிறது. ஒரு தொழிலாளி 8 மணிநேரம் வேலை செய்கிறபோது இரவிலோ பகலிலோ அவர்களுக்கு பாதுகாப்பான நிலையிலே வேலை செய்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட அந்த நிலைமை விவசாயிகளுக்கு இல்லை. புதர்கள் அல்லது பெரிய மோசமான நிலையில்கூட அங்கிருந்து தண்ணீர் பாய்ச்ச வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்த நேரத்தில் பல சங்கடங்கள் உருவாகின்றன. மின்சாரத் துறை செய்ய வில்லை என்றாலும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் அந்தத் துறைக்கு பரிந்துரை செய்து அந்த விவசாயிகளுக்கு பகல் நேரத்தில் மின்சாரத்தை வழங்குவதற்கு ஆயத்தமான காரியங்களைச் செய்ய முன்வர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நகரங்களில் வாழும் மக்களுக்குக் கூட்டுறவுத் துறையின் மூலமாக காய்கறிகள் விநியோகம் செய்யப்படுகிறது. உற்பத்தி செய்கின்ற இடங்களிலிருந்து கொண்டுவரவேண்டி யிருப்பதால், அழுகிப் போகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆக நகரங்களுக்குப் பக்கத்திலேயே விவசாயப் பண்ணைகளை உரு வாக்கி அதன்மூலம் நகரங்களுக்கு காய்கறிகளைக் கொடுப்பது மிகவும் நல்லது என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





(நண்பகல் 12-00)

அடுத்து, தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற் பத்தியாளர்கள் இணையம் என்ற ஒன்று உருவாக்கப்பட்டு, தேசிய பால் வாரியத்தினுடைய நிதி உதவியுடன் செயல்படு வதாக இங்கே குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். அதன் மூல மாக சுமார் 11½ கோடி ரூபாய் அந்த வாரியத்தால் வழங்க பட்டு உள்ளது. 70 சதவீதம் கடனாகவும், 30 சதவீதம் மானிய மாகவும் வழங்கப்பட்டு உள்ளதாக அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு போன்ற ஊர்களில் மட்டும், இந்தத் திட்டம் செயல்படுத்தப் பட்டு, அங்கே எண்ணெய் உற்பத்தி செய்வதற்கான ஆலைகளை வாங்குவதற்காகவோ அல்லது கட்டுவதற்காகவோ இருப்பதாக நான் அறிகிறேன். எங்கள் பகுதியில் உள்ள, அதாவது பெரியார் மாவட்டம், திருச்சி மாவட்டத்தில் உள்ள வெள்ளக்கோவில், சிவகிரி போன்ற பகுதிகளில் அதிகமாக கடலை உற்பத்தியாகிறது. கீழ் பவானி பாசன வசதி பெற்ற இடம். இந்த இடத்தில் 3 போகங்கள் கடலை உற்பத்தியாகிறது. நிறைய கடலை உற்பத்தியாகிறது. ஈரோட்டுக்கு அதிகமான அளவில் கடலையைச் சப்ளை செய்வது அந்தப் பகுதிதான். இதை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு, அந்தப் பகுதியிலே உள்ள முத்தூர் அல்லது வெள்ளக்கோவில் பகுதியிலே அந்த ஆலையை உருவாக்க வேண்டும் அல்லது எண்ணெய் அறைக்கா விட்டாலும், விதைக் கடலையை வாங்குவதற்காக ஒரு கொள் முதல் செய்யும் நிறுவனத்தையாவது அங்கே உருவாக்கித் தர வேண்டும். அதன் மூலமாக அங்கே உற்பத்தி செய்கின்ற விவ சாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கக்கூடிய வகையிலே ஒரு நிறு வனத்தை உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

இன்று நெல்லுக்கும், கரும்புக்கும் விலை சரியாகக் கிடைக்கு வில்லை என்று இங்கே உறுப்பினர்கள் சொன்னார்கள். அது உண்மைதான். ஏன் என்றால் நானும் ஒரு விவசாயி. சாதாரண மாக விவசாயிகள் பொருள்களை உற்பத்தி செய்கின்றபோது, அதை நினைத்த நேரத்தில் விற்க முடிவதில்லை. காரணம் அவர்கள் கடனைப் பெற்றுத்தான், அல்லது பலரிடத்திலே கைமாற்றுப் பெற்றுத்தான் விவசாயம் செய்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அது அறுவடை ஆனவுடன், அதை உடனடியாக விற்றால்தான் அந்தப் பணத்தைக் கடன்காரர்களுக்கு திருப்பிக் கொடுக்க முடியும். அந்த அடிப்படையிலே அந்தத் தொழிலில் உள்ளவர்கள் எந்த ஒரு விலையைச் சொன்னாலும் அவர்கள் அதை வாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. விவசாயிகள் சொல்கிற விலைக்கு விற்க முடிவதில்லை. எனவே அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில்

[திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி [1984 மார்ச் 21

கொண்டு ஒவ்வொரு ஊரிலேயும் மார்க்கெட்டிங் கமிட்டி போன்ற அமைப்புகளுக்குத்தான் இதை விற்கவேண்டும், தனியார்கள் கொள்முதல் செய்யக் கூடாது என்ற அடிப்படையில் ஒவ்வொரு ஊரிலும் மார்க்கெட்டிங் கமிட்டி அமைத்து, தனியார்கள் வாங்க முடியாத அளவிலே, விவசாயிகள் எந்த நேரத்திலே விற்க ஆசைப் படுகிறார்களோ அந்த நேரத்தில் விற்பதற்கோ, அல்லது கடனாகக் கொடுக்கக் கூடிய வகையிலே அரசு விழிப்பாகச் செயல் பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால், நமது நாடு 75 சதவீதம் பேர்கள் விவசாயம் செய்கின்ற நாடு. அதை நம்பி வாழ்கின்ற மக்கள் அதிகமாக இருக்கிறார் கள். ஒரு சமயத்தில் வறட்சி ஏற்படுகிறது. மற்றொரு சமயத் தில் வெள்ளம் ஏற்படுகிறது. ஆக, இந்த இரண்டு சூழ்நிலை களிலும் சிக்கித் திணறி அவர்கள் எங்கே செல்வது என்று தெரி யாமல் இருக்கின்ற நிலைமையிருக்கிறது. எனவே, இதைக் கருத் தில் கொண்டு, விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, இந்த வகையிலே அவர்களுக்கு வாய்ப்புக்களைக் கொடுத்து, விவசாயி களின் குடும்பங்களை முன்னேற்றுவதற்கான நல்ல வழிவகை களை இந்த அரசு செய்ய வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த கொள்கை விளக்கக் குறிப்பில், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். '' நமது பொருளாதாரம் தொடர்ந்து வேளாண்மையையே அடிப்படையாகக் கொண்டுள்ளதாகை யால், அதன் ஏற்றத் தாழ்வுகள் சமூகத்தின் அனைத்து நிலை களையும் பாதிக்கிறது '' என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்றால், அமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் இந்த விளக்க நூலில். பிறகு பாக்கி முழுவதையும் பார்க்க வேண்டியதில்லை. ஆகவே, தமிழகத்தினுடைய பொருளாதாரம் அனைத்தும் இன்றைக்கு நின்று விட்டது, அல்லது சீரழிந்து விட்டது என்றே சொல்லலாம். ஆனால், வேளாண்மைத் துறையை அடிப்படையாகக் கொண்டு இந்த மாநிலத்தில் வரககூடிய வரு மானம் சரி பாதி இந்த வேளாண்மைத் துறையின் மூலமாகத் தான் வருகிறது. அப்படிப்பட்ட இந்தத் துறைக்கு தமிழகத்து னுடைய உற்பத்தியைப் பெருக்குவதற்காக ஒதுக்கி இருக்கக்கூடிய நிதி கடலிலே பெருங்காயம் கலக்கிற மாதிரியாக இருக்கிறது. அப்படி இருக்கின்றபோது, எப்படி இந்த விளக்கக் குறிப்பில் கொடுத்துள்ள அத்தனை வேலைகளையும் எதிர் காலத்திலே செய்ய முடியும ? அப்படி என்றால் விவசாயக் கொள்கையிலே இந்த அரசாங்கத்திற்கு தெளிவு இல்லை ; தெளி வான கொள்கை இல்லை. அதன் காரணத்தால் தான் விளக்கங் கள் அதிகமாக இருக்கிறதே தவிர, அதை நிறைவேற்றுவதற்கு

136238 சென்னை-600 008.



1984 மார்ச் 21] [திரு. பொ. உத்திராபதி]

தேவையான நிதி அடிப்படைகள் இதிலே இல்லை. எனவே, நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எதிர் காலத்திலேயாவது தமிழகத்தினுடைய பொருளாதாரத்தை மேம்பாடு அடையச் செய்வதற்காக அதிகமான அளவிலே நிதியை ஒதுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், 1983-லே வறட்சி, கடுமை யான வறட்சி. 1984-லே அதாவது இந்த ஆண்டு மட்டுமல்ல, டிசம்பர் மாதத்திலிருந்து மார்ச் மாதம் வரைக்கும் மழை பெய் தது. தமிழகத்தினுடைய அத்தனை பயிர்களும் போய்விட்டது. நெல்லிலிருந்து அத்தனை பயிர்களும் போய் விட்டது. அவை களை மறுபடியும் கொண்டு வர வேண்டும். இப்போது நெல்லை தஞ்சை ஜில்லாவிலே அறுக்கிறார்கள். என்ன அறுவடை ? கீழே விழுந்து முளை விட்டிருக்கும் நெல்லை அறுக்கிறார்கள். இதை மருதாம்பூ கதிர்என்று சொல்வார்கள். அதை அறுத்துக் கொண் டிருக்கிறார்கள். இதை ஏன் அறுக்கிறார்கள் என்று கேட்டால், முளைத்து விட்டதே அறுக்காவிட்டால் கேவலம் என்று சொல்லி அறுக்கிறார்கள். அதில் ஒரு மா-வுக்கு 2 கலம் 2½ கலம் கிடைக்கும். இதற்கு ஏதாவது மாற்றம் செய்வதற்கு இந்த விளக்க நூலிலே பரிசீலித்திருக்கிறார்களா. என்று பார்த் தால், அதுவும் இல்லை.

1983-லே 50 லட்சம் டன் நெல் எதிர் பார்ப்பதாக சொன் னார்கள். ஆனால், கிடைக்கவில்லை. வரும் ஆண்டில் 65 இலட்சம் டன் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 65 லட்சம் டன் அரிசியை உற்பத்தி பண்ணுவதற்கு ஆய்வு கட்ட வேலைகளுக்கு விவசாயிகளுக்கு நீங்கள் பாதுகாப்பு செய்து இருக்கிறீர்களா என்று தெரியவில்லை. அது போல சிறு தானியம் 30 லட்சம் டன் எதிர்பார்ப்பதாக சொல்லியிருக்கிறீர் கள். நஞ்சையும போச்சு, புஞ்சையும் போச்சு. இதிலே 30 லட்சம் டன் எப்படி எதிர்பார்க்க முடியும் ? அதற்கு என்ன மாற்றுத் திட்டம் வைத்திருக்கிறீர்கள். அதுவும் ஒன்றும் தெரிய வில்லை.

அடுத்தாற் போல விவசாயத்திற்கு தயாராக இருந்த நிலங்கள் எல்லாம், உடைப்பு ஏற்பட்டு, இப்போது அவைகள் எல்லாம் மண் மேடிட்டு மூடியிருக்கின்றன. மண் மேடிட்ட நிலங்களை அப்புறப்படுத்த 5 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருப்பதாகச் சொல்லு கிறீர்கள். ஆனால் இந்த 5 லட்சம் ரூபாயை வைத்துக் கொண்டு, எப்படி அத்தனையையும் சரி செய்யப் போகிறீர்கள். நேற்றுக் கூட நமது நிதியமைச்சர் அவர்கள் வெள்ள நிவாரணத்திற்காக மத்திய அரசு 25 லட்சம் ரூபாயைத்தான் கொடுக்க முடியும் என்று கூறியதாக தெரிவித்தார்கள். நியாய விலைக் கடைகள் எல்லாம் மூடப்படுவதாக அபாய சங்கு ஊதியிருக்கிறார்கள்.

[திரு. பொ. உத்திராபதி] [1984 மார்ச் 21]

சத்துணவு மையங்களைக்கூட மூடுகின்ற அபாயம், உணவு
உற்பத்தியில் பற்றாக்குறையினால் ஏற்பட்டிருக்கிறது. ஆனால்
அதைப் பற்றி நீங்கள் சொல்லவில்லை. ஆனால், விரைவிலேயே
சொல்லக்கூடிய நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறீர்கள்,
மத்திய சர்க்காரிடம் நாம் தாக்கீது கொடுத்திருக்கிறோம்.
ஆனால் மத்திய சர்க்காருக்கு கருணையே இல்லை. நான் நம்
முடைய எம். பி. யாக இருக்கக்கூடிய மாண்புமிகு சிவாஜி
அவர்களிடம் கேட்டதற்கு, 5 லட்சம் இப்போது கூட கொடுத்
திருப்பதாக, பத்திரிகையிலே காலையிலே செய்தி வந்திருப்ப
தாகச் சொன்னார்கள். 5 லட்சம் எதற்காக வந்ததோ தெரிய
வில்லை. மத்திய சர்க்காரின் குழு வந்து சர்டிபிகேட் பண்ணி
விட்டுப் போனார்கள். மூச்சு இலை. இதையெல்லாம் பார்க்கிற
போது தமிழகத்தை மத்திய சர்க்கார் புறக்கணித்து வருகிறார்
களோ என்ற ஐயம் ஏற்படுகிறது. அதை தட்டிக் கேட்பதற்கு
மாநில சர்க்காருக்கு என்ன தயக்கம் என்று புரியவில்லை. ஓர்
ளவிற்கு வலியுறுத்தி பேசக்கூடிய நம்முடைய வேளாண்மைதுறை
அமைச்சருடைய வாய் கூட மூடியிருக்கிறது. மூட வைத்திருக்
கிறார்கள். இருந்தாலும் கூட இதைத் தட்டிக் கேட்க நமது
அமைச்சர் அவர்கள் தயாராக வேண்டும் என்று கருதுகிறேன்...

• மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பொதுக் கூட்டங்
களில் நான் வழக்கம்போல் பேசிக் கொண்டிருக்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : இருந்தாலும் கூட கொஞ்சம்
வற்புறுத்தி பேச தயாராக வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். பருத்தி உற்பத்தியை பொறுத்த அளவில், 1983-லே
3 லட்சம் பேல்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. 1984-85-லே
நாம் எதிர்பார்ப்பது 5 லட்சம் பேல்கள். போன வருஷம்
13 லட்சம பேல்கள் எதிர் பார்த்தோம். 3 லட்சம் தான் கிடைத்
திருக்கிறது. இப்போது 5 லட்சத்திற்கு எதிர் பார்க்க தயாராகி
இருக்கிறோம். இதற்கு என்ன காரணம்? பருத்தி உற்பத்தி
பண்ணக்கூடிய நிலம் குறைந்து வருவதாகச் சொல்லுகிறார்கள்.
ஏன் குறைகிறது ?

உற்பத்தி பெருகி லாபம் வருகிறபோது நிலத்தை ஏன்
குறைக்க வேண்டும்? நிலமும் குறைகிறது, பருத்தியும் குறை
கிறது. இதற்கு ஏதாவது மாற்றுத் திட்டம் வைத்திருக்கிறீர்களா?
ஒன்றும் கிடையாது. இதனால் என்ன ஆபத்து ஏற்படும் ?
பஞ்சாலைகள் மூடப்படும். அப்போது என்ன நடக்கும் ? லட்சக்
கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றி திண்டாடி, தெரு
விலே நிற்கக் கூடிய நிலைமை ஏற்படும். ஆனால், அங்கே
தொழிற்சாலை திறக்கிறோம் இங்கே தொழிற்சாலை திறக்கி
றோம் என்று சொல்லுகிறீர்கள். நூல் இல்லாமல், பருத்தி
இல்லாமல் எதிர் காலத்தில் எப்படித் தொழிற்சாலைகளில்
உற்பத்தி பண்ணப் போகிறீர்கள்? அதற்கு கட்டுப்படியாகக்கூடிய
விலை இல்லை.



1984 மார்ச் 21] [திரு. பொ. உத்திராபதி]

இப்போது மகாராஷ்டிராவிலே காட்டன் கார்ப்பரேஷ
னிலே அங்கேயுள்ள பருத்தி நூல் பூராவையும் அவர்களே கொள்
முதல் செய்கிறார்கள். அரசாங்கமே கொள் முதல் செய்
கிறார்கள். கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்கிறது. அதை
ஏன் இங்கே செய்யக் கூடாது ? அதைச் செய்ய வேண்டும்.
பருத்தி உற்பத்தி பண்ணுவதற்கு நிலம் குறையாமல், மேலும்
அதிகமான நிலத்தில் உற்பத்தி பண்ண நடவடிக்கை எடுத்துக்
கொள்ள வேண்டும். கரும்புக்கு 160 ரூபாய் என்று சொல்லு
கிறீர்கள். ஆந்திராவிலே 185 , கர்நாடகத்தில் 192, மற்ற
மாநிலங்களில் 200. 1983 வறட்சியில் பருத்தி காய்ந்து போச்சு.

(பிற்பகல் 12—10)

1984 இல் பெய்த மழையால் அழிந்துவிட்டது. கரும்பு
உற்பத்தி குறைவால் சீனி உற்பத்தி குறைகிறது. சீனி நமக்கு
அதிகமாகத் தேவைப்படுகிறது. கரும்புக்குக் கொடுக்கக்கூடிய
விலை கட்டுப்படியாகவில்லை, மத்திய சர்க்கார் கட்டுப்படி
யாகக்கூடிய விலையைக் கொடுக்க தயாராக இல்லை. கொடுக்க
மாட்டார்கள்: தமிழ்நாட்டிலே ஒரு பொருளாதார நெருக்
கடியை உண்டுபண்ணவேண்டுமென்று பாரதப் பிரதமர் நினைக்
கிறார்களோ என்ற சந்தேகம் இருக்கிறது. கரும்பு விவசாயிகள்
எல்லாம் ஊர்வலமாக வந்து அமைச்சர் அவர்களைச் சந்தித்து
அதிகமான விலையைக் கேட்டிருக்கிறார்கள். கரும்பு விவசாய
மும் பாதிக்கப்பட்டிருக்கின்ற இந்த நேரத்திலே மற்ற மாநிலங்
களைவிட அதிகமான விலையைக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு
களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பருத்தி
பூ வெடிக்கிற நேரம். வெயில் வரவேண்டிய நேரத்திலே மழை
பெய்ததால் அழிந்துவிட்டது. அதைப் போல் மிளகாயும் அழிந்து
விட்டது. கொத்தமல்லி அழிந்துபோய்விட்டது. சூரியகாந்திப்
பூவிற்கு வெயில் தேவை, ஆனால் மழை பெய்துவிட்ட காரணத்
தால் பாதிக்கப்பட்டுவிட்டது. இப்படி பருப்பு, பாசி பருப்பு,
கடலை, கொண்டக் கடலை எல்லாம் பாதிக்கப்பட்டுவிட்டன.
மொத்தம் 25 இலட்சம் ஏக்கர் புஞ்சை தானியம் விளைகின்ற
நிலங்கள் முழுமையும் தமிழகத்திலே பாதிக்கப்பட்டிருக்கிறது.
இந்த கொள்கை விளக்கத்திலே என்ன என்னமோ எல்லாம்
சொல்லியிருக்கிறார்கள். எப்படி செய்யப்போகிறார்கள் ?
தேங்காய் எண்ணெய் விலை ஏறிவிட்டது. இன்றைக்குக் காலை
யிலே 2 ரூபாய கொடுத்து 50 மில்லி தேங்காய் எண்ணெய் வாங்கி
வரச் சொன்னேன். அதைப்போலவே எண்ணெய் வித்துக்கள்
எல்லாம் அழிந்து போய்விட்டது. நிலக்கடலை உற்பத்தி
செய்யவேண்டும். எள் உற்பத்தி செய்யவேண்டும. சூரியகாந்தி
உற்பத்தி செய்யவேண்டும். ஆமணக்கு உற்பத்தி செய்ய
வேண்டும். இவையெல்லாம் உற்பத்தி செய்தால்தான் நாம்
மக்களுக்கு கொடுக்க முடியும். ஆனால் இவைகள் எல்லாம்

[திரு. பொ. உத்திராபதி] [1984 மார்ச் 21

இன்றைக்கு அழிந்துபோய் விட்டன. இதற்கு மாற்று என்ன? எப்படி இவைகளை மக்களுக்குக் கொடுக்கப்போகிறீர்கள்? அதற்கு என்ன திட்டம் இருக்கிறது? 10 இலட்சம் ஏக்கரில் நிலக்கடலை போய்விட்டது. மணிலா போய்விட்டது. தஞ்சை மாவட்டத்திலே மாத்திரம 2 லட்சம் ஏக்கர் கடலை போய் விட்டது. இப்படி நட்டத்திற்கு ஆளாகியிருக்கிற விவசாயி களுக்கு என்ன நட்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது? சோளம் 15 இலட்சம் ஏக்கரில் போய்விட்டது. சோள மாவு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. இப்படி அதிலே 20 இலட்சம் இதிலே 20 இலட்சம் என்று போய்விட்டது.

விதை கொடுத்தார்கள். நான்கூட வேளாண்மைத்துறையி லிருந்து இரண்டு தடவைகள் விதைகள் வாங்கினேன் ஒன்றுகூட முளைக்காமல் போய் விட்டது. பொட்டலங்களில் கொடுத்தார் கள். முளைக்காமல் போய்விட்டது. விதைகளை காயவைத்து கொடுக்காமல் பதத்தோடு கொடுத்தால் அது விவசாயிகளுக்கு பயன் உள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விதைகள் இப்போது போதுமான அளவுக்கு இருப்புக் கிடையாது. நல்ல விதைகளை நல்லமுறையில் எல்லா விவசாயிகளுக்கும் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். வறட்சியினால் தென்னை மரங்கள் 7 இலட்சம் போய் விட்டன என்று சர்க்காரிலே கொடுத்த குறிப்பிலேயே சொல்லியிருக்கிறார்கள். தென்னங்கன்றுகள் கொடுத்தார்கள், அதுவும் இந்த மழையிலே அழிந்துவிட்டது. அகில இந்திய அளவிலே தென்னை அபிவிருத்தி வாரியம் என்று வைத்திருக் றார்கள். அவர்கள் கோடிக்கணக்கான ரூபாய் வைத்திருக் கிறார்கள். அவர்கள் வந்து பார்வையிட்டார்கள். அத்தனையும் இழந்தவர்களுக்கு நட்டஈடு கொடுக்க வேண்டும், அதோடு தென்னங்கன்றுகளையும் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு வீடுகள் போய்விட்டது. மாடு போய் விட்டது. வருகிற வருஷம் விவசாயத்திற்கு மாடு கொடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அவர்களுடைய கடன்கள் அப்படியே இருக்கின்றன. முதல் வருஷம் 45 கோடி ரூபாய்க்கு தள்ளுபடி செய்தோம். முதல் வருஷம் செய்ததையே வருஷா வருஷம் சொல்லிக்கொண்டிருப்ப தால் என்ன பயன்? அனைத்துக் கடன்களையும் தள்ளுபடி செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். விவசாயிகள் 2 ஆயிரம் ஏக்கருக்கு நட்ட ஈடு தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஒரு பெரிய தொகை அல்ல அது. ஆகவே அதைக் கொடுத்து அவர்களை ஊக்கப்படுத்தினால் உற்பத்தியை



1984 மார்ச் 21] [திரு. பொ. உத்திராபதி]

பெருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நெல்லுக்கு நீங்கள் அதிகமாக 35 ரூபாய் கொடுக்கிறீர்கள். வர வேற்கிறோம. ஆனால் மத்திய சர்க்காரை வற்புறுத்தி 200 ரூபாய் கொடுக்கச் செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உரம், பூச்சி மருந்து இவைகளை குறைந்த விலைக்கு தனியார் கடைகளில் கொடுக்கிறார்கள். நம்முடைய கடைகளிலே அதிகமான விலைக்குக் கொடுக்கிற நிலைமை இருக்கிறது. பூச்சி மருந்தை அடித்தாலும் அது அதைத் தின்று கொழுத்துவிடுகிறது. பூச்சி சாகவில்லை, காரணம் அதிலே வீரியம் இல்லை. இது யார் தப்பு என்பதைப் பார்க்க வேண்டும. சர்க்கார் மூலமாக வழங்கப்படுகிறபோது வீரியமுள்ள மருந்தாக குறைந்த விலைக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வடபாதிமங்கலத்திலே இருக்கிற பொதுத் துறையில் அதிக மாக நட்டம் ஏற்பட்டிருக்கிறது. அதிகமான கரும்பு பயிர் செய்தால் நட்டம் ஏற்படாது. பொதுத் துறையை வேளாண் மைத் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து பாதுகாத்தார் கள். ஆனால் கடந்த இரண்டு வருஷமாக அதிலே நட்டம் ஏற்பட்டது. அதிகமான நிதி ஒதுக்கி கரும்பு அதிகமாகப் பயிரிட்டால் நட்டம் இல்லாமல் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையும் நீர்ப்பாசனத் துறையும் தனித் தனியாக செயல்படுகிறார்கள். நீர்ப்பாசனத் துறை ஒரு பக்கம் வாய்க்கால் வெட்டுகிறது. வேளாண்மைத் துறை ஒரு யோசனை சொல்கிறது. அப்படி இல்லாமல் வேளாண்மைத் துறையும் நீர்ப்பாசனத் துறையும் ஒன்றாக இணைந்து செயல்பட்டால் தான் விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியும், பாதுகாக்க முடியும். திட்டமிடுவதற்கு நன்றாக இருக்கும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

களம் பூராவும் இன்றைக்குப் போய்விட்டது. நெல் முளைத் துப்போய்விட்டது. எனக்கும் இன்னொரு விவசாயிக்கும், மழையினால் நெல் முளைத்துப்போய் விட்டது. சர்க்காரிலே வாங்கமாட்டேன் என்கிறார்கள், வேறு விற்க முடியவில்லை. அந்த விவசாயிகளுக்கு இந்த ஆண்டு மானிய விலையில் கடனாக ஒரு தார் படுதா கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தால் தான் இந்த மழைக் காலங்களில் நெல்லை காயவைக்க முடியும். அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1984 மார்ச் 21

கிழக்கு இராமநாதபுரத்திலே 1978—79இல் ஏற்பட்ட
கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட விளை நிலங்களுக்கு நட்ட ஈடு
3 இலட்சம் கொடுக்கப்பட்டது. ஆனால் அதில் இன்னும்
1 இலட்சத்து 30 ஆயிரம் கொடுக்கப்படவில்லை என்ற குறை
பாடு இருக்கிறது. அதைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க
வேண்டும். விவசாயிகளுக்கு குறுகிய கால விதைகள் அலுவலகத்
திலிருந்து கிடைக்கவில்லை. ஆர். எஸ். மங்கலம் யூனியனில்
வளனி என்ற கிராமத்திற்கு அனந்தூர் டெப்போவிலிருந்து
கொடுப்பதை மாற்றி அதற்கு மிக அருமகாமையில் உள்ள
திருவேகமுத்தூர் டெப்போவிலிருந்து கொடுப்பதற்கு நட
வடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய
உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு ரா. கு. பெருமாள் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தின் மீது எனக்குப்
பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு முதற்கண் என் நன்றியை
உரித்தாக்கி ஒரு சில கருத்துக்களைச் சுருக்கமாகக் கூற விழை
கிறேன்.

வேளாண்மைத் துறை மூலமாக தமிழக அரசு என்ன என்ன
சாதனைகளை செய்து வருகிறது என்பதை பற்றி நாம் விளக்க
மாக, விரிவாக பேச வேண்டும்என்றால் பல மணி நேரம்
அதற்கு ஆகலாம். எனக்கு முன்பு பேசிய சட்ட மன்ற உறுப்
பினர்கள் பலர் விரிவாக இங்கே பேசியிருக்கிறார்கள். குறிப்பாக
முதற்கண் இந்த மாத முதல் வாரத்திலே பெய்த கடும் மழையின்
வெள்ளத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட நெல்லை, முகவை,
மதுரை மாவட்ட மக்களை விவசாய பெருங்குடி மக்களை
பார்வையிடுவதற்காக தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்
தலைவர் அவர்களும் விவசாயத்துறை அமைச்சர் மாண்புமிகு
அண்ணன் காளிமுத்து அவர்களும் பாதிக்கப்பட்ட
மக்களுக்கு உடனடியாக நிவாரணம தருகின்ற வகையில் அங்கே
சுற்றிப் பார்த்து நிவாரண உதவி அளித்ததற்கு முதற்கண்
அந்த மாவட்ட மக்களின் சார்பாக நான் நன்றியை கூறிக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் பாதிக்கப்
பட்ட மக்களுக்கு திரும்ப என்ன என்ன நன்மைகள் செய்யலாம்
என்பதை கருத்தில் கொண்டு இங்கே வந்த உடனே
உத்தரவு ஒன்றைப் பிறப்பித்து 2-வது மகசூல் செய்கின்ற வகை
யில் நெல்லை மாவட்ட மக்களுக்கு இரண்டாவது போக
கார் காலம் விளைச்சலுக்கு அந்த நீரை பயன்படுத்துகின்ற
முறையில் 2-வது போக விளைச்சலுக்கு ஏற்பாடு செய்தமைக்காக
அந்த மாவட்ட மக்கள் சார்பாக நன்றி கூற கடமைப்பட்
டுள்ளேன்.



1984 மார்ச் 21] [திரு. ரா. கு. பெருமாள்]

அதைப் போல் சிறிய விவசாய பெருங்குடி மக்களுக்கு மானிய
மாக உரம், பூச்சி மருந்து, விதை வழங்கப்படுகிறது. நான்
நேற்றைய முன் தினம் அங்கே ஊருக்குச் சென்றபோது அந்த
விவசாய பண்ணை மூலமாக அங்கு பணி புரிகின்ற ஊழியர்கள்
இது பற்றி அங்கு சொல்லி அந்த கிராமத்தில் அவர்களே நேரடி
யாக. சர்டிபிகேட் வாங்கிக் கொடுத்து, அந்த சிறிய
விவசாயிகளுக்கு உரத்தையும் விதையையும் கொடுத்துச்
சென்றதைப் பார்க்கின்றபோது நான் உண்மையிலேயே அரசு
அதிகாரிகளை பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோன்று
பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் 3 மாவட்டங்கள் மாத்திரம்
அல்லாமல் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும்
செய்கின்ற நன்மைகளைப் பார்க்கிறபோது எந்த எந்த நேரத்தில்
என்ன என்ன உதவிகளைப் பயன்படுத்தவேண்டும் அப்படி பயன்
படுத்தி அந்த நிலங்களுக்கு என்ன என்ன விதைகள், உரங்கள்
போடவேண்டும் என்ற கருத்தை பயிற்சி வழி தொடர்பு திட்டம்
மூலமாக அங்கே செயல்பட்டு வருவதை நான் கண் கூடாக
பார்க்கிறபோது நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன்.
அதே நேரத்தில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை
செய்கின்ற பல திட்டங்கள் போட்டு இருந்தாலும விவசாய
விளைப் பொருட்களுக்கு நல்ல விலை இல்லை என்று ஒரு
கஷ்டமான சூழ்நிலை பொதுவாக விவசாய மக்கள் இடத்தில்
இருந்து வருவதை நான் இங்கே சுட்டிக்காட்ட வேண்டியவனாக
இருக்கிறேன்.

(பிற்பகல் 12-20)

காரணம், மற்றப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் இருக்
கிறது. நெல்லுக்குக் கூட குறிப்பிட்ட விலை நிர்ணயம் இருக்கிறது.
ஆனால் பருத்தி, மல்லி, மிளகாய் வத்தல் போன்ற பொருள்
களுக்கு விலை நிர்ணயம் இல்லாததால் அந்த விவசாயிகள்
பாதிக்கப்படுகிறார்கள். எனவே, அவைகளுக்கு விலை நிர்ண
யம் செய்ய வேண்டும். விவசாயத் துறை மூலமாக விளைகின்ற
பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வதற்கு அரசாங்கம் முன்
வர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரையில் விவசாயக் கல்லூரி இருக்கிறது. நெல்லை
மாவட்டத்தில் வளநாடு பக்கத்தில் பெரிய விவசாயப் பண்ணை
ஒன்று இருக்கிறது. எனவே, அங்கே விவசாயக் கல்லூரி ஒன்றை
ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களையும்,
மாண்புமிகு தமிழக முதல்வரவர்களையும் கேட்டுக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரைக்கும் நெல்லைக்கும் இடையில் மையமான இடமாக
இருக்கின்ற முகவை மாவட்டம் சாத்தூரில் ஒரு விவசாயப்
பண்ணை இருக்கிறது. அங்கே கால்நடை மருத்துவக் கல்லூரி
ஒன்றினை ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள்
ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்
பினைக் கொடுத்தமைக்காக மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி.
வணக்கம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு வேளாண்
மைத் துறை அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற
இந்த வேளாண்மை மானியக் கோரிக்கையில் நான் சார்ந்துள்ள
காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகச் சில
கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆண்டு ஏற்
பட்ட கடுமையான வறட்சியாலும், இந்த ஆண்டு ஏற்பட்ட
கடுமையான மழையினாலும் விவசாயிகள் எவ்வளவு தூரம் பாதிக்
கப்பட்டு இருக்கிறார்கள் என்பதனை மாண்புமிகு அமைச்சரவர்
கள் அறிவார்கள்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்
காக மாண்புமிகு முதல்வரவர்களும் மாண்புமிகு வேளாண்மைத்
துறை அமைச்சரவர்களும் நெல்லை மாவட்டத்திற்கு வருகை
தந்தபோது என்னுடைய தொகுதியான ஆலங்குளம் தொகுதிக்
கும் வருவார்கள் என்று எதிர்பார்த்து முன்கூட்டியே நான் அங்கே
சென்றிருந்தேன். ஆனால் அமைச்சரவர்கள், கிழக்குப் பகுதி
யில் திருச்செந்தூர் சேதங்களை மட்டும் பார்த்தார்களே தவிர
மேற்குப் பகுதியான தென்காசி பகுதி சேதத்தைப் பார்க்க
வில்லை.

இப்பொழுது அந்த அதிகாரிகள் வெள்ளச் சேதத்தை பார்வை
யிடுகின்ற பொழுது வெள்ளத்தால், மண்ணால் அடித்து மூடப்
பட்ட நிலத்திற்குத்தான் சலுகைகளைச் செய்ய முடியும்,
வெள்ளத்தினால் மூழ்கின பயிர்களுக்குச் சலுகைகளைச் செய்ய
முடியாது என்று சொல்வதாக நான் அறிகிறேன். அவ்வாறு
இல்லாமல், வெள்ளத்தால் மூழ்கிய பயிர்களுக்கும் சலுகைகளைச்
செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலத்திற்கு அழகு நெல்லும் கரும்பும், குளத்திற்கு அழகு
தாமரை; பெண்மை நலத்திற்கு அழகு நாணம் என்று சொல்லு
வார்கள். அப்படி நிலத்திற்கு அழகு நெல்லும் கரும்பும்
என்று சொல்லப்படுகிறது. ஆனால், அந்த நெல்லும், கரும்பும்
என்ன விலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது என்பதை நாம்
எண்ணிப் பார்க்க வேண்டும். முப்பது, முப்பந்தைந்து ஆண்டு



களுக்கு முன்னால் ஒரு மூட்டை நெல்லின் விலை 40 ரூபாய்;
அதே நேரத்தில் 50 கிராம் தங்கத்தையும் 40 ரூபாய்க்கு வாங்
லாம். இரண்டு மூட்டை நெல்லை விற்றால் ஒரு வண்டியை
வாங்க முடியும். ஆனால் இப்பொழுது அப்படிப்பட்ட நிலைமை
இல்லை. நெல்லுக்கு விலை மிகவும் குறைந்திருக்கிறது. விவ
சாயிகளுக்குக் கட்டுப்படியாகும் வகையில் நெல்லின் விலையை
உயர்த்த முடியாவிட்டாலும் கூட, அவர்களுக்கு ஆகின்ற உற்
பத்திச் செலவை. ஈடுபடுத்தியாக வேண்டும்.

பொதுவாக, பூச்சி மருந்து அடிக்கிறார்கள். பக்கத்து வயல்
களில் பூச்சி மருந்து அடிக்காவிட்டால் அதில் உள்ள பூச்சிகள்
மருந்து அடிக்கப்பட்ட வயல்களில் தொற்றிக் கொள்ளும்.
எனவே எல்லாயிடங்களுக்கும் பொதுவான முறையில், அரசாங்
கத்தின் மூலமே மருந்து அடித்தால் விவசாயிகளுக்கு உற்பத்திச்
செலவு குறையும். உரங்களைக் கூடுமானவரையில் மானிய
விலையில் கொடுக்க வேண்டும்.

இன்றைக்கு அடுப்பு எரிப்பதற்குப் பயன்படுகின்ற விறகு
கூட ஒரு டன் 500 ரூபாய்க்கு விற்கிறது. ஆனால் கரும்புக்கு
160 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். விறகின் விலையே 500
ரூபாயாக இருக்கின்றபொழுது, கரும்பின் விலையை 300 ரூபாய்
என்ற அளவிற்காவது உயர்த்த வேண்டும். அதற்கான முயற்சி
களை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீண்ட காலத்திற்குப் பலன்தருகின்ற பழ மரங்கள்,
தென்னை மரங்கள் போன்றவைகளுக்கு மழைக் காலத்திற்கு
முன் உதவி செய்ய வேண்டும். அப்பொழுது செய்தால்தான்
சேதாரம் இல்லாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தை எல்லாப் பகுதிகளுக்கும்
விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக் கொடுத்தமைக்கு
நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்
களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கை
யின் மீது நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.
விவசாயிகளைப் பொறுத்தவரையில் ஒரு முறை அவர்கள் பாதிக்
கப்பட்டு விட்டால், மீண்டும் அதைவிட்டு வெளியே வருவது
இயலாது என்ற அளவுக்கு மிகவும் சிரமமான ஒரு சூழ்நிலை
இருக்கின்றது. கடந்த இரண்டாண்டுக் காலமாக வறட்சியால்
மிகவும் பாதிக்கப்பட்டோம். இந்த ஆண்டு வெள்ளத்தால் பாதிக்
கப்பட்டு இப்படி பல வழிகளிலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு
துன்பப்பட்டு கொண்டிருக்கிறோம்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1984 மார்ச் 21

அரசுத் துறைகளில் நல்ல பல காரியங்களைச் செய்தாலும்
கூட தண்ணீரை வீணாகப் போக விடக்கூடாது என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன். பெருமழை பெய்து வெள்ளம் வந்து
குடிசைகளை எல்லாம் அழித்துக் கொண்டு போகின்றது.
நிலங்களில் எல்லாம் மண் மூடி விடுகின்றது. இந்த அளவுக்கு
மழை பெய்தும் கூட இன்னும் சில கண்மாய்களில் தண்ணீர்
திரப்பப்படவில்லை. இன்னும் சில கண்மாய்கள் எல்லாம் வறண்ட
பகுதிகளாக இருக்கின்றன. இதை எல்லாம் மாற்றியமைக்க
வேண்டும் என்றால் மதிப்பிற்குரிய விவசாயத் துறை அமைச்சர்
அவர்கள் இதிலே கவனம் செலுத்தி பி.டபிள்யு.டி. அதிகாரிகளை
யும், விவசாயத் துறை அதிகாரிகளையும் அழைத்து வைத்துப்
பேசி மழைக் காலங்களில் பெருக்கெடுத்து வரக்கூடிய தண்ணீரை
வீணாக்காமல் சின்னச் சின்ன அணைகளாகக் கட்டுகின்ற வகையில்
ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்காக ஒரு குழுவினை அமைத்
தால் கூட சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

முன்பு எங்கள் ஆட்சியின் போது அதாவது காங்கிரஸ்காரர்கள்
ஆட்சிக் காலத்தில் 1958-ம் ஆண்டு 98 ஆயிரம் ரூபாய் செலவு
செய்து சித்தயன் கோட்டைப் பகுதியில் ஒரு கால்வாய் வெட்டி
னோம். குடகனாற்றிலிருந்து தண்ணீர் விழுந்து கொண்டிருக்
கின்றது. அதிலே கால்வாய் வெட்டி அங்கே இருந்து தண்ணீரைக்
கொண்டு வந்து கண்மாய்களில் நிரப்ப வேண்டும் என்ற அந்த
அடிப்படையில் செய்யப்பட்ட திட்டம் அது. ஆனால் இதுவரை
யில் கடந்த 30,32 ஆண்டுக் காலமாக அந்தக் கால்வாய்க்குத்
தண்ணீர் வரவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால்
அதற்குத் தண்ணீர் வராமல் சில தனிப்பட்ட நபர்கள் தடுக்
கிறார்கள். தாமரைக் குளத்திலே விழுகின்ற தண்ணீர் அங்கே
இருந்து ஏந்தல் கண்மாய்க்கு வருகின்றது. ஏந்தல் கண்மாயி
லிருந்து செங்கட்டாம்பட்டி கண்மாய்க்குத் தண்ணீர் வர வேண்
டும். அப்படி வராமல் தடுக்கப்படுகின்ற காரணத்தால் ஏந்தல்
கண்மாயிலே விழுகின்ற தண்ணீர் மருதா நதியின் பகுதிகளாக
இருக்கின்ற தாமரைக்குளம், ரங்க சமுத்திரம். கருங்குளம்,
செட்டான் குளம் ஆகிய பகுதிகளுக்குப் போகின்றது. அப்படி
போவதன் காரணத்தால்தான் அந்தத் தண்ணீர் எல்லாம் பெரு
வெள்ளமாக வந்து விடுகின்றது. இப்படிப்பட்ட நிலைமை
காரணமாக நிலக்கோட்டை பகுதி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.
அப்படி வருகின்ற தண்ணீர் மீண்டும் வைகையிலே விழுந்து பெருத்த
சேதத்தை ஏற்படுத்துகின்றது. ஆகவே எங்கெங்கெல்லாம்
அப்படி தண்ணீர் பெருக்கெடுக்கின்ற நிலைமை இருக்கின்றதோ
அங்கங்கெல்லாம் சின்ன சின்ன செக்டாம்களாக ஏற்படுத்தி பெர்கு
லேஷன் பான்ட் என்ற வகையிலே நீரைத் தேக்குவதற்குரிய வழி
வகைகளைச் செய்தாக வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் ஏற்பாடு செய்தால் சாலச்சிறந்ததாக இருக்கும் என
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1948 மார்ச் 21] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

இந்தக் குடகனாறுத் தண்ணீர் வரவில்லை என்ற காரணத்
தால் பெருத்த பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. 18-ஆம் தேதி நான்
என்னுடைய தொகுதியில் சிலுக்குவார் பட்டியில் ஒரு விழாவிற்
காகச் சென்றிருந்தேன். அப்போது அந்த மக்கள் மிகவும்
கடுமையாகச் சத்தம் போட்டார்கள். அப்போது என்ன செய்வது
என்றே தெரியவில்லை இவ்வளவு மழை பெய்த காலத்திலே கூட
எங்களுடைய கண்மாய்க்குத் தண்ணீர் வரவில்லை என்றுசொல்லி
சத்தம் போட்டார்கள். இதிலே சர்வ கட்சிகளைச் சேர்ந்த
வர்களும் இருக்கிறார்கள். ஆளும் கட்சியினைச் சேர்ந்தவர்
களே அதிலே தலைமை ஏற்று போராட்டம் நடத்துவதற்குத்
தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள்.
ஆகவே அவர்களை கோயிலுக்கு அழைத்துச் சென்று சர்ச்சிலே
உள்ள சாமியார்கள் மூலம் 'பொறுத்துக் கொள்ளுங்கள், மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்கள், இன்னும் 10
நாட்கள் பொறுத்துக் கொள்ளுங்கள்' என்று சமாதானப் படுத்தி
னோம். அப்படிச் சொன்னதற்குப் பிறகு 31 ஆம் தேதிக்குள்
ளாக நடவடிக்கை எடுக்காவிட்டால் நாங்கள் போராட்டம்
நடத்துவோம் என்று சொல்லி மகஜர் அனுப்பி இருக்கிறார்கள்.
ஆகவே இப்படி எங்கெங்கே தண்ணீரைத் தேக்கி வைக்க
முடியுமோ அங்கெல்லாம் தண்ணீரைத் தேக்கி வைக்கக் கூடிய
அளவில் வழிவகைகளைச் செய்தாக வேண்டும்.

அடுத்து இன்றைக்கு நிறைய புறம்போக்கு பகுதிகளும், காடு
களும் பாசன வசதியற்ற நிலைமையில் இருக்கின்றன. இது
பற்றி நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். அந்தப் பகுதி
களில் எல்லாம் 50 ஏக்கருக்கு ஒன்று, 30 ஏக்கருக்கு ஒன்று 20
ஏக்கருக்கு ஒன்று என்று பரவலாக பெரிய ராட்சஸக் கிணறு
களை ஏற்படுத்த வேண்டும். இது விவசாயம் சமபந்தப்பட்ட
காரியமாக இருப்பதால் விவசாயத் துறைதான் இதைச் செய்ய
வேண்டும். அவ்வாறு கிணறுகளைப் போட்டு அதிலே பம்ப் செட்
பொருத்தி விவசாயிகளுக்குப் பயன்படுகின்ற அளவிலே ஏற்பாடு
களைச் செய்ய வேண்டும். அப்படி பாசன வசதியை ஏற்படுத்திக்
கொடுத்து வாட்டர் செஸ் என்ற வகையிலே அவர்களிடத்தில்
இருந்து தண்ணீர் தீர்வையை வசூல் செய்தால் கூட பரவா
யில்லை. இப்படிப்பட்ட காரியங்களைச் செய்தால் சும்மா
இருக்கக் கூடிய பல பகுதிகள் பாசன வசதி பெறக்கூடிய நிலைமை
ஏற்பட்டு சிறுதானியங்களை அதிகமான அளவிலே உற்பத்தி
செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைக்கு பருப்பு
போன்றவற்றின் விலை 10 ரூபாய் என்ற அளவிலே இருக்கின்றது.
இப்படிப்பட்ட அளவில் விலைகள் எல்லாம் உயர்ந்திருக்கின்ற
நிலைமையில் பாசன ஏற்பாடுகளைச் செய்தால் உற்பத்தியினைப்
பெருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1984 மார்ச் 21

அடுத்து இன்றைக்கு சாயில் கன்சர்வேஷன் என்ற முறையில் பல இடங்களில் கசிவுநீர் குட்டைகள் அமைக்கிறார்கள். அதை மிகப் பிரமாதமாகச் செய்கிறார்கள். ஆகவே அதை மேலும் விரிவுப்படுத்தி எங்கெங்கே கசிவுநீர்க்குட்டைகளை அமைக்க வேண்டுமோ அங்கெல்லாம் அமைத்து தண்ணீர்த் தேக்கத்தை ஏற்படுத்தினால் பக்கத்திலே இருக்கக்கூடிய குளங்களிலும், கிணறுகளிலும் தண்ணீர் கிடைக்கின்ற நிலைமை ஏற்படும். அந்த அளவுக்கு இதைச் செய்தால் அது இன்னும் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு உரத்தின் விலை மிகவும் அதிகமாக ஏறிக்கொண்டே போகின்றது. நாளுக்கு நாள் விஷம் போல் ஏறிக்கொண்டு போகின்றது. ஆகவே விவசாயிகளால் இரசாயன உரத்தை வாங்கிப் போட முடியவில்லை. ஆகவே மீண்டும் கம்போஸ்ட் உரம் தயாரிக்கின்ற திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் அதிலே கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12—30)

அது மாத்திரம் இல்லாமல் இன்றைக்கு மனிதர்களுடைய கழிவுப் பொருள்களை எல்லாம் உபயோகப்படுத்துவதே இல்லை. நம்முடைய அமைச்சர் அவர்கள் கொடுத்த புத்தகங்களில் மனித கழிவுப் பொருள்களை உரமாக ஆக்குவதற்காக வழிவகை செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கெல்லாம் பஞ்சாயத்துகளிலே, பெரிய, பெரிய ஊர்கள் இருக்கின்றனவோ, அங்கேயெல்லாம் மனித கழிவுகளை உரமாக ஆக்க வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்து விதைகள். நல்ல விதைகளை நாம் கேட்கிறோம். நாம் கொடுத்தாலும்கூட உண்மையிலே சாதாரணமாக, சிறு விவசாயிகள், மிகச் சிறிய விவசாயிகள் என்ற அளவிலே செய்து கொண்டிருக்கிறோம். வேண்டாம் என்று சொல்லவில்லை, சிறிய விவசாயிகளுக்கு நாம் கண்டிப்பாக கொடுக்கவேண்டும். 50 சென்ட் வைத்திருக்கிற ஒரு விவசாயிக்குக் கடலை வித்து கொடுப்போமானால் அவர்கள் விவசாயம் செய்வதில்லை. அவர்களுடைய பெயரால் யாரோ வாங்கிக் கொண்டு போய் எங்கோ கடையில் விற்று அந்த வித்தை மீண்டும் விவசாயிகளுக்கு அதிக விலைக்குக் கொடுக்கக்கூடிய நிலையிருக்கிறது. இதிலே கவனம் செலுத்த அமைச்சர் அவர்கள் முயற்சி செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும்.



1984 மார்ச் 21] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

அது மாத்திரம் இல்லாமல் நமக்கு நிறைய இளம் தென்னங் கன்றுகளைக் கொடுத்திருக்கிறார்கள். 36 இலட்சம் கன்றுகளைக் கொடுத்திருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். நான் பாராட்டுகிறேன். எனறாலும்கூட, அவை எல்லா பகுதிகளுக்கும் போய் சேர்ந்ததா இல்லையா என்பது சரியாகத் தெயரிவில்லை. ரூ. 4 என்ற அளவில் முதலில் கொடுத்தார்கள். பிறகுகடைசி நேரத்திலே ரூ. 1 என்று சொன்னார்கள். இதையெல்லாம் சற்று பரிசீலனை செய்து, சாதாரண விவசாயிகளுக்குப் போய்ச் சேருகிறதா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்று கவனம் செலுத்தினால் அது இன்னும் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு வீட்டுக்கும் பயிற்சி வழித் திட்டத்தின் மூலம் சிலருக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்காக, சிலரை நியமிக்கிறோம். பல இடங்களில் சிறிய வயதுள்ள இளைஞர்கள், தம்பிகள் வீட்டுக்கு வீடு சென்று கேட்கிறார்கள். அதிலே ஏதாவது தவறு இருந்தால் திருத்திக் கொள்ளலாம். வீடு, வீடாக வந்து கேட்டு, உங்கள் நிலத்திலே என்ன, என்ன போடலாம், நோய் வந்தால் அதைத் தடுக்க என்ன, என்ன மருத்தைப் போடலாம் எனறு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதையும் சற்றுத் தீவிரப்படுத்த வேண்டும்.

தென்னங்கன்று, பப்பாளி, வாழை, முருங்கை ஆகியவை கண்டிப்பாக ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டும். அதை எந்த, எந்த யூனியன் செய்கிறதோ, அந்த அந்த யூனியனுக்குப் பரிசு கொடுக்கலாம். பட்டிக்காட்டிலே கூட, தேங்காய் இல்லாமல் குழம்பு வைப்பதில்லை. பட்டிக்காட்டிலே கூட, தேங்காய் துண்டு போட்டு விற்கிறார்கள். ஒரு தேங்காய் விலை ரூ. 5. ஆகவே, ஒவ்வொருவருக்கும் ஒரு தென்னங் கன்று, ஒரு வாழை, ஒரு பப்பாளி, ஒரு முருங்கை நாம் இனாமாகக் கொடுத்தால், அந்த யூனியனிலே யார் முனைப்பாகச் செய்கிறார்களோ, அவர்களுக்குப் பரிசு கொடுக்கும் திட்டத்தைக் கொடுக்கலாம். அந்த நிலையை ஏற்படுத்தினால் அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதைப்போல கருவிகள் உண்மையிலே விவசாயிகளுக்கு அதிக அளவில் தேவைப்படுகின்றன. 5, 6 ஏர்கள் உழ வேண்டுமென்றால் ஆட்கள் வரமாட்டேன் என்கிறார்கள். அங்கேகூட மணிக் கணக்கு வந்துவிட்டது. மணிக் கணக்கு வரட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. 8 மணிக்கு வந்து 1 மணிக்குள்ளாக ஏரை அவிழ்த்துவிட்டு வீட்டுக்கு வந்து விடுகிறார்கள். ஆகவே, ஒன்றுமே செய்ய

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1984 மார்ச் 21

முடியாத நிலைமையில் ஏழை, சாதாரண விவசாயி,
சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்று பார்க்காமல்
அவர்களுக்கு வேண்டிய கருவிகளை நாம் தாராளமாகக்
கொடுப்பதற்கு வழிவகை செய்வது விவசாயிகளுக்குச் சாலச்
சிறந்ததாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான்
கூறிக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், உழவுக் கருவிக்கு
ரூ. 30,000 என்று போடப்பட்டிருக்கிறது. உண்மையில்
மிக்சுபி 10½ எச். பி. விலை ரூ. 30,000. உழவுக் கருவி
விவசாயி அதை வாங்கி அனுபவிக்க முடியவில்லை. சாதாரண நடுத்தர
வாகப் பார்ப்போமானால் ரூ. 10,000 வெளியிலே கிடைப்பது. பொது
இங்கே ரூ 30,000 என்றால், அதை சுலபமாக விவசாயி வாங்கி
அனுபவிக்க முடியும் என்பதையும் இந்த நேரத்திலே அமைச்
சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.
ஆகவே, ரூ. 10,000 என்ற அளவில் இந்த உழவுக் கருவி
கொடுக்க வேண்டுமென்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு விவசாயிகளுக்கு வேண்டிய டிராக்டர்கள்—
காங்கிரஸ்காரர்கள் காலத்தில், ஏன் கடந்த ஆண்டுகளில்
கூட—நிறைய டிராக்டர்கள் எப்படியெல்லாம் இருந்தன?
இப்பொழுது பல இலட்சக்கணக்கான ரூபாய்களில் வாங்கிய
அந்த டிராக்டர்கள் எந்தவிதமான பயனும் இல்லாத
நிலைமையில் ஒரு யூனியனிலும் கூட டிராக்டர்கள்
இல்லை. அவை பழுதடைந்துபோய் ஒன்றுமே இல்லாமல்
விவசாயிகளுக்குப் பயன்படமுடியாத நிலைமை இருக்கிறது.
ஆகவே, டிராக்டர்கள், கடப்பாறைகள், மண் வெட்டிகள்,
கலப்பைகள் ஆகியவை நாம் விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு
வழிவகை செய்யவேண்டும். அவற்றை ரிப்பேர் செய்வதற்கு
ஒரு ஜில்லாவில் ஒரு நிலையம்தான் இருக்கின்றது. இதை மாற்றி
டிவிஷனுக்கு ஒரு நிலையமாக, மராமத்து வேலைகளை
பார்ப்பதற்கென்று வைத்து யூனியன் வாரியாக இந்தக் கருவிகளைச்
செய்வதற்கு நாம் வழிவகை செய்து கொடுத்தால் விவசாயி
களுக்குச் சாலச் சிறந்ததாக இருக்குமென்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக யூனியன் வாரியாக
தொழில் கூடங்களை அமைக்க வேண்டும். விவசாயிகளுக்கு
கூடங்களை அமைத்து விவசாயிகளுக்கு அந்தத் தொழில்
செய்தால் சாலச்சிறந்ததாக இருக்கும். தக்க வழிவகைகளை

அடுத்தபடியாக, இப்போது நாம் டீசல் என்ஜின் கொடுக்
கிறோம். 20 ஆயிரம் டீசல் என்ஜின் என்று இதில் சொல்லி
யிருக்கிறது. வெளியிலே வாங்குகிற டீசல் என்ஜின் 6,000
ரூபாயிலிருந்து 7,500 ரூபாய்க்குள் இருக்கிறது. ஆனால்
நாம் கொடுப்பதோ 10,000 ரூபாய். நாம் இலாக்காவில்



1984 மார்ச் 21] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

கொடுப்பது மார்க்கெட் விலையைவிட. விலை அதிகமாக
இருக்கிறது. இப்படி அதிக விலையாக இருப்பதால் விவசாயி
கள் யாரும் இங்கே வந்து வாங்குவதற்கு தயாராக இல்லை.
ஆகவே மார்க்கெட் விலையில் டீசல் என்ஜினை கொடுப்பதற்
குச் செய்தால் வசதியாக இருக்கும் என்று கூறிக்கொள்ள
விரும்புகிறேன். விவசாயிகளுக்கு முன்பு நாம் தக்காவி
லோன் கொடுத்தோம். அதை அவர்கள் சுலபமாக வாங்க
முடிந்தது. ஆனால், இன்றைக்கு எந்த லோனாக இருந்
தாலும் பாங்க் மூலம் தான் வழங்கப்படுகிறது. உழவு
கருவிகள், மாடுகள், பம்ப் செட்டுகள் எதுவாக இருந்தாலும்
லோன் பாங்க் மூலம் தான் வழங்கப்படுகிறது. அப்படி
வழங்கும்போது மூன்று மாதத்திற்கு ஒருமுறை அசலை
அல்லது வட்டியைக் கட்ட வேண்டும். விவசாயிகளுக்கு இது
தெரிவதில்லை. அவர்களுக்கு நிலையான வருமானம் இல்லை.
ஆண்டிற்கு ஒருமுறை கடனை கட்டத்தான் அவர்களுக்கு
தெரியும். அவர்கள் பாங்கில் 3 மாதத்திற்கு ஒருமுறை
கட்டாவிட்டால் கெந்து வட்டியைப் போல வட்டிக்கு வட்டி
போட்டு விடுகிறார்கள். 5,000 ரூபாய் கடன் வாங்கி
யிருந்தால் 5 ஆண்டுகளில் அது 10,000 ரூபாயாக உயர்ந்து
விடுகிறது. ஆகவே பழையபடி தக்காவி லோன் கொடுப்
பதற்கு வழிவகை செய்யமுடியுமா என்பதை அமைச்சர்
அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து இப்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பூச்சி
மருந்துகளைக் கொடுக்கிறோம். இதுகுறித்து நானும் பல
முறை சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களும்
சொல்லி இருக்கிறார்கள். எங்காவது 10 ஏக்கர் நெல்
சாகுபடியில் புகையான் பிடித்துவிட்டால் நம்முடைய
விவசாய இலாக்கா அவர்களைக் கேட்காமலேயே மருந்து அடிக்க
வேண்டும். அப்படி செய்துவிட்டு பணத்தை வசூல் செய்கிற
போது உங்களுடைய நிலத்திலே மருந்து அடிக்கப்பட்டது;
அதற்கு பணம் கொடுங்கள் என்று கேட்கலாம். அதில்
முக்கியமாக இருப்பதென்னவென்றால் நல்ல தரமான
மருந்தாக அடிக்கவேண்டும். ஒரு இடத்தில் பயிர் சீக்காகி
மருந்தடித்ததில் தரமான மருந்துகளை அடிக்கவில்லையென்று
விவசாயிகள் சொல்கிறார்கள். ஏன் ஒரு திறமையான
அமைச்சர் அவர்கள் இருக்கிறபோது தரமில்லாத மருந்தை
அடிக்கவேண்டும்? இலாக்காவிலே திறமையானவர்கள் இருக்
கிறபோது ஏன் தரமில்லாத மருந்துகளை அடிக்க வேண்டும்?
தரமான மருந்தாக அடித்து அதற்கான காசை அவர்களிடம்
கொஞ்சம் கொஞ்சமாகக் கேட்டால் அவர்கள் நிச்சயமாகக்
கொடுப்பார்கள்.

அடுத்து, பலமுறை நான் அமைச்சர் அவர்களிடத்தில்
சொல்லி இருக்கிறேன். விவசாயிகள் உற்பத்தி பண்ணு
கிற பொருள்கள், கமர்ஷியல் பயிர்கள், கடலை, கரும்பு,
திராட்சை போன்ற பணப் பயிர்கள் விவசாயத்தில் சங்கடங்கள்
இருக்கின்றன. நானே ஒரு விவசாயி. கடந்த டிசம்பர்
மாதத்தில் பெய்த மழையில் பாதிக்கப்பட்டிருக்கிறேன்.
திராட்சைப் பழங்கள் அறுந்து உடைந்து விட்டன.
கிலோ 4¼ ரூபாய் கேட்டபோது அவர்களுக்கு கொடுக்க
வில்லை; ஆனால் பின்னால் நானே வலிய போய் எட்டனா
விற்கு எடுத்துக்கொள்ள சொல்ல வேண்டியிருந்தது. அதைப்
போல இப்போது பெய்த மழையில் கருகல் நோய் வந்து
அவைகள் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே
பழ பக்குவப்படுத்துகிற தொழிற்சாலையை ஆரம்பித்து உதவி
னால் அது மிகவும் சாலச்சிறந்ததாக இருக்குமென்று தெரிவித்
துக் கொள்கிறேன். பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர்
அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்
சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற வேளாண்மை
மானியக் கோரிக்கைமீது பேசுகிற நல்ல வாய்ப்பை அளித்த
மைக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்
பட்டிருக்கிறேன்.

" சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை ".

என்று வள்ளுவர் பெருந்தகை சொன்னார். உலகத்திலே விவ
சாயிகள் தான் முதுகெலும்பைப் போன்றவர்கள். விவசாயம்
வளர்ச்சி பெற்றால் தான் நாட்டினுடைய பொருளாதாரம்
முன்னேற முடியும் என்பதை நாம் அனைவரும் நன்றாக அறி
வோம். தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற மாண்பு
மிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு விவசாய மேம்பாட்டிற்
காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறது.

(பிற்பகல் 12-40)

நிலமேம்பாட்டுத் திட்டம், சிறுபாசனத் திட்டம், மண் மற்றும்
நீர்வளப் பாதுகாப்புத் திட்டம், பாசனப் பகுதி மேம்பாட்டுத்
திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் எந்த அளவிற்கு விவசாயத்
தைப் பெருக்க முடியுமோ அந்த அளவிற்கு செய்து, எந்த அள
விற்கு உற்பத்தியைப் பெருக்க முடியுமோ அந்த அளவிற்கு பல்
வேறு திட்டங்களைத் தீட்டி இந்த அரசு செயலாற்றி வருகிறது
என்பதற்காக என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
இருந்தாலும், இயற்கையின் கொடுமையால் இந்த ஆண்டு
எவ்வளவு பாதிப்பு ஏற்பட்டது என்பதை எனக்கு முன்னாலே,





பேசிய உறுப்பினர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். கடந்த ஆண்டு கடுமையான வறட்சியால் தமிழ்நாடு எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டது என்பதை நாம் அறிவோம். ஆகவே வறட்சியாலும், வெள்ளத்தாலும், இந்த மாநிலம் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு இருந்தபோதிலும், தமிழ்நாடு வேளாண்மைத் துறை சிறந்த முறையில் பணியாற்றி எந்த அளவிற்கு உற்பத்தியை ஈடு செய்ய முடியுமோ அந்த அளவிற்கு ஈடு செய்து இருக்கிறது என்பதற்காக என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதைக் கூட எதிர்க் கட்சிக்காரர்கள் அரசியலாக்கப் பார்க்கிறார்கள். நாட்டு மக்களுக்கு எதுயெது தேவையோ அதைப் பார்த்து நாங்கள் செயல்பட்டுக் கொண்டு வருகிறோம். இன்றைக்கு நம்முடைய தேவைக்கேற்ப உற்பத்தியைப் பெருக்க பல்வேறு திட்டங்களை நாம் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

பருத்தியைப் பொறுத்த வரையில் நாம் நம்முடைய தேவைக்கு ஏற்ப தன்னிறைவு பெறவில்லை. ஆகவே, அதிலே உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பயிறு வகைகளைப் பொறுத்த வரையில் நமக்குத் தேவை 9 இலட்சம் டன், ஆனால் நாம் உற்பத்தி செய்வது 3.25 இலட்சம் டன்தான். இதிலேயும் தன்னிறைவு பெறுகிற வகையில் கவனம் செலுத்த வேண்டும் எனறு கேட்டுக் கொள்கிறேன்.

வீடுகளில் தோட்டம் அமைப்பது பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது. சென்னை மாநகர், மதுரை, திருச்சி போன்ற பகுதிகளில் வீடுகளில் தோட்டங்கள் வைப்பதற்காக வீடு வீடாகச் சென்று நல்ல ஆலோசனை தருவதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. கிராமத்தில் செய்வது போல் நகரங்களிலும் இந்த காய்கறித் தோட்டங்களை வீடுகளில் வைத்தால் நல்ல முறையில் காய்கறிகள் கிடைக்கும். அவற்றின் உற்பத்தியும் அதிகரிக்கும். ஆனால் நகரங்களில் ஆடம்பரச் செடிகளை வைக்கிறார்களே தவிர, குரோட்டன்ஸ் போன்ற செடிகளை வைக்கிறார்களே தவிர, காய்கறிச் செடிகளைப் போடும் பழக்கம் இல்லை. இப்படி அவர்கள் தோட்டங்களிலும் காய்கறிச் செடிகளைப் போட்டு பயிரிட்டால் அவற்றின் விலையும் குறையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் அதிகமான வாழை பயிரிட்டு இருக்கிறார்கள். அவற்றிற்கு முடிக்கொத்து நோய் வந்து மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. சில இடங்களில் முழுமையாக அழிந்து விட்டது. பெரும் அளவில் வருமானம் தந்து கொண்

டிருந்த வாழை இன்றைக்குப் பெரும் பாதிப்பை விவசாயிகளுக்கு
ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, அந்த நோயைத் தடுக்கும் நட
வடிக்கைகளை அரசு தற்போது மேற்கொண்டு வந்த போதிலும்,
இன்னும் முனைப்பாக செயலாற்றி அந்தப் பகுதியில் உள்ள
வாழை உற்பத்தி செய்யும் விவசாயிகளின் குறைகளைப் போக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு தென்னைக்கு வாடை நோய் வந்திருக்கிறது.
அதன் காரணமாக தேங்காய் உற்பத்தி குறைந்து, தேங்காய்
விலை ஏறிவிட்டது. தென்னையைத் தாக்கும் காண்டாமிருக
வண்டினை அழிக்கும் புதிய பூஞ்சனமான மெட்டரைசியம்
எனும் நுண்ணுயிரியை உற்பத்தி செய்யும் திட்டம் தொடங்கப்
பட்டுள்ளது. அதற்காக நான் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

என்னுடைய அய்யம்பாளையத்தில் தென்னை நாற்றுப்
பண்ணை ஒன்றை அமைப்பதாகச் சென்ற ஆண்டுக்கு முந்தைய
ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவித்து இருந்தார்கள்.
அந்தப் பண்ணை இன்னும் துவங்கப்படவில்லை. அந்தத்
தென்னை நாற்றுப் பண்ணையை விரைவில் ஆரம்பித்துத் தர
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசைப் 'பொறுத்தவரையில் நிலமற்ற ஏழை விவ
சாயிகளுக்கு பலன் அளிக்கின்ற வகையில் கிராமங்களில் நில
மற்றோர் வேலை வாய்ப்பு.உத்தரவாதத் திட்டத்தைக் கொண்டு
வந்து இருக்கிறார்கள். இதன் மூலம் ஒவ்வொரு நிலமற்ற குடும்
பத்தினருக்கும் ஆண்டுக்கு 100 நாட்களுக்காவது வேலை வழங்
கிடும் வண்ணம் வேலை வாய்ப்புக்கள் உருவாக்கவும், பெருக்கவும்
திட்டமிடப்பட்டுள்ளதை வரவேற்கிறேன். ஊரகப் பொருளா
தார நிலையை விரைந்து பெருக்கிட நிரந்தரமான உபயோக
முள்ள சொத்துக்களையும், கட்டுமானங்களையும் உருவாக்கு
வதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட நல்ல பல
திட்டங்களைக் கொண்டு வந்துள்ள மாண்புமிகு தமிழக முதல்
அமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு என்
னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் பற்றி ஒரு வார்த்
தையைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஒழுங்குமுறை
விற்பனைக் கூடம் நல்ல முறையில் செயல்படுகிறது. இருந்த
போதிலும் அதிலே இடைத் தரகர்கள் இருந்துகொண்டு
விவசாயிகளுக்குக் கிடைக்கக் கூடிய வருமானத்தை அட்டையைப்
போல இருந்து உறிஞ்சிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம்
பார்க்கிறோம். இன்றைக்கு திருப்பூர், உடுமலைப்பேட்டை,
ஈரோடு, விழுப்புரம், திண்டுக்கல், தேனி போன்ற இடங்களில்
தரகு மண்டிகளை வைத்துக் கொண்டு விவசாயிகள் உற்பத்தி
செய்கின்ற பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கிக் கொண்டு,





அவர்களை எல்லாம் கொத்தடிமைகள் போல நடத்திக் கொண்
டிருக்கிறார்கள் என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.
விவசாயிகள் தங்களுக்குப் பணம் 'தேவைப்படும்போது இந்த
இடைத் தரகர்களிடம் போகிறார்கள். அவர்கள் அப்போது
அவர்களுடைய தேவைக்கு ஐந்தோ, பத்தோ கொடுத்து விட்டு,
பின்னால அவர்களைக் கொத்தடிமைகள் ஆக்குகிறார்கள். அவர்
கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை எல்லாம் அந்தத்
தரகு மண்டிகளுக்குத்தான் கொடுக்க வேண்டிய நிலைமையை
உருவாக்குகிறார்கள். தரகு மண்டியிலே அவர்கள் என்ன விலை
கொடுக்கிறார்களோ அந்த விவசாயிகள் பெற்றுக் கொண்டு வரு
கின்ற கொத்தடிமைகளாக இருக்கிறார்கள். இந்த நிலைமையை
மாற்றியமைக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்காக உலக வங்கியிடம் கடன் கேட்டிருப்பதாக இங்கே
சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கடனை விரைந்து பெற்று,
இடைத் தரகர்கள் விவசாயிகளைக் கொத்தடிமையாக்குகின்ற
சூழ்நிலையைப் போக்க வேண்டும். அதற்கேற்ற சூழ்நிலையை
உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொளகிறேன்.

இந்த ஆண்டு கடுமையான வறட்சியும், வெள்ளமும் ஏற்பட்ட
போதிலும் விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தியைப் பெருக்கி
யிருக்கிறார்கள். அதனால்தான் இந்த அளவுக்கு வறட்சியும்
வெள்ளமும் ஏற்பட்ட போதிலும் 50 இலட்சம் மெட்ரிக் டன்
நெல்லும், 19 இலட்சம் மெட்ரிக் டன் சிறு தானியங்களும்,
3 இலட்சம் மெட்ரிக் டன் பயிறு வகைகளும், 25 இலட்சம் மெட்
ரிக் டன் கரும்பும் (வெல்லம்), 3 இலட்சம் பேல்கள் பருத்தியும்
நம்மால் உற்பத்தி செய்ய முடிந்தது என்பதைத் தெரிவித்து,
அதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பாராட்டி எனக்குப்
பேச வாய்ப்பு கிடைத்ததற்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்
கிறேன். வணக்கம்.

*திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு மாற்றுத்
தலைவரவர்களே, இன்றையதினம் மாண்புமிகு வேளாண்மைத்
துறை அமைச்சர் அவர்களால் அவையில் வைக்கப்பட்டிருக்கிற
மானியக் கோரிக்கைகள்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை
ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற ஆசைப்
படுகிறேன்.

இன்றையதினம் நாம் எல்லாம் விவசாயிகளைப்பற்றி பெருமை
யாகப் பேசுகிறோம்.

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்-வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்''

என்று சிறப்போடு பாராட்டப்பட வேண்டிய விவசாயிகள் இந்த
ஆண்டு எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளானார்கள் என்பதை
மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவார்கள்; இந்த மா
மன்ற உறுப்பினர்களும் அறிவார்கள். இன்றைய தினம்
அவர்கள் பட்டிருக்கிற தொல்லைகளிலிருந்து, அவர்களுக்கு ஏற்
பட்டிருக்கிற இழப்பிலிருந்து அவர்கள் விடுபட வேண்டுமென்றால்
இன்னும் ஐந்தாண்டுக் காலம் ஆகும என்பதை நாம் நினைவில்
வைத்துக்கொள்ள வேண்டும.

'' பட்ட காலிலே படும்

கெட்ட குடியே கெடும் ''

என்பார்கள். அதைப்போன்று ஆரம்பத்தில் வறட்சி; அதன்
பிறகு '' வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது '' போல பெரு
வெள்ளம். இந்த இரண்டினாலும் தஞ்சை மாவட்ட விவசாயம்
முழுமையாக அழிந்துவிட்டது மட்டுமல்ல; தமிழ்நாடு பூராவும்
விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அறுவடைக்கு
தயாராக இருந்த நெற்பயிர் அத்தனையும இன்றையதினம்
தஞ்சை மாவட்டத்தில் அழிந்துள்ளது. அறுத்து வீட்டுக்குக்
கொண்டு செல்லலாம் என்று நினைத்து விவசாயிகள் அறுத்து
வயலிலே வைத்த நெற்கதிர்கள் எல்லாம் மழை நீரினால் அழுகி,
அத்தனையும் பாழாகி விட்டதை நாம் கண்டோம். வைக்சோல்
முழுவதும அழிந்து, இந்த ஆண்டு மாட்டுக்கு வைக்கோல் இல்லை;
வேறு மாவட்டங்களிலிருந்துதான் தஞ்சை மாவட்டத்திற்கு வைக்
கோல் கொண்டுவரவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. பயிறு, உளுந்து, கடலை போன்ற பயிர்கள்
எல்லாம் இரண்டு முறை விதைத்தும், அத்தனையும் பாழாகி
விட்டன. அடுத்த ஆண்டு விதைக்குக் கூட கடலை, உழுந்து,
பயிறு வகைகள் இல்லை. இந்த நிலை இன்றைக்கு தஞ்சை
மாவட்டத்தில் மட்டுமல்ல; தமிழ்நாடு பூராவும் ஏற்பட்டிருக்
கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்
களும் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, பாதிக்கப்பட்ட அத்
தனை பேர்களுக்கும் நிவாரணம் அளிக்கின்றவகையில் தேவை
யானவற்றைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஏதோ பழைய
கால வரலாறுகளை எல்லாம் பேசுகிறார்கள். ஏதோ தி.மு.க.
ஆட்சிக்காலத்தில் ஏதோ நடந்துவிட்டது என்று சொல்கிறார்
கள். நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகம்
ஒரு பற்றாக்குறை மாநிலமாக காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில்
இருந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் தமிழகம்
உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாநிலமாகத் திகழ்ந்தது





என்பதை யாரும மறந்துவிட முடியாது. அது மட்டுமல்ல. நம்
முடைய மாநிலத்திற்குப் போக, வெளி மாநிலங்களுக்குக் கூட
அனுப்பியிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்
தான் அரிசியை ஏலம் போட்டு விற்றிருக்கிறோம். தயவுசெய்து,
அதை மறந்துவிட்டுப் பேசாதீர்கள். அதை எல்லாம் மறந்துவிட்டு,
ஏதோ விவசாயிகளுக்குக் கொடுமை இழைக்கப்பட்டதுபோல பேசு
கின்றீர்கள். உங்கள் ஆட்சிக் காலத்தில்தானே மதுரை மாவட்
டத்தில் ஒட்டன்சத்திரத்தில் நடைபெற்றது என்று நினைக்கி
றேன், விவசாயச் சங்கத்தினால் கட்டப்பட்ட சுமார் 5 இலட்சம்
ரூபாய் மதிப்புள்ள அழகான கட்டிடத்தை புல்டோசரை வைத்
துக்கொண்டு, அடித்து நொறுக்கி தரைமட்டமாக்கினீர்கள். நீங்
கள் அந்தக் கட்டிடத்தை தரைமட்டமாக்கவில்லையா? அதை

(பிற்பகல் 12—50)

நீங்கள் மறந்துவிட்டீர்களா? அதோடு மட்டுமல்லாமல், திருச்
சிக்கு ஊர்வலமாக வந்தார்களே, விவசாயிகள், பச்சைத் துண்டு
போட்டுக்கொண்டு அவர்கள் அத்தனை பேரையும் காவல்துறை
யினர் அடித்து நொறுக்கவில்லையா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவை
மாற்றுத் தலைவர் அவர்களே, வழங்கப்பட்டிருக்கின்ற கொள்கைக்
குறிப்பின் அடிப்படையில் மிகவும் அதிசமாக பாதிக்கப்பட்டிருக்
கிற, மாண்புமிகு உறுப்பினர் இராசமாணிக்கம் எடுத்துச் சொன்ன
தைப்போல், தஞ்சை மாவட்டத்தில், அதற்குரிய நிவாரண நட
வடிக்கைகளைப் பற்றி அவர்கள் எப்படி அறிவுரை சொல்கிறார்
களோ, அதுபோல் பேசுவது நல்லது. அதை விட்டுவிட்டு, அர
சியல் அரங்கத்திலே கருத்துக்களை இங்கே முன் வைக்க ஆரம்
பித்தால், இந்தப் பிரச்சினையை திசை திருப்புவதாகும். அவர்
மேற்கொண்டிருக்கின்ற நோக்கத்திற்குக் கூட இது ஒத்துவராது.

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** நான் பேசவேண்டாம் என்று தான்
இருந்தேன். அவர் பேசியதால், ஒரு சில வார்த்தைகள் சொன்
னேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், விவசாயி
களுக்கு, மேட்டூர் அணையிலிருந்து ஜூன் மாதம் 12 ஆம் தேதி
தண்ணீர் திறந்து விடுவது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு
ஜூன் மாதத்திலேயும் திறக்கவில்லை, ஜூலையிலேயும் திறக்க
வில்லை. ஆகஸ்ட் மாதம் 17 ஆம் தேதி மேட்டூர் அணையும்,
22 ஆம் தேதி கல்லணையும் திறக்கப்பட்டது. இப்படி இரண்டு
மாத காலம் தாமதமாக திறக்கப்பட்டதால், ஆரம்பத்தில் விவ
சாயிகள் அதிகமான அளவில் பாதிக்கப்பட்டார்கள். அதற்குக்
காரணம் என்ன? மேட்டூரில் தண்ணீர் இல்லை என்று சொல்
கிறார்கள். கர்நாடகத்திலிருந்து நமக்கு முறைப்படி கிடைக்க

[திரு. இரெ. இராசமாணிக்கம்] [1984 மார்ச் 21

வேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லை. 1924 ஆம் ஆண்டு ஒப் பந்தத்தின்படி, சாவிரி ஆறு உற்பத்தியாகும் பகுதியில், ஒரு வினாடிக்கு 20,000 கியூசெக்ஸ் மழை பெய்தால், அந்தத் தண் ணீரை கர்நாடக அரசு கிருஷ்ணராஜசாகரத்தில் தேக்கி வைக்க உரிமையில்லை, என்று சொல்கிறார்கள் அதையும் மீறி இந்த ஆண்டு பெய்த மழை அத்தனையயும் கிருஷ்ணராஜசாகரத்தில் தேக்கிவைத்தார்கள். அதற்குத் தமிழக அரசு எடுத்த நடவடிக்கை என்ன? தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி 10 ஆவது விதியில் தமிழக அரசு அனுமதியின்றி கர்நாடக அரசு அணை கட்டகூடாது என்று இருக்கிறது. அதையும் மீறி அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஹேமாவதி, ஹேரங்கி, கபினி போன்ற அணைகள்..........

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, பாசனத்துறை மானியக் கோரிக்கையில், வேறு பல பிரச்சினை களையும், கருத்துக்களையும், மாண்புமிகு உறுப்பினர் இராச மாணிக்கம் அவர்கள் இப்போது தெரிவித்துக்கொண்டிருக்கிறார் கள். சாவிரிப் பிரச்சினை பற்றி இந்த மன்றத்தில் பேசப்பட் டிருக்கிறது. அரசு தரப்பிலே கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே மீண்டும் புகுந்து பிரச்சனையைச் சிக்கலாக்கும் முயற்சி யிலே அவர் ஈடுபடவேண்டாம என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** நான் இதைப் பேசுவதற்குக் காரணம், இந்த மானியக் கோரிக்கையில் கொடுத்திருக்கிற கொள்கை குறிப்பிலே கூட காவிரி பற்றி வருகிறது. விவசாயம் செய்வதற்கு தண்ணீர் முக்கியமானது. ஆகவே, காவிரிப் பிரச் சினை சுமூகமாக தீர்க்கப்பட வேண்டுமென்பதற்காக, அதை நான் உங்களுடைய கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) :** காவிரிப் பிரச்சினையைப் பற்றி இதிலே பேச வேண்டாம்.

***திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவை மாற் றுத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், குறுவை 4 இலட்சம் ஏக்கரிலும், சம்பா தாளடி 11 இலட்சம் ஏக்கரிலும் உற்பத்தி செய்யக்கூடிய பரப்பளவைக் கொண்டது. குறுவையில் 7 இலட்சம் மெட்ரிக் டன்னும், சம்பா தாளடியல் 22 இலட்சம் மெட்ரிக் டன்னும் உற்பத்தி செய்யப் பட குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது. ஆகவே, இன்றைய தினம் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லினுடைய அளவு மிக மிகக் குறைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



1984 மார்ச் 21] [திரு. இரெ. இராசமாணிக்கம்]

இதுவரையில் தஞ்சை மாவட்டத்தில் நுகர்பொருள் வாணி பக் கழகத்தின் மூலமாக முழுவதையும் அரசே கொள்முதல் செய்யும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இதுவரையில் 3½ இலட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. தாளடி சம்பா 22 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்வோம் என்று சொல்லிவிட்டு, தஞ்சை மாவட்டத்தில் எவ்வளவு கொள் முதல் ஆகியிருக்கிறது என்றால் 3½ இலட்சம் மெட்ரிக் டன்தான். அதிலே 4-இல் ஒரு பகுதி கூட விளையவில்லை, அழிந்திருக்கிறது.

விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரி கிறது. ஆகையினாலே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவா ரணம் அளிக்கக்கூடிய வகையிலே தயவு செய்து அனாவாரிச் சான்றிதழ் எல்லாம் கேட்காமல், நில வரி, கூட்டுறவுக் கடன் போன்றவைகளை ரத்து செய்ய வேண்டும் என்று நான் உங்க ளைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதற்குக் கூட வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைக் கேளுங்கள் என்று தயவு செய்து சொல்லாதீர்கள். உங்களுக்குச் சம்பந்தப்பட்டது என்ற காரணத்தால் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை இங்கே வைக்கிறபோது, தமிழகம் வறட்சியால் பாதிக் கப்பட்டிருக்கிற நேரத்தில் 217·73 கோடி ரூபாய் நாங்கள் கேட் டோம். ஆனால் மத்திய சர்க்கார் கொடுத்தது 77·54 கோடிதான் என்று சொல்லியிருக்கிறார்கள். அத்தோடு இந்த ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேரத்தில் நாங்கள் 128 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம்; அவர்கள் 15 கோடிதான் கொடுத் திருக்கிறார்கள் என்று............

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகப் பேசுகிறார்களா, அல்லது காங்கிரஸ் கட்சிக்காகப் பேசுகிறார் களா, என்று எனக்குத் தெரியவில்லை. கொடுக்காத பணத்தைக் கொடுத்ததாகச் சொன்னால் நீங்கள் காங்கிரசுக் காக வக்காலத்து வாங்கிப் பேசுவது மாதிரி தெரிகிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) :** உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் முடித்துக் கொள்ளவேண்டும்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** ஆக, இன்றையதினம் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் எல்லா ஆறுகளும், வாய்க்கால்களும் மேடாகக் கிடக்கின்றன. குடி மராமத்து மூலம் எல்லா வாய்க்காலையும் வெட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்று கொடிக்கால் வெற்றிலை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் ஏராளமான

அளவிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிவா ணம் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு உ ன் நிவாரணம் வழங்க நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தஞ்சை மாவட்டத்தில் உள்ளவர்கள் வேளாண்மையை நம்பி வாழக்கூடியவர்கள், அந்த மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைப்பது பொருத்தமாக இருக்கும், பயன் உள்ளதாக வும் இருக்கும். ஆகையினாலே தஞ்சை மாவட்டத்தில் வேளாண் மைக் கல்லூரி அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் விவசாயிகள் எவ் வளவோ கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறபோது ஜப்தி செய்யப் படுகிறார்கள் ; நில வரிக்காக ஜப்தி செய்யப்படுகிறார்கள் ; குத்தகை பாக்கிக்காக ஜப்தி செய்யப்படுகிறார்கள். சிவில் கோர்ட் மூலமும் நடவடிக்கை எடுக்கிறார்கள். அதற்காக களை எல்லாம் உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும். இவை

கடைசியாக நான் கேட்டுக்கொள்வது, நில வரி, கூட்டுறவுக் கடன் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும்; உரம், பூச்சி மருந்து, விதை போன்றவைகளை மானிய விலையில் வழங்க வேண்டும் ; குத்தகை பாக்கி அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும்; விவசாயத் தொழிலாளர்கள் அனைவருக்கும் உதவித் தொகை வழங்கப்பட வேண்டும். குடிமராமத்து மூலம் அனைத்து வாய்க்கால்களையும் மராமத்து செய்து கொடுக்க வேண்டும்; தஞ்சையிலே வேளாண்மைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும்; நெல்லுக்கு நியாயமான விலையாக, அவர்கள் உற்பத்தி செய்யக் கூடிய அந்த விலைக்கு ஏற்ப, குவிண்டாலுக்கு ரூபாய் 200 வீதம் வழங்க வேண்டும்; கரும்புக்கு டன் ஒன்றுக்கு 250 ரூபாய் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

திரு. மா. சின்னராசு : துணைத் தலைவர் அவர்களே இயற்கையின் சோதனையால் விவசாயிகள் வேதனை அடையும் போது எல்லாம் பல நல்ல திட்டங்களைத் தந்து அவர்கள் வாழ் வில் பல சாதனைகளை, மறுமலர்ச்சியை ஏற்படுத்திய புரட்சித் தலைவருடைய ஆட்சியில் வேளாண்மை மறுமலர்ச்சிக்காக பல நல்ல திட்டங்களை முன் வைத்துக் கொண்டு வரப்பட்டு இருக்கிற வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கையை வரவேற்று ஒருசில வார்த்தைகள் சொல்ல முன் வருகிறேன்,



கோவை மாவட்டம் தொழிலில் எப்படி முன்னணியில் நிற் கிறதோ, அதைப்போல் விவசாயத்திலேயும் முன்னணியில் நிற் கிற மாவட்டம். கடும் உழைப்பாலும், மிக ஆழமானக் கிணறு களைத் தோண்டி, கஷ்டத்திற்கு இடையிலேயும் கடுமையாக உழைத்து, விவசாய உற்பத்தியில் முதலிடம் வகிப்பவர்கள் கோவை மாவட்டத்து மக்கள். ஆகவே அந்தக் கோவை மாவட்டத்து மக்கள் அங்கே ஒரு பல்கலைக் கழகத்தைப் பெற்று இருப்பதன் மூலம் பல நலல ஆக்கபூர்வமான ஆராய்ச்சி முடிவு களை, பயன்படுத்துகிற மக்களாக, மற்றவர்களுக்கு எடுத்து காட்டுகிற மக்களாக இருக்கிறார்கள் எனபதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். கோவையில் அமைந்திருக்கிற வேளாண் மைப் பல்கலைக்கழகம், தொடர்ந்து பல சாதனைகளைப் புரிந்து இன்று பல ஆராய்ச்சி முடிவுகளை செய்திருப்பது பற்றி இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டு இருப்பதை நான் மன்றத்திலே உள்ள உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கோவை பல்கலைக் கழகத்தோடு இணைந்திருக்கிற, கால்நடை மருத்துவக் கல்லூரி இன்று சென்னையிலே இயங்கி வருகிற அந்த மருத்துவக் கல்லூரியிலே நூற்றுக்கும் மேற்பட்ட இடங்கள், ஆசிரியர் பணிக்குரிய இடங்கள் நிரப்பப் படாமல் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், அரசின் கவனத்திற்கும் நான் கொண்டு வருகிறேன். இதற்குக் காரணம், பி.வி.எஸ்.சி. படித்தவர்கள் அரசினுடைய துறைக்கு, கால்நடைத் துறைக்கும் மற்ற இடங் களுக்குச் சென்றால், 700 ரூபாய்தான் அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் கிடைக்கிறது. ஆனால் இந்தக் கல்லூரிக்கு வரவேண்டும் என்றால், அவர்கள் போஸ்ட்-கிராஜுவேட், எம்.வி.எஸ்.சி. படித்தவர்களாக இருக்க வேண்டும். ஆகவே இவர்கள் மற்ற இடங்களில் கிடைக்கிற ஊதியம் இங்கே கிடைக்க வில்லை என்ற காரணத்தால், இளைஞர்கள் இங்கே வந்து ஆராய்ச்சிகளிலே தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டியவர்கள், எதிர்காலத்தில் இந்தத் துறைக்கு பயன்தரக்கூடியவர்கள், வராமல் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர் களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

(பிற்பகல் 1-00)

ஆகவே குறைந்த பட்சம் 700 ரூபாய் என்று மற்றத் துறை களிலே கொடுக்கின்ற சம்பளத்தை, அவர்களுக்குக் கொடுத்து, அவர்களை ஃபீல்டு ஸ்டாஃப்பாக ஆக்கி, வெளியிலே எக்ஸ்டென் ஷன் சர்வீஸிலே பணியாற்றுகிற ஃபீல்டு ஸ்டாப்பாக அவர்களை இயங்க வைத்து, அதற்குப் பின்னால், 2 ஆண்டுகளுக்கு பின்னால், அவர்களை கல்லூரி ஆசிரியர்களாக பணியாற்றக் கூடிய அள வுக்கு, ஈர்க்கின்ற வகையில் இதிலே ஒரு திருத்தத்தை ஏற்படுத்து வது மிகவும் அவசியம் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

இங்கே யிருக்கிற மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக்
கல்லூரியாக இருந்தாலும், மனிதர்களுக்கு வேண்டிய மருந்துப்
பொருள்களின்மீதும் அங்கே ஆராய்ச்சி நடத்தப்பட்டு
வருகிறது. மிகச் சிறந்த முறையிலே அந்தக் கல்லூரியின்
ஆராய்ச்சி முடிவுகள் இருந்து வருவதும், மற்றைய தென் மாநிலங்
களுக்குப் பல விதத்திலே ஆராய்ச்சி முடிவுகளை கொடுத்து உதவு
கின்ற அளவுக்கு, அது தரம் வாய்ந்த ஆராய்ச்சி நிலையமாக
இருப்பதையும், நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, ஆகவே,
அந்த நிலையத்தினுடைய பல ஆராய்ச்சிகளுக்கு, போஸ்ட்
கிராஜுவேட்ஸ் டிபார்ட்மெண்ட்டுக்கும், மற்றைய பயிற்சி பிரிவு
களுக்குமாக, இந்த ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கிற நல்ல பல
திட்டங்களை நான் வரவேற்கிறேன்.

அந்தப் பணி புரியும் ஆசிரியர்கள் பல்கலைக் கழகத்தோடு
இணைக்கப்பட்ட பின்னால், வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே
இருக்கிறவர்கள் என்ற முறையில் சில அரசு சலுகைகளை இழந்
திருக்கிறார்கள். குறிப்பாக அவர்கள் வீடுகட்ட அரசாங்கத்தின்
கடன் பெறுகிறபோது, மற்றவர்களுக்கு கொடுக்கிற, அதாவது
அரசுத் துறை ஊழியர்களுக்கு கொடுக்கிற, ஸ்டாம்ப் டியூட்டி
எக்ஸ்ஸம்ப்ஷன் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. அதை
அவர்கள் கோருகிறார்கள். அதை வழங்குவதற்கு அரசு உதவ
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே, 3-வது வேளாண்மைக் கல்லூரியையும்,
இரண்டாவது கால்நடைக் கல்லூரியையும் துவக்குவதற்காக
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே
இடத்தை அளித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்று,
3-வது வேளாண்மைக் கல்லூரி எங்கே ஏற்பட்டாலும், இரண்டா
வது கால்நடைக் கல்லூரி பெரியார் மாவட்டத்தில் தான் ஏற்பட
வேண்டும் என்று நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.
காரணம் காங்கேயன் காளை மாடுகளுக்கு, கால்நடைகளுக்கு
பேர் பெற்ற இடம். அது மட்டும் அல்லாமல், அதற்கான
இடத்தை ஈரோட்டைச் சுற்றிலும் தேடுவதைக் காட்டிலும்,
பவானிசாகர் உரிய இடமாக இருக்கிறது. பவானிசாகரிலே
அரசு நிலம் இருக்கிறது.

அது மட்டும் அல்லாமல், பல்கலைக் கழகத்தினுடைய
ஆராய்ச்சி மையங்கள் பல உருவாக்கப்பட்டு பணிகள் நடந்து
கொண்டு வருகின்றன. ஆகவே, இந்தச் சூழ்நிலையை கருத்தில்
கொண்டு இரண்டாவது கால்நடைக் கல்லூரியை, பவானிசாகரிலே
நிறுவ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நான்
அந்த மாவட்டக்காரன் அல்ல. அது மட்டும் அல்லாமல்,
அங்கே பெரிய டெயிரி இருக்கிறது. கால்நடை வளத்திலே அது
சிறந்திருக்கிற காரணத்தினால், கோவைக்கு அருகிலேயும் இருக்
கிற காரணத்தினால், அது உரிய இடம் என்பதை மாண்புமிகு
அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்





இன்றைக்குக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்
டிருக்கிற பல்வேறு சாதனைகளை மாற்றுக் கட்சி உறுப்பினர்கள்
பலர், பார்க்க மறந்துவிட்டார்கள் என்று கருதுகிறேன். அதிலே
முக்கியமாக லேண்ட் அண்ட் வாட்டர் மேனேஜ்மெண்ட்
போர்ட் என்று நீர் நிலவள மேம்பாட்டுக் குழு ஒன்று துவக்க
இருப்பதும், கோவையைத் தலைமை இடமாகவைத்து ஆரம்பிக்க
இருப்பதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். ஏனென்றால் விவசாயத்
திற்கு மூலகாரணமாக இருக்க வேண்டிய நீர் நமக்கு பற்றாக்
குறையாக இருக்கிறது. அதை எப்படி சிக்கனமாகப் பயன்
படுத்தி, அதிக விளைச்சலுக்கு ஒரு வழிவகை காணலாம் என்ப
தற்கு அதில் உரிய ஆராய்ச்சி நடத்துவதற்காக அந்தத் திட்டத்தை
நபாட் உதவியின் மூலம் விவசாய ஆராய்ச்சித திட்டத்திற்கும்
விரிவாக்கத் திட்டத்திற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
கொண்டு வந்திருக்கக் கூடிய திட்டங்கள் பல மாற்றுக் கட்சி
நண்பர்கள் பார்க்க மறந்துவிட்டார்கள் என்று நான் கருது
கிறேன்.

ஆகவே, அந்த நல்ல திட்டங்களைக் கொண்டு வருகிற நேரத்
தில், கோவை மாவட்டம் ஏற்கெனவே வளர்ந்த மாவட்டம் என்ற
காரணத்தினாலோ என்னவோ, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
கொடுத்திருக்கிற எந்தத் திட்டமும் கோவை மாவட்டத்திற்குக்
கிடைக்கவில்லை.

மேற்குத் தொடர்ச்சி மலைத்திட்டம் என்றாலும், ஹில் ஏரியா
திட்டம் என்றாலும், டிரவுட் புரோன் டெவலப்மெண்ட் ஏரியா
என்றாலும், வறட்சிக்கு உட்பட்ட பகுதிக்கு வளர்ச்சித்திட்டம்
என்றாலும், கோவை அதில் இணைத்துக் கொள்ளப்படவில்லை,
கோவையிலே மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி இருக்கிறது.
என்னுடைய தொகுதியிலே ஆனைக்கட்டி, திருவாடானை, மலை
யடிவாரம், வால்பாறை போன்ற பகுதிகள் எல்லாம் ஆதிவாசிகள்
வாழ்கின்ற பகுதிகள்.

அங்கேயும் அந்த மேம்பாட்டுத் திட்டங்களுக்கான விரிவாக்
கத்தை ஏற்படுத்துகிறபோது, கோவை மாவட்டத்தை இணைத்
துக் கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன். என்னுடைய தொகுதியில், பல நல்ல திட்டங்
களை, சோதனை முறை விளக்கத் திட்டங்களைக் கூட எடுத்து
நடத்துகிற விவசாயிகள் இருக்கின்றனர், அதேபோல, வறட்சி
யால் பாதிக்கப்பட்ட அவினாசி, மேட்டுப்பாளையம், பல்லடம்
போன்ற பகுதிகள் நிரந்தரமாக வறட்சியால் பாதிக்கப்
பட்டிருக்கின்றன, அந்தப் பகுதிகளை வறட்சி மேம்பாட்டு
திட்டத்திலே எடுத்துக்கொண்டு, அங்கிருக்கிற விவசாயிகள் பயன்
பெற உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிற 14 கோடிக்கான மத்திய சர்க்கார் நிர்வகிக்கிற திட்டம், நல்ல முறையிலே செம்மையாக நடந்து வருகிறது. அதிலே கோவை மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே அதிக அளவில் நிலப்பரப்பு இல்லை என்ற காரணத்தாலே சிறிய குட்டைகள் அதிகமாக எடுத்துக் கொள்ளப் படவில்லை. அதை விரைவுப் படுத்துகிற வகையில் அங்கே இருக்கிற நிலத்தடி நீரை தேவையைக கருதி அதிகமான கசிவு நீர்க குட்டைகளை அங்கே ஏற்படுத்துவதற்கு நமது துறையின் மூலம் ஏற்பாடுகளைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்திரவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கசிவு நீர்க் குட்டையை ஏற்படுத்துகிற பணியில் ஈடுபட்டு இருக்கிற அந்த வேளாண்மைப் பொறியியல் துறைக்கு நிதி கொடுக்கப்பட்டு இருந்தாலும் போதிய பணி ஆட்கள் அவர்களுக்கு வேண்டிய மற்ற அலுவலர்கள் கொடுக்கப் படவில்லை. அதற்கான உத்தரவுகளை வழங்கப்படவில்லை என்ற குறை சொல்லப்படுகிறது. ஆகவே அதை நிவர்த்தி செய்து பல வறட்சி நிவாரணப் பணிகளாலும். திட்டங்கள் ஆனாலும், மண் வளப் பாதுகாப்பு ஆனாலும் சிறந்த முறையில் செய்யப்படுகிற அந்த வேளாண்மைப் பொறியியல் துறையினருக்கே தொடர்ந்து அந்தப் பணிகளைக் கொடுக்க வேண்டும் என்றும் அண்மையில் வேளாண்மைப் பட்டதாரிகள் அல்லாதவர்கள் அதற்கு நியமிக்கப்படுவார்கள் என்ற ஒரு அச்சம் ஏற்பட்டு மாணவர்கள் அதற்கு போராட்டத்தை கிளப்பிய போது மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அரசும் அதில் தலையிட்டு அவர்களுக்கு உத்திரவாதம் தந்திருக்கிறார்கள். அது நீடிக்கப்படவேண்டும். அந்தப் பழைய நிலையே இருக்க வேண்டும். ஏன் என்றால் வேளாண்மை பட்டதாரி பொறியாளர்கள் பி.டபுள்யூ.டி-க்கு ஹைவேஸ்க்கு போவதற்கு அனுமதிப்பது இல்லை. ஆக அப்படி இருக்கும்போது வேளாண்மைப் பொறியியல் துறையைச் சார்ந்த அந்த பட்டதாரிகள் செய்கின்ற பணியில் மற்றவர்கள் வருவதால் அவர்களுடைய வேலை வாய்ப்பு பாதிக்கப்படுவது மட்டும் அல்லாமல் அவர்கள்தான் அந்தப் பணியைச் சிறப்பாக செய்ய முடியும் என்பதை அவர்கள் நிரூபித்து காட்டியிருக்கிறார்கள். நாம் பொதுப் பணித் துறையில் ஒரு திட்டத்திற்கான ஆய்வை முடித்துப் பெறுவதற்கு எவ்வளவு காலம் ஆகிறது என்பதை பார்த்து இருக்கிறோம். ஆகவே மீண்டும் இந்தப் பணிகளையும் பொதுப்பணித் துறைக்கு கொடுக்காமல் வேளாண்மை பொறியியல் துறை தான் அதற்கு உரிய துறை என்ற வகையில் அதற்கு அந்த மண் வள பாதுபுத் திட்டம் ஆனாலும் ஆற்றுப் படுகையை வளப்படுத்துகிற திட்டம் ஆனாலும் அவர்களுக்கு உரியது என்று சொல்லி அவர்களுக்கு ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





இறுதியாக கோவைக்கு அருகில் உள்ள கேரளாவில் உள்ள சித்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, அதிலே கோவை தாலுக்காவில் இருந்தும், மேட்டுப்பாளையம் தாலுக்காவில் இருந்தும், பல்லடம் தாலுக்காவில் இருந்தும் கரும்பு போகிறது. அங்கே மூன்று இயக்குநர்களை நமது பகுதியில் இருந்து நியமிக்க வேண்டும். அதற்காக ஒரு கேள்விகூட கேட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். அந்த மூன்று இயக்குநர்களை நமது அரசு தான் அந்தக் கூட்டுறவு ஆலைக்கு நியமிக்கவேண்டும். அவர்கள் தான் இந்த விவசாயிகளுடைய பிரச்சனையை அங்கே பேச முடியும். ஆகவே அந்த நியமனத்தை உடனடியாகச் செய்து தரவேண்டும். சித்தூர் சர்க்கரை ஆலையிலிருந்து நமக்குக் கொடுக்கப்படுகிற செஸ்ஸை, கரும்புச் சாலை மேம்பாட்டுக்குக் கொடுக்கின்ற செஸ்ஸை நாம் முழுமையாக பயன்படுத்தவில்லை. ஆகவே அந்த சித்தூர் சர்க்கரை ஆலை மூலம் நமக்கு கிடைத்து இருக்கிற அந்த செஸ் பணத்தை வைத்து கோவைத் தாலுக்காவில் இருக்கிற எனது தொகுதிக்கு உட்பட்ட கரும்பு விவசாயிகளுக்கு அதாவது சித்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்குக் கரும்பைக் கொடுக்கிற விவசாயிகள் பகுதிகளில் சாலைகளை மேம்படுத்தவேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவோடுகேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, பல நல்ல திட்டங்களைக் கொடுத்து இருக்கிற நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையை நான் இந்த நேரத்தில் வரவேற்று அண்மையில் பெய்த பெரு மழையின் காரணமாக கோவை முழுவதும் பாதிக்கவில்லை என்றாலும் கூட கோவை மாவட்டத்தில் அவிநாசியிலும். கோவைத் தாலுக்காவிலும் பல லட்சக்கணக்கான பெறுமானம் உள்ள வாழைகள் அடியோடு அழிந்து இருக்கின்றன. இது எப்படியோ வருவாய்த் துறை கவனத்திற்கு வராமல் இருந்து இருக்கிறது. அங்கே இருக்கிற விவசாயிகள் அதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் ஊருக்கு 4 பேர் 5 பேர் என்றாலும்கூட பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்ட நஷ்டம் மிகக் கொடுமையானது. லட்சக்கணக்கான மதிப்புள்ள வாழைகள் அடியோடு ஒரே நாள் காற்றில் அழிந்து இருக்கின்றன. ஆகவே அதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு அதற்கான நிவாரண உதவிகளை அந்த மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய அளவில் வழங்கவேண்டும் என்று கேட்டு மானிய கோரிக்கையை வரவேற்று முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 1-10)

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே அறிவித்து இருக்கிறார்கள். ஆனால் அது ஒரு நெருக்கடியான நிலையை நோக்கிச் சென்று

கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிடுவதற்காக நான் பேச வந்திருக்கிறேன். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் இணை ஆராய்ச்சியாளர்கள் பணி செய்து கொண்டிருக்கக் கூடிய நூற்றுக்கு அதிகமானவர்கள் சமீப காலமாக ஒரு ஆண்டு காலத்தில் அவர்கள் வேலையை விட்டு சென்று இருக்கிறார்கள். அதற்கான அடிப்படையான காரணம் இந்த இணை ஆராய்ச்சியாளர்களை உதவிப் பேராசிரியர்களாக நியமிக்கவேண்டும் என்ற கோரிக்கையை நீண்ட நெடுங் காலமாகக் கொடுத்தும்—சென்ற ஆண்டு பட்ஜெட்டின் போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு மன நிறைவு ஏற்படும் வகையில் அதை நிறுத்தி வைக்கிறேன் என்ற முறையில் வாக்குறுதியை அளித்தார்கள்—அது நிறைவேற்றப்படவில்லை. இன்றைய தினம் 100 பேர் சென்று இருக்கிறார்கள் மேலும் அதிகமான பேர் ஆராய்ச்சிக்குத் தகுதியானர்வர்கள் வெளியேறக்கூடிய நிலை ஏற்பட்டு இருக்கிறது. அந்த பிரச்சினையை நிறுத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3 வேளாண்மைக் கல்லூரிகள் அமைக்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். ஒன்றைத் தஞ்சை மாவட்டத்தில் அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவது கால்நடைக் கல்லூரி அமைப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். அதை, திருச்சி மாவட்டத்தில் அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையை நான் கொடுத்து இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பணி புரியக்கூடிய இணை ஆராய்ச்சியாளர்கள் பிரச்சினைகளை அரசு உடனடியாகத் தீர்க்கவில்லை என்றால் நெருக்கடியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்ற அந்த எச்சரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டு தீர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் நன்றி, வணக்கம்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் வேளாண்மைத் துறையினுடைய மானியக் கோரிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு உங்களுக்கு நன்றி கூறி என்னுடைய வாதத்தைத் தொடருகிறேன். இன்றையதினம் நாட்டினுடைய முதுகெலும்பு என்று விவசாயிகளை நாம் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் விவசாயிகள் படுகின்ற கஷ்டங்களைப் பார்க்கிறபோது விவசாயிகள் ஒரு தாய் இல்லாத பிள்ளையாக இருந்து கொண்டு இருக்கிறார்கள் காரணம் இன்றைய தினம் நாட்டில் வறட்சி ஒரு பக்கம், வெள்ளப் பெருக்கு ஒரு பக்கம். ஆக இரண்டுக்கும் நடுவில் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நிலையை ஆராய வேண்டும் என்று சொன்னால் அரசியல் வாதிகளாகிய நாம் தான் அவர்களுக்குப் பரிகாரம் காணவேண்டும், அந்த அடிப்





படையில் இன்றைய தினம் விவசாயிகள் நிலவள வங்கிகள் மூலமாகவும . தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும் கடன்கள் வாங்குகிறார்கள். அவர்கள் கடன் வாங்கிய பிறகு கடனை அடைக்கவேண்டும் என்று சொன்னால் அவர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் தமிழக அரசு சிறு விவசாயிகள் கடனை தள்ளுபடி செய்து இருக்கிறார்கள். அதை நாம் வரவேற்கிறோம். ஆனால் நடுத்தர பெரிய விவசாயிகள் கடன் தொல்லையில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மழை இலலாததால் விளைச்சல் இல்லை, விளைச்சல் இல்லாததால் அவர்களுக்கு வருமானம் கிட்டவில்லை. அதோடு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால் அவர்களுடைய முழு விவசர்யமும் பாதித்து விட்டது. இந்த நிலையில் இருக்கக்கூடிய நடுத்தர பெரிய விவசாயிகளுடைய கடனை முழுமையாக தள்ளுபடி செய்யவில்லை என்றாலும் கூட இந்த வறட்சி ஏற்பட்ட இந்த 3 ஆண்டு காலத்திற்கு அவர்கள் வாங்கிய அசலுக்கான வட்டியையாவது தள்ளுபடி செய்யவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன. நான் கொடுக்கவில்லை என்று சொன்னால் அவர்கள் கொடுக்க முடியாது. சிறு விவசாயிகள் எப்படியாவது கஷ்டப்பட்டு வேலை செய்து பிழைத்துக்கொள்வார்கள். ஆனால் பெரிய விவசாயியாக இருக்கக்கூடியவர்கள் தன்னை நம்பி இருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் உணவு அளிக்கவேண்டும், வேலைவாய்ப்பு அளிக்கவேண்டும். அந்த நிலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு அசலை தள்ளுபடி செய்யவில்லை என்றாலும்கூட வட்டியையாவது தள்ளுபடி செய்யவேண்டும என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு இன்றையத்தினம் திட்டக் குழு என்று ஒரு குழுவை ஆரம்பிப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். இந்த திட்டக் குழுவில் அரசு அதிகாரிகள் மட்டும் அல்லாமல் விவசாயிகள் பிரதிநிதிகளாக இருக்கக்கூடியவர்களுக்கு அதிலே அவர்கள் அங்கம் வகிக்கவேண்டும். அப்போது தான் உண்மை நிலையை அவர்கள் எடுத்துச் சொல்வார்கள். அரசு அதிகாரிகள் போடுகின்ற திட்டங்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் இரண்டு பேரும் சேர்ந்து ஒரு நல்ல முடிவை எடுப்பதற்கும் ஒரு வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினால் அந்தத் திட்டக் குழுவில் விவசாயிகளுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடு இன்றையத்தினம் வேளாண்மைக் கல்லூரி நடத்திக் கொண்டு இருககிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வேளாண்மை மானியக் கோரிக்கையில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள் அதை நாங்கள் வரவேற்கிறோம், ஆனால் படிக்கவேண்டும் என்று சொல்லக்கூடிய ஏழை விவசாயிகளின் பிள்ளைகள் வசதி படைத்தவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். வசதி இல்லாதவர்களும் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்கள் கல்லூரிக்குச் சென்று

பட்டப் படிப்புப் பெறவேண்டும் என்று சொன்னால் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள் ஆனால் காசு கொடுப்பவர்களுக்கு இடம் கிடைக்கிறது, காசு கொடுக்காதவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. ஒரு எம்.எஸ்.சி. சீட் அல்லது பி.எஸ்.சி. அக்ரி சீட் வாங்கவேண்டும் என்று சொன்னால் 10 ஆயிரம் 15 ஆயிரம் என்று சொல்லி இடையில் இருக்கக் கூடியவர்கள் வாங்கிக் கொள்கிறார்கள். அதனால் அவர்கள் இடம் கிடைக்காமல் வீட்டில் இருந்து கொண்டு அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்த விவசாயிகளின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை கொடுத்து' விவசாயிகள் பிள்ளைகள்தானா என்பதை ஆராய்ந்து அவர்களுக்குக் கல்லூரியில் இத்தனை சதவீதம் என்று ஒதுக்க வேண்டும். அப்படி ஒதுக்கினால்தான் அவர்களுக்கு இடம் கிடைப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும்.

அதே நேரத்தில் விவசாயிகள் டிராக்டர்களை விவசாயக் கருவிகளை விவசாய உபகரணங்களை வாங்குகிறார்கள். வாங்குகிறபோது அதற்கு சேல்ஸ் டாக்ஸ் என்று சொல்லி அதற்கு வரியை அதிகமாகப் போட்டு விடுகிறார்கள். அப்படி வரி போடுகின்ற காரணத்தால் அப்படி வாங்கு விவசாயிகள் பயன்படுத்தக் கூடிய பொருட்களுக்கு விலை அதிகமாக இருக்கிறது. அதற்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு பூச்சி மருந்து, உரம் கொடுக்கப்படுகிறது. ஆனால, இன்றையத்தினம் கொடுக்கக்கூடிய உரத்தில் பூச்சி மருந்தில் பூச்சியை எடுத்துப் போட்டால் பூச்சி சாகாமல் மிதந்துக் கொண்டு இருக்கிறது. இந்த அளவுக்கு போலியான பூச்சி மருந்துக்கள் நாட்டில் நடமாடுகின்றன. அதைக் கண்டுபிடித்து அந்த போலி மருந்தைத் தயாரிப்பவர்கள் யார்? யார்? அவர்கள் எப்படி தயாரிக்கின்றார்கள் என்று கண்டுபிடித்து அவர்களுக்கு சரியான சிறைத்தண்டனை கொடுக்க வேண்டும். அல்லது ஆயுள் தண்டனை யாவது கொடுக்க வேண்டும். அப்போதுதான் விவசாயிகள் நல்ல நிம்மதியோடு வாழ முடியும். உதாரணமாக சொல்ல வேண்டும் என்று சொன்னால ஐ. ஆர். 50 என்ற நெல்லை அறிமுகப் படுத்தினார்கள். அந்த நெல்லைப் பயிரிட்டவர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தில் எனக்குத் தெரிந்தவரையில் அத்தனை பேரும் பயிரிட்டதும் அடியோடு அழிந்து விட்டது. விவசாயிகள் பாதிக்கப்பட்டு விட்டார்கள். அதற்கு நோய் ஏற்பட்டால் அதற்கு பூச்சி மருந்தே இல்லை. என்ன மருந்தைக் கண்டு பிடிப்பது என்று அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல ஆயிரம் ஏக்கர்களைப் பூச்சிகளும், நோய்களும் அழித்துவிட்டன. எனவே அந்தப் பயிரை அழித்துவிட்டு மாற்றுப் பயிர் செய்வதற்கான ஏற்பாடுளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதனால் அவர்களுடைய பொருளாதாரம் சீரழிக்கப்படுகிறது. ஆகவே அவர்களுக்கு நல்ல பூச்சி மருந்துக்களை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அதைப்போலவே, உரத்திலேகூட போலி உரங்கள் இருக்கின்றன. கடைகளிலே போலி உரங்களையும் வைத்திருக்கிறார்கள். கடனாக வாங்கி வரச் சென்னால் போலி உரங்களைக் கொடுத்து விடுகிறார்கள். அதை வயலில் போட்டால் நெற்பயிருக்கு மாறுபட்ட வித்தியாசம எதுவும் தெரியவில்லை. உரத்தில் பெரும் பகுதி மணலாக இருக்கிறது. அதையெல்லாம் ஆராய்வதற்காக நடமாடும் கண்காணிப்பாளர்களை நியமித்து, யார், யார், போலி மருந்துகளையும், போலி உரங்களையும் வைத்திருக்கின்றார்கள் என்று கண்டுபிடித்து, அவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயக் கல்லூரி ஏற்படுத்துவது, கால்நடைக் கல்லூரி ஏற்படுத்துவது என்பதைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரேயொரு பல்கலைக் கழகம்தான் இருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகத்தில் படிக்கின்றவர்களைப் பார்த்தால் பெருமபாலும் அண்டை மாநிலங்களில் இருப்பவர்கள் நிறைய இருக்கிறார்கள். நெய்வேலி ஒரு புறம் இருக்கின்றது. இந்த இரண்டும்தான் இருக்கின்றன. எனவே, அங்கே ஒரு கால்நடைக் கல்லூரி அல்லது வேளாண்மைக் கல்லூரி நிறுவப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். இதை அரசியல் ரீதியாக எடுத்துக்கொள்ளாமல், பொதுமக்களின் நன்மையைக் கருதியும், பின் தங்கிய மாவட்டம் என்ற நிலையைக் கருதியும் அந்த மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரியையோ அல்லது கால்நடைக் கல்லூரியையோ ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களையும் மாண்புமிகு முதலமைச்சரவர்களையும் நான் வேண்டிக் கேட்டுக் கொள்வதற்குக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

பழத் தோட்டங்கள் என்று சொல்கிறோம். காங்கிரஸ் ஆட்சி இருந்தபொழுது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும பழத் தோட்டங்கள் அமைப்பதற்கு நிலம் ஒதுக்கி பழத் தோட்டங்களை வைத்திருந்தார்கள். இப்பொழுது ஊராட்சி மன்றங்களில் தலைவர்கள் இல்லை. அந்த ஊராட்சி மன்றங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் அமைத்த பழத் தோட்டங்கள் அத்தனையையும் அதில் தலைவர்களாக இருந்தவர்கள் ஆக்கிரமித்து விவசாயத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு அந்தத் தோட்டங்கள் அவர்களின் சுயநலத்திற்குப் பயன்படும் வகையில் போய்விட்டது.

கம்போஸ்ட் உரத்திற்காக மாடலாகப் பல கிராமங்களில் பல குழிகளை வெட்டியிருந்தார்கள். அவையெல்லாம் இப்பொழுது தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக ஆகிவிட்டன. அதனால் பழத்தோட்டம் அமைப்பதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. ஆகவே, மீண்டும பரிசீலனை செய்து பாங்கெங்கே பழத்தோட்டங்களை அமைத்திருந்தார்களோ,

கெல்லாம் கம்போஸ்ட் குழிகளை வெட்டியிருந்தார்களோ அதை
யெல்லாம் கண்டுபிடித்து ஒவ்வொரு கிராமத்திலும் பழத்
தோட்டம் அமைக்கும் வேலைகளை விஸ்தரிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற மஞ்சளுக்குகூட வரி
போட்டு இருக்கிறார்கள். இப்படிப் போட்டால் அவர்கள் எங்கே
செல்வார்கள் ? குனிந்தால் வரி, நிமிர்ந்தால் வரி என்று நம்முடைய
தமிழக முதல்வரவர்கள் குலேபகாவலி படத்தில்
பாடியிருக்கிறார்கள். அதைப்போல இது இருக்கிறது. இதில்
அந்த விவசாயிகளுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று
நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கரும்புச் சாலை அபிவிருத்தி என்று சொல்லப்படுகின்றது.
தென்னார்க்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்
கரை ஆலை என்று இருக்கிறது. சிறுவத்தூர் சாமியார்புரம
என்ற இடத்தில் கரும்புச் சாலையை பராமரிப்பதற்கும், தார்ச்
சாலையாக அமைக்க வேண்டுமென்பதற்கும் பல முறை கேட்டுக்
கொண்டிருக்கின்றேன். ஆனால் இதுவரையில் அது நடக்கவில்லை.
இதன் காரணமாக, அந்தப் பகுதி மக்கள் சுமார் 15 கிலோ
மீட்டர் தூரத்திற்குச் சுற்றிச் செல்ல வேண்டிய நிலைமை இருப்ப
தால் அந்தச் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றித் தர
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயத்தைப் பொறுத்தவரையிலே கீழ்மட்டத்
திலே உள்ள அதிகாரிகளெல்லாம் பொய்யான தகவல்களைக்
கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் கிராமங்
களுக்கு நேரடியாக அதிகமாகச் செல்வது இல்லை. உதாரணத்
திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த சில
ஆண்டுகளுக்கு முன்பாக ஊராட்சி ஒன்றியங்களிலே கிராம
சேவக்குகளை நியமித்திருந்தாலும்கூட அவர்களிடத்தில் விவ
சாயத் துறை மட்டும் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், இன்
றைக்குக் கிராம சேவக்குகளாகப் பணியாற்றுகின்றவர்கள்,
ஊராட்சி ஒன்றியங்களில் கான்ட்ராக்ட் வேலைகளைச் செய்து
கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, மத்திய அரசின் மூல
மாக, தேசிய ஒருங்கிணைந்த வேலைவாய்ப்புத் திட்டத்தில்
கொடுக்கப்படும் வேலைகளைக் கொடுக்காததால், அவர்கள்
கான்ட்ராக்ட் வேலைகளைச் செய்து சம்பாதிக்கும் நோக்கத்
தோடுதான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள்
விவசாயிகளின் பிரதிநிதிகளாக இல்லை.





எனவே, அந்த கிராம சேவக்குகளை விவசாயத் துறையோடு
இணைக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருந்தாலும், அவர்
கள் கோர்ட்டுக்குச் சென்று, வழக்கு தொடர்ந்திருப்பதாகக்
கேள்விப்படுகிறேன். அதில் வாதாடி அவர்களை இந்தத் துறை
யில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படு
கிறேன்.

(பிற்பகல் 1-20).

அத்தோடு என்னுடைய தென்னாற்காடு மாவட்டத்தில் சின்ன
சேலம் தொகுதியைப் பொறுத்த வரையில் அங்கே பாக்கம்பாடி
அணை கட்ட வேண்டும் என்று சொல்லி கடந்த பல ஆண்டுகளாக
அரசாங்கத்திற்குக் கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன.
முன்பு விவசாயத் துறை அமைச்சராக இருந்த திரு. குழந்தை
வேலு அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்து அந்த இடத்தைப்
பார்த்தார்கள். மேலும் நான் சட்டமன்றத்திலே கேள்வி
தொடுத்திருந்தேன் அது பற்றி. அப்போது நீர்ப்பாசன அமைச்
சர் அவர்கள், நிதி நிலை சரியில்லாத காரணத்தால்தான் அது
ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. எனவே நிதிநிலை ஆதாரம் சரி
யானவுடன் அதைப் பார்க்கிறேன் என்று சொன்னார்கள். அந்த
பாக்கம்பாடி அணையைக் கட்டினால் அந்தப் பகுதியிலே உள்ள
சுமார் 5 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று விவசாயம்
அங்கே நல்ல வகையில் மேம்பாடு அடைய வழி வகை ஏற்படும்.

புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டு வந்ததாகச் சொல்
கிறார்கள். மக்கள் மத்தியில் எங்களுக்குத்தான் செல்வாக்கு,
நாங்கள்தான் மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்றெல்லாம் சொல்
கிறார்கள். அதே நேரத்தில் இப்படிப்பட்ட பணிகளையும்
மக்களுக்காகச் செய்து கொடுத்தால் அது சிறப்பாக இருக்கும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அணையைப்
பொறுத்த வரையில் இது வேளாண்மை சம்பந்தப்பட்ட பிரச்
சினையாக இருப்பதால் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்
கள் நீர்ப்பாசன அமைச்சரிடத்திலே சொல்லி அதற்கான ஏற்
பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சின்ன சேலம் தொகுதியில் நைனார் பாளையம்
என்ற இடம் இருக்கின்றது. அந்தப் பகுதி விவசாயிகள் டெப்
போ இல்லாமல் அவதிப்படுகிறார்கள். விவசாயத்திற்கு
வேண்டிய பொருட்களை வாங்க வேண்டும் என்றால் அவர்கள்
15 கிலோ மீட்டர், 20 கிலோ மீட்டர் செல்ல வேண்டியிருக்
கின்றது. ஆகவே அங்கே டெப்போ வேண்டும் என்று கோரிக்கை
வைத்திருந்தார்கள். அவர்கள் நெடுந்தூரம் சென்று வாங்க
முடியாத நிலைமைகள் இருப்பதன் காரணத்தால் அங்கே
டெப்போ திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

வடக்கநந்தல் பகுதியில் நெல் உற்பத்தி அதிகமாக ஆகின்றது. அந்த நெல்லைக் கொடுக்கவேண்டும் என்றாலும்20 கிலோ மீட்டர் 30 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்குத்தான் வரவேண்டி இருக்கின்றது. ஆகவே அந்தப் பகுதியிலே ஒரு ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு அங்கேயே ஏற்படுத்தி விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லைக் கொள்முதல் செய்வதற்குரிய ஏற்பாடு செய்ய வேண்டும்.

விவசாயிகளின் பம்ப் செட்களுக்கு எல்லாம் மின் இணைப்பு கொடுப்போம் என்று சொல்லி இருக்கிறார்கள். கள்ளக்குறிச்சி போன்ற இடங்களிலுள்ள விவசாயிகள் 1983–84 லேயிருந்து மின் இணைப்பு கொடுக்குமாறு கேட்டுள்ள விண்ணப்பங்கள் தேங்கி இருக்கின்றன. மின்சாரத் துறைக்கு வேறு அமைச்சர் என்றாலும் கூட இது விவசாயத் துறை சம்பந்தப்பட்டிருப்பதால் விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி இங்கே இருக்கக் கூடிய விவசாயிகளுக்கு உடனடியாக இதை ஒரு எமர்ஜென்சியாக எடுத்துக் கொண்டு பம்ப் செட்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பொதுவாக சில அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்று நான் சொன்னேன். விவசாயத்திற்குத் தேவையான பொருட்களை வெளியே தான் வாங்கக் கூடிய நிலைமை இருக்கின்றது. மேலும் நெல் கொள்முதல் செய்கிறார்கள். அப்படி கொள்முதல் செய்கின்றபோது அவற்றை அவர்கள் தனிப்பட்ட முறையில் வாங்கிக் கொள்கிறார்கள். மேலும் கொடுக்கப்படுகின்ற விதைகள் நல்ல திறன் இல்லாத விதைகளாக இருந்தால் அவற்றை விநியோகம் செய்கிறார்கள். நல்ல விதைகள் என்றால் அவற்றை தங்களுடைய சொந்த கிராமத்திற்குக் கொண்டு சென்று கடைகளில் வைத்துக் கொள்கிறார்கள். மேலும் தனியார் கடைகளில் சென்று அவற்றை விற்றுவிடுகின்ற நிலைமையும் இருக்கின்றது. இவ்வாறு பூச்சி மருந்து, நல்ல விதைகள் ஆகியவற்றைத் தனியார் துறையிலே உள்ள கடைகளில் விற்று இலாபம் சம்பாதிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் காரணமாக விவசாயிகளுக்கு விதை கிடைக்கவில்லை; பூச்சி மருந்து கிடைக்கவில்லை என்ற நிலைமைதான் இருக்கின்றது. ஒரு உதாரணத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். ஒரு இடத்திலே சம்பந்தப்பட்ட அதிகாரி தவறு செய்கிறார் என்று நான் வேளாண்மைத் துறை அமைச்சரிடத்திலே சொன்னேன். அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு அந்த அதிகாரியின் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன்.





இவர்கள் எப்போதும் மத்திய அரசை குறை சொல்லிக் கொண்டு இருந்தாலும் வேளாண்மைத் துறையிலிருந்து சில காரியங்கள் குறித்து மத்திய அரசுக்கு நாங்கள் எழுதி இருக்கிறோம். கோரிக்கை அனுப்பி இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். மத்திய அரசு நிதி கொடுக்கவில்லை என்று வெளியே சொல்லிக் கொண்டிருந்தாலும் மானியக் கோரிக்கையில் மத்திய அரசு கொடுக்கின்ற திட்டங்களை வரவேற்று ஏற்றுக் கொண்டிருப்பதாகத்தான் தெரிகிறது. ஆனால் அதிகாரிகள் ஒழுங்காகச் செய்கிறார்களா, மக்களுக்கு நிவாரணம் கிடைக்கின்றதா என்ற எண்ணத்தோடு ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள பல பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளை அறிந்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் விவசாயிகளின் கோரிக்கைகளைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பு நல்கிய தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே,, அவை முன் வைக்கப்பட்ட வேளாண் துறை மானியக் கோரிக்கைத் தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய சீரிய சிறந்த எண்ணங்களை எடுத்து வழங்கி தமிழகத்தினுடைய வேளாண்மைத்துறை செழுமை படுவதற்குரிய பல கருத்துக்களைச் சுட்டி காட்டியிருக்கிற அவர்களுடைய நன் முயற்சிக்காக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு வேளாண் பெருமக்களுடைய பல்வேறு வேளாண் முயற்சிகளில் எல்லாம் இரண்டறக் கலந்து இணைந்து ஈடுபட்டிருக்கிற ஒரு துறை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிகத் தெளிவாக அறிவார்கள். மண்ணைப் பரிசோதனை செய்து தருவதிலேயிருந்து விளைகின்ற பொருளை விற்பனை செய்து தருகின்றவரை வேளாண் பெரு மக்களுடைய முயற்சிகளிலே தொடர்ந்து இந்தத் துறை ஈடுபட்டிருக்கிறது என்பதனை நான் இங்கே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் வேதனையோடு சுட்டிக் காட்டியதைப் போல, ஏற்பட்ட வறட்சி, அதற்குப் பிறகு ஏற்பட்ட பெரு வெள்ளம், இவைகளால் தமிழகத்தினுடைய வேளாண்மைச் சீர் குலையத் தக்க அளவுக்கு நிலை இருப்பது உண்மைதான் என்றாலும் அதனாலே நாம் சோர்வடைந்து விடாமல் தன்னம்பிக்கையோடு இந்தத்துறையைச் சீர்படுத்தி தமிழகத்தினுடைய வேளாண்மையை உயர்த்திக் காட்ட முடியும் என்ற நம்பிக்கை பெருகின்ற அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டுக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வட கிழக்குப் பருவமழை, தென் மேற்குப் பருவ மழை இவைகளாலே, சரியான வகையில் நம்முடைய நீர் நிலைகள் நிரம்பாமல் தஞ்சைத் தரணியிலே ஏற்பட்ட பல்வேறு சூழ்நிலைகளால் வேளாண்மை பாதிக்கப்பட்டது. குறுவை பாதிக்கப்பட்டது, ஆரம்பத்தில். அதிலும் மேட்டூர் அணை தாமதமாகத் திறந்து விடப்பட்ட காரணத்தால், குறுவைப் பயிர் நாம் சாகுபடி செய்ய முடியாத அளவுக்குக் கூட நிலைமை ஏற்பட்டது. அதற்குப் பிறகு ஏற்பட்ட வெள்ளத்தினால் மிகப் பெரிய அளவிலே பாதிப்பு ஏற்பட்டதும் உண்மைதான். ஆனால் ஒட்டு மொத்தமாக நாம் கணக்குப் பார்க்கிறபொழுது வறட்சியினாலே 3 இலட்சம் ஹெக்டேர், வெள்ளத்தாலே 4 இலட்சம் ஹெக்டேர் என்ற அளவிலே பாதிப்பு ஏற்பட்டு 13 இலட்சம் டன்தான் உற்பத்தியிலே குறைவு ஏற்பட்ட அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 50 இலட்சம் டன்னை, விளை பொருளை, நெல்லை நாம் எதிர் பார்க்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். வறட்சி, வெள்ளம், இவைகளாலே பாதிக்கப்பட்ட விவசாயப் பெரு மக்களுக்கு நாம் அவசரமாக நிவாரணங்களை வழங்கி இருக்கிறோம்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 3 முறை பயிர் விதைகளைக் கொடுத்துங்கூட அங்கே விளைவிக்க முடியாத அளவுக்கு மழையினாலே பாதிப்பு ஏற்பட்டது என்பது உண்மை. ஆனால் அதற்குப் பிறகும்கூட அந்தப் பெரு மக்கள் தன்னம்பிக்கையோடு சில முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அத்தகைய நன் முயற்சிகளுக்கு அரசும், துறையும் தொடர்ந்து ஆதரவளிக்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

வருகிற ஆண்டின் குறியீடாக நாம் 65 இலட்சம் டன் அரிசி என்று குறித்துக் காட்டியிருக்கிறோம், அதற்கு ஏற்பட்டிருப்பது இழப்பு என்றாலும் பெய்திருக்கின்ற இந்த மழையின் காரணமாக, உயர்ந்திருக்கிற நிலைமையையும், நாம் கணக்கில் எடுத்துக் கொண்டு, பரவலாக, தமிழகத்தினுடைய பல்வேறு ஏரிகள், குளங்கள் நிரம்பியிருக்கிற சூழ்நிலையைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு, நாம் எதிர் காலத்திலே அந்த இழப்பை ஈடு செய்ய முடியும். சரி கட்ட முடியும், அதை விட அதிகமான அளவுக்கு உற்பத்தியைப் பல்வேறு துறைகளிலும் பெருக்கிக் காட்ட முடியும் என்ற அளவுக்குத் தன்னம்பிக்கை பெறுகிறோம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். 65 இலட்சம் டன்னை நாம் உற்பத்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கையைப் பெறுகின்றோம். அதைப் போலவே சிறு தானியங்கள் 30 இலட்சம் டன்னை உற்பத்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கை பெறுகிறோம். அடுத்த ஆண்டுகளில் மானாவாரி சாகுபடி முறையிலே





இன்னும் அதிகமான கவனத்தைச் செலுத்தி அந்த முறையை உற்சாகப் படுத்தி, அதன் மூலமாகப் பல்வேறு பயிர்களை விளைவிப்பதற்கு நாம் திட்டமிட்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

அதைப் போலவே மைய மாநில அரசு மானியங்கள் மூலமாக பல்வேறு பயிர் வகை உற்பத்தியை மேம்படுத்துகின்ற அளவுக்கு முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறோம் என்பதையும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

பருத்தியினுடைய சாகுபடி வெகுவாகக் குறைந்திருக்கிறது என்பது உண்மைதான். அப்படி குறைந்திருப்பதற்கு என்ன காரணம் என்பதை பல்வேறு நோக்கிலே நாம் ஆராய வேண்டியிருக்கிறது. பருத்தி விளைவிக்கக் கூடிய விவசாயிப் பெரு மக்களுக்குக் கிடைக்கின்ற விலை அல்லது தரமான பருத்தியை வாங்குகிறவர்கள் எப்படி பார்த்து வாங்குகிறார்கள் என்ற நிலை, இப்படி பல்வேறு சூழ்நிலைகளையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு பருத்திச்சாகுபடி பரப்பை அதிகரிக்க வைக்கிற அளவுக்கு ஒரு தொழில் நுட்பக் குழு அமைக்கப்பட இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட் ஆசைப்படுகிறேன். ஆகவே, இத்தகைய நன் முயற்சியில் இந்தத் துறை தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்): பேரவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : வேளாண் பயிற்சிப் பள்ளிக்ளைப் பொறுத்தவரையில் அதிலே ஆண்டிற்கு 220 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வேணுகோபால் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, அதிலே மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகமாக்க கூடாதா என்று அவரைப் போன்ற உறுப்பினர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு 20 ஆக பயிற்சிப் பள்ளியிலே சேர்த்திருக்கிற மாணவர்களுடைய எண்ணிக்கையை 25 ஆக உயர்த்தலாமா என்பதை இந்தத் துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலே நாம் மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்துகிற முயற்சியை மேற்கொள்ள இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பரமக்குடியிலே ஒரு உழவர் பயிற்சி நிலையம் வறட்சி மேம்பாட்டுத் திட்டத்தினுடைய நிதியுதவியைப் பெற்று நடைபெற்று வந்தது. மத்திய அரசு அந்த வறட்சி மேம்பாட்டுத் திட்டத்தை நிறுத்தி விட்ட காரணத்தால் அந்தப் பயிற்சி பள்ளி மூடப்படுகிற

நிலைமை உருவானது. இருந்தாலும் இந்தத் துறையின் சார்பாக அந்தப் பயிற்சி பள்ளியை தொடர்ந்து நாம் நடத்த விருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

அதைப் போலவே பல்வேறு உயிரின உரங்களை வேளாண் பெரு மக்களிடத்தில் அறிமுகப்படுத்துகிற அளவிற்கு நீல பச்சைப் பாசி, அசோலா போன்றவைகளை அறிமுகப்படுத்துகிற அளவிற்கு துறை முயற்சியை மேற்கொள்ளும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

வறட்சி, வெள்ளம் தாக்குகிறபோது இந்தத் துறை அயர்ந்து போய், சோர்ந்து போய் விடவில்லை என்பதையும் விதைகளை விவசாயப் பெருமக்களுக்கு வழங்குவதிலே கூட இது முன் நின்று உழைத்திருக்கிறது என்பதையும், 13,500 டன் குறியீடாக இருந்தாலும் கூட 21 ஆயிரம் டன்னுக்கு மேலே நெல் விதைகளை விவசாயப் பெரு மக்களுக்கு வழங்கி இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே அந்த வகையில் முயற்சிகள் இந்தத் துறையில் மேற் கொள்ளப் பட்டன.

அதைப் போல வேளாண்மை பொறியியல் துறை மூலமாக நிலத்தை சமப்படுத்துகிற முயற்சிகள், மண் நீர் பராமரிப்பு முயற்சிகள், பாசன மேம்பாட்டு முயற்சிகள், சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் இவைகளை எல்லாம் நாம் தொடர்ந்து நிறைவேற்றி கொண்டிருக்கிறோம். புல்டோசர்கள், டிராக்டர்கள் போன்ற கருவிகள் வேளாண் பொறியியல் துறை மூலமாக உழவர்களுக்கு குறைந்த வாடகைக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். இன்னும் பல கருவிகளை வாங்குவதற்கு ஏற்ற வகையில் 94 இலட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மண் நீர் பராமரிப்பு போன்ற பணிகளை நாம் கிராமப் புறங்களில் மேற்கொள்கிறபோது அதன் மூலமாக விவசாயிகளுக்கு பலன் கிடைக்கிறது என்பதோடு, கிராமப் புற மக்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கிறது என்பதையும் குறிப்பிடத்தக்க அம்சமாக நாம் கருத்திலேக் கொண்டு செயல் பட்டுக் கொண்டிருக்கிறோம். அதுவும் கசிவு நீர்க் குட்டைகள் போன்ற கசிவு குட்டைகளை அமைக்கிற போது ஆடுகள், மாடுகள் பருகுவதற்கு தண்ணீர் கிடைக்கிறது என்பதோடு நிலத்தடி தண்ணீர் மேம்படுத்துவதற்கும் இந்த முயற்சி மிகுந்த பயனை அளிக்கிறது என்ற வகையிலும் நாம் அப்படிப் பட்ட பல்வேறு முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தப் பொறியியல் துறை மூலமாக வருகிற காலத்தில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சின்னராசு அவர்கள் சுட்டிக் காட்டி



யதைப் போல நில நீர் பயன்படுத்துகிற குழு என்ற வகையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு அதனுடைய ஆலோசனைகள் பெறப் படும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை தரணியிலே 5,000 வடிமுனைக் குழாய்களை அமைக் கிற வகையில் திட்டமிட்டு அதிலே 2,567 கிணறுகள் அமைக்கப் பட்டிருக்கின்றன என்றாலும், எஞ்சியிருக்கிற கிணறுகளை அமைப் பதற்கு வருகிற ஆண்டிலே முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப் படும் என்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

பெரியார், வைகை, காவேரி போன்ற பகுதிகளிலும், கீழ் பவானி போன்ற பகுதிகளிலும் பாசன மேம்பாட்டுத் திட்டத்தை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அதை இப்போது பரம்பிக்குளம், ஆளியாறு போன்ற பகுதிகளிலும் விரிவு படுத்துகிற அளவிற்கு நாம் திட்டங்களை தொடர்ந்து மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட திட்டங்களை நாம் விவசாய பெருமக்களிடத்தில் நிறைவேற்று வதன் மூலமாக நீர் சுழற்சி முறை என்கிற முறையை நாம் பயன்படுத்துகிறோம். வாரம் பந்தி முறை என்று அந்த முறை சுட்டிக் காட்டப்படுகிறது. முறை வைத்து தண்ணீர் விடுகிற வகையிலே விவசாயப் பெருமக்களிடத்திலே ஒரு கட்டுக்கோப்பையும், ஒற்றுமையையும் உருவாக்குகிற அளவிற்கு அந்த முறை பயனளிக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எண்ணெய் வித்துக்களைப் பொறுத்த வரையில் நிலக்கடலை 5 விழுக்காடு தமிழகம் முழுவதும் நம்முடைய துறையின் மூலமாக விதையாக வழங்கிக் கொண்டிருக்கிறோம். இன்னும் இதை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விருமபுகிறேன். வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டு விதைகள் கிடைக்காத சூழ்நிலை இருந்தாலும் கூட பக்கத்து மாநிலங்களிலிருந்து அவைகளை வரவழைத்து விவசாயப் பெருமக்களுக்கு வழங்குவோம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

36 இலட்சம் தென்னங் கன்றுகளை வருகிற ஆண்டிலே கொடுக்க திட்டமிட்டிருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எண்ணெய் வித்து வாரியம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. ஏழு ஆண்டுத் திட்டத்திலே அது உருவாக்கப்பட்டது. 11½ கோடி ரூபாய் மூலதனத்திலே உருவாக்கப் பட்டது. அந்த வாரியம் நல்ல முறையில் வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் அதன் மூலமாக நிலக்கடலை உற்பத்தி செயகிற விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப் போலவே தென்னை கூட்டுறவுச் சங்கம் என்ற வகையிலே தென்னை உற்பத்தியாளர் அமைப்பை உருவாக்கலாமா என்ற வகையிலே நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். தென்னை அபிவிருத்தி வாரியம் ஒரு லட்சம் மானியத்தை பட்டுக் கோட்டையிலே இருக்கிற தென்னை உற்பத்தியாளர்கள் சங்கத் திற்கு வழங்கி இருக்கிறது.

அதைப் போலவே இதை இன்னும் மேம்படுத்துவதற்கு தென்னை உற்பத்தியை அதிகப்படுத்துகிற வகையிலே முயற்சியை இந்தத் துறை மேற்கொள்ளும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானத்திலே கிழக்குக் கடற்கரை பகுதியில் தென்னை அதிக மாக அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று சுட்டிக்காட்டியிருக்கி றார்கள். அந்த வகையில் அந்தத் துறை ஏற்கனவே திட்டமிட்டு இருக்கிறது என்பதையும், அந்த முயற்சியும் தொடர்ந்து மேற் கொள்ளப்படும் என்பதையும் நான் இந்த நேரத்தில் அறிவிப்பாகக் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விருபுகிறேன்.

விதை சான்றளிப்புத் துறையைப் பொறுத்த வரையில், அந்தத் துறையை மேலும் வலிவுபடுத்தும் வகையில் சிவகங்கை, சூளூர் ஆகிய இரண்டு இடங்களில் இரண்டு உதவி வேளாண்மை அலுவலகங்கள் புதிதாக தொடங்கப்படவிருக்கின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

விதையின் இனத் தூய்மையை பரிசோதித்துப் பார்க்கிற வகையில் ஒரு ஆய்வகம் கோவையில் உருவாக்கப்படும் என்பதை சகோதரர் சட்டமன்ற உறுப்பினர் சின்னராசு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கோவைக்கு எதுவுமே இல்லை என்ற மனவருத்தத்தைத் தெரிவித்தார். கோவையும் கணக்கிலே எடுத்துக் கொள்ளப்பட்டு அங்கேயும் ஒரு ஆய்வகம் உருவாக்கப் படுகிறதுஎன்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

விற்பனைத் துறையைப் பொறுத்த வரையில் நாம் அதிகமான அளவிற்கு வளர்ச்சி பெற்று வந்துகொண்டு இருக்கிறோம் என்ப தையும், 106 விற்பனைக் கூடங்களுக்கு புதிதாக நிலத்தைப் பெற்று, கட்டிடங்கள் கட்டிக் கொண்டு இருக்கிறோம் என்பதை யும் தெரிவித்துக்கொள்கிறேன்.





வேறு எங்கும் இல்லாத அளவிற்கு வாழை விற்பனைக்கென்றே திருச்சி காட்டுப்புத்தூரில்—நண்பர் பெரியசாமி அவர்கள் தொகுதி யில்— ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் உருவாக்கப்பட் டுள்ளது என்பதையும், உலக வங்கி அதிகாரிகள் கூட அதை வந்து பார்த்து விட்டு அதை மிகுந்த அளவிற்குப் பாராட்டிச் சென்று இருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் பணிபுரிகின்றவர்களுக்கு 101 அலுவலர் குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. வங்கியில் விரிவாக்கக் கிளைகளை நாம் இன்னும் 8 ஒழுங்குமுறைக் கூடங்களில் அதிகப்படுத்த இருக்கி றோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊரகக் கிட்டங்கிகளை 89 இடங்களில் கட்டுவதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அதற்காக ரூ. 365 இலட்சம் அளவிற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, 89 இலட்சம் ரூபாய் அதற்காக இப்போது முன்பணமாகப் பெற்று, அந்தக் கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே, அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் என்கிற அமைப்பு முறையாக, சீராக, நெறியாக செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை யும் இன்னும் அதைச் சீர்படுத்தும் வகையில் முயற்சிகளை நாம் மேற்கொள்வோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தோட்டக் கலையைப் பொறுத்த வரையில், 23 பழப் பண்ணைகள் அந்தத் துறையில் இருக்கின்றன. அவைகளில் உற்பத்தியை இன்னும் அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளை நாம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம். திருச்சி, பெரியார், கோவை ஆகிய மாவட்டங்களில் புதிதாக பழப்பண்ணை திறக்கப் பட, உருவாக்கப்பட இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வாழை உற்பத்தியை அதிகமாகப் பெருக்குகிற அளவிற்கு சின்னக் கல்ராயன் மலையில் ஒரு வாழை நாற்றுப்பண்ணை உருவாக்கி, அதிலே 1 இலட்சம் கன்றுகளைப் புதிதாக உற்பத்தி செய்து, இன்னும் பன்மடங்கு அதிகமாக்க நாம் முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அன்னாசிப் பழ உற்பத்தியிலே நல்ல தரமான கன்றுகளை விளைவிக்கின்ற வகையில் கொல்லிமலை, கன்னியாகுமரி பேச்சிப் பாறை ஆகிய இடங்களில் நாம் இன்னும் அத்தகைய நாற்றுப் பண்ணைகளை, பழப் பண்ணைகளை சீரமைத்துக் கொடுக்க முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திரி உற்பத்தியைப் பெருக்கும் வகையில் 900 இடங்களில் செயல் விளக்கப் பாத்திகள் அமைத்து புதிய அறிவியல் உத்திகளை கையாண்டு அவற்றை மேம்படுத்துவதற்கு உரிய செயல் திட்டங்களை தீட்டியிருக்கிறோம். கொஞ்சம் புதுமையாக வெற்றிலையில் கூட செயல் விளக்கப் பாத்திகளை அமைத்து நாம் அதை மேம்படுத்த முயற்சி செய்து கொண்டு இருக்கிறோம். ஆகவே, தோட்டக் கலைத் துறையைப் பொறுத்த வரையில் அதை வளர்ப்பதற்காக உரிய பல்வேறு செயல் திட்டங்களை அந்தத் துறை தீட்டிக் கொண்டு இருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், இந்த ஆண்டு 15 புதிய ரகங்களை பல்கலைக் கழகம் வெளியிட்டு இருக்கிறது. அவைகள் வேளாண் பெருமக்களிடத்தில் நல்ல செல்வாக்கைப் பெற்று, அந்த ரகங்கள் அந்தப் பெருமக்களாலே வரவேற்கப்பட்டு இருக்கின்றன. பல்கலைக் கழகத்திலே ஆராய்ச்சி சிறந்த முறையில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்பதை நான் இங்கே நிச்சயமாகக் குறிப்பிட்டாக வேண்டும். வேப்பங்குளத்திலே தென்னை ஆராய்ச்சி நிலையத்தை வலுப்படுத்துதல், ஆடுதுறை, பையூர் ஆகிய இடங்களில் சோயா மொச்சை சாகுபடியில் தீவிர ஆராய்ச்சி செய்தல், புதுக்கோட்டையில் மண் இறுகலைத் தடுக்கும் முறைகளை ஆராய்ச்சி செய்தல், அருப்புக் கோட்டையில் அமைத்து இருக்கும் ஆராய்ச்சி நிலையத்தில் வறட்சி பகுதியில் கொத்துமல்லி பயிரிடுவது பற்றிய ஆராய்ச்சி செய்தல் மற்றும் வறட்சிப் பகுதியில் காய்கறி ரகங்களைப் பற்றிய ஆராய்ச்சி செய்தல் போன்ற பணிகள் வேளாண் பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வேளாண் தொழில் கழகத்தின் சார்பாக '' சனோலா '' என்ற எண்ணை தயாரிக்கப்படுகிறது. அதன் மூலமாக சூரியகாந்தி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும் அளவிற்கு நாம் நடைமுறையில் முயற்சிகளைச் செய்து கொண்டு இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மை தொழில் கூட்டுறவு இணையம் 129 இடங்களில் அமைத்து இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் பல்கலைக் கழகத்திலே உள்ள இணைப் பேராசிரியர்களை குறிப்பிட்டுச் சொல்லி, அவர்களை உதவிப் பேராசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசினிடத்தில் இருக்கிறது, இன்னும்





முடிவு வரவில்லை என்று சுட்டிக்காட்டினார்கள். நான் தெரி வித்துக்கொள்கிறேன். அவர்கள் இணைப் பேராசிரியர்களாக பதவியிலே சேர்ந்த காலத்தில் இருந்து உதவிப் பேராசிரியர்கள் என்ற வகையிலே அவர்கள் மதிக்கப்படுவார்கள். அத்தகைய ஆணைகள் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் அவர் களுக்கும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-40)

புதிதாக வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக ஒரு புதிய கல்லூரியை மூன்றாவது வேளாண்மைக் கல்லூரியாக எங்கே அமைப்பது என்ற வகையிலே நாம் பல இடங்களைப் பார்வையிட்டு; அந்த வேளாண்மைக் கல்லூரியை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டோம். அதிலே எல்லாவிதமான வசதிகளும் தகுதிகளும் பொருந்தியிருக்கிற வகையில் பல்வேறு மண் பரிசோதனைகளுக்கு உரிய இடங்களும் இருக்கின்றன; நீர்ப்பாசன வசதியும் இருக்கிறது; கட்டிடம் கட்டும் வசதி இருக்கிறது; உடனடியாகக் கல்லூரி வகுப்புகளை நடத்துகிற அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பதை எல்லாம் பார்த்து புதிய கல்லூரியை முதலிலே நெல்லை மாவட்டத்தினுடைய கிள்ளிக்குளம் பண்ணையில் ஆரம்பிப்போம் என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து, தஞ்சை மாவட்ட விவசாயப் பெருமக்களோ அல்லது வடஆற்காடு மாவட்ட விவசாயப் பெருமக்களோ ஏமாற்றமடைய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தடுத்து இரண்டு கல்லூரிகள் அமைக்கப்படுகின்ற அளவுக்கு நிலைமை ஏற்படும் என்பதையும் அவை எங்கே அமைக்கப்படும் என்பதையும் இப்போதே நான் தெரிவித்துவிடுகிறேன். தஞ்சை மாவட்டத்தினுடைய காட்டுத் தோட்டத்திலும் வடஆற்காடு மாவட்டத்தினுடைய நவ்லாக் பண்ணையிலும் அவை அமைக்கப்படும் என்று இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். ஆகவே, இந்தத் துறையை மேம்படுத்துகின்ற வகையில் நாம் பல்வேறு செயல் திட்டங்களை, முயற்சிகளை, ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து செய்கிறோம். வேளாண் பெருமக்களுக்கு அதன் மூலமாக நல்ல பலன் கிடைக்க வேண்டுமென்று கருதுகிறோம்.

ஆனால் வேளாண் பெருமக்களுடைய துயரத்தைத் தீர்ப்பது என்பது, முற்றிலுமாக அவர்களுடைய துன்பத்தைத் தீர்ப்பது என்பது வேளாண்மைத் துறை மட்டுமே செய்யக்கூடிய ஒன்றல்ல; அல்லது மாநில அரசு மட்டுமே செய்யக்கூடிய ஒன்றல்ல என்பதை இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அந்த வகையில் நாம் அவர்களுடைய விளைப் பொருள்களுக்கு உரிய விலையைப் பெற்றுத் தருவதற்கு, அவர்கள் மன நிறைவு கொள்வதற்கு, அவர்கள் மகிழ்ச்சியோடு

இந்தத் தொழிலிலே ஈடுபடுவதற்கு எந்தெந்த முயற்சிகளை எந்தெந்த துறையின் மூலமாக, எந்த அரசின் மூலமாக செய்ய வேண்டுமோ அந்த முறையிலே செய்வதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஈடுபடுவோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை ஏற்று, நீங்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 20—வேளாண்மை.

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லதாதால் அவருடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திருவாளர்கள் ஏ. இராமலிங்கம் எம். செல்லமுத்து, பொ. உத்திராபதி, ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 91,02,38,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

திரு. என். எஸ். வி. சித்தன் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

திருவாளர்கள் சு. பாலன், மு. அப்பாதுரை ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,02,80,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."





மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 22-3-1984 வியாழக் கிழமை அன்று காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.42 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

139. பல்லவன் பொறியியற் கழகத்தின் 1982-ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)]

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

66. கோரிக்கை எண். 20—வேளாண்மை பற்றிய கொள்கை விளக்க குறிப்பு, 1984—85 (தமிழ், ஆங்கிலம்).

67. வேளாண்மைத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம் 1984—85 (தமிழ், ஆங்கிலம்).

68. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம் பற்றிய ஆய்வுரை, 1983—84 (தமிழ், ஆங்கிலம்).

69. தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகம் பற்றிய ஆய்வுரை, 1984—85 (தமிழ், ஆங்கிலம்).

70. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் பற்றிய ஆய்வுரை, 1983—84. (தமிழ், ஆங்கிலம்).

71. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் பற்றிய ஆய்வுரை, 1983—84. (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு

(......372......ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க).

## கொள்கை விளக்கம் 1984-85

### வேளாண்மை.

நமது பொருளாதாரம் தொடர்ந்து வேளாண்மையையே அடிப் படையாகக் கொண்டுள்ளதாகையால், அதன் ஏற்றத் தாழ்வுகள் சமூகத்தின் அனைத்து நிலைகளையும் பாதிக்கிறது. இதனை உணர்ந்தும், நமது மக்கட் தொகைக்கு உணவளிக்கும் நோக் கோடும், இவ்வரசு வேளாண்மை உற்பத்தியை பெருக்கும் பல் வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. வேளாண்மை ஆராய்ச்சியை நவீனப்படுத்தி, வேளாண்மை யுத்திகளை உழவர் களுக்கு மாற்றும் விரிவாக்கப் பணியை ஒழுங்குபடுத்துதல், தர மான விதைகள் உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளை தேவையான நேரத்தில் தேவையான இடங்களில் கிடைக்க வழி வகை செய்தல், சூழ்நிலைக்கேற்ற வேளாண்மை நுட்பங்களை எடுத்துச் சொல்லுதல், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை களை அதிகப் பரப்பில் கடைபிடித்தல், திறமையான நில நீர் பராமரிப்பு முறைகளை கடைபிடித்தல், மற்றும் அறுவடைக்குப் பின் கடைபிடிக்க வேண்டிய சிறந்த தொழில் நுட்பங்கள் போன்றவை நமது முன்னேற்றத்தின் முக்கிய அம்சங்களாய் உள்ளன.

### பருவ நிலைகள் :

கடந்த சில ஆண்டுகளாக அடுத்தடுத்து ஏற்பட்ட பாதகமான பருவ நிலைகள் காரணமாக தமிழ்நாட்டில் வேளாண்மை உற் பத்தியில் கடுமையான ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டன. கோடை யில் கிட்டத்தட்ட முழு அளவில் மழை பொய்த்து நிலத்தடி நீர் குறைவுபட்ட நிலையில் தென்மேற்கு பருவ மழையும் ஏமாற் றம் அளித்தது. காவிரி பாசன பகுதியின் முக்கிய நீர் நிலையான மேட்டூர் அணை, ஒரு மாத தாமதத்திற்குப் பின், 1983 ஆகஸ்ட்டு மாதத்தில் தான் திறக்கப்பட்டது. இதனால் காவிரி பாசனத்தில் வழக்கமாக பயிரிடும் பரப்பில் குறுவை பயிரிட இயலாமல் குறுவை பயிரையே மறக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. நீண்ட வறட்சி நிலையினால் மற்ற மாவட்டங்களிலும் இதே நிலைமை ஏற்பட்டது.



தென்மேற்குப் பருவ மழை வழக்கத்தை விட (377.8 மில்லி மீட்டர்) அதிகமாக (415.9 மில்லி மீட்டர்) பெய்தாலும் பெரிய நீர்த் தேக்கங்களில் போதுமான அளவு தண்ணீர் பெறப்பட வில்லை. மாவட்ட ரீதியில் 15 மாவட்டங்களில், 4 மாவட்டங் களில் இயல்புக்குக் குறைவான மழை பெய்தது. செங்கற்பட்டு, தென்னாற்காடு, வட ஆற்காடு, சேலம், புதுக்கோட்டை மற்றும் திருச்சி மாவட்டங்களில் தக்க சமயத்தில் பெய்யாததால் பயறு மற்றும் சிறு தானிய வகை போன்ற மனாவாரிப் பயிர்களில் பயிரிடப்படும் பரப்பு பாதிக்கப்பட்டது.

வடகிழக்குப் பருவ மழையும், தென்மேற்குப் பருவ மழையை விட எவ்விதத்திலும் நன்மை அளிக்கவில்லை. வட கிழக்கு பருவ மழை முடிகையில் பருவ மழைக்கான நம்பிக்கை தளர்ந்த நிலையில் 505.20 மி.மீ. மழை டிசம்பர் இறுதி வாரத்தில் பொழிந்தது. இப்பருவ இயல்பான மழை அளவு 449.7 மில்லி மீட்டர் ஆகும். டிசம்பர் இறுதி வாரத்தில் நான்கு நாட்களில் பொழிந்த இப்பெரு மழை காவிரி டெல்டா பகுதியில் இரண்டு இலட்சம் எக்டேர் அளவில் பயிர்களை பெரும் சேதமடைவித்தது.

இருப்பினும் இப்பருவ மழையின் சாதகமான பலனை அடை யும் நோக்குடன் ஒரு பெரிய கோடைத் திட்டம், 3.548 இலட்சம் எக்டேர் பரப்பில் கோடை நெல் 2,587 இலட்சம் எக்டேரில் சிறு தானியங்கள் மற்றும் 4.000 இலட்சம் எக்டேரில் நெல் தரிசு பயறு வகைகளை பயிரிடும் நோக்குடன் துவக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் மிகச்சிறு உழவர் களுக்கு உரம் மற்றும் பூச்சி மருந்துகள் மானிய விலையிலும், பயறு விதைகள் 50 சத மானிய விலையிலும், நுண்ணுயிர் கலவை கள் முழு மானிய விலையிலும், மண்மேடிட்ட நிலங்களை சீர் திருத்தவும், 48 இலட்ச ரூபாய் அளவில் பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

1984-ல் ஜனவரி மாதத்தில் பருவ நிலை பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு சாதகமாக அமைந்தது. மாநிலத்தின் பல் வேறுபகுதிகளில் குலைநோய் தோன்றியது. இந்நோயை கட்டுப் படுத்தவும், மேலும் பரவாமல் தடுக்கவும், தேவையான பயிர் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் தொடர்ந்து இருந்த மப்பும் மந்தாரமுமான பருவநிலை, இம் முயற்சிகளின் பலனை வெகுவாக பாதித்தது. மறுபடியும் 1984 பிப்ரவரி மாதத்தில் மாநிலம் முழுவதும் பெரும் மழை தோன்றி அறுவடைக்குக் தயாராக இருந்த நெற்பயிரை பாதித்தும், இளம் நிலக்கடலை பயிரை சில இடங்களில் அடித்துச் சென்றும் ஊறு விளைவித்தது. இவ்வாறு இம்மாநிலம் 1983-84 ஆம் ஆண்டில் இயற்கையின் சீற்றங்களால் தொடர்ந்து அவதியுற்றது.

**பயிர் உற்பத்தி :**

சென்ற ஆண்டின் வறட்சியினைத் தொடர்ந்து இவ்வாண்டின்
சாதகமற்ற பருவ மழையின் காரணமாக மாநிலத்தின் பயிர்
முறை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. தேவைப்பட்ட இடங்
களில் மாற்றுப் பயிர் முறைகளை அறிமுகப்படுத்தியும் பல்வேறு
வேளாண்மை இடு பொருள்களான விதை, உரம் பூச்சி மருந்து
ஆகியவைகளை திரட்டியும், சிறப்பு திட்டங்களை உருவாக்கி
யும்' வேளாண்மைத்துறை சிறப்பு பணி ஆற்றியது. நாடு முழு
வதும் உரத் தட்டுப்பாடு இருந்தும், நமது மாநில விவசாயிகளுக்கு
எவ்வித இடர்பாடும் இன்றி உர விநியோகம் செய்தது.

நிலவிவரும் பாதகமான சூழ்நிலைகளின் காரணமாக இவ்
வாண்டு இறுதியில் கீழ்க்கண்ட உற்பத்தி அளவுகள் எதிர்பார்க்கப்
படுகிறது.

| | | |
|---|---|---|
| நெல் | 50.00 | இலட்சம் மெ. டன். |
| சிறு தானியம் | 19.00 | ஷ்டி |
| பயறு வகைகள் | 3.00 | ஷ்டி |
| கரும்பு (வெல்லம்) | 25.00 | ஷ்டி |
| பருத்தி | 3.00 | இலட்சம் பேல்கள் |

**1984—85 ஆம் ஆண்டிற்கான திட்டம்.**

**நெல் மற்றும் சிறு தானியங்கள் :**

1984-85ஆம் ஆண்டில் நெற்பயிர் 26.50 இலட்சம் எக்டேர்
பரப்பளவில் பயிரிடப்பட்டு, 65.00 இலட்சம் டன்கள் அரிசி உற்
பத்தி செய்யப்படும் என்ற குறிக்மகாளுடன் திட்டமிடப்பட்டு
உள்ளது. மானாவாரி சாகுபடியில் தீவிர கவனம் செலுத்தப்பட்டு
சிறு தானியங்கள் உற்பத்தியை 30.00 லட்சம் டன்களாக உயர்த்த
திட்டமிடப்பட்டுள்ளது. தொடர்ந்து ஏற்பட்டு வருகின்ற உற்
பத்திக் குறைவினை ஈடு செய்யும் பொருட்டு 1984-85 ஆம்
ஆண்டிற்கு உற்பத்திக் குறியீடு கூடுதலாகவே நிர்ணயிக்கப்
பட்டுள்ளது. தற்பொழுதுள்ள நீர்ப்பாசன வசதிகள் சாதகமாக
இருப்பதாலும், பருவ மழை காலத்தே இயல்பான அளவு
இருக்கும் என்று நம்பப்படுவதாலும், அதிக அளவு உற்பத்தி
அடைய இயலும். புதிய ரக தரமான விதைகளை உபயோகித்
தல், தேவையான அளவு உரங்கள் மற்றும் நுண்ணுரங்கள்
விநியோகித்தல், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளைக்
கையாளுதல், தானிய சேமிப்பு உள்ளிட்ட அறுவடைக்குப் பிற்
பட்ட தொழில் நுட்பங்களைக் கையாளுதல், மானாவாரி சாகு
படி தொழில் நுட்பங்களை அதிகமான பரப்பளவில் கையாளு
ஆகியவைகளில் முழுக் கவனம் செலுத்தப்படும்.



**உயர் விளைச்சல் ரகத் திட்டம் :**

1983-84 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய 18.110
இலட்சம் எக்டேர் பரப்பளவில் நெல் மற்றும் 6.918 இலட்சம்
எக்டேர் பரப்பளவில் சிறு தானிய உயர் விளைச்சல் ரகங்கள்
சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 1984—85 ஆம் ஆண்டில் 24.00
இலட்சம் எக்டேர் பரப்பளவில் உயர் விளைச்சல் நெல் ரகங்
களும், 10.00 இலட்சம் எக்டேர் பரப்பளவில் உயர் விளைச்சல்
சிறு தானிய ரகங்களும் சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.
அரிசி உற்பத்தியை அதிகரிக்க, " எக்டருக்கு 5 டன் " என்கின்ற
புதிய திட்டத்தினை பரந்த அளவில் அறிமுகம் செய்ய திட்டமிடப்
பட்டுள்ளது, இந்த திட்டத்தின் வாயிலாக, உற்பத்தித் திறனை
அதிகரிப்பதற்காக, நிருபணமான தொழில் நுட்பங்கள் மிக
அதிக அளவில் செயல்நிருபணம் வாயிலாக அறிமுகப்படுத்தப்
படும். சாகுபடிக்கான பயனுள்ள தொழில் நுட்பங்களை
விவசாயிகளுக்கு தெரிவிப்பதற்கு பயிற்சி மற்றும் தொடர்பு
வழித் திட்ட முறை முழுமையாகப் பயன்படுத்தப்படும்.

புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ், 1983—84 ஆம் ஆண்டில்
20,000 வேளாண் கருவிகள் விநியோகம் செய்யத் திட்டமிடப்
பட்டு, டிசம்பர் மாதம் முடிய 18,523 விநியோகம் செய்யப்
பட்டுள்ளன. மேலும் 215 விதை மற்றும் உரமிடும் கருவிகளும்
விநியோகிக்கப்பட்டுள்ளன. 1984—85 ஆம் ஆண்டில் 20,000
வேளாண் கருவிகள் விநியோகம் செய்யப்படும்.

**பருத்தி :**

1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய 1.42 இலட்சம்
எக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு 2.12 இலட்
சம் பேல்கள் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.
மேலும், 0.60 இலட்சம் எக்டேரில் கோடை சாகுபடி செய்வதன்
மூலமாகவும் நடப்பு ஆண்டு முழுமைக்கும் 3.15 இலட்சம் பேல்
கள் உற்பத்தி செய்யப்படும். 1984—85 ஆம் ஆண்டில் 3.60
இலட்சம் எக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்து 5.00
இலட்சம் பேல்கள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.
பருத்தி சாகுபடி செய்யப்படும் பரப்பளவு ஆண்டிற்கு ஆண்டு
குறைந்துகொண்டே வருவதால், நிலைமையைக் கவனமாகப் பரி
சீலித்து பருத்தி சாகுபடியை மீண்டும் நிலைப்படுத்தி உற்பத்தியை
அதிகரிக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது.
இதன் பொருட்டு, நிலைமையை நன்கு ஆராய்ந்து இம் மாநிலத்
தின் பருத்தி சாகுபடியை அதிகரிக்க தக்க சிபாரிசுகளை வழங்க
தொழிற் நுட்பக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**கரும்பு :**

தமிழ்நாட்டில் இயங்கிவரும் 21 சர்க்கரை ஆலைகள் மற்றும் வெல்லத் தயாரிப்பாளர்களின் கரும்புத் தேவையை, தரம் மற்றும் உற்பத்தி அளவில் அதிகரிக்க கரும்பு அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

1983–84 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய 1.17 இலட்சம் எக்டேர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டது.

1984–85 ஆம் ஆண்டில் 1.80 இலட்சம் எக்டேர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்து 25.00 இலட்சம் டன்கள் வெல்லம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

1983–84 ஆம் ஆண்டில் குறியீடான 0.35 இலட்சம் எக்டேருக்கு எதிராக டிசம்பர் மாதம் முடிய, 0.397 இலட்சம் எக்டேரில் பொறுக்கு விதைக் கரணைகள், விநியோகம் செய்யப்பட்டது. 0.980 இலட்சம் எக்டேர் பரப்பளவில் தேவையான அளவு உரமிடுதல் மற்றும் 1.075 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பயிர் பாதுகாப்பும் மேற்கொள்ளப்பட்டன. 1984–85 ஆம் ஆண்டில் 1.80 இலட்சம் எக்டேர் பரப்பளவில் திருந்திய சாகுபடி முறைகள் கையாளத் திட்டமிடப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் கரும்பில் தோன்றும் தண்டுப்புழுவைக் கட்டுப்படுத்த 21 ஒட்டுண்ணி உற்பத்தி மற்றும் வெளியிடும் நிலையங்கள் இயங்கி வருகின்றன. 1983–84 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய 3,129.50 எக்டேர் பரப்பளவிற்காக, ஒட்டுண்ணிகள் வெளியிடப்பட்டுள்ளன. 1984–85 ஆம் ஆண்டில் ஒட்டுண்ணிகள் 10,500 எக்டேர் பரப்பளவிற்கு வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பயறு வகைகள் :**

நமது மாநிலத்தில் பயறு வகைத்தேவைகள் ஆண்டுக்கு ஏறத்
தாழ 9 இலட்சம் டன்கள் ஆகும். ஆனால், நமது உற்பத்தி
சுமார் 2.5 இலட்சம் டன்களாகவே உள்ளது. எனவே, நமது
தேவையைப் பூர்த்தி செய்ய பெருமளவு பயறு வகைகள் பிற
மாநிலங்களிலிருந்து பெறப்பட்டு வருகின்றன. பயறு உற்
பத்தியை இரு மடங்கு ஆக்குவதற்காக, 1980–81 ஆம் ஆண்டு
முதல் '' பயறு உற்பத்தி ஆறாண்டுத் திட்டம் '' என்னும் திட்
டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1983–84 ஆம் ஆண்டில்
டிசம்பர் 1983 முடிய 6.106 இலட்சம் எக்டேர்களில் பயறு
வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. 1983–84 ஆம் ஆண்டு
கோடைப் பருவத்தில் நஞ்சை தரிசில் 4 இலட்சம் எக்டேர்
பரப்பளவில் பயறு வகைகளைச் சாகுபடி செய்ய ஒரு பெருந்





திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, 1983–8 ஆம் ஆண்டின் பயறு வகை உற்பத்தி 3 இலட்சம் டன்களாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. 1984–85 ஆம் ஆண்டில் 14.2 இலட்சம் எக்டேரில் பயறு வகைப் பயிர்களைச் சாகுபடி செய்து 5 இலட்சம் டன்கள் உற்பத்தியைப் பெற திட்டமிடப்பட்டுள்ளது.

பயறு வகை உற்பத்தியை அதிகரிக்க நுண்ணுயிர் கலவையை
பயறு வகை விதைகளுடன் கலந்து விதைக்கும் பொருட்டு நுண்
ணுயிர் கலவைப் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டு வரு
கின்றன. 1983 டிசம்பர் மாதம் வரை 1.411 இலட்சம் பொட்
டலங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1984–85 ஆம் ஆண்டில்
3.50 இலட்சம் பொட்டலங்கள் விநியோகிக்கப்படும்.

1983 டிசம்பர் மாதத்தில் கோவை மாவட்டத்தில் '' கொண்
டைக்கடலை சாகுபடித் திட்டம் '' என்னும் சிறப்புத் திட்டம்
செயற்படுத்தப்பட்டு, அம்மாவட்டத்தில் 7,000 ஏக்கர் பரப்பில்
பயறு வகை சாகுபடியில் புதிய தொழில் நுட்பங்களான இலைவழி
டை-அமோனியம் பாஸ்பேட் தெளித்தல், சீரான இடை
வெளியை பராமரித்தல், நுண்ணுயிர் கலவை உபயோகித்தல்
காலத்தே பயிர் பாதுகாப்பு அளித்தல், போன்றவை செயல்
படுத்தப்பட்டன. இதனால், எக்டேர் விளைச்சல் 600 கிலோ
விலிருந்து 1,000 கிலோவாக அதிகரித்தது. மைய அரசின்
பயறு வகைத் திட்டம் மற்றும் கோடை பயறு வகை சாகுபடித்
திட்டங்களின் கீழ் டிசம்பர் 1983 முடிய எக்டேருக்கு ரூ. 100
வீதம் மானியமாக அளிக்கப்படும். நீர்ப்பாசன மானியத்தின்
கீழ் 2,872 எக்டேருக்கு மானயம் வழங்கப்பட்டது. 986 எக்டேர்
பரப்பளவில், நிருபணத்தளைகள் அமைக்கப்பட்டன. 50 சத
வீத மான்யத்தில் விவசாயிகளுக்கு பூச்சி மருந்துகள் 843 எக்டேர்
பரப்பளவிற்கு மான்யமாக வழங்கப்பட்டன. 143 பயிர் பாது
காப்பு கருவிகள் வழங்கப்பட்டன. மேலும் 41,012 நுண்ணுயிர்
கலவை பொட்டலங்கள் 50 சதவீத மான்யத்தில் விவசாயி
களுக்கு விநியோகிக்கப்பட்டது. இத் திட்டம், 1984–85 ஆம்
ஆண்டிலும் செயல்படும். டிசம்பர் 1983 வரை 2,384.6 குவிண்
டால் சான்றிதழ் பெற்ற பயறு வகை விதைகள் கொள்முதல்
செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன. 1984–85 ஆம் ஆண்டில்
இத்திட்டத்தின் கீழ் 5,000 குவிண்டால் சான்றிதழ் பெற்ற விதை
கள் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகம் செய்ய திட்டமிடப்
பட்டுள்ளது.

**புகையிலை :**

வாய்ப்புகையிலையின் விளைச்சலையும், தரத்தையும் அதிகரிக்க, இப்பயிரின் கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளை, நாற்றங்கால் முதல் அறுவடை வரை எடுத்துரைக்கவும் நிரூபணத்தளைகள் அமைத்து விளக்கவும், ஒரு திட்டம் நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் டிசம்பர் 1983 முடிய 0.09 இலட்சம் எக்டேர்கள் வரை பயன் அடைந்தது. 1984—85 ஆம் ஆண்டில் இத்திட்டம் 0.19 இலட்சம் எக்டேரில் செயல்படுத்தப்படும்.

**1984–85 உற்பத்தி திட்டம் :**

இவ்வாறு, மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை வழங்கிட வேண்டும் என்னும் நோக்கத்திற்கு ஏற்ப, ஏனைய பொருட்களின் உற்பத்தியை அதிகரித்து, ஒரு உறுதியான பொருளாதாரத்தை உருவாக்கிட கீழ்க்கண்ட உற்பத்தித் திட்டம் 1984—85 ஆம் ஆண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

| | இலட்சம் டன்கள். |
|---|---|
| அரிசி .. .. .. .. | 65 |
| சிறு தானியங்கள் .. .. .. .. | 30 |
| பயறு .. .. .. .. | 5 |
| கரும்பு (வெல்லமாக) .. .. .. | 25 |
| பருத்தி .. .. .. .. | 5 இலட்சம் பேல்கள். |

**விதைப் பெருக்கத் திட்டம்—நெல் மற்றும் சிறு தானியம்:**

தற்பொழுது நெல் பயிரிடும் சாகுபடி பரப்பில் 10 சதம், கேழ்வரகு
பரப்பில் 15 சதம், சோளச் சாகுபடி பரப்பில் 7 சதம் மற்றும்
வீரிய ஒட்டு சிறு தானியப் பரப்பில் 40 சதம் என்ற அளவுகளில்
விதை விநியோகம் செய்யும் கொள்கையினை வேளாண்மைத்
துறை ஏற்றுள்ளது. அரசுக்குச் சொந்தமான 43 பண்ணைகளி
லும், மற்றும் தனியார் நிலங்களிலும் விதைகள் பெருக்கம் செய்
யப்படுகின்றன. கடந்த சில ஆண்டுகளாக நம் மாநிலத்தில்
வறட்சி நிலை நீடித்திருந்தமையால், உழவர்களிடம் இருந்த
விதைகள் யாவும் தீர்ந்து வேளாண்மைத் துறை அதிக அளவில்
விதைகளை விநியோகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.
1983-84 ஆம் ஆண்டின் நெல் விநியோக குறியீடான 13,500 டன்
களுக்கும் எதிராக கடந்த டிசம்பர் 1983 முடிய 18,458 டன்
விதை நெல் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. அதே போன்று
டிசம்பர் 1983 வரை 782 டன் சிறு தானிய விதைகள் விநியோகம்
செய்யப்பட்டுள்ளது.



**1984–85-க்கான திட்டம்—**

1984—85 ஆம் ஆண்டில் பின்வரும் அளவில் சான்றிதழ் பெற்ற விதைகளை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

| | மெ. டன். |
|---|---|
| நெல் .. .. .. .. .. | 13,500 |
| கேழ்வரகு .. .. .. .. | 212 |
| சோளம் .. .. .. .. | 161 |
| வீரிய ஒட்டுச் சோளம் .. .. .. | 157 |
| வீரிய ஒட்டுக் கம்பு .. .. .. | 432 |
| வீரிய ஒட்டு மக்காச்சோளம் .. .. | 128 |

வரும் 1984—85 ஆம் ஆண்டில் பின்வரும் அளவு தரமான விதைகள் கொள்முதல் செய்து அதிக பரப்பளவிற்கு விதைகளை விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

| | விதை அளவு மெ. டன். | விநியோகிக்கப்படும் பரப்பளவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | சதவீதம். |
| நெல் .. .. .. | 16,200 | 12 |
| கேழ்வரகு .. .. | 282 | 20 |
| சோளம் .. .. | 207 | 9 |
| வீரிய ஒட்டுச் சோளம் .. | 235 | 60 |
| வீரிய ஒட்டுக் கம்பு .. | 540 | 50 |
| வீரிய ஒட்டு மக்காச்சோளம் | 160 | 50 |

**பயறு வகைகள்:**

1983—84 ஆம் ஆண்டில் டிசம்பர் 1983 முடிய, சான்றிதழ்
பெற்ற விதைகள் உட்பட 1,281 டன் தரமான விதைகள் விநி
யோகம் செய்யப்பட்டுள்ளன. வரும், 1984—85 ஆம் ஆண்
டிற்கு, பயிரிடும் பரப்பில் 10 சதவீதம் பரப்பிற்கு விநியோகம்
செய்ய 2,600 டன் விதை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

புகையிலை :

நடப்பு 1983–84 ஆம் ஆண்டில், 440 கிலோ விதைகள் கொள்முதல் செய்து விநியோகிக்கத் திட்டமிடப்பட்டது. கடந்த டிசம்பர் 1983 முடிய 261 கிலோ புகையிலை விதைகள் கொள் முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. வரும் 1984–85 ஆம் ஆண்டில், 440 கிலோ விதை விநியோகிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

பருத்தி :

இறவைப் பருத்திப் பகுதியில் 15 சதம் மற்றும் மானாவாரி பருத்தி பகுதியில் 10 சதப் பரப்பிற்கு விதை விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த டிசம்பர் 1983 முடிய, 1,736 குவிண்டால் விநியோகிக்கப்பட்டுள்ளது. கோடைப் பருத்தி சாகு படிக்காக, 900 குவிண்டால் விநியோகம் செய்யப்படும்.

வரும் 1984-85 ஆம் ஆண்டில் 5,485 குவிண்டால் விதை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கரும்பு :

கரும்பு கரணை பெருக்கத் திட்டம், திட்டமிடப்பட்ட நாற்றங்கால் மூலமாக தரமான கரணை விநியோகத்திற்கு உதவு கிறது. டிசம்பர் 1983 முடிய, 26.60 எக்டரில் முதல் நிலை 194.10 எக்டரில் இரண்டாம் நிலை பண்ணைகள் மற்றும் 2,112.50 எக்டரில் (வணிக ரீதி) நாற்றங்கால் பண்ணைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

வரும் 1984–85 ஆம் ஆண்டில், 35 எக்டரில் முதல் நிலை 350 எக்டரில் இரண்டாம் நிலை மற்றும் 3,500 எக்டரில் வணிக முறை நாற்றங்கால்கள் அமைக்கக் திட்டமிடப்பட்டுள்ளன.

இயற்கை மற்றும் இராசயன உரங்கள்:

1983-84 ஆம் ஆண்டில், டிசம்பர் முடிய 2.54 இலட்சம் டன் கள் தழைச் சத்தும், 0.96 இலட்சம் டன்கள் மணிச் சத்தும், 0.94 இலட்சம் டன்கள் சாம்பல் சத்தும் கொண்ட உரங்கள் விவசாயி களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இரசாயன உரங்களைப் பெருமளவில் இயற்கை உரமான மக்கு உரத்தோடு பயன்படுத்து மாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இரசாயன உரங் களின் உபயோகம் ஆகஸ்ட் 1983 மாத இறுதி வரை குறைவாக இருந்தது. ஆனால் செப்டம்பர் மாதத்திலிருந்து உரங்களின் உபயோகம் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டது. இரசாயன உரங் களின் உபயோகம் இவ்வாண்டு 5.00 இலட்சம் டன்கள் என்ற அளவை அடையக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இரசா





யன உர உபயோகத்தை அதிகரிக்கும் நோக்குடன் இரசாயன
உரங்கள் குறைந்த அளவில் உபயோகிக்கப்படும். சேலம், தர்மபுரி
புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, மற்றும்
கன்னியாகுமரி மாவட்டம் ஆகிய ஆறு தேர்ந்தெடுக்கப்பட்ட
மாவட்டங்களில் தீவிர உர மேம்பாட்டுத் திட்டம் தொடர்ந்து
செயல்படுத்தப்படுகிறது. உரச் செலவை குறைப்பதற்கும், வய
லின் வளத்தை பாதுகாப்பதற்கும் உயிரின உர வகையினைச்
சார்ந்த நிலப் பச்சைப் பாசியை இரசாயன உரங்களுடன் நெற்
பயிருக்கு பயன்படுத்த விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு
வருகிறது. நடப்பு ஆண்டில் டிசம்பர் 1983 முடிய 870 டன்
நீலப் பச்சைப்பாசி பெருக்கம் செய்யப்பட்டு 0.87 இலட்சம்
எக்டர் நெல் பயிருக்கு வழங்கப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டு டிசம்பர் முடிய 75.14 இலட்சம் டன்கள்
உள்ளூர் கழிவு எரு, மற்றும் 3.28 இலட்சம் டன்கள் கழிவு எரு
ஆகியவைகள் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டன.

1984–85 ஆம் ஆண்டில், 3.75 இலட்சம் டன்கள் தழைச்சத்து
1.15 இலட்சம் டன்கள் மணிச்சத்து மற்றும் 1.15 இலட்சம் டன்
கள் சாம்பல் சத்துள்ள உரங்கள் உபயோகப்படுத்தப்படும். புன்
செய் நிலப் பயிர்களுக்கு இரசாயன உர உபயோகத்தை அதிகரிக்க
சிறப்பான அளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மானா
வாரி நிலங்களில் விதை மற்றும் உரமிடும் கருவிகள் பயன்படுத்து
வதன் மூலம் இரசாயன உரங்களின் உபயோகத் திறன் அதிகரிக்
கப்படும். மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாவட்டங்களில் தீவிர
உர மேம்பாட்டுத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.
தரக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் தொடர்ந்து மேலும் தீவிர
மாகச் செயல்படுத்தப்படும், நீலப் பச்சைப் பாசி ஒரு இலட்சம்
எக்டர் நெல் வயலுக்கு விநியோகிக்கப்படும். மற்றொரு உயிரின
உரமான அசோலா, தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு
விதைப் பண்ணைகளில் செயல் விளக்க அளவில் பயன்படுத்தப்
படுகிறது. இவை மேலும் பெருக்கம் செய்யப்பட்டு 1984-85-ம்
ஆண்டில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும். மக்கு
உர உற்பத்தி திட்டமும் உரிய கவனத்தைப் பெறும்.

பயிர் பாதுகாப்பு:

1983–84 ஆம் ஆண்டு டிசம்பர் 1983 முடிய 47.147 இலட்சம்
எக்டரிலும் 13.066 இலட்சம் எக்டரிலும் முறையே பூச்சி மற்றும்
நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் உணவு மற்றும் இதர பயிர்களில்
செயல்படுத்தப்பட்டுள்ளது. 1984–85 ஆம் ஆண்டு 56.501 இலட்
சம் எக்டரில் பூச்சி தடுப்பு நடவடிக்கைகளும், 16.727 இலட்சம்
எக்டரில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளும் உணவு மற்றும் இதர
பயிர்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

[1984 மார்ச் 21

1984 85 ஆம் ஆண்டு 7,300 டன்கள் தூள் பூச்சி மருந்தும் 6 இலட்சம் லிட்டர் திரவ பூச்சி மருந்தும் வேளாண்மைத் துறை கிடங்குகள் மூலம் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டு டிசம்பர் 1983 வரை 5,530 டன் தூள் மருந்தும் 2,67,469 லிட்டர் திரவ மருந்தும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

குருத்துப் பூச்சியை ஒழிக்க ஒட்டு மொத்த மருந்து தெளிக்கும் திட்டம் 40,000 எக்டரில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு, டிசம்பர் 1983 வரை 22,871 எக்டரில் மருந்து தெளிக்கப்பட்டது. பெரிய அளவில் தரை மட்ட பூச்சி மருந்து தெளிக்கும் இத் திட்டம் 1984-85 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

நெற் புகையானை ஒழிக்க பரந்த அளவில் மருந்து தெளிக்கும் திட்டம் 25,500 எக்டரில் செயல்படுத்தத் திட்டமிட்டு, டிசம்பர் 1983 வரை 23,028 எக்டரில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டம் 1984-85 ஆம் ஆண்டு 30,000 எக்டரில் செயல்படுத்தப்படும்.

1984–85 ஆம் ஆண்டு 7,480 பள்ளி ஆசிரியர்களுக்கு பயிரைத் தாக்கும் பூச்சி நோய்களைக் கண்டு கொள்வதற்கும், பூச்சி மருந்து மற்றும் மருந்தடிக்கும் சாதனங்களை உபயோகிக்கும் முறைகள் குறித்தும் ஒரு வட்டாரத்திற்கு 20 ஆசிரியர்கள் வீதம் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற பள்ளி ஆசிரியர்கள் விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லுவார்கள். 1983-84 ஆம் ஆண்டு டிசம்பர் வரை 6,812 ஆசிரியர்களுக்கு இத் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பூச்சி நோய் ஒழிப்பு செயல்முறை திட்டம் பூச்சி மற்றும் நோய் தாக்குதலால் அதிக அளவில் சேதமுண்டாக்கும்போது செய்ய வேண்டிய பயிர்ப் பாதுகாப்பு செயல் முறைகளை விவசாயிகளுக்கு செய்து காட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம். 1983-84 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் இரண்டு மாவட்டங்களில் 100 ஏக்கர் பரப்பில் இரண்டு பருவங்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டம் 1984-85 ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பூச்சி நோய் கண்காணிப்புத் திட்டம் (P st Surveilanc) பயிற்சி வழி தொடர்புத் திட்ட அலுவலர்களால் தீவிரமாக தமிழ் நாடு முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் விவசாயிகள் தக்க நேரத்தில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைக்கான பரிந்துரைகளைப் பெறவும் உடன் தடுப்பு நடவடிக்கை எடுக்கவும் உதவியாயிருக்கிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் எலி ஒழிப்பு சிறப்பு திட்டம் 24,000 எக்டரில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 1984-85 ம் ஆண்டும் செயல்படுத்தப்படும்.



1984 மார்ச் 21]

**உழவர் பயிற்சி மற்றும் கல்வித் திட்டம்:**

தமிழ் நாட்டில் மாவட்டத்திற்கு ஒன்று வீதம் மொத்தம் 14 உழவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன.

1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரைக்கான சாதனை விவரமும், 1984-85 க்கான திட்டக் குறியீடுகளும் பின்வருமாறு :—

| வரிசை எண். | பயிற்சி வகை. | 1983-84: 31-12-1983 வரைக்கான சாதனை. | 1983-84: எதிர் பார்க்கப் படும் ஆண்டு சாதனை. | 1984-85: திட்டக் குறியீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | ஆண்/பெண் விவசாயிகளுக்கான நிலையப் பயிற்சி. | 183 | 37 | 220 |
| 2. | உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கான நிலையப் பயிற்சி. | 65 | .. | 65 |
| 3. | கிராமப்புற களப் பயிற்சியும் செயல் விளக்கங்களும். | 727 | 276 | 1,100 |
| 4. | பெண்களுக்கான செயல் விளக்கப் பயிற்சி. | 101 | 9 | 110 |

**வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகள்:**

தமிழ்நாட்டில் 13 வேளாண்மை பள்ளிகள் உள்ளன. அவை கிராமிய இளைஞர்கள் அறிவியல் வேளாண்மை நுணுக்கங்களையும் அவற்றில் செயல் திறனும் பெற பயிற்சி அளிக்கின்றன. ஆண்டு தோறும் 260 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றார்கள். இத்திட்டம் 1984-85-லும் தொடரும்.

**விதைப் பரிசோதனைக் கூடம்:**

தமிழ்நாட்டில் 3 விதைப் பரிசோதனைக் கூடங்கள் உள்ளன.

விதைப் பரிசோதனைககூடங்களின் இலக்குகள் மற்றும் சாதனைகள் கீழ்வருமாறு :—

| விதை பரிசோதனைக் கூடங்கள். | இலக்கு 1983-84 | சாதனை 12/83 வரை | எதிர் பார்க்கப் படும் சாதனை 1983-84. | இலக்கு 1984-85 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. கோயம்புத்தூர் .. | 10,000 | 8,097 | 10,000 | 10,000 |
| 2. மதுரை .. | 10,000 | 8,767 | 10,000 | 10,000 |
| 3. குடுமியான்மலை .. | 5,000 | 1,126 | 3,000 | 5,000 |

மண் ஆய்வுக்கூடங்கள்:

தமிழ் நாட்டின் மாவட்டங்களில் 15 மண் ஆய்வுக்கூடங்கள் செயல்படுகின்றன. இது மட்டுமன்றி 16 நடமாடும் மண் ஆய்வுக் கூடங்களும் இம்மாநிலத்தில் உள்ளன. மேலும் காஞ்சிபுரம், ஆடுதுறை மற்றும் கோவில்பட்டி மண் ஆய்வுக் கூடங்களில் சிறப்பான சகவதிள் செய்யப்பட்டு நுண்ணூட்ட உரங்களான மாங்கனீசு, துத்தநாகம், இரும்பு, தாமிரம் முதலியவற்றையும் ஆய்வு செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. 1983 டிசம்பர் திங்கள் முடிய 4.95 இலட்சம் மண் மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

மண் மாதிரிகள் தவிர, பாசன நீர் மாதிரிகளும் மண் ஆய்வுக் கூடங்களிலும், நடமாடும் மண் ஆய்வுக் கூடங்களிலும் ஆய்வு செய்யப்படுகின்றன.

உரக்கட்டுப்பாடு சோதனைக் கூடங்கள்:

தமிழ்நாட்டில் மொத்தம் 6 உரக் கட்டுப்பாடு சோதனைக் கூடங்கள் உள்ளன. ஆண்டில் 9,360 உர மாதிரிகள் ஆய்வு செய்யும் திறன் பெற்றுள்ளன. 1983 டிசம்பர் திங்கள் முடிய 5,628 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு 498 தரம் குறைந்த உர மாதிரிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அம்மாதிரிகளில் 105 பதிவு செய்யப்பட்ட உரிமங்கள் நிறுத்தப்பட்டன. 183 மாதிரிகளுக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. 7 மாதிரிகள் குறித்து நீதிமன்றம் வரை எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

பூச்சிக்கொல்லி மருந்து பரிசோதனைக் கூடங்கள்:

பூச்சி பூசன மற்றும் களைக் கொல்லி மருந்துகளின் மாதிரிகள் 9 பூச்சி மருந்து ஆய்வுக்கூடங்களில், ஆய்வு செய்யப்படுகின்றன வருடத்திற்கு 16,200 பூச்சி மருந்து மாதிரிகள் பரிசோதனை செய்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



11,534 பூச்சிக் கொல்லி மாதிரிகள் டிசம்பர் 1983 திங்கள் முடிய ஆய்வு செய்யப்பட்டு, அவைகளில் 172 மாதிரிகள் தரம் குறைந்தவை எனக்கண்டுபிடிக்கப்பட்டு 64 மாதிரிகளுக்கு துறை மூலமாக நடவடிக்கையும், 7 மாதிரிகளுக்கு சட்டத்தின் மூலம் நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள மாதிரிகள் நடவடிக்கையில் உள்ளன.

மண்வள ஆய்வு மற்றும் நில உபயோக அமைப்பு:

இம்மாநிலத்தில் 4 மண் ஆய்வுப் பிரிவுகள் வேலூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களிலுள்ளன. எல்லா மாவட்டங்களுக்கான மண் வள தகுதி குறித்த அறிக்கைகள் இம்மாநிலத்தில் முதன்முறையாக 1984-85 ஆம் ஆண்டில் வெளியிடப்படும்.

1984—85 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்:

தற்சமயம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை தவிர கீழ்க்காணும் புதிய திட்டங்கள் 1984–85 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

(1) நடைமுறையில் உள்ள விதை சுத்தகரிப்பு நிலையங்களை விரிவுபடுத்துதல்:

செங்கல்பட்டு, தென் ஆற்காடு, சேலம் மதுரை, மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் அமைந்துள்ள விதை சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்புத் திறனை அதிகரிக்க 'பிரி கிளீனர்' 'பக்கெட் எலிவேட்டர்' 'ஏர் கம்ப்ரசர்' போன்ற கருவிகளை அமைத்து விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதிக விதை உற்பத்திக்கும் விநியோகத்திற்கும் தக்கவாறு இந்த சுத்திகரிப்பு நிலையங்களின் விரிவுப்பணி செயலாக்கப்பட உள்ளது.

(2) வீட்டு விவசாயம் :

முருங்கை, பப்பாளி போன்ற பலன் தரும செடிகளை வளர்த்து, சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களின் வீட்டு புழக்கடையில் நடுவதற்கு விநியோகம் செய்ய இப்பொழுது திட்டமிடப்பட்டுள்ளது.

**(3) அரசு விதைப் பண்ணைகளின் பாசன வசதியை அதிகரித்தல்:**

ஒரு சில தேர்ந்தெடுக்கப்பட்ட விதைப் பண்ணைகளில் தண்ணீரைத் தேக்கி வைக்கும் குளங்களை அமைத்தல், பி.வி.சி. குழாய்களை நிலத்தடியில் அமைத்தல், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களை அமைத்தல், புதிய கிணறுகளைத் தோண்டுதல் போன்ற பணிகளைச் செய்து பாசன வசதிகளைப் பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது. அடிப்படை விதை பெருக்கத்தை அதிகரித்து, அதிக அளவு சான்றிதழ் பெற்ற விதைகளை உற்பத்தி செய்ய பண்ணைகளில் பாசன வசதியை அதிகரிப்பது அவசியமாகிறது.

**(4) வைகை அணைப் பண்ணையில் பருத்தி மூல விதை (1) மற்றும் (2) உற்பத்தி.**

வைகை அணைப் பண்ணையில் உள்ள வசதிகளைப் பெருக்கி விவசாயத் துறைக்குத் தேவைப்படும் மேம்பட்ட பருத்தி ரகங்களின் மூல விதை 1 மற்றும் 2 உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**(5) விதை ஆய்வுக் கூடம், குடுமியான் மலை:**

இங்கு பணியாளர் அமைப்பை விரிவுபடுத்தி, விதைக் கட்டுப்பாடு பணியினை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(6) கோவையில் அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல்.**

இத்துறையைச் சார்ந்த எல்லா அலுவலகங்களையும் ஒரே இடத்தில் இயக்க அலுவலகக் கட்டிடம் ஒன்றை 1984–85 ஆம் ஆண்டு கோவையில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**(7) மானிய விலையில் விதை மற்றும் உரமிடும் கருவி வழங்குதல்:**

மாவட்டத்திற்கு ஏற்ற மாதிரி கருவிகளைத் தெரிந்தெடுத்து கிடைக்குமிடத்திலிருந்து அவற்றினை வாங்கி மானிய விலையில் மானாவாரி உழவர்களுக்கு வழங்குவதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும் இக்கருவி இயங்கும் முறை, செயல் விளக்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லப்படும்.



**(8) சொட்டு நீர்ப்பாசனத் திட்டம்:**

நீரின் உபயோகத்தை சிக்கனப்படுத்த 30 சதம் அல்லது ரூ. 3,000 இவற்றில் குறைந்த அளவை மானியமாக அளித்து தமிழகத்தில் சொட்டு நீர்ப்பாசன நிருபண அமைப்புகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(9) பரமக்குடியில் உழவர் பயிற்சி நிலையம் ஒன்று அமைத்தல்:**

வறட்சி சார்பு பகுதித் திட்டத்தின் உதவி திரும்ப பெறப்பட்டதால் மூடப்பட்ட பரமக்குடி உழவர் பயிற்சி நிலையத்தை மறுபடியும் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(10) டச்சு நாட்டு உதவியுடன் உழவர் பயிற்சி நிலையத்தில் வேளாண் பெண்களுக்கு பயிற்சி அளித்தல்**

''டானிடா'' உதவி பெற்று பெண்களுக்குப் பயிற்சி அளிக்க ஆறு தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் உழவர் பயிற்சி நிலையங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## வேளாண்மைப் பொறியியல் துறை

பொறியியலின் பல்வேறு பிரிவுகளின் உத்திகளையும், நுணுக்கங்களையும், வேளாண்மையில் புகுத்தி, வேளாண்மைத் தொழிலில் உண்டாகும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியில் வேளாண்மைப் பொறியியல் துறை முனைந்துள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறை பல வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. இயற்கையின் சீற்றங்களின் போது நிவாரணப் பணிகளை மேற்கொள்கின்றது. சில சிறப்புத் திட்டங்களையும் செயலாக்கி வருகின்றது. வேளாண்மைப் பொறியியல் துறையின் 1983–84 ஆம் ஆண்டிற்கான பணி விவரங்கள் கீழ்வருமாறு:—

**வளர்ச்சித் திட்டங்கள்:**

1. நில மேம்பாட்டுத் திட்டம்.
2. சிறுபாசனத் திட்டம்.
3. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புத் திட்டம்.
4. பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

[1984 மார்ச் 21

**நிலமேம்பாட்டுத் திட்டம் ;**

புதிய நிலங்களைத் திருத்தி சமன்படுத்திடலும், பண்ணையின்
சாகுபடிப் பணிகளுக்கென இயந்திரங்களும், கருவிகளும்
வழங்கி உதவிடுதலும் இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்
படும் முக்கிய பணிகளாகும்.

நிலத்தைச் சமன்படுத்துவதனால் கூடுதலான நிலங்கள் சாகு
படிக்கு வருகிறது. நீர்ப்பாசனம் செவ்வனே செய்ய உதவுவ
தோடு சாகுபடிப் பணிகளையும் இலகுவாக்குகின்றது. இதன்
மூலம் சாகுபடித் திறனும் உயருகின்றது. இயந்திரச் சாகுபடிப்
பணிகளின் கீழ் ஆழ்உழவு, பரம்படித்தல் முதலிய பணிகள்
டிராக்டர் உதவியுடன் திறமையாகவும், குறைவான செலவிலும்
செய்து முடிக்கப்படுகின்றன. கூடுதலான நிலங்கள் சாகுபடிக்குக்
கொணரப்படுவதோடு, சாகுபடிப் பணிகளிலுள்ள கடினமும்
பளுவும் குறைகிறது. தேவையான உழவர்கட்கு புல்டோசர்கள்
வாடகைக்கு கொடுக்கப்பட்டு நிலங்கள் சமன்படுத்தப்படுகின்றன.
இயந்திர சாகுபடிப் பணிகளின்கீழ் டிராக்டர்களும் இதரக் கருவி
களும் உழவர்கட்கு வாடகைக்கு விடப்பட்டு துறையினரால்
செயலாக்கப்படுகின்றன. 1983—84-ல் ஜனவரித் திங்கள் முடிய
5,600 எக்டர் பரப்புள்ள நிலங்களில் நிலச்சமன்பாட்டுப்
பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1984—85 ஆம் ஆண்டில்
7,000 எக்டர் நிலங்களை சமன் செய்யத்திட்டமிடப்பட்டுள்ளது.
1983—84 ஜனவரித் திங்கள் முடிய 25,636 எக்டர் நிலப்பரப்பில்
டிராக்டர் கொண்டு உழவு முதலிய பணிகள் மேற்கொள்ளப்
பட்டுள்ளன. 1984—85-ல் 21,500 எக்டர் பரப்பில் பணி
களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

**சிறுபாசனத் திட்டங்கள் ;**

தமிழ்நாட்டில் உள்ள மேல்நிலை நீர்வளம் ( Surface water )
முழுவதும் பயன்படுத்தப்பட்ட நிலையில், பாசன வசதிபெற்ற
நிலங்களுக்குத் தொடர்ந்து பாசன வசதி கொடுத்திடவோ
பாசனப் பரப்பைக் கூட்டிடவோ, நிலத்தடி நீரை ( Ground
water) உபயோகிக்க வேண்டியது அவசியமாகிறது. வேளாண்
மைப் பொறியியல் துறையின் சிறுபாசனத் திட்டங்கள் நிலத்தடி
நீரை வெளிக்கொணர்ந்து பாசனத்திற்குப் பயன்படச் செய்திடும்
நோக்கம் கொண்டவையாகும். புதிய குழாய்க்கிணறுகள், வடி
முனைக் குழாய்க் கிணறுகள், சமுதாயக் கிணறுகள் அமைத்து
இப்பணி நிறைவேற்றப்படுகின்றது. புதிய கிணறுகள் அமைப்ப
தற்கு முன்பாக, புவிப் பௌதீக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு
ஊற்று மிகுந்த இடங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. எங்கு
நீர் கிடைக்குமென்பதும் எவ்வளவு நீர் கிடைக்குமென்பதும்
எத்தகைய நீர் கிடைக்குமென்பதும் இத்துறையினரிடமுள்ள



1984 மார்ச் 21]

மின் பொறி கருவி மூலமும், ரெசிஸ்டிவிடி மீட்டர் மூலமும்
இத்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டு உழவர்கட்கு அறிவுரை
கொடுக்கப்படுகிறது. இதன் மூலம் புதுக் கிணறுகள் பயனுள்ள
வைகளாக அமைந்து உழவர்கள் பெரிதும் பயனடைகின்றனர்.
பயனற்ற கிணறுகளும் குறையும் வாய்ப்புள்ளது.

கடினப் பாறைப் பகுதிகளிலும், மணற்பாங்கான பகுதி
களிலும், குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. குறைவான
ஆழத்தில் நீர்வளம் மிகுந்த மணற்பாங்கான பகுதிகளில் வடி
முனைக்குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. ஏற்கனவே
உள்ள கிணறுகளில் நீர்வளம் குறைந்து வறண்டு விடும்போது
பாறைகளைத் தகர்த்து ஆழப்படுத்தியும், பக்கவாட்டிலும், அடி
மட்டத்திலும் துளையிட்டும் நீர்வளம் பெருக்கப்படுகிறது.
வேளாண்மைப் பொறியியல் துறையிடமுள்ள இயந்திரங்கள்
உழவர்கட்கு வாடகைக்கு வழங்கப்படுகின்றன. பணிகள் துறை
யினரால் செயலர்க்கப்படுகின்றன.

நிலத்தடி நீரை உபயோகிக்க அனைத்து முயற்சிகளும் மேற்
கொள்ளப்பட்டிருப்பது போல், நிலத்தடி நீர் வளம் சேர்ப்பித்த
லும் மிக முக்கியமானதொரு பணியாகும். கசிவு நீர்க் குட்டை
கள் கட்டுதல், தடுப்பணைகள், வண்டல் தடுப்புக் குட்டைகள்
கட்டுதல் முதலிய பணிகள் மூலம் நிலத்தடி நீர்வளத்தைப்
பெருக்கிட முடியும். கசிவு நீர்க் குட்டைகள் தம் கீழ்ப்பகுதியி
லுள்ள கிணறுகளில் நீர் கூட உதவுகின்றன. இத்துறை மண்
வளப் பாதுகாப்புப் பணியாகவும், வறட்சிகளின்போது, நிவா
ரணப் பணியாகவும் கசிவு நீர்க் குட்டைகளையும், தடுப்பணை
களையும், வண்டல் தடுப்புக் குட்டைகளையும் கட்டி வந்
துள்ளது.

சிறுபாசனத் திட்டங்களின் கீழ் 1983-84-ல் ஜனவரித் திங்கள்
முடிய 3,514 குழாய்க் கிணறுகளும், 2,717 வடிமுனைக் குழாய்க்
கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன. 1965 கிணறுகளில்
பாறையைத் தகர்த்து ஆழப்படுத்தியும், 2,710 கிணறு
களில் துளையிட்டும், நீர்வளம் பெருக்கப்பட்டுள்ளது. இப்
பணிகள் மூலம் 21,144 எக்டர் நிலங்கட்கு பாசன வசதி
தக்க வைக்கப்பட்டும், புதிதாய் தரப்பட்டும் உள்ளது. 1984-85
ஆம் ஆண்டில் 4,800 தனியார் குழாய்க் கிணறுகள் அமைக்
கவும், 2,900 வடிமுனைக் குழாய்க்கிணறுகள் அமைக்கவும்
5,300 கிணறுகளில் நீர்வளம் பெருக்கவும் திட்டமிடப்பட்
டுள்ளது.

நிலத்தடி நீர் நிறுவனத்தை வளப்படுத்தும் திட்டத்தின்கீழ், நிலத்தடி நீரைக் கொணரும் உத்திகளிலும், கூட்டமைப்புகளிலும் உள்ள குறைபாடுகள் கண்டறியப்படுகின்றன. வெவ்வேறு நிலையில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட வேண்டிய முறைகள் பற்றி அறிவுரைக் குறிப்புகள் தயாரிக்கப்படுகின்றன. இவ்வாண்டு ரூ. 94 இலட்சம் மதிப்புள்ள இயந்திரங்கள் மத்திய அரசின் நிதி உதவியோடு இந்நிறுவனத்திற்காக வாங்கப்பட உள்ளன.

**மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு:**

நீரும் நிலமும் மனித இனத்திற்கு இயற்கை தந்த செல்வங்களாகும். வேளாண்மைக்கு நீரும் நிலமும் தான் மூலாதாரங்கள். மழையாலும், காற்றாலும் வளமான மேல் மண் அரித்துச் செல்லப்படுகிறது. அரித்துச் செல்லப்படுகிற மண் பாசனக் கால்வாய்களிலும் வாய்க்கால்களிலும் நீர் நிலைகளிலும் வண்டலாய படிகின்றது. இந்தச் சூழ்நிலையில், வேளாண்மை உற்பத்தி பெருக்கப்பட வேண்டுமானால், வளமிக்க மண் பாதுகாக்கப்பட்டு, முறையாக பராமரிக்கப்பட்டு, மேலும் வளம் பெருக்கப்பட வேண்டும். மண் அரிப்பால் பாதிக்கப்பட்ட நிலங்கள் திருத்தப்பட்டு, மீட்கப்பட்டு முறையாக உபயோகப்படவேண்டும். நீர் நிலைகளில் வண்டல் படிவது குறைக்கப்படவேண்டும். மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் அனைத்தும் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு தேடித் தரக்கூடிய பலனுள்ள திட்டங்களாகும்.

தமிழ்நாடு முழுவதும் மலைகளிலும் சமவெளிப் பகுதிகளிலும் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப்படுகின்றன. காற்றினால் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்கும் பணி, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்றது. தென் ஆற்காடு மாவட்டத்தில் ஆழ் ஓடைச் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கோவை, நீலகிரி மாவட்டங்களில் குந்தா, கீழ்பவானி நதி நீர்ப் பள்ளத்தாக்குகளின் நீர்ப் பிடிப்பு பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப்படுகின்றன. மதுரை மாவட்டத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர் பகுதிகளிலும் மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1983-84



ஜனவரித் திங்கள் முடிய சாதனை விவரங்களும், 1984–85 ஆம் ஆண்டின் திட்ட விவரங்களும் கீழ்வருமாறு :—

| | சாதனை 1983–84 ஜனவரி முடிய எக்டரில். | இலக்கு 1984–85 எக்டரில். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 மலை மற்றும் சமவெளிப்பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு. | 37,331 | 50,000 |
| 2 காற்றரிப்பு தடுப்புத் திட்டம், திருநெல்வேலி. | 901 | 1,000 |
| 3 காற்றரிப்பு தடுப்புத் திட்டம், போடி. | 1,669 | 1,600 |
| 4 ஆழ்ஓடைச் சீரமைப்பு .. | 825 | 1,000 |
| 5 குந்தா, கீழ்பவானி நதி நீர்ப் பள்ளத் தாக்குகளின் நீர்ப் பிடிப்பு பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பு. | 1,539 | 1,850 |
| 6 மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு. | 716 | 750 |

**பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :**

நீர் பராமரிப்புப் பணிகளைச் செயலாக்குவதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. 1967 ஆம் ஆண்டிலிருந்து காவிரிப் பாசனப் பகுதியிலும் 1969 ஆம் ஆண்டிலிருந்து சாத்தனூர் பாசனப் பகுதியிலும் நீர் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறையின் அங்கமாக விளங்கிய வேளாண்மைப் பொறியியல் துறை இப்பணிகளை செயலாக்கி வருகின்றது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மத்திய அரசின் உதவியோடு பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீர் பராமரிப்புப் பணிகள், காவிரி, பெரியாறு, வைகை, கீழ் பவானி ஆகிய பாசனப் பகுதிகளில் செயலாக்கப்படுகின்றன. ஒவ்வொரு வயலுக்கும் பாசன வாய்க்கால்களும், வடிகால் வாய்க்கால்களும் அமைத்தலும், நிலச் சமன்பாடு, நிலச் சீர்திருத்தம் செய்தலும், நீர்சுழற்சி முறையைப் புகுத்தலும் இத் திட்டத்தில் செய்யப்படும் முக்கிய நீர் பராமரிப்புப் பணிகளாகும்.

1983க8௨ ஆம் ஆண்டில் ஜனவரித் திங்கள் முடிய காவிரிப் பாசனப் பகுதியில் 9,419 எக்டர் பரப்பிலும், பெரியாறு வைகை பாசனப் பகுதியில் 9,236 எக்டர் பரப்பிலும், கீழ் பவானி பாசனப் பகுதியில் 2,456 எக்டர் பரப்பிலும் நீர் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேறும் வரை, பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்,மேலும் விரிவாக்கப்பட்டு வேளாண்மைப் பொறியியல் துறையினரால் தொடர்ந்து செயலாக்கப்படும். 1984-85 ஆம் ஆண்டில், 13,800 எக்டர் பரப்பில் காவிரி பாசனப் பகுதியிலும், 19,500 எக்டர் பரப்பில் பெரியாறு வைகை பாசனப் பகுதியிலும் 7,500 எக்டர் பரப்பில் கீழ் பவானி பாசனப் பகுதியிலும், 1,000 எக்டர் பரப்பில் சாத்தனூர் பாசனப் பகுதியிலும், நீர் பராமரிப்புப் பணிகள் செயலாக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனப் பகுதியிலும் இத்திட்டத்தினைச் செயலாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**இயற்கையின் சீற்றங்களின்போது செயலாக்கப்பட்ட நிவாரணப்பணிகள் கசிவு நீர் குட்டைகள் கட்டுதல்.**

வறட்சி நிலவும்போது, கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பின்றி இருக்கும் மக்களுக்கு வேலைவாய்ப்பளித்திடவும், உபயோகமுள்ள நிரந்தரமான சமுதாய சொத்துக்களை தோற்றுவித்திடவும், ''கசிவு நீர்க் குட்டைகள்'' கட்டப்படுகின்றன. நிலங்களில் பயிர்கள் வாடிப்போய், வேலைவாய்ப்பின்றி தவித்திடும் மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதோடு நிலத்தடி நீர்வளம் பெருக்கவும், சுற்றிலுமுள்ள கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்திடவும், கசிவு நீர்க் குட்டைகள் உதவுகின்றன. வண்டல் தடுப்புக் குட்டைகளாகவும் அருகாமையிலுள்ள மக்களுக்கும் ஆடுமாடுகளுக்கும் பயன்படுகிற சமுதாய நீர்நிலைகளாகவும் கசிவுநீர்க் குட்டைகள் விளங்குகின்றன.

1983 ஆம் ஆண்டு நிலவிய கடும் வறட்சியின்போது இத்துறை 287 கசிவுநீர்க் குட்டைகளை 147.16 இலட்சம் செலவில் கட்டி முடித்தது, வேலை வாய்ப்படைந்தோர்க்கு கூலியின் பகுதியாக 548.10 மெட்ரிக் டன் கோதுமை வழங்கப்பட்டது. இப்பணிகள், 19.20 இலட்சம் மனித நாட்களுக்கான வேலை வாய்ப்பை வழங்கியுள்ளன.

**வெள்ளத்தினால் மணல் மேடிட்ட நிலங்களை மீட்டல்:**

தமிழ்நாட்டில் 1983 டிசம்பர் திங்களில் பெய்த கடும் மழையால், தஞ்சாவூர், தென் ஆற்காடு, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் மிகுந்த பாதிப்பு ஏற்பட்டது. வெள்ளத்தினால் மணல் மேடிட்ட விளை நிலங்களை மீட்கும் பணியை வேளாண்மைப் பொறியியல் துறை மேற்கொள்ளும். பாதிப்பு கணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இப்பணிக்காக அரசு ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.



**சிறப்புத் திட்டங்கள்:**

**5000, வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைத்தல்:**

தற்போது மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் பாசனத்திற்குத் திறந்துவிடப்படுவதில் நிலவும் உறுதியற்ற நிலையில், நிலத்தடி நீரையும் மேல்நிலை நீரையும் ஒருங்கே உபயோகித்து பயிர்கள் காக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நிலத்தடி நீர் வளத்தினை வெளிக் கொணர்ந்து உபயோகித்திடும் வகையில், இத்துறை 5,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைத்திடும் விரைவுத் திட்டம் ஒன்றினைச் செயலாக்கி வருகின்றது. இதுவரை 2,567 வடிமுனைக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பணி 1984-85 லும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**கிராமங்களில் நிலமற்றோர் வேலை வாய்ப்ப உத்திரவாதத் திட்டம்.**

கிராமங்களில் வாழும் நிலமற்ற மக்களின் ஏழ்மை நிலை போக்கப்பட வேண்டும். சாகுபடிப் பணிகள் ஏதும் இல்லாத காலங்களில், வேலைவாய்ப்பின்மையால் ஏற்படும் ஏழ்மை நிலையினைப் போக்கிட சீரியதொரு திட்டம் தீட்டி செயலாக்கிட வேண்டும் என்பதால் தமிழக அரசு ஊரக நிலமற்றோருக்காக வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டமொன்றைத் தொடங்கியுள்ளது. இத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன.

(1) ஒவ்வொரு நிலமற்ற குடும்பத்தினருக்கும் ஆண்டுக்கு 100 நாட்களுக்காவது வேலை வழங்கிடும் வண்ணம் வேலை வாய்ப்புக்களை உருவாக்கிடுதலும், பெருக்கிடுதலும்.

(2) ஊரக பொருளாதார நிலையை விரைந்து பெருக்கிட ஏதுவாக நிரந்தரமான உபயோகமுள்ள சொத்துக்களை, கட்டுமானங்களை உருவாக்குதல்.

இத் திட்டத்தின்கீழ் வேளாண்மை பொறியியல் துறை, கசிவு நீர்க் குட்டைகள் கட்டுதல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், சம உயர, கற்சுவர் அமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல் முதலிய பணிகளை மேற்கொள்ள இருக்கின்றது. 1983–84, 1984–85 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகட்காக ரூ. 4,452.02 இலட்சம் மதிப்புள்ள திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அதில் ரூ. 1,433.82 லட்சம் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

நிலம் மற்றும் நீர் உபயோகக் குழு :

நிலத்தினையும், நீரினையும் உபயோகித்திடும் முறைபற்றியும் அளவு பற்றியும், இடையூறுகள் பற்றியும் புள்ளி விவரங்கள் சேகரிக்கவும் நிலம் மற்றும் நீர் மேம்பாட்டில் ஈடுபட்டுள்ள பல் வேறு துறைகளில் பணிகளை முறையாக நெறிப்படுத்தவும், ஆராய்ச்சி நிறுவனங்களிடமிருந்து ஆராய்ச்சி முடிவுகளை பெற்றுவழங்கிடவும் ஏதுவாக நில மற்றும் நீர் குழு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. தலைமைப் பொறியாளர் (வேளாண் மைப் பொறியியல்) தகுதியிலுள்ள ஒருவரை இக்குழுவுக்கு சிறப்பு அலுவலராக நியமித்துள்ளது. இக்குழு நில மற்றும் நீர் உபயோகத்தில் பெரிதும் பயன்விளைவிக்கும் வண்ணம் திட்டமிடுதலையும் பராமரிப்பையும் மேம்படுத்தும்.

-புதிய திட்டங்கள்.

1984-85 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய திட்டங்களை செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

1. தலைமையிடத்தில் ''திட்டக்குழு'' உருவாக்குதல் ;

திட்டப் பணிகளைக் கவனித்திட தற்பொழுது தலைமைப் பொறியாளர் (வே. பொ.) அலுவலகத்தில் தனியாக திட்டக் குழு ஏதும் இல்லை. திட்டப் பணிகள் சிறப்பாக கவனிக்கப்பட 'திட்டக் குழு' ஒன்றை தலைமையிடத்தில் உருவாக்கித் திட்ட மிடப்பட்டுள்ளது.

2. சாத்தனூர் பாசனப் பகுதியில் கூடுதல் உப கோட்டம் அமைத்தல்

தற்பொழுது சாத்தனூர் பாசனத் திட்டத்தில் இடது கரை கால்வாயின் பாசனப்பகுதியில் நீர் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வலதுகரை கால்வாய் பாசனப் பகுதிகளிலும் நீர் பராமரிப்புப் பணிகள் மேற்கொண்டிட 1984-85 ஆம் ஆண்டில் ஒரு உப கோட்டம் அமைக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆண்டுதோறும் 1,000 ஹெக்டர் நிலங்களில் பணி மேற்கொள்ளப்படும்.

3. காவிரி பாசனப் பகுதியில் கூடுதல் கோட்டம் அமைத்தல்.

காவிரி பாசனப் பகுதியில் நீர் பராமரிப்புப் பணிகள் செய லாக்கப்படுகின்றன. காவிரி பாசனப் பகுதியின் பரப்பு முழுவதும் இப்பணிகள் செயலாக்கப்பட வேண்டும். தற்போதுள்ள பணிகளை முடிக்க அதிகப் பரப்பில் பணிகளை மேற்கொள்ளும் நோக்குடன் 1984-85 ல் ஒரு கூடுதல் கோட்டம் உருவாக்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் ஆண்டுதோறும் கூடுதலாக 7500 ஹெக்டர் பரப்பில் இப்பணிகள் இக்கோட்டம் மூலம் மேற்கொள்ளப்படும்.





4. இரண்டு புதிய புல்டோசர்கள் வாங்குதல் ;

நீர்வளத்தை முறையாகவும் திறமையாகவும் உபயோகித்திட நிலச் சமன்பாடு அவசியமாகிறது. பாசனப் பகுதிகளில் நிலச் சமன்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள 1984–85-ல் 2 புதிய புல்டோசர்கள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

5. ஐந்து புதிய இன்வெல் துளைக் கருவிகள் வாங்குதல் ;

நீர்பாசன வசதிமிக்க பாசனப்பகுதிகளில் நிலத்தடி நீர் வளம் மிகுதியாகவுள்ளது. பருவமழை பொய்த்துப் போகும் பொழுது பாசனப் பகுதிகளிலும் நீர்த்தட்டுப்பாடு ஏற்படு கிறது. இந்நிலையை முறியடித்திட நிலத்தடி நீர் வெளிக் கொணரப்பட்டு ஒருங்கிணைந்த முறையில் உபயோகப்படுத்தப் பட வேண்டும் நிலத்தடி நீர்வளத்தினை உபயோகித்திடும் வகையில் 1984-85-ல் 5 துளைக் கருவிகள் வாங்க திட்ட மிடப்பட்டுள்ளது.

6. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அலுவலகத் திற்குப் புதிய கட்டிடம் கட்டுதல்.

தற்பொழுது வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலகம் வாடகைக் கட்டிடம் ஒன்றிலிருந்து இயங்கி வருகிறது. நந்தனத்திலுள்ள தலை மைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அலுவலகத் திற்கு ஒரு புதிய கட்டிடம் கட்ட திட்டமிடப் பட்டுள்ளது.

7. காற்றாலைகள் அமைத்தல் ;

காற்றாலைகள் அமைத்து காற்றிலிருந்து கிடைக்கின்ற விசையை உபயோகித்திடும் உத்திகளையும் செலவினையும் கண்டறிந்திட 6 காற்றாலைகள் அமைக்க திட்டமிடப் பட்டுள் ளது.

எண்ணை வித்துக்கள் துறை.

தமிழ்நாட்டில் எண்ணெய்வித்துக்கள் மற்றும் தென்னை உற்பத்திக்கு தனிக்கவனம் செலுத்த இத்தனித் துறை 3-11-1980 அன்று தமிழ்நாடு அரசினால் உருவாக்கப்பட்டது.

[1984 மார்ச் 21

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனை அதிகரித்து, அதன்மூலம் மொத்த உற்பத்தியை அதிகரிப்பதும், இதன் மூலம் நாட்டிற்குத் தேவைப்படும் உணவு எண்ணெய் உற்பத்தியை அதிகரித்து இறக்குமதியைக் குறைப்பதும் இத்துறையின் முக்கிய குறிக்கோளாகும். இந்தியத் துணைக் கண்டத்தில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யும் முக்கியமான மாநிலங்களில் தமிழகம் ஒன்றாகும். இந்தியத் துணைக் கண்டத்தில் ஆண்டொன்றிற்கு உற்பத்தியாகும் மொத்தமான 114 இலட்சம் டன்கள் எண்ணெய் வித்துக்களில் தமிழ்நாட்டில் மட்டும் ஆண்டொன்றிற்கு 15 இலட்சம் டன்கள் உற்பத்தியாகின்றன.

**1983—84 ஆம் ஆண்டின் சாதனைகள்.**

தமிழகத்தில் சாகுபடியாகும் எண்ணெய் வித்துக்களில் 70 சதவீதத்திற்கு மேல் மானாவாரியாக உள்ளதால், அவற்றின் உற்பத்தித் திறனும் மொத்த உற்பத்தியும் நல்ல பருவ மழையைப் பொறுத்தே முழுமையாக அமைகின்றன. தமிழ் நாட்டில் விளையும் எண்ணெய் வித்துக்களில் முக்கியமானது நிலக்கடலையாகும்.

நடப்பு 1983–84 ஆம் ஆண்டில் பருவமழை தவறிய நிலையிலும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் உண்டான முன்னேற்றம் கீழே கூறப்பட்டுள்ளது:—

1984 ஜனவரி மாதம் முடிய 13.52 இலட்சம் ஹெக்டேர்களில் பல எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டு முடிவில் 14.54 இலட்சம் ஹெக்டேர்களில் எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்பட்டு 14.25 இலட்சம் டன்கள் உற்பத்தி இலக்கினை எய்த எதிர்பார்க்கப்படுகின்றது.



1984 மார்ச் 21]

வரும் 1984–85 ஆம் ஆண்டில், 14.60 இலட்சம் மெட்ரிக் டன்கள் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

பரப்பளவு இலட்சம் ஹெக்டேர்களில் உற்பத்தி இலட்சம் மெட்ரிக் டன்களில்

| எண்ணெய் வித்துக்கள் | 1983–84 பரப்பளவு இலக்கு. | 1983–84 பரப்பளவு சாதனை. | 1983–84 உற்பத்தி இலக்கு. | 1983–84 உற்பத்தி சாதனை. | 1984–85 பரப்பளவு இலக்கு. | 1984–85 உற்பத்தி இலக்கு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| நிலக்கடலை .. | 11.57 | 10.95 | 13.00 | 13.00 | 11.65 | 13.25 |
| எள் .. | 1.55 | 1.40 | 0.60 | 0.60 | 1.60 | 0.65 |
| சூரியகாந்தி .. | 1.25 | 0.98 | 0.59 | 0.59 | 1.25 | 0.62 |
| ஆமணக்கு .. | 0.17 | 0.19 | 0.06 | 0.06 | 0.17 | 0.68 |
| தென்னை .. | 1.46 | 1.46 | 142.00 | 143.00* | 1.54* | 153.00* |

*தங்காய்கள்.

[1984 மார்ச் 21

கீழ்க்கண்ட முக்கியமான திட்டங்கள் இத்துறையினால் செய லாக்கப்படுகின்றன.

**தமிழ்நாடு அரசு திட்டங்கள் :**

1. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி அதிகரிப்புத் திட்டம்.
2. எண்ணெய் வித்துக்கள் விதை மையங்கள்.
3. தமிழ்நாட்டில் எள் உற்பத்தி அதிகரிப்புத் திட்டம்.
4. நிலக்கடலை ஆதார வித்துப் பண்ணைகள் நிறுவும் திட்டம்.
5. சூரியகாந்தி உயர் ரக வித்துப் பண்ணை நிறுவும் திட்டம்.

**மத்திய அரசின் மானியம் பெறும் திட்டங்கள்.**

1. தீவிர நிலக்கடலை அபிவிருத்தித் திட்டம்.
2. புதிய நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் நிலக்கடலை சாகுபடி செய்யும் திட்டம்
3. சூரியகாந்தி அபிவிருத்தித் திட்டம்.

மேற்கண்ட திட்டங்களின் மூலம் நிலக்கடலை, எள், சூரிய
காந்தி மற்றும் ஆமணக்கு பயிர்களுக்குத் தேவையான விதைகள்
விநியோகம், செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தல், மினிக்
கிட்டுகள் விநியோகம் மற்றும் சிகப்பு கம்பளிப்பூச்சி தாக்குதலைக்
கட்டுப்படுத்த தரை மூலம் ஒட்டுமொத்த மருந்தடித்தல், நிலக்
கடலையைத் தாக்கும் 'துரு' மற்றும் 'டிக்கா' போன்ற நோய்கள்
இலைச் சுருட்டும் பூச்சிகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல்
போன்ற நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் எண்ணெய் வித்துக்
கள் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மத்திய
அரசின் மானியம் பெறும் திட்டங்களில் விதைச் சான்று பெற்ற
உண்மைச் சான்றிதழ் விதைகள் உற்பத்தி, பயிர் பாதுகாப்பு
நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கான மானியங்கள் தவிர பிற
எல்லா நடவடிக்கைகளுக்கும் அளிக்கப்படும் மானியங்கள். மத்திய
மாநில அரசுகளினால் 50:50 என்ற அளவில் பகிர்ந்து கொள்ளப்
படுகின்றன. விதைச் சான்றிதழ் பெற்ற உண்மைச் சான்று
பெற்ற விதைகளுக்கு அளிக்கப்படும் மானியம் மற்றும் பயிர்
பாதுகாப்புக்கு அளிக்கப்படும் மானியங்கள் மத்திய அரசினால்
முழுமையாக அளிக்கப்படுகின்றது. பயிர்ப் பாதுகாப்புக்கு
ஆகும் மொத்தச் செலவில் 50 சதவீதம் மத்திய அரசினால்
மானியமாக அளிக்கப்பட்டு மீதிச் செலவை பயனடையும் விவ
சாயியே ஏற்கின்றனர். விதை உற்பத்தி செய்யும்
விவசாயிகளுக்குச் சான்றிதழ் பெற்ற நிலக்கடலை. விதைக்கு
குவிண்டாலுக்கு ரூ. 150-ம், உண்மைச் சான்றிதழ் பெற்ற
விதைகளுக்கு குவிண்டாலுக்கு ரூ. 100-ம் மானியமாக அளிக்கப்
படுகின்றன.



1984 மார்ச் 21]

நிலக்கடலை, எள், சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு எண்ணெய்
வித்துக்களின் தரமான விதை உற்பத்திக்கு புட்லூரில் ஒரு க்ரு
வித்து உற்பத்திப் பண்ணையும், முசரவாக்கத்தில் ஒன்றும், வெள்
ளாள விடுதியில் ஒன்றுமாக இரண்டு ஆதார வித்துப் பண்ணை
களும், நவ்லாக், வடகரை மற்றும் பவானிசாகர் ஆகிய இடங்
களில் முறையே ஒவ்வொரு மண்டல ஆதார வித்துப் பண்ணை
யும் இத்துறையினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1983-84
இல் இதுவரை 123 மெட்ரிக் டன்கள் நிலக்கடலை ஆதார
வித்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

சூரிய காந்தி விதைப் பெருக்கத்தைப் பொறுத்தவரையில்
இத்துறையினால் பவானிசாகர் மற்றும் திருமூர்த்தி அணைப்
பகுதியில் இவ்வாண்டில் இதுவரை 3 டன்கள் ஆதார விதைகள்
உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட அளவு தரமான விதைகள் இத்துறையினால் இவ்
வாண்டில் இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ளன :—

| | | மெட்ரிக் டன்கள். |
|---|---|---|
| 1. | நிலக்கடலை .. .. | 10,085 |
| 2. | எள் .. .. | 91 |
| 3. | ஆமணக்கு .. .. | 22 |
| 4. | சூரியகாந்தி .. .. | 530 |

பல திட்டங்களின் மூலம் மினிகிட்டுகள் விநியோகம்
குறித்து கீழ்க்கண்ட விவரங்கள் அளிக்கப்படுகின்றன :—

| | | எண்கள் |
|---|---|---|
| 1. | தீவிர எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம் (0.1 எக்டர்) | 7,295 |
| 2. | புதிய நீர்ப்பாசன இடங்களில் நிலக்கடலை சாகுபடித் திட்டம் (0.1 எக்டர்) | 2,631 |
| 3. | சூரியகாந்தி அபிவிருத்தித் திட்டம் (0.2 எக்டர்) | 17,103 |
| 4. | சிறு/குறு விவசாயிகளுக்கு உதவும் திட்டம் (0.2 எக்டர்). | 60,013 |

1984—85 ஆம் ஆண்டில் நிலக்கடலை சாகுபடி செய்யும்
மொத்தப் பரப்பளவில் 5 சதவீதத்திற்குத் தேவையான தரமான
விதைகளை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 1
சதவீதம் சான்று பெற்று விதைகளை விநியோகிக்க திட்டமிடப்
பட்டுள்ளது. மொத்தத்தில் 1984-85 ஆம் ஆண்டில் 11,650
மெ. டன்கள் தரமான நிலக்கடலை விதைகள் விநியோகிக்கப்
படும்.

[1984 மார்ச் 21

சோயா, மொச்சை சாகுபடிக்கு நடப்பு 1983-84 ஆம் ஆண்டில் ஒரு முன்னோடி முயற்சியாக 1.5 டன்கள் புதிய கோ-1 ரக சோயா, மொச்சை விதைகள் மினிக் கிட்டுகளாக கோவை, சேலம், தர்மபுரி மற்றும் பெரியார் மாவட்ட விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்த சோயா, மொச்சை 20 சதவீதம் எண்ணெயும், சுமார் 40 சதவீதம் புரதமும் கொண்டதாகும்.

சோயா, மொச்சை எல்லா பருவங்களிலும் பயிரிடக் கூடியதும் வறட்சி நிலையினையும் தாங்கக் கூடிய பயிராகும். 1984-85 ஆம் ஆண்டில் சோயா, மொச்சைப் பயிரை அதிக அளவில் சாகுபடி செய்ய தரமான விதைகள் விநியோகம் மற்றும் நவீன சாகுபடி முறைகள் ஆகியவை மூலம் இப்பயிரினை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தென்னையைப் பொறுத்தவரை முன்பே கூறியுள்ளபடி, 1·46 இலட்சம் எக்டர் பரப்பளவில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு உற்பத்தி 143 கோடி காய்கள் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் 1.54 இலட்சம் எக்டர் பரப்பளவில் தென்னை பயிரிட்டு அதன் மூலம் 153 கோடி காய்கள் உற்பத்தியை அடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை தென்னை அபிவிருத்தியின் பொருட்டு, 16 வகையான பெரும் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. அவையாவன :—

(அ) மாநிலத் திட்டங்கள்.

(ஆ) மத்திய அரசின் மானியம் பெறும் திட்டங்கள்.

(இ) மத்திய அரசின் தென்னை அபிவிருத்தி வாரியத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.

இந்த திட்டங்களில் உள்ளிட்ட விவரங்கள் பின் வருமாறு :

(அ) மாநிலத் திட்டங்கள் :

1. கூட்டு மொத்த தென்னை நாற்றங்கால் திட்டங்கள்.

2. ஒருங்கிணைந்த தென்னை அபிவிருத்தித் திட்டங்கள்.

3. தென்னையைத் தாக்கும் கருந்தலைப் புழுவைக் கட்டுப்படுத்த ஒட்டுண்ணி உற்பத்தித் திட்டம்.

4. பட்டுக்கோட்டையில் நெட்டை * குட்டை வீரிய ஒட்டுத் தென்னங் கன்றுகள் உற்பத்தித் திட்டம்.

5. அதி விரைவு தென்னை அபிவிருத்தித் திட்டம்.



1984 மார்ச் 21]

6. கோவை மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை உற்பத்தித் பெருக்குத் திட்டம்.

7. வீரிய ஒட்டு தென்னங்கன்றுகள் நாற்றங்கால் பண்ணைத் திட்டம்.

8. தமிழ் நாட்டில் தஞ்சாவூர் வாடல் நோய் மற்றும் கேரள வாடல் நோய் கட்டுப்படுத்தும் திட்டம்.

(ஆ) மத்திய அரசின் மானியம் பெறும் திட்டங்கள்.

1. தஞ்சை மாவட்டத்தில் தென்னை அபிவிருத்திக்கான சாகுபடித் திட்டம்.

2. நவ்லாக் நெட்டை * குட்டை மற்றும் குட்டை * நெட்டை வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகிக்கும திட்டம்.

(இ) தென்னை அபிவிருத்தி வாரிய உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் :

1. வீரிய ஒட்டு முன்னோடி விதைத் தோட்டம் மற்றும் 12 விதைப் பரிசோதனை நிலையங்கள் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களுக்கும் தேவையான ரகங்களில் விதை நெற்று உற்பத்தி திட்டம்.

2. ஆண்டுதோறும் ஒரு இலட்சம் நெட்டை ரக தென்னங் கன்றுகள் உற்பத்தி செய்ய ஒரு மண்டல நாற்றங்கால் நிறுவுதல்.

3. புதிய தென்னை சாகுபடி பரப்பை அதிகரிக்க விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற வங்கிக் கடன் வட்டிப் பணத்தை மானியமாக அளிக்கும் திட்டம். இத்திட்டத்தின்படி ரூ. 3,000 மானியமாக எக்டர் ஒன்றுக்கு அளிக்கப்படும். தமிழகத்தில் 1,000 எக்டர் இத்திட்டத்தின் கீழ் செயலாக்கப்படும்.

4. அரசுக்குச் சொந்தமான தென்னை நாற்றுப் பண்ணைகளில் நீர்ப்பாசன மேம்பாட்டுத் திட்டம்.

5. தென்னை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கு மானியமாக ரூ. 1 இலட்சம் அளித்தல்.

6. தமிழ்நாட்டில் 40 எக்டர் பரப்பளவில் செயல் விளக்கம் மற்றும் விதை உற்பத்தி மையம் நிறுவுதல்.

மேற்கண்ட எல்லா திட்டங்களும் 1984-85 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயலாற்றப்படும்.

[1984 மார்ச் 21

எண்ணெய் வித்து இயக்ககக் கட்டுப்பாட்டின்கீழ் 23 சிறிய
பண்ணைகளும் மற்றும் 5 பெரும் பண்ணைகளும் நெட்டை,
ரக தென்னங் கன்றுகள் உற்பத்திக்கென இயங்கி வருகின்றன
நெட்டை * குட்டை ரக வீரிய ஒட்டுத் தென்னங் கன்றுகள்,
உற்பத்திக்காக 5 பண்ணைகள் செயலாற்றுகின்றன.
இவைத் தவிர குட்டை * நெட்டை தென்னங் கன்றுகள் உற்
பத்திக்கென 2 பண்ணைகள், ஒன்று மானூரிலும, மற்றொன்று
நவ்லாக்கிலும் இயங்கி வருகின்றன. இத் ''றையின் மூலமாக
இவ்வாண்டு பிப்ரவரி மாதம் முடிய 36.69 இலட்சம் தென்னங்
கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

தென்னைப் பயிரினைத் தாக்கும் பூச்சி மற்றும் பூஞ்சனம்
ஆகியவற்றினைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட திட்டங்கள் நிறை
வேற்றப்படுகின்றன.

(1) 17 ஒட்டுண்ணி நிலையங்களில் ஒட்டுண்ணிகளை
வளர்த்து கருந்தலைட் புழுக்களை அழிக்கும் திட்டத்தின் மூலமாக
5,000 எக்டர் பரப்பவில் ஆண்டொன்றுக்கு தென்னை மரங்கள்
பலனடைகின்றன.

(2) தென்னை வாடல் நோய் கட்டுப்பாட்டிற்கு மாநிலத்
தின் கேரள எல்லையோர மாவட்டங்களில் வாடல் நோய் பிடிக்
கப்பட்ட தென்னங் கன்றுகள் தமிழகத்தினுள் வருதலைத் தடுத்திட
ந்து தடுப்புக் காவல் நிலையங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

(3) வாடல் நோய் தடுப்புக்கென கேரள வாடல் நோய்
தடுப்புத் திட்டம் மற்றும் தஞ்சை வாடல் நோய் தடுப்புத் திட்டம்
ஆகிய இரு திட்டங்களும் செயலாற்றப்பட்டு வருகின்றன.

(4) தஞ்சை வாடல் நோய் திட்டத்தின்கீழ் இவ்வாண்டு
பிப்ரவரித் திங்கள் முடிய 15,300 மரங்கள் மருந்திடப் பட்டு
காக்கப்பட்டன. கேரள வாடல் நோய்த் தடுப்புத் திட்டத்தின்
கீழ் இந்நோயினால் தாக்கப்பட்ட 2,867 தென்னை மரங்கள்
அழிக்கப்பட்டன.

இவ்வியக்ககம் இவ்வாண்டு குட்டை நெட்டை தென்னங்கன்று
களை முதன் முறையாக நவ்லாக் பண்ணையிலிருந்து உற்பத்தி
செய்து வேளாண் பெருமக்களுக்கு விநியோகத்திற்கு அளித்து
உள்ளது. இவ்வாண்டு முடிவதற்குள் 2,000 தென்னங்கன்றுகள்
விநியோகிக்கப்படும். வரும் ஆண்டுகளில் இந்த ரகத்தின் உற்பத்தி
4 இலட்சங்களாக உயர்த்தப்படும. இந்த ரகத் தென்னங்கன்று
கள் 1984-85 ஆம் ஆண்டில் 20,000 உற்பத்தி செய்து விநி
யோகிக்கப்படும்.



1984 மார்ச் 21]

புதிய திட்டங்கள்.

1984-85 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய திட்டங்கள் செய
லாக்கத் திட்டமிடப்பட்டுள்ளன :—

1. முசரவாக்கம் மற்றும் வெள்ளாளவிடுதி ஆகிய இடங்களில் உள்ள பண்ணைகளில் விதைப் பதன மையங்கள் மற்றும் விதை உலர்த்தும் தளங்கள் நிறுவுதல்.

2. எண்ணெய் வித்துக்கள் துறையின் தென்னை அபிவிருத்திப் பகுதியை விரிவுபடுத்துவதற்கான திட்டம்.

3. மாவட்ட அலுவலர்களுக்குத் தொலைபேசி அளித்திடும் திட்டம.

4. தீவிர தென்னை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், இத் துறையின் களப்பணியாளர்களுக்குப் பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் அளிக்கும் திட்டம்.

5. வைகை அணைப் பகுதியில் இயங்கி வருகின்ற தென்னங் கன்று பண்ணைக்குத் தனியாக நீரேற்றுத் திட்டம் அமைத்தல்.

6. வெள்ளாள விடுதி ஆதார விதைப் பண்ணையில் ஐந்து ஆழ்குழாய்க் கிணறுகளும், சொட்டு நீர்ப்பாசன திட்டமும் அமைத்தல்.

7. மாவட்ட அலுவலர்களுக்கு ஈப்பு இணைப்பான்கள் அளிக்கும் திட்டம்.

8. தீவிர தென்னை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தென்னை நாற்றுக்களை நன்கு சேமித்திட பராமரிப்புத் திடல்கள் அமைத்தல்.

9. தமிழகத்தில் சோயா, மொச்சை பயிர் சாகுபடித் திட்டம்.

10. நிலக்கடலைப் பயிரில் ஏற்படுகின்ற டிக்கா மற்றும் துரு நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்.

11. மானாவாரி நிலச் சாகுபடித் திட்டத்திற்குத் தேவையான கருவிகள் விளம்பரப்படுத்தும திட்டம.

12. தென்னையைத் தாக்கும் காண்டாமிருக வண்டினை அழிக்கும் புதிய பூஞ்சனமான மெட்டாரைசியம் எனும் நுண்ணுயிரினை உற்பத்தி செய்யும் திட்டம்.

13. நிலக்கடலையைத் தாக்கும் சிவப்புக் கம்பளிப் பூச்சி மற்றும் புகையிலைப் புழு ஆகியவற்றினைக் கட்டுப் படுத்த புதிய ரக வைரஸ் தயாரிக்கும் திட்டம்.

14. வேம்பு போன்ற எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யும் மரங்கள் அபிவிருத்தித் திட்டம்.

15. நிலக்கடலை சாகுபடியில் பயிர்ப் பாதுகாப்பிற்காக டிராக்டரால் இயங்குகின்ற விசைத் தெளிப்பான் அளிக்கும் திட்டம்.

16. எள் பயிர் சாகுபடிக்கு நுண்ணுயிர் உரமான அசோஸ் பரில்லம் அளிக்கும் திட்டம்.

## தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம்.

தேசிய பால்வள வாரியத்தின் உதவியுடன் செயல்படும் கூட் டுறவு எண்ணெய்வித்து உற்பத்தியாளர் இணையம் தமிழக அரசினால் 3–1–1981 முதல் செயலாக்கப்பட்டு வருகின் றது. இத்திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த செயலாக்க உற் பத்தி, கொள்முதல் மற்றும் விற்பனை ஆகிய அனைத்துப் பணி களும் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோரின் பலன்களைக் கருத் தில் கொண்டு செயலாக்கப்படுகின்றது. இந்த இணையம் 7 ஆண்டு காலத்திற்குள் 500 கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் சாகுபடியாளர் சங்கங்களை செங்கற்பட்டு, தென் ஆற்காடு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் அமைக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. சாகுபடியாளர்களின் உற்பத்திப் பொருள்கள் இவற்றின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, தர வாரியாக பிரிக்கப்பட்டு, சேமித்து பின்னர் இணையத்திற்கு விற்கப்படும். உற்பத்தியாளர்கள்/சங்கத்தின் அங்கத்தினர்கள் மேற்படி சங்கங் கள் ஈட்டுகின்ற நிகர இலாபத்தில் 50 சதவீதம் பெறுவர். இத்திட்டம் 7 ஆண்டுகளில் ரூ. 11.45 கோடி முதலீட்டில் செய லாற்றப்படும். உழவியல் மையம் ஒன்றும் ஏறத்தாழ ரூ. 3 கோடி முதலீட்டில் செயலாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்விணையத்தின்கீழ் இதுவரையில் 142 சங்கங்கள் உருவாக்கப் பெற்றுள்ளன. ஜூலை 1983—பிப்ரவரி 1984 ஆகிய காலங்களில் இவ்விணையம் 1,380 மெட்ரிக் டன்கள் நிலக் கடலை விதைகள் இச்சங்கங்களின் மூலம் கொள்முதல் செய்து உள்ளது. இக் கொள்முதல் வரும் ஆண்டுகளில் மிகுதியாக்கப்பட்டு இத்திட்டம் முடிவடையும் காலத்தில் இவ்விணையத்தின் மூலமாக ஆண்டொன் றுக்கு 1.36 இலட்சம் மெட்ரிக் டன்கள் நிலக்கடலை விதை கொள்முதல் செய்யும் நிலையினை அடையும்.



## தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை :

தமிழ்நாடு பலவகைப்பட்ட தட்ப வெட்ப சூழ்நிலைகள் கொண்ட நிலையினைப் பெற்றிருப்பதால், வெட்ப மண்டலம், மிதவெட்ப மண்டலம் மற்றும் குளிர் மண்டலம் ஆகியவற்றுக்கு ஏற்ப தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் வகையினை சாகு படி செய்யும் சூழ்நிலைக்கு வழி வகுக்கிறது. இவ்வாறு பல வகையான செழிப்பினை பெருக்கிடவும், தோட்டக் கலை மேம் பாட்டில் வளர்ச்சியை வலுப்பெறச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் 1979ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் என்ற ஒரு தனித்துறை உருவாக்கப்பட்டது. அதிகமான தோட்டக் கலைப் பயிர் இனங் கள் பல ஆண்டுகள் தொடர்ந்து பயன் அளிக்கும் தன்மை கொண்டதாலும், அதிக பலன் தர நீண்ட காலம் பிடிப்பதாலும், நல்ல முறைப்படி தொடர்ச்சியாக திட்டமிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் தேவை ஏற்படுகிறது. இதன் அடிப்படையில் இத்துறையின் நடவடிக்கைகள் கீழ்க்கண்ட இனங்களின்கீழ் தொகுக்கப்பட்டுள்ளன :—

1. நல்ல தரமுள்ள செடிகளின் உற்பத்தியும், விநியோக மும்.

2. உற்பத்தித்திறனை பெருக்கல் :

(அ) பழப்பயிரினங்கள்

(ஆ) காய்கறிப் பயிரினங்கள்

(இ) வாசனைத் திரவியம் மற்றும் மலைப்பயிரினங்கள்.

(ஈ) கிழங்குப் பயிரினங்கள்

3. மலைப்பகுதியில் தோட்டக்கலை மேம்பாடு.

4. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

5. நீலகிரி மாவட்டத்தில் விரிவாக்கப் பணி திருத்தியமைத் தல்.

### ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம்.

7. பூவினப்பயிர்கள் மேம்பாடு மற்றும் அழகுத் தோட் டமைப்பினை ஊக்குவித்தல்.

8. நகர்புறத்தில் வீட்டுத் தோட்ட அமைப்பினை ஊக்கு வித்தல்.

9. தொழில் நுட்பப் பயிற்சியும் மற்றும் தொழில் நுணுக்க மனித சக்தியை நிர்மாணித்தலும்.

[1984 மார்ச் 21

## 1. நல்ல தரமுள்ள செடிகளின் உற்பத்தியும், விநியோகமும்:

வலுவுள்ள மற்றும் நிலையான தோட்டக்கலைத் தொழில்
அமைப்பு ஒன்றினை நிறுவுவதற்குத் தேவையான வலுவான கால்
கோள் நல்ல தரமான வம்சாவழி நடவுச் செடிகளை அதிக
அளவில் உற்பத்தி செய்து விநியோகம் செய்வதே ஆகும். இந்த
நோக்கத்தினை அடைந்திடவும், மற்றும் நல்ல தரமான நடவுச்
செடிகளை நியாயமான விலைகளில் வழங்குவதற்கு, அரசு
தோட்டக்கலைப் பண்ணைகளும், மற்றும் மிகப் பெரிய பழத்
தோட்டங்களும் நிறுவப்பட்டிருக்கின்றன பெரியார், கோயம்
புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் முறையாக
ஒவ்வொன்றிற்கும் ஒன்று என்ற அடிப்படையில் கடைசிக் கட்ட
மாக நிறுவப்படவிருக்கும் மூன்று பழத் தோட்டங்கள் மூல
மாக அரசின் கொள்கையாகிய மாவட்டம் ஒன்றுக்கு ஒரு
தோட்டக்கலைப் பண்ணை என்ற நிலை அடையப்பெறும்,
தற்பொழுது உள்ள 16 தோட்டக்கலைக் பண்ணைகள் மற்றும்
ஏழு மிகப் பெரிய பழத் தோட்டங்கள் உற்பத்திப்பணியில் ஈடு
பட்டிருக்கின்றன. 1983–84 ஆம் ஆண்டில் இந்த பழத்
தோட்டங்களில் 16.55 இலட்சம் செடிகள் உற்பத்தி செய்யப்
பட்டன, 1984–85 ஆம் ஆண்டில் 19.00 இலட்சம் பல வகைப்
பட்ட பழச் செடிகளும் மற்றும் இதர இனச் செடிகளும் உற்
பத்தி செய்து விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2. உற்பத்தி திறன் பெருக்குதல்.

### (அ) பழப் பயிரினங்கள் :

### வாழை.

2.1. இந்த மாநிலத்தின் முக்கிய பழப் பயிரினங்கள் வாழை
ஒன்றாகும். இந்தப் பயிரினம் முடிக்கொத்து என்ற நச்சுரு
நோயின் பாதிப்பிற்கு உள்ளாகிறது. இதனால் நோய்த் தாக்குதல்
இல்லாத நடவுக் கன்றுகளை தேர்ந்தெடுப்பதில் அதிகக் கவனம்
தேவைப்படுகிறது. இந்த நோக்கில் நல்ல தரமுள்ள வாழைக்
கன்றுகள் நவ்லாக்கிலும், முதலைப்பட்டியிலும் மற்றும் சின்னக்
கல்ராயன் மலையிலும் இருக்கும் சீரிய வாழைத் தோட்டங்களிலும்
உற்பத்தி செய்யப்படுகின்றன. முடிக்கொத்து நோயால் பாதிக்
கப்பட்ட மலைப் பகுதிகளான கீழ்ப்பழனிமலைப் பகுதியிலும்
மேற்கு மலைப் பகுதிகளிலும் வழங்குவதற்காக சின்னக்கல்ராயன்
மலைப் பகுதியில் மலை வாழைக் கன்றுகள் உற்பத்தி செய்யப்
படுகின்றன. வேளாண் பல்கலைக் கழகத்தால் மதுரை மாவட்
டம் தடியன் குடிசையில் இருக்கும் தோட்டக்கலை ஆராய்ச்சி
நிலையத்தில் உற்பத்தியாளர்களுக்கு நோயினை அகற்றுவது
பற்றி போதிக்க பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.



1984 மார்ச் 21]

1983 டிசம்பர் திங்கள் வரை ஒரு இலட்சம் கன்றுகள் உற்
பத்தி செய்து விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. நான்கு இலட்
சம் கன்றுகள் 1984–85 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்து விநி
யோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. வாழை மேம்பாட்டிற்கான
செறிவுத் திட்டம் பெரியார் மற்றும் கோயம்புத்தூர் மாவட்
டங்களில் உற்பத்தியாளர்களுக்கு மேலாண்மை வழிமுறைகளைப்
புகட்டும் நோக்குடனும், அதிகப்பரப்பில் வாழையை சாகுபடி
செய்யவும் செயல்படுத்தப்படுகிறது. 56 செயல் விளக்கக்
பாத்திகள் 1983-84 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டன. 1984-85ம்
ஆண்டில் 56 செயல் விளக்க பாத்திகள் ஏற்படுத்தப்படும்.

1983–84-ல் அதிக விளைச்சல் கொடுக்கும் வணிகரீதி இன
வகைகள் மொத்தத்தில் 7,000 எக்டர் நிலப்பரப்பில் பயிர்
செய்யப்படும். இதனால் சராசரி எக்டருக்கு 29 மெட்ரிக் டன்
விளைச்சல் ஏற்படும். வரும் ஆண்டில் இத்திட்டம் நீடிக்கப்
பட்டு சராசரி விளைச்சல் 29.5 மெட்ரிக் டன்னாக உயர்த்தப்
படும்.

### 2.2. மா ;

இப்பயிரினத்தின் உற்பத்தித்திறனை பெருக்க நல்ல விளைசல்
கொடுத்த மரங்களிலிருந்து ஒரு இலட்சம் ஒட்டுச் செடிகள்
1983–84-ல் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக வணிக
ரீதியான இனங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.
வறண்ட மற்றும் சாகுபடியில் இல்லாத நிலங்கள் மா சாகு
படியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. சுமார் 2,000 எக்டர்
பரப்பு சாகுபடிக்கு 1983–84-ல் கொண்டு வரப்பட்டதாக மதிப்
பிடப்பட்டிருக்கிறது.

தற்பொழுது மாந்தோட்டங்களில் தண்டுதுளைப்பான்
பாதிப்பைத் தடுக்கும் வகையில் தருமபுரி மாவட்டப் பகுதிகளில்
இருக்கும் நோய் வாய்ப்பிற்கான பகுதிகளில் 3,400 எக்டர்
பரப்பில் பாதுகாப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது. இவை
வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்
பட்டது. மேலும் மாதத்துப் பூச்சி மற்றும் சாம்பல் நோய்
கட்டுப்படுத்தும் முறையில் 7,200 எக்டர் பரப்பளவுள்ள மாந்
தோட்டங்களில் பாதுகாப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது.
இந்தத் திட்டங்கள் 1984-85 ஆம் ஆண்டில் நீடிக்கப்பட்டு
1.5 இலட்சம் ஒட்டு மாஞ்செடி விநியோகக் குறியீட்டினை
கொண்டதாக அமையும்.

[1984 மார்ச் 21

2.3. எலுமிச்சை.

திடீர் வாடல் என்ற நோய் மிகவும் பாதிப்பை ஏற்படுத்தத் கூடிய ஒன்றாக இருப்பதால், ஆண்டொன்றுக்கு 1.5 இலட்சம் நச்சுரி நோய் தடுப்பு சக்தி புகுத்தப்பட்ட எலுமிச்சை செடிகள் குடுமியான்மலை வெப்ப மண்டல தோட்டக்கலைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன. இந்தப்பணி 1984–85லும் தொடரப்படும்.

2.4. அன்னாசி.

அதிக உற்பத்தி உண்டாக்கும் அளவில் 'க்யு' என்ற இனத்தை அதிகப் பரப்பளவில் அறிமுகம் செய்ய விரிவான பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. 20 எக்டேர் பரப்பளவில் இத் துறையினால் இரண்டு அன்னாசி நாற்றங்கால்கள் பராமரிக்கப் படுகின்றன. ஒன்று சேலம் மாவட்டத்தில் இருக்கும் கொல்லி மலையிலும் மற்றொன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பேச்சிப்பாறையிலும் அமைந்திருக்கிறது. இங்கு 'க்யூ' இன அன்னாசி ரகம் உற்பத்தி செய்யப்படுகிறது. 1984-85-ஆம் ஆண்டில் தற்போது விநியோகிக்கப்படும் 4 இலட்சம் கன்றுகளை அதிகப்படுத்தி 4.20 இலட்சம் கன்றுகளை விநியோகிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆ. காய்கறி பயிரினங்கள்.

2.5. ஆறு காய்கறி விதை உற்பத்தி மையங்கள் வெப்பப் மண்டலத்திலும், ஒரு காய்கறி உற்பத்தி மையம், மித வெப்ப மண்டலமான கூனூரிலும் (நீலகிரி), சான்றிதழ் விதைகள் உற் பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளன. ஆண்டு ஒன்றிற்கு சான்றிதழ் விதைகள் உற்பத்தி 30 மெட்ரிக் டன்கள் ஆகும்.

2.6. சமவெளிப் பகுதி காய்கறி மேம்பாட்டுத் திட்டத்தில் கீழ் கத்தரி, வெண்டை, தக்காளி, பூசனி இனங்கள், கீரை முதலானவற்றின் தரமான விதைகள் விநியோகம் செய்யப்படு கின்றன. இதன் மூலம் சுமார் 46,000 எக்டேர் பரப்பளவு சாகுபடியில் கொண்டுவரப்படுகிறது. இதுபோக, நாற்றுவிட்டு நடப்படும் காய் கறி இனங்களில் மொத்தத்தில் ஒன்பது இலட்சம் நாற்றுகள் விநியோகம் செய்யப்படுகின்றன. உழவர்களின் வயல்களில் கட்டுக்கோப்பு முறையினை விளக்கும் வகையில் 150 செயல் விளக்கப் பாத்திகளும் அனுசரணை ஆராய்ச்சித் தளைகளும் நிறுவப்படுகின்றன.



1984 மார்ச் 21]

2.7. காய்கறி உற்பத்தியை பெருக்கும் முறையில் லுள்ள ஆறு நகரங்களான சென்னை, வேலூர், சேலம், கோயம் புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளில் 1,200 எக்டேரில் கூடுதலாக காய்கறி உற்பத்தி செய்யும் திட்டம் வருகின்ற கோடைகாலத்தில் கொண்டு வரப் படுகின்றது. இது இப்பொழுது வழக்கமாக பயிராகும் 2,500 எக்டேர் பரப்பளவை விட அதிகமான ஒன்றாகும். இந்த எல்லாப் பணிகளும் 1984–85-ல் தீவிரப்படுத்தப்படும்.

இ) வாசனைத் திரவியம் மற்றும் மலைப் பயிரினங்கள் :—

2.8. மிளகு.

நீலகிரி மற்றும் கன்னியாகுமரியில் உள்ள இரு நாற்றங்கால் களிலிருந்து அதிக விளைச்சலைக் கொடுக்கும் ரகமான, பன்னியூர் I ரகமும், மற்ற ரகங்களும் 1983–84-ல் 3.85 இலட்சம் வேர்பிடித்த குச்சிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1984-85ல் 4.20 இலட்சம் வேர் பிடித்த குச்சிகள் விநியோகிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

2.9. மஞ்சள்.

அந்நிய செலாவணியை பெற்றுத்தரும் பயிர்களில் மஞ்சளும் ஒன்றாகும். ஏற்றுமதி அபிவிருத்தி கழகத்தின் பரிந்துரையின் படி விஞ்ஞான ரீதியில் மஞ்சள் கிழங்கினை பதனிடும் முறையை உற்பத்தியாளர்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையில், 25 செயல் விளக்கங்கள் 1983–84-ல் மஞ்சள் உற்பத்தி செய்யும் மாவட்டங் களாகிய சேலம், பெரியார் மற்றும் கோயம்புத்தூரில் மேற் கொள்ளப்பட்டன.

2.10. முந்திரி.

முந்திரி உற்பத்தித் திறனை பெருக்கும் வகையில், 200 எக் டேர் கூடுதல் நிலப்பரப்பில் தாவர இனப்பெருக்கம் மூலம் உற் பத்தி செய்யப்பட்ட செடிகளை பயன்படுத்தி முந்திரி தோட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முந்திரி விளைச்சலில் 2 அல்லது 3 மடங்கு அதிக உற்பத்தியை பெறுவதற்குரிய கட்டுக்கோப்பு முறைகளை உற்பத்தியாளர்கள் மத்தியில் பரப்பும் நோக்குடன், மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள முந்திரி தோட்டங் களில், 900 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டன. 120 எக்டேர் பரப்பளவில் பிச்சிவாக்கம், நாட்டு மங்கலம் மற்றும் தேவக்கோட்டையில் மூன்று முந்திரி வம்சாவழி பண்ணைகள் இத் துறையினரால் 1983–84-ல் பராமரிக்கப்பட்டு வருகின்றன. முந்திரி பயிரில் ஏற்படும் பூச்சியினை தடுக்கும் வகையில் ஒட்டு மொத்த தரைவழி பயிர்பாதுகாப்பு முறை 60,000 எக்டேர் பரப்பளவில் 1983–84-ல் கொண்டு வரப்பட்டது. இதனால், 500 மெட்ரிக் டன் கூடுதல் உற்பத்தி ஏற்படும் என்று கருதப்படு கின்றது. இந்தப் பணி 1984–85 ஆம் ஆண்டுகளிலும் நீட்டிக் கப்படும்.

2·11. காபி.

சின்னக்கல்ராயன் மலையில் ஒரு மாதிரி காபி தோட்டம் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணி 90 எக்டேர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டு 1984–85-ல் முடிவு பெறும்.

2·12. வெற்றிலை.

இப்பயிர் மிகவும் அதிகமான அளவில் ''வாடல் நோயால்'' பல மாவட்டங்களிலும் தாக்குதலுக்குட்படுகிறது. சேலம் மதுரை, மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில், 54 எக்டேர் பரப்பளவில் பயிர் பாதுபாப்பு பணிக்கு 50 சதவீத மானிய விலை யில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் விநியோகிக்கப்படுகின்றன. மேலும், 1983–84-ல் ஒன்பது செயல் விளக்க பாத்திகளும் ஏற் படுத்தப்பட்டுள்ளன. 1984–85-ல் கோயம்புத்தூர் மாவட்டத்தை யும் உள்ளடக்கி, மொத்தத்தில் 75 எக்டேர் பரப்பளவில் இந்தத் திட்டம் விரிவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

(எ) கிழங்கு பயிரினங்கள்.

செம்மைப்படுத்தப்பட்ட கட்டுக்கோப்பு வழிமுறைகள் 1983-84-ல் 3,110 எக்டேர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டு, உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது. 45 இடங்களில் செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டன. மரவள்ளி, சக்கரைவள்ளி மற்றும் இதர இனங்களில் செயல் விளக்கப்பாத்தி களும், அனுசரணை ஆராய்ச்சி தளைகளும் தலா 100 எண்ணிக்கையில் அமைக்கப்பட்டன. 1984-85-ல் இத்திட்டம், உருளைக்கிழங்கு பயிருக்கு மட்டும் மேற்கொள்ளப்பட்டு, 3,500 எக்டேர் பரப்பளவில் செயலாக்கப்படும்.

3. மலைப்பகுதிகளில் தோட்டக்கலை மேம்பாடு.

3.1. நீலகிரி நீங்கலான, தமிழ்நாட்டிலுள்ள மற்ற மலைப் பகுதி தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டம், மதுரை, திருச்சி ராப்பள்ளி, இராமநாதபுரம், வட ஆற்காடு, தர்மபுரி, சேலம் மற்றும் பெரியார் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரு கிறது. இடு பொருட்கள் 50 சதவிகித மானிய விலையில் கொடுக் கப்பட்டு இப்பகுதியில், பயிர் சாகுபடி முறை பலதரப்பட்ட— தாக்கப்படுகிறது. இது மேலும், அதிக வருமானம் அடையவும் ஏதுவாகிறது. 2,000 எக்டேர் பரப்பளவில் நீண்ட கால தோட் டக்கலை பயிரினங்களும், மேலும் 1,200 எக்டேர் பரப்பளவில் ஆண்டு பயிர்களும் 1983-84-ல் பயிர் செய்யப்பட்டுள்ளன.





3.2. நீலகிரியில் மண் வளப்பாதுகாப்பு உள்ளடக்கிய மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த நீர் பிடிப்பு வழி முறையில் மாற்றியமைக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றது. மண்வளப் பாதுகாப்பு வகைக்கு, தேவைப்படும் இயந்திரங் களான புல்டோசர் மற்றைய இயந்திரங்களை 6,700 மணி அளவில் வாடகைக்கு விடப்படுகின்றன. 400 எக்டேர் பரப்பள வில் மண் வளப்பாதுகாப்பு மேற் கொள்ளப்பட்டு 30 இலட்சம் நல்ல வம்சாவழியிலுள்ள செடிகளிலிருந்து உற்பத்தி செய்யப் பட்ட தேயிலைக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. 12,500 எக்டேர் பரப்பளவில் நீண்ட கால இனங்களும், வாசனைத் திரவிய பயிர் கள் மற்றும் ஓராண்டு பயிர்கள் ஒவ்வொன்றும் 750 எக்டேர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டுள்ளன. குடகு ஆரஞ்சுப் பழத் தோட்டம், 125 எக்டேர் பரப்பளவில் நிறுவுவதற்கும் பயிர்ப் பாதுகாப்பு மேற் கொள்ளுவதற்கும் தேவையான இடு பொருட் கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1983-84-ல் நோய் தாக்குதலல் லாத உருளைக்கிழங்கு விதைகள் 250 மெட்ரிக் டன் விநியோகிக் கப்படும். இத்திட்டங்கள் 1984-85-ல் 13 நீர்ப் பிடிப்பு அமைப்பு களில் தீவிரப்படுத்தப்பட்டு செயல்படும்.

4. மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம்.

4.1. மேற்கு மலைத் தொடர்ச்சித் திட்டத்தின் கீழ், மதுரை, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தொடர் திட்டங்கள் ரூ. 15.20 லட்சம் மதிப்பளவில் செயல்படுத்தப்படு கின்றன. சிறு மலையில் உள்ள மிகப் பெரிய பழப் பண்ணையில் 40 எக்டேர் பரப்பளவில், தோட்டக்கலை பயிர்கள் பராமரிக்கப் படுகின்றன. கீழ் பழனி மலையில், குடகு ஆரஞ்சு சாகுபடி ஆண்டு ஒன்றுக்கு 75 எக்டேர் பரப்பளவில் விரிவாக்கப் படுகிறது. இந்த ஆண்டில் மித வெட்ப மண்டல பழ இனங்கள் மற்றும் வாசனைத் திரவியப் பயிரினங்கள் பயிரிடும் நிலங்கள் 400 எக்டேர் பரப்பளவில் அடங்கும். இத்திட்டம் 1984-85-லும் நீடிக்கப்பட இருக்கிறது.

5. நீலகிரி மாவட்டத்தில் விரிவாக்கப்பணி திருத்தி அமைத்தல்.

5.1. நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை விரிவாக்கப்பணி முற்றிலும் திருத்தி அமைக்கப்பட்டு, பயிற்சி வழித் தொடர்புத் திட்ட ,முறையின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. களப்பணி யாளர்களின் தொழில்நுட்பத் தகுதி மற்றும் அறிவுத் திறனும் அதிகரிக்கவும், வேளாண் பெருமக்களின் பிரச்சினைகளுக்கு அவ் வப்போது தீர்வு காணவும் இத்திட்டம் வழிவகை செய்கிறது. மொத்தத்தில் நீலகிரி மாவட்டத்தில் 30,180 குடும்பங்கள் இத் திட்டத்தின் கீழ் அணுகப்பட்டு விரிவாக்கப்பணி செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டம் 1984–85-லும் நீட்டிக்கப்படும்.

[1984 மார்ச் 21

### 6. ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம்.

1983-84-ல் வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஓராண்டுப் பயிர்களின் விதைகள் விநியோகம் 1,200 எக்டேர் பரப்பளவிற்கு மேற்கொள்ளப்படும். 1,200 எக்டேர் பரப்பளவிற்கு நீண்டகாலப் பயிர் இனங்களின் விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. உரங்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் முறையே 1,200 எக்டேர் மற்றும் 2,400 எக்டேர் பரப்பளவிற்கு விநியோகிக்கப்படுகிறது. ஒரு ஏக்கர் பரப்பளவில் தனி நபர் பழத் தோட்டங்கள் அமைக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் 1983-84-ல் 300 ஏக்கர் பரப்பளவில் பழத் தோட்டங்கள் அமைக்கப்படும். மாதுத்துப்பூச்சி மற்றும் சாம்பல் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு கல்ராயன் மலைப் பகுதியில் ஒட்டு மொத்த மருந்து தெளிப்புப் பணி 2,000 மரங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முன்னேற்ற உற்பத்தி வழி முறைகளில் 1,500 ஆதிவாசிகளுக்கு இவ்வாண்டு பயிற்சி கொடுக்கப்படுகிறது. இந்த எல்லாவிதமான திட்டங்களும் மொத்தத்தில் 3,000 ஆதிவாசிகள் குடும்பங்களுக்கு பயனளிக்கும் வகையில் செயல்படுத்தப்படுகின்றன.

6.2. சேலம் மாவட்டத்தில் உள்ள கருமாந்துரையில் 400 எக்டேர் பரப்பளவில் ஏற்படுத்தப்பட்டுள்ள பெரிய பழப் பண்ணை ஆதிவாசிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், ஒரு மாதிரி தோட்டமாகவும் அமைந்து உதவுகிறது. 100 எக்டேர் பரப்பளவில் பல விதமான பழச் செடிகள் நடும்பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பண்ணை நல்ல தரமான பழச் செடிகளை இப்பகுதிகளிலுள்ள ஆதிவாசிகளுக்கு விநியோகிக்க உற்பத்தி மையமாகவும் அமைகிறது. இதுவரை தோட்டக்கலை பண்ணை இல்லாத மலைப்பகுதிகளில் தோட்டக்கலை பண்ணை அமைத்து தீவிரப்படுத்தப்பட்டு இத்திட்டம் நீட்டிக்கப்படும்.

### 7. பூவின பயிரிடுதலும், மேம்பாடு மற்றும் அழகுத் தோட்டமைப்பினை ஊக்குவித்தல்.

இவ்வாண்டு, 500 எக்டேர் அதிகப்படியான பரப்பளவில் வணிக பூவினங்களான மல்லி இனங்கள், சாமந்தி, கனகாம்பரம் மற்றும் ரோஜா போன்றவைகளில் உயர்ரக வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. பரிந்துரை செய்யப்படும் கட்டுக் கோப்பு முறைகளின் திறனை அறிவுறுத்தும் பொருட்டு ஐம்பது இடங்களில் செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு தோட்டக்கலை கண்காட்சி மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட சில இனங்களில் அதிக பரப்பளவில், நிறுவன நிதி உதவியுடன் இத்திட்டம் விரிவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.



1984 மார்ச் 21]

### 8. நகர்புறத்தில் வீட்டுத் தோட்ட அமைப்பினை ஊக்குவித்தல்.

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் (வட ஆற்காடு) போன்ற பெரிய நகரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வீட்டுத் தோட்டங்களில் காய்கறி உற்பத்தியைத் தீவிரப்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். பலவகையான காய்கறி விதை பொட்டலங்கள் மொத்தத்தில் 10.80 இலட்சம் விநியோகிக்கப்படுகிறது. மேலும் 10.80 இலட்சம் காய்கறி நாற்றுகளும் வழங்கப்படுகிறது. பலவகையான பழச் செடிகளும் நீண்டகால செடியினங்களும் வீட்டுத் தோட்டங்களில் நடுவதற்கு 7.10 இலட்சம் அளவில் வழங்கப்படுகிறது. மேலும் நகர்ப்புற வீட்டுத் தோட்ட அமைப்பாளர்களுக்கு வசதியாக இருக்கும் அடிப்படையில் பலவகையான உர இனங்கள் சிறிய பொட்டலங்களில் வழங்கப்படுகிறது. இப்பொட்டலங்கள் மொத்தத்தில் 71 மெட்ரிக் டன் அளவில் வழங்கப்படுகிறது. அதேபோல் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், தூள் மற்றும் திரவ வடிவில் முறையே 22 மெட்ரிக் டன் மற்றும் 1,000 லிட்டர் வழங்கப்படுகின்றது. இத்திட்டம் வருகின்ற ஆண்டிலும் தொடர்ந்து நீட்டிக்கப்படும்.

### 9. தொழில் நுட்பப் பயிற்சியும், மற்றும் தொழில் நுணுக்க மனித சக்தி நிர்மாணித்தலும்.

குடுமியான்மலையில் உள்ள மத்திய தோட்டக்கலை பயிற்சி நிலையத்தின் மூலமாக, நவீன பயிர் செயல்முறைகளை களப் பணியாளர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் மூன்று முதல் ஐந்து நாட்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும் பணியிடைப் பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. தோட்டக்கலை அலுவலர்களுக்கும் உதவி வேளாண்மை அலுவலர்களுக்கும் இப்பயிற்சி பலவகையான காலங்களில் அளிக்கப்படுகின்றது. மொத்தத்தில் இவ்வாண்டு 600 நபர்களுக்கு இப்பயிற்சி கொடுக்கப்படுகிறது.

9.2. சென்னை தரமணியில் இருக்கும் தோட்டக்கலைப்பள்ளியில் கீழ்க்கண்ட மூன்று பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன :—

(அ) ஆறுமாத சான்றிதழ் பயிற்சி.

(ஆ) ஓராண்டு சான்றிதழ் பயிற்சி.

(இ) இரண்டாண்டு பட்டயப் பயிற்சி.

இவ்வாண்டில் ஒவ்வொரு பயிற்சியிலும், இருபது மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இப்பயிற்சித் திட்டங்கள் 1984-85-லும் நீட்டிக்கப்படும்.

### 1984–85ஆம் ஆண்டு பணிகளின் சிறப்புக் கூறுகள்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் தோட்டக்கலை மேம்பாட்டுப் பணிகள் சிறப்பு கவனம் பெறும். வறட்சியைத் தாங்கக் கூடிய பழப்பயிர்களான சீமை இலந்தை, சீதாப்பழ வகைகள், விளாம்பழம், நெல்லிக்காய் முதலியன அரசு பழப் பண்ணைகளில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, சாகுபடியாளர்களின் வருவாயைப் பெருக்க பெருமளவில் விநியோகிக்கப்படும்.

"நபார்ட்" நிறுவனத்தின் நிதி உதவியுடன் [illegible]கப்பட்ட மண்டலங்களில் மா, சிட்ரஸ் பழவகைகள், [illegible], கொடி முந்திரி, பல்லிகை முதலிய பயிர்களைக் [illegible] பயிரிடக்கூடிய தோட்டங்களை அமைப்ப மேம்பாட்டு [illegible] மேற்கொள்ளப்படும். இதனடிப்படையில் நெல்லை [illegible] "தேரி" நிலமும், முகவை மாவட்டத்தில் நிலயா[illegible] அதிக நீர் வாய்ப்புள்ள இடங்களும், [illegible] பகுதியில் செம்மண் பரப்பிலும் மேம்பாட்டுப் [illegible] படும்.

தோட்டக்கலைப் பயிர்களுக்கு நுண் ஊட்டச்சத்து [illegible] தின் மூலம் மகசூலைச் கணிசமாக உயர்த்தலாம். [illegible] காய்கறிப் பயிர்களுக்கும் மா, வாழை, சிட்ரஸ் வகைகள், கொய்யா முதலிய பழப் பயிர்களுக்கும் நுண் [illegible]ச்சத்து போதிய அளவில் அளித்து உற்பத்தியைப் பெருக்க [illegible] மேற்கொள்ளப்படும்.

மதுரை, நெல்லை, வட ஆற்காடு மற்றும் தருமபுரி மாவட்டங்களில் மா பயிரில் பயிர்ப் பாதுகாப்பு முறைகளைத் தீவிரமாகச் செயல்படுத்தி மாநிலத்தில் மொத்த உற்பத்தி அளவு பெருக்கப்படும்.

நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு வழிமுறையில் வரும் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதில் மலைச் சரிவுகளில் மண் அரிப்பை தடுக்கவும், மண் ஈரப்பசையைக் காக்கவும், சுற்றுப்புற இயற்கை வளப்பம் கெடாமல் காக்கவும், நீண்ட கால தோட்டக்கலைப் பயிர்களே சாகுபடிக்கு முதலிடம் பெறும். இக்குறிக்கோளை நிறைவேற்ற, தேயிலை, பழங்கள் வாசனைத் திரவியம் ஆகிய இனங்களின் செடிகள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும்.

மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் வரும் ஆண்டில் மதுரை, இராமநாதபுரம், நெல்லை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மேலும் விரிவாக்கப்படும்.



திருநெல்வேலி மாவட்டத்தில் 1984–85-ம் ஆண்டில், 8 எக்டேர் பரப்பளவில் ஒரு [illegible] விதை உற்பத்தி மையம் [illegible]. இந்த மையத் [illegible] பெற்று [illegible] விதைகளின் உற்பத்தி மேற்கொள்ளப்படும்.

மேலும், 1984-85 ஆம் ஆண்டில் [illegible] மற்றும் [illegible] [illegible].

### விதைச் சான்றளிப்புத் துறை.

[illegible] 24-10-1979 [illegible] முதல் [illegible] முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1983–84 ஆம் ஆண்டில் [illegible] 40,000 ஏக்கர் பதிவு செய்ய [illegible] 31-1-1984 முடிய 31,410 ஏக்கர் பதிவு செய்யப்பட்[illegible] எஞ்சியுள்ள மாதங்களில் [illegible] 31-1-1984 முடிய 10,706 மெட்ரிக் டன் [illegible] செய்யப்பட்டுள்ளன. அத்துடன், உழவர் பயிற்சி [illegible] உதவியுடன் வெவ்வேறு இடங்களில் [illegible] நடத்தப்பட்டன. அகில இந்திய வானொலி [illegible] நிலையத்தின் [illegible] ஒத்துழைப்பைப் பயன்படுத்திக் [illegible] சான்றளிப்பு சம்பந்தமாக தனிச் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 1984–85ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் :

1984–85 ஆம் ஆண்டுக்கு 45,000 ஏக்கர் சான்றளிப்பின் கீழ் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

### விதை ஆய்வு :

அரசுத் துறை கூட்டுறவுத் துறை மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த பல்வேறு விதை விற்பனை நிலையங்களை விதை ஆய்வுத் துறை அலுவலர்கள் பார்வையிட்டு அறிவிக்கப்பட்ட வகை விதை மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்து விதைகளின் தரத்தைக் கட்டுப்படுத்துகின்றனர். 1983–84 ஆம் ஆண்டு 5,000 விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்ற இலக்கில் இதுவரை 6,452 விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

1983–84 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட 5,000 விதை மாதிரிகள் எடுக்கும் இலக்குக்கு சனவரி 1984 முடிய 4,417 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள இலக்குகள் இந்த ஆண்டு இறுதிக்குள் எய்தப்படும்.

1984–85 ஆம் ஆண்டு போலி மற்றும் தரமற்ற விதைகள் விநியோகிப்பதைத் தடுக்கும் பொருட்டு, 5,000 விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்வதற்கும், 5,000 விதை மாதிரிகள் பரிசோதனைக்கு எடுத்துச் கொள்ளவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தரக் கட்டுப்பாடு தீவிரமாக்கப்படும்.

1984–85இன் சிறப்புத் திட்டங்கள் :

கோயம்புத்தூரில் கண்ணாடி ஆய்வகம் கட்டும் பணி இவ்வாண்டு முடிக்கப்படும். விதைகளின் இனத் தூய்மை குறித்த பரிசோதனைகள் இந்த ஆய்வகத்தில் நடத்தப்படும். இந்த வசதி உயர்ரக விதைகளின் தரத்தை உறுதிப்படுத்த உதவியாக இருக்கும்.

வேளாண்மை விளை–பொருள் விற்பனைத்துறை.

வேளாண்மை விற்பனைத் துறை கீழ்க்கண்ட திட்டப் பணிகளைச் செயல்படுத்துகிறது:—

1. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை அமைத்தலும் நிர்வகித்தலும்.
2. "அக்மார்க்" தரக்கட்டுப்பாடு.
3. பருத்தி தரம் பிரித்தல்.
4. வணிகமுறை தரம் பிரித்தல்.
5. பயிற்சி மையங்கள்.
6. கிராமச் சேமிப்புக் கிடங்குகள்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் :

உழவர்கள் விளைபொருட்களுக்கு நல்ல விலை பெற்றுத் தரும் நோக்கத்துடன் 257 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் 13 விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் நிறுவப்பட்டுள்ளன.

பெரியார் மாவட்டத்திற்காக தனியாக ஒரு விற்பனைக்குழு அமைப்பது அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

வாய்ப்புள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் வளர்ச்சிக்காக 127.76 கோடி ரூபாய் நிதி உதவி உலக வங்கியிடமிருந்து கோரி மத்திய அரசிற்குத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.





ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வரத்தும், விற்பனைக் குழுக்களின் தற்போதைய வருமானமும் கீழ் வருமாறு :—

வரத்துக்கள்—3,98,222 டன்.

வருமானம்—ரூபாய் 4.36 கோடி.

எல்லா விற்பனைக் கூடங்களுக்கும் நவீன வசதிகளைப் படிப்படியாகச் செய்திட மூன்று ஆண்டுகளுக்கான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பெரிய நகரங்களில் காய்கறிகளுக்காக விற்பனைக் கூடங்கள் மத்திய மானியத்துடன் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. விற்பனைக் கூடங்களில் நிர்வாகத்திறனை மேம்படுத்த 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பணியாளர்களுக்கான குடியிருப்புக்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. மதுரை மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் மேலும் எட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வங்கிகளை விரிவாக்க கிளைகளைத் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தரக்கட்டுப்பாடு :

இத்திட்டத்தின்கீழ் 36 அக்மார்க் ஆய்வுக்கூடங்கள் பல விவசாயப் பொருள்களைப் பரிசோதித்து அக்மார்க் முத்திரையிடப்படுகின்றன. தற்போது நெய், எண்ணெய், மஞ்சள் தூள் மசாலாப்பொடி, தேன், அரிசி, பருப்பு வகைகள், முட்டை, பழங்கள் ஆகியவை அக்மார்க் தரம் பிரிக்கப்படுகின்றன.

பத்து இடங்களில் அக்மார்க் ஆய்வுக்கூடங்களுக்குக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1984–85 ஆம் ஆண்டில் மேலும் மூன்று இடங்களில் ரூபாய் 1·75 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் :

11 பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் விற்பனை கூடங்களுக்கு விற்பனைக்கு வரும் பருத்தியைத் தரம் பிரிக்கின்றன. இதனால் விவசாயிகள் தங்கள் பருத்தியின் தரத்திற்கேற்ற உயர்ந்த விலையைப் பெற வாய்ப்பேற்படுகிறது. இந்த மையங்கள் 3,75,518 குவிண்டால் பருத்தியைத் தரம் பிரித்துள்ளன. 1984–85-ற்கான குறியீடு 5,17,000 குவிண்டாலாகும்.

வணிகமுறை தரம் பிரிப்பு மையங்கள் :

102 விற்பனைக் கூடங்களில் வணிகமுறை தரம் பிரிப்பு மையங்கள் விற்பனைக் கூடங்களுக்கு விற்பனைக்கு வரும் விலை பொருட்களைத் தரம் பிரித்து விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க உதவி வருகின்றன.

பயிற்சி மையங்கள் :

இயக்குநரகத்திலுள்ள பயிற்சி மையம் உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு அக்மார்க் மற்றும் பருத்தி தரம்பிரிப்பு சம்பந்தமான நுணுக்கங்களில் பயிற்சி அளிக்கிறது. இம்முறையில் ஒவ்வொரு ஆண்டும் 60 பேருக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. இவ்வாண்டு விற்பனைக் கூட அலுவலர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1984–85-லும் தொடர்ந்து செயல்படும்.

தேசிய ஊரகத் திட்டங்கள் :

இத்திட்டத்தின்கீழ் ஒரு கிட்டங்கி 4 இலட்ச ரூபாய் செலவில் 89 கிட்டங்கிகள் கட்ட திட்டமிடப்பட்டு அதில் கட்டுமான செலவில் 25 சதம் மத்திய அரசும், 25 சதம் மாநில அரசும் மீதமுள்ள 50 சதம் விற்பனைக் குழுவும் ஏற்றுக்கொள்ளும். கட்டுமான வேலை துரிதமாக நடைபெற்று வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் விற்பனைக் கூடங்களில் மேலும் 24 கிட்டங்கிகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

கரும்புசாலை மேம்பாட்டுத்திட்டம் :

பண்ணை உற்பத்தி மற்றும் இடு பொருள்களை விரைவாக எடுத்துச் செல்ல கரும்புச் சாலை அபிவிருத்தி திட்டம் என்ற தனிப்பட்ட ஒரு திட்டத்தினை ஏற்படுத்தி கரும்பு ஆலைகள் செயல்படும் பகுதிகளில் ஏற்கெனவே உள்ள சாலைகளை மேம்படுத்தியும் புதிய சாலைகள் அமைத்தும் வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கு ஆகும் செலவு முழுவதும் கரும்பு ஆலைகளிடமிருந்து வசூலிக்கப்படும் ''செஸ்'' நிதியிலிருந்தே செலவழிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் புதிய சாலைகள் போடப்படுகின்றன. தற்போது இருக்கும் சாலைகள் மேம்படுத்தப்படுகின்றன. பாலங்கள் மற்றும் கழிவுநீர் வாய்க்கால்கள் அமைத்தல் ஆகிய பணிகளில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகின்றது.



1979–80 ஆம் ஆண்டிலிருந்து 1983–84 ஆம் ஆண்டு வரை (டிசம்பர் 1983 வரை) இத்திட்டத்திற்கு நிர்ணயித்த மற்றும் அடைந்த இலக்குகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | செலவிடப்பட்ட தொகை (ரூ. இலட்சங்களில்). |
|---|---|
| 1979–80 .. .. .. | 150.00 |
| 1980–81 .. .. .. | 180.41 |
| 1981–82 .. .. .. | 230.24 |
| 1982–83 .. .. .. | 250.74 |
| 1983–84 .. .. .. | 202.71 (டிசம்பர் 1983 வரை). |

திட்ட குறியீடுகளும் அடைந்த முன்னேற்றமும் கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம்.

| (1) | 1983–84க்கான குறியீடுகள். (2) | 31–12–1983 வரை அடைந்த முன்னேற்றம். (3) |
|---|---|---|
| 1 புதிய பாதைகள் அமைத்தல் (கி. மீட்டரில்). | 56.32 | 11.13 |
| 2 சரளைக்கல் பரப்புதல் (கி. மீட்டரில்). | 82.40 | 35.30 |
| 3 தார் போடுதல் (கி. மீட்டரில்) | 93.85 | 41.52 |
| 4 தரைப்பாலங்கள் (எண்ணிக்கையில்) | 225 | 110 |
| 5 சிறுபாலங்கள் (எண்ணிக்கையில்) | 11 | 2 |
| 6 பாலங்கள் (எண்ணிக்கையில்) | 5 | 1 |

1984–85-இல் புதிய சாலைகள் அமைத்திட ரூ. 200 இலட்சமும், சாலைகளைப் பராமரித்திட ரூ. 50 இலட்சமும் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### கழிவுநீர் உபயோகத் திட்டம்.

நகர்ப்புற கம்போஸ்ட் :

உள்ளாட்சித் துறை நிறுவனங்கள் கம்போஸ்ட் தயாரிக்கின்றன. தரமுள்ள கம்போஸ்ட் தயாரிப்பிற்கான நுணுக்கங்களை வேளாண்மைத் துறை அந்நிறுவனங்களுக்கு அளிக்கின்றது. ஒரு உள்ளாட்சி நிறுவனத்தின் மக்கள் தொகையில் 5 விழுக்காடு என்னும் வீதத்தில் அது உற்பத்தி செய்யக்கூடிய கம்போஸ்ட்டின் திறன் அளவு கணிக்கப்படுகின்றது. இந்த அடிப்படையில் கம்போஸ்ட் தயாரிப்பின் இலக்கு 3,30,800 டன்கள்.

1983–84-இல் ஜனவரி 1984 வரைக்கும் 106 நகராட்சிகளின் மொத்த கம்போஸ்ட் உற்பத்தி 2,20,000 மெட்ரிக் டன்கள். 3,30,800 மெட்ரிக் டன்கள் என்னும் இலக்கை 1984–85-இல் அடையத் திட்டமிடப்பட்டுள்ளது. உள்ளாட்சித் துறை நிறுவனங்களைத் தரமுள்ள கம்போஸ்ட் தயாரிக்க ஊக்குவிப்பதற்காக பரிசு வழங்கும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்படுகின்றது.

### கழிவு நீர் பயன்படுத்துதல்.

உள்ளாட்சித் துறை நிறுவனங்கள் கழிவு நீர்ப்பண்ணைகளில் புல் மற்றும் இதர பயிர்களை விஞ்ஞான அடிப்படையில் இலாபகரமாக வளர்ப்பதற்கான தொழில் நுணுக்க ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

1983–84-இல் 265 ஏக்கரா நிலங்கள் தீவனப் பயிர் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டன. 1984–85-இல் கூடுதலாக 100 ஏக்கர்களில் இந்த சாகுபடியை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

### வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம்.

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் இம்மாநிலத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தில் 16 வட்டாரங்களிலும், தருமபுரி மாவட்டத்தில் 10 வட்டாரங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 4 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல அபிவிருத்திப் பணிகள் மூலம் நீண்ட காலமாக வறட்சித் தாக்குதலுக்குட்பட்ட பகுதிகளை மேம்படுத்துவதும், வறட்சித் தாக்குதலினால் இப்பகுதிகளில் ஏற்படும் கடுமையை ஓரளவு குறைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கானச் செலவை மத்திய அரசும், மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.



1983–84 ஆம் ஆண்டிற்கு ரூ. 390.00 இலட்சம் அளவில் பலதரப்பட்ட பணிகளை இராமநாதபுரம், தருமபுரி ஆகிய இரு மாவட்டங்களிலும் நிறைவேற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்திற்கான 1983–84-ஆம் ஆண்டின் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 60.00 இலட்சம் ஆகும். இதில் பலதரப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக ஏறத்தாழ ரூ. 43.44 இலட்சம் அளவிலான திட்டப் பணிகளுக்கு மத்திய அரசின் ஒப்புதலோடு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகைக்கான அவ்வரசின் ஒப்புதலும் தற்போது வந்துள்ளது. மேற்கண்ட திட்டத்திற்கு இம்மூன்று மாவட்டங்களுக்கும் 1984–85-ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ. 450.00 இலட்சம் ஆகும்.

### தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம்.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம், 1966 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள்—

வேளாண்மை கால்நடை பராமரிப்பு, மீன் வளம், கோழி வளர்ப்பு போன்றவற்றை நவீன முறையில் வளர்ச்சிபெற உதவும் வகையில் அவை சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல்.

2. உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவித்தல்.

இந்நிறுவனத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 400 இலட்சம் ஆகும். அதில் ரூ. 360 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் வெளியிடப்பட்டு அதற்குரிய தொகை, செலுத்தப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசு ரூ. 195 இலட்சமும், இந்திய அரசு ரூ. 165 இலட்சமும் செலுத்தியுள்ளன.

1. உர விற்பனை.

பல்வேறு உரங்களை விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டு இக்கழகம் குறிப்பிட்ட நிறுவனங்கள் தயாரிக்கும் பல்வகையான உரங்களை விநியோகம் செய்யும் உரிமையை பெற்றுள்ளது.

இக்கழகம் 1983–84 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை 23,870 மெ. டன் அளவு உரங்களை விற்பனை செய்துள்ளது. 1984 ஜனவரி முதல் மார்ச் வரை 8,130 மெ. டன் அளவுள்ள உரங்களையும் 1984–85-ஆம் ஆண்டு 40,000 மெ. டன் அளவுள்ள உரங்களையும் விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது.

**2. டிராக்டர்கள் பவர்டில்லர்கள் மற்றும் உதிரிபாகங்கள் விற்பனை.**

இக்கழகம் விவசாயிகளுக்கு தேவையான நல்ல உதிரிப்பாகங்களையும் டயர் மற்றும் டியூப்களையும், மின்கலங்களையும், தேவையான நேரத்தில் நியாயமான விலையில் சீராக தமது விற்பனை நிலையங்கள் மூலம் வினியோகம் செய்து வருகின்றது. தற்சமயம் இக்கழகம் மொத்தம் 16 விற்பனை நிலையங்களைக் கொண்டுள்ளது. இதில் 14 விற்பனை நிலையங்கள் நமது மாநிலத்திலும், 2 விற்பனை நிலையங்கள் பாண்டிச்சேரியிலும் கொண்டுள்ளது.

இக்கழகம் 1983-ஆம் ஆண்டு டிசம்பர் வரை 20 டிராக்டர்களையும் 163 பவர் டில்லர்களையும் விற்பனை செய்துள்ளது. 1984 ஜனவரி முதல் மார்ச் 1984 முடிய 50 டிராக்டர்களையும் 150 பவர் டில்லர்களையும் விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது. 1984–85-ஆம் ஆண்டின் விற்பனைக் குறியீடாக 105 டிராக்டர்களும் 120 பவர் டில்லர்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

1983–84 மற்றும் 1984–85 ஆண்டுகளில் முறையே ரூ. 310.73 இலட்சமும் ரூ. 293.27 இலட்சமும் மொத்த விற்பனையை எட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**3. பூச்சிக் கொல்லி மருந்து தயாரிப்புத் திட்டம்.**

1972-ஆம் ஆண்டு இக்கழகம் பிரசித்தி பெற்ற பி.எச்.சி. 10 சதவீதம் போன்ற பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தயாரிக்க ஆரம்பித்தது. தொடக்கத்தில் இக்கழகம் பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தனியார் நிறுவனங்களின் உதவியால் தயாரித்து வந்தது. இப்பொழுது இக்கழகம் தனது சொந்தத்தில் ரூ. 9.79 இலட்சம் முதலீட்டில் அம்பத்தூரில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தியது. இந்தத் தொழிற்சாலை தனது வர்த்தக ரீதியிலான உற்பத்தியை 1976-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் ஆரம்பித்தது. பெருகிவரும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தேவையை ஈடுகட்ட ரூ. 4 இலட்சம் செலவில் தனது இரண்டாவது ஆலையை ஏற்படுத்தியுள்ளது. இந்திய தர நிர்ணய கழகத்தின் தரத்திற்கேற்ற உயர்ந்த பூச்சிக்கொல்லி மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டு பொதுமக்களுக்கு இக்கழகத்தின் கிளை நிலையங்கள் மூலமும் வேளாண்மைத் துறைக் கிடங்குகள் மூலமும் விநியோகிக்கப்படுகின்றன.



1983–84 (டிசம்பர் திங்கள் முடிய) ரூ. 18.86 இலட்சம் மதிப்புள்ள 1,385 மெ. டன் அளவுள்ள தூள் மருந்துகளும் ரூ. 4.34 இலட்சம் மதிப்புள்ள 12,630 லிட்டர் அளவு திரவ மருந்துகளும் விற்பனை செய்யப்பட்டன. 1984–85 ஆம் ஆண்டில் ரூ. 9.75 இலட்சம் மதிப்புள்ள 600 மெ. டன் அளவுள்ள தூள் மருந்துகளையும், ரூ. 2.47 இலட்சம் மதிப்புள்ள 6,000 லிட்டர் அளவு திரவ மருந்துகளையும் உற்பத்தி செய்து விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**4. மீன்பிடிவலை தயாரிப்புத் திட்டம்.**

நைலான் நூலினாலும் பாலித்திலின் நூலினாலும் ஆண்டிற்கு 60 மெ. டன் அளவு மீன்பிடி வலைகளைப் பின்னுவதற்காக கிண்டியில் ஒரு ஆலை அமைந்துள்ளது.

1983–84 மற்றும் 1984–85 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 27.70 இலட்சம் மதிப்புள்ள 30 மெ. டன் அளவும் ரூ. 32 14 இலட்சம் மதிப்புள்ள 32 மெ. டன் அளவும் உள்ள மீன்பிடி வலைகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது.

**5. இலைப்புரத மாவுத்திட்டம், உடுமலைப்பேட்டை.**

சிறு விவசாயிகள் தங்களது உற்பத்திக்கேற்ப விலையைப் பெறவேண்டி கால் நடைகளுக்கும், கோழிகளுக்கும் தேவையான முக்கிய உணவாகிய இலைப்புரத மாவை லூசர்ன் என்ற புல் வகையைப் பக்குவப்படுத்துதல் மூலம் தயாரிக்கும் தொழிலகத்தை முன்னோடியாக உடுமலைப்பேட்டையில் இக்கழகம் அமைத்துள்ளது.

இக்கழகம் 1983–84 ஆம் ஆண்டு (1984 ஜனவரி வரை) 104 மெ. டன் அளவு இலைப் புரத மாவு தயார் செய்துள்ளது. 1983–84-ல் மொத்தமாக 175 மெ. டன் அளவும், 1984–85-ஆம் ஆண்டு 400 மெ.டன் அளவும் உற்பத்தி செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**6. எண்ணெய் பிழிந்தெடுக்கும் திட்டம், போச்சம்பள்ளி.**

ரூ. [illegible] இலட்சம் மதிப்புள்ள போச்சம்பள்ளியில் அமைக்கப்பட்ட சூரியகாந்தி விதைகளிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கும் தொழிற்சாலை 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தனது வர்த்தக ரீதியான உற்பத்தியை துவக்கியது. இவ்வாலையின் திறனை முழுவதும் பயன்படுத்த ஆண்டொன்றிற்கு 12,000 மெ. டன் அளவில் கடலை எண்ணெய் வித்துக்களிலிருந்து எண்ணெய் பிழிய இந்திய அரசின் அனுமதி பெறப்பட்டது.

1981–82 ஆம் ஆண்டு வாங்கிய 2,012 மெ. டன் விதைகளையும் 1982–83 ஆம் ஆண்டு வாங்கிய 2,980 மெ. டன் விதைகளையும் ஒப்பிடுகையில் இக்கழகம் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் வரை வாங்கிய சூரியகாந்தி விதைகளின் அளவு 1,728 மெ. டன் ஆகும்.

1983–84 ஆம் ஆண்டு 2,418 மெ. டன் அளவு விதைகள் பிழியப்பட்டன. 1983–84ன் கடைசி காலாண்டில் மேலும் 1,000 மெ. டன் விதைகள் பிழியப்படவும், 1984–85-ம் ஆண்டில் 12,000 மெ. டன் அளவு எண்ணெய் வித்துக்கள் பிழியப்படவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இக்கழகத்தின் சுத்திகரிக்கப்பட்ட சூரிய காந்தி விதை எண்ணெயான ''சனோலா'' மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகிறது. ''சனோலா'' பாலித்தின் பாக்கெட்டுகளிலும் நிரப்பப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. அண்டை மாநிலங்களான கர்நாடகத்திலும், ஆந்திரப் பிரதேசத்திலும் ''சனோலா'' கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளன.

7. கரைத்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை, நாமக்கல்.

இக்கழகம் செக்கு பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுத்தல் மற்றும் அதன் சம்பந்தப்பட்ட பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்யும் கூட்டுறவுத் துறை இணையகம், நாமக்கல் என்ற நிறுவனத்திடமிருந்து எண்ணெய் கரைத்தெடுக்கும் தொழிற்கூடம் ஒன்றை எடுத்துக் கொண்டுள்ளது. இத்தொழிற்சாலையின் மூலதனம் ரூ. 21 இலட்சமாகும். இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 15 மெ. டன் அளவுள்ள அரிசி தவிட்டிலிருந்து அல்லது 20 மெ. டன் அளவுள்ள பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் கரைத்தெடுக்கும் திறன் கொண்டுள்ளது. 1983–84 ஆம் ஆண்டில் 7,500 மெ. டன் அளவுள்ள கடலைப் பிண்ணாக்கை கரைத்தெடுக்க திட்டமிட்டது. ஆனால் 31—7—1983 வரை 750 மெ. டன் அளவே கரைத்தெடுத்துள்ளது. இதனை நிவர்த்திக்கும் பொருட்டு, தவிட்டிலிருந்து எண்ணெய் பிரித்தெடுக்க முயற்சிக்கப்பட்டு கூலி அடிப்படையில் ஆலையை ஓட்ட முடிவு செய்து, சோதனை ஓட்டமாக விடப்பட்டதில் 1983 டிசம்பர் வரை சுமார் 738 மெ. டன் தவிட்டிலிருந்து எண்ணெய் பிரித்தெடுக்கப்பட்டது. 31—3—1984 வரை மீத காலத்தில் கூலி அடிப்படையில் 500 மெ. டன் தவிட்டிலிருந்து எண்ணெய் பிரித்தெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1984–85 ஆம் ஆண்டில் 7,500 மெ. டன் கடலை பிண்ணாக்கு அல்லது 6,000 மெ. டன் தவிட்டிலிருந்து கூலி அடிப்படையிலோ சொந்தமாகவோ எண்ணெய் பிரித்தெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.



8. கரைத்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை, பொனக்குளம்.

இக்கழகம் காதி மற்றும் கிராமப்புறத் தொழில்கள் வாரியத்தினரால் பட்டுக்கோட்டையில் அமைக்க உத்தேசிக்கப்படிருந்த எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்கூடத்தை ஏற்றுக்கொண்டது. தொழிற் கூடம் அமையவிருக்கும் இடத்தினருகிலேயே மூலப் பொருள் பெறும் வாய்ப்பினைக் கருதியும் பிற்பட்ட மாவட்டங்களுக்கு அளிக்கப்படும அரசுச் சலுகையைப் பெறுவதற்காகவும் இக்கழகம் தொழிற்கூடம் நிறுவ வேண்டிய இடமாகிய தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பட்டுக்கோட்டை என்னும் இடத்திலிருந்து, தஞ்சாவூருக்கு 18 கி.மீ. தள்ளி அமையப்பெற்ற புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த பொனக்குளம் என்ற இடத்திற்கு இதனை மாற்றியுள்ளது.

இவ்வாலை 1984 ஆம் ஆண்டின் மத்தியில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1984–85 ஆம் ஆண்டில் சுமார் 6,750 மெ. டன் அளவுள்ள அரிசி தவிட்டிலிருந்து எண்ணெய் பிரித்தெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

9. பூச்சிகொல்லி மருந்துகளுக்கான மூலப் பொருட்களை தயாரித்தல்.

மெஸர்ஸ் இந்துஸ்தான் இன்செக்டிசைட்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்துடனும், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் மற்றும் கேரள மாநிலங்களின் வேளாண் தொழில்கள் கழகங்களுடனும் கூட்டுத் தயாரிப்பில் இக்கழகம் ஒரு தொழில் முயற்சியை மேற்கொண்டது. ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள கோவூர் என்னும் இடத்தில் உற்பத்தி பிரிவு நிறுவப்பட்டுள்ளது. முதலாவதாக இந்த நிறுவனம் வருடத்திற்கு 3,300 மெ. டன் அளவு பி.எச்.சி. 26 சதவீதம் காமா உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது. இதன் விரிவான திட்ட மதிப்பீட்டை ரூ. 742 இலட்சத்துக்கு இந்திய அரசு அங்கீகரித்துள்ளது. இத்திட்டம் 1984 ஜூன் திங்களில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கழகம் ரூ. 39.76 இலட்சத்தை தனது பங்கு மூலதனமாக இத்திட்டத்திற்கு அளித்துள்ளது.

10. சாண எரிவாயு கலன்கள் செய்தலும், விநியோகமும்.

இந்நிறுவனம் வெவ்வேறு திறனளவுள்ள சாண எரிவாயு கலன்களை காஞ்சீபுரம், திருச்சி கிளைகளில் தயார் செய்து ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக விநியோகம் செய்யும் பணியை மேற்கொண்டுள்ளது. 1983–84-ல் 65 கலன்கள் தயாரிக்கப்பட்டன. 1984–85-ல் 100 கலன்கள் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1984 மார்ச் 21

## தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் 1972 ஆம் ஆண்டில் 220 வட்டார வேளாண்மைச் சங்கங்களும் 12 மாவட்ட சங்கங்களும் இணைந்த மாநில அளவிலான கூட்டுறவுச் சங்கமாக தனது நடவடிக்கைகளை தொடங்கியது.

2. விவசாய, பொறியியல் சேவைகளை, விவசாய சேவை மையங்களைத் தொடங்குவதன் மூலம், கிராமப் புறங்களில் அளித்தலும் விவசாய உபகரணங்கள், கருவிகள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு வாடகை மூலமும், விற்பனை மூலமும் வழங்குவதும் இவ்வமைப்பின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

3. இந்நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் ஒரு சோடியாகும். இதில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 31-1-1984 அன்று ரூ. 22.78 இலட்சங்களாகும். 30-6-1983 அன்று முடிவடைந்த கூட்டுறவு ஆண்டில் இணையம் ரூ. 8,73,105 இலாபம் அடைந்துள்ளது. இதன் கூடுதல் நட்டம் ரூ. 16,81,679 ஆகும். 1983–84 ஆம் ஆண்டில் (ஜனவரி 1984 வரை) 105 வட்டார மையங்களும், 12 மாவட்ட சங்கங்களும் லாபத்துடன் இயங்குகின்றன. மிகவும் நலிந்த நிலையில் உள்ள 65 வட்டார மையங்களைக் கலைப்பதற்கும் மற்றும் 5 மையங்களை அருகில் உள்ள மையங்களுடன் இணைத்து லாபகரமாக இயக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்விணையமும் அதனைச் சார்ந்த சங்கங்களும் சேர்ந்து இதுவரை 656 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளித்துள்ளன.

### இணையமும் மற்றும் அதனைச் சார்ந்த மையங்களின் தற்போதைய பணிகள்.

**1. ஒருங்கிணைப்புத் திட்டம்.**

ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் இணையம் டீசல் என்ஜின்கள் மற்றும் மின்சார மோட்டார் பம்ப்செட்டுகளை நியாயமான விலையில் பிரதம நிலவள வங்கி கடன்தாரர், விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. 1983–84 ஆம் ஆண்டில் 1984 ஜனவரி 31 ஆம் நாள் முடிய 971 டீசல் என்ஜின் பம்ப்செட்டுகளையும் 13 மின்சார மோட்டார் பம்ப்செட்டுகளையும் வழங்கியுள்ளது.



1984 மார்ச் 21].

**2. வியாபார நடவடிக்கைகள்.**

இவ்விணையம், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள சங்கங்களின் மூலமும் நேரடியாகவும் விவசாய இடு பொருட்களையும் மற்றும் வேளாண்மைக் கருவிகளையும் விநியோகம் செய்து வருகின்றது. 1983–84 ஆம் ஆண்டில் ஜனவரி 1984 திங்கள் வரை 28.41 லட்சம் மதிப்புள்ள இடு பொருட்களையும் மற்றும் வேளாண் கருவிகளையும் விநியோகம் செய்துள்ளது. 1984 ஜனவரி திங்கள் வரை இணையத்தைச் சார்ந்த மையங்கள் ரூ. 191.27 இலட்சம் மதிப்புள்ள இடு பொருட்களையும் விவசாய கருவிகளையும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்துள்ளது.

**3. வாடகைப்பணி மற்றும் பழுது பார்க்கும் பணிகள்.**

இணையத்துடன் இணைந்த சங்கங்களிடம் விவசாயிகளுக்கு சேவை செய்வதற்கென 233 டிராக்டர்கள், 183 ட்ரெயிலர்கள், 167 டீசல் என்ஜின்கள், 310 விசைத் தெளிப்பான்கள் மற்றும் 14 பாறை பிளக்கும் கருவிகள் ஆகியவை உள்ளன. அது மட்டும் இல்லாமல் டிராக்டர்களுடன் இணைந்த ட்ரெயிலர்கள் மூலம் வறட்சிப் பகுதிகளில் குடிநீர் விநியோகிக்கும் பணியினையும் மேற்கொண்டது. டிராக்டர்கள் வாடகைப் பணி மூலம் வட்டார மையங்களும் மாவட்ட சங்கங்களும் சேர்ந்து ரூ. 61.9 இலட்சம் ஈட்டியுள்ளது.

இணையம் ஆறு சாலை உருளைகளை வாங்கி கிராமப்புறப் பகுதிகளில் சாலைகள் அமைக்கும் பணியிலும், சீர் செய்யும் பணியிலும் அமர்த்தி சேவை புரிந்து வருகிறது. இதன் மூலம் இவ்வாண்டில் 31—1—1984 முடிய ரூ. 2.43 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது.

**4. தானிய சேமிப்பு குதிர்கள் விநியோகம்.**

மத்திய அரசின் 'தானிய பாதுகாப்பு திட்டத்தின்' கீழ் நவீன தானிய சேமிப்பு உலோகக் குதிர்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் திட்டத்தை இணையம் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்திற்கென ரூ. 57 இலட்சம் கடனாக அரசால் இணையத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இவ்விணையத்தைச் சார்ந்துள்ள மையங்களின் மூலம் 1983–84 ஆம் ஆண்டில் 1—4—1983 முதல் 31—1—1984 வரை 204 உலோகக் குதிர்கள் தயாரித்து விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

டி.2 A 20—25

**எதிர்காலப் பணிகள்.**

இணையம் இனி வருங்காலங்களில் விதை மற்றும் உரம் தெளிப்பான்கள், தட்டு வெட்டிகள் ஆகியவற்றை தேர்ந்து எடுக்கப்பட்ட சில மையங்களின் மூலமாக தயாரித்து விவசாயிகளுக்கு வழங்க திட்டமிட்டுள்ளது. மேலும் தொழில் கூடத்திற்குத் தேவையான இயந்திரங்களை தேர்ந்தெடுக்கப்பட்ட 20 மையங்களுக்கு வழங்கவும் மற்றும் பல விவசாய உபகரணங்களை தயாரிக்கவும் திட்டமிட்டுள்ளது. சிறு நடுத்தர விவசாயிகளுக்கு உதவும் பெரும் திட்டத்தின்கீழ் 20,000 டீசல் என்ஜின்களையும், மின்சார மோட்டார் பம்ப் செட்டுகளையும் இணையம் வழங்குவதற்கு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தயாரிப்பாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் மூலமாக செய்யப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்.**

**கல்வி.**

**1983–84 ஆம் ஆண்டின் சாதனைகள் :**

1. 1983–84 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய பட்டப்படிப்புகள் பல்கலைக் கழகத்தில் தொடங்கப்பட்டன:—

(1) சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் கால்நடை வினையியலிலும், மாமிச சுகாதாரத்திலும் டாக்டர் பட்டம்.

(2) கோயம்புத்தூர் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிர் பாதுகாப்பில் மூதறிவியல் பட்டப்படிப்பு.

(3) கோயம்புத்தூர், வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிர்பாதுகாப்பிலும் தடியன் குடிசையில் மலைப் பிரதேசப் பயிர்களிலும் முதுகலை டிப்ளமாக்கள்.

2. வேளாண் குடும்பத்திலிருந்து வரும் மாணவர்களை ஊக்குவிக்கும் வேளாண் சமுதாயத்தை மேம்படுத்தவும், உழவர்களின் குழந்தைகளுக்காக வேளாண்மை தோட்டக்கலை, வேளாண் பொறியியல், கால்நடை மற்றும் மீன்வளப் பட்டப்படிப்பில் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை இருபதிலிருந்து நாற்பதாக உயர்த்தப்பட்டது.

3. கல்வி சம்பந்தப்பட்ட விவரங்களை சேகரிக்கவும், வேளாண் அறிவியல் கல்வியில் தரம் உயரவும், மாற்று அறிவுரைகள் வழங்கவும் பயிற்சிகளை நல்ல முறையில் நிர்வகிக்கவும் தேவையான அறிவுரைகளை வழங்க பல்கலைக்கழக மட்டத்தில் ஒரு 'கல்விக்குழு' அமைக்கப்பட்டது.



4. வேளாண் விற்பனை நிர்வாக மூதறிவியல் பட்டப்படிப்புக் கல்வி பலப்படுத்தப்பட்டது.

**1984–85 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் :**

1. மாநிலத்தில் ஒரு மூன்றாவது வேளாண் கல்லூரி ஏற்படுத்துதல்.

2. மாநிலத்தில் ஒரு இரண்டாவது கால்நடைக் கல்லூரி ஏற்படுத்துதல்.

3. கோயம்புத்தூர் நீர்வள தொழில்நுட்ப மையத்தில், நீர் நிர்வாகத்தில் வேளாண்மை பொறியியலிலும், வேளாண் அறிவியலிலும் மூதறிவியல் பட்டப்படிப்பு தொடங்குதல்.

4. கோயம்புத்தூர் வேளாண் பொறியியல் கல்லூரியில் அறுவடைக்குப்பின் தொழில்நுட்பம் என்ற மூதறிவியல் பட்ட மேற்படிப்பிற்காக வேளாண் பொறியியல் பட்டப் படிப்பைப் பலப்படுத்தல்.

5. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பால் பண்ணைத் தொழில் நுட்பம், பால் பண்ணை நுண்ணுயிர், பால் பண்ணை இரசாயனம் முதலியவற்றில் புதிய மூதறிவியல் பட்டப் படிப்புக் கல்வியைத் தொடங்குதல்.

6. பல்கலைக் கழகத்தில், மூதறிவியல் பட்டப்படிப்புக் கல்வி மற்றும் ஆராய்ச்சிகளைப் பலப்படுத்தும் பொருட்டு மண் மற்றும் பயிர் நிர்வாக மேம்பாட்டு மையம் ஒன்று ஏற்படுத்துதல்.

7. பல்கலைக் கழகத்தில், மூதறிவியல் பட்டப்படிப்புக் கல்வி மற்றும் ஆராய்ச்சிகளைப் பலப்படுத்தும் நோக்கத்தில் பயிர்ப்பாதுகாப்பு மேம்பாட்டு மையம் ஒன்று ஏற்படுத்துதல்.

8. சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை பராமரிப்பு புள்ளி விவரத் துறையின் கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை பலப்படுத்துதல்.

## 2. ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள்.

வேளாண்மை :

### 1983—84-ஆம் ஆண்டின் சாதனைகள்.

வேளாண் பெருமக்கள் தங்கள் உற்பத்தியைப் பெருக்க 1983-84ஆம் ஆண்டு பதினைந்து பயிர் ரகங்கள் வெளியிடப் பட்டன.

(1) எம். டி.யு. 2 நெல்.
(2) பையூர் 1 ராகி.
(3) கோ. 2 பணிவரகு.
(4) கோ. 5 துவரை.
(5) பையூர் 1 தட்டைப்பயறு.
(6) கோ. 2 மொச்சை.
(7) கோ. 2 நிலக்கடலை.
(8) டி.எம். வி. 5 ஆமணக்கு.
(9) கோ. 1 வாழை.
(10) கோ. 2 மரவள்ளி.
(11) பி. கே. எம். 1 கத்திரி.
(12) எம். டி. யு. 1 பாகல்.
(13) கோ. 2 பீர்க்கங்காய்
(14) கோ. 1 டிசம்பர் கனகாம்பரம்.
(15) கோ. 1 கவுண்டன்.

இவை தவிர பல்வேறு துறைகளில் ஏராளமான அறிவியல் கண்டு பிடிப்புகள் உழவர்களின் நன்மைக்காக வெளியிடப்பட்டன.

வேளாண் பொறியியல் பிரிவில் நில நீர் மேம்பாடு, வேளாண் உழவுக் கருவிகள், இயந்திரங்கள், வேளாண் விளைபொருள் பதனஞ்செய் கருவிகள், வேளாண் எரி சக்தி சாதனங்கள் பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வருடத்தின் கண்டுபிடிப்புகள் கீழ்வருமாறு :

(அ) பவர் டில்லர் உதவி கொண்டு நெல் அறுவடை செய்யும் இப்புதிய கருவி அறுவடைக்கான ஆள் தேவையை வெகுவாக குறைக்கிறது.

(ஆ) மாடு கொண்டு இழுக்கப்பட்டு விதையும் உரமும் ஒருங்கே இடும் கருவி.

(இ) உலர் தானியம் மற்றும் ஊறவைத்த தானியங்களை அரைக்கும் மற்றும் பருப்பு உடைக்கும் ஒரே கருவி.





### விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி ஆய்வு.

விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி ஆய்வு மையம், கிராம வளர்ச்சியின் சமூக பொருளாதார பிரச்சினைகளைப் பற்றிய கல்வி மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களை வளர்க்க கவனம் செலுத்துகிறது. வளர்ந்து வரும் சந்தைகளின் பிரச்சினைகளின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு விவசாய சந்தை நிர்வாகம் என்ற ஒரு புதிய பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தவிர, விவசாய பொருளாதாரத் துறையும், விவசாய விரிவாக்கம் மற்றும் கிராம சமூக இயல் துறையும் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன.

ஊரக முன்னேற்றத்தில் பெண்களின் பங்கினை உற்சாகப் படுத்தும் பொருட்டு பெண்கள் நிர்வாக திட்டம் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது.

### 1984—85 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்.

1. வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சியை வலுப்படுத்துதல்.

2. ஆடுதுறை, பையூர் ஆகிய இடங்களில் சோயா மொச்சை சாகுபடியில் தீவிர ஆராய்ச்சி செய்தல்.

3. புதுக்கோட்டையில் மண்ணின் கடினத்தன்மை மற்றும் மண்ணியல் முறைகளைத் தெரிவு செய்தல்.

4. மதுரையில் நெல் விளைச்சலில் வினையியல் ஆராய்ச்சி செய்தல்.

5. அருப்புக்கோட்டையில் மானாவாரிப் பகுதிக்கு கொத்து மல்லி காய்கறி ரகங்களை உண்டாக்குதல்.

6. சிறுகமணியில் வாழை ஆராய்ச்சி செய்தல்.

7. சேலம், இராமநாதபுரம், மாவட்டங்களில் இரண்டு புதிய பயிர் மருத்துவ மையங்களை ஏற்படுத்துதலும் ஏற்கனவே இருக்கின்ற மூன்று மையங்களைப் பலப்படுத்துதலும்.

8. கோவையில் பண்ணையமைப்பு முறை மற்றும் பண்ணைக் கருவிகள் பற்றி ஆராய்ச்சி செய்தல்.

9. பழனி மலை மற்றும் தடியன்குடிசையில் மலைவாழ் மக்களின் சமூகப் பொருளாதார ஆராய்ச்சி செய்தல்.

[1984 மார்ச் 21

10. கோவையில் மண், பயிர்வளம் முறைகளில் மேல்நிலை மையம் அமைத்தல்.

11. பட்டுக்கோட்டை, பாலூர், கோவில்பட்டியில் விதை உற்பத்தித் திட்டங்களை வலுப்படுத்துதல்.

12. வேலூரில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் துவங்குதல்,

13. கோயம்புத்தூரில் பயிர் பாதுகாப்பின் ஆய்வுகளில் மேல்நிலை நிலையம் அமைத்தல்.

### கால்நடை மருத்துவம் மற்றும் கால் நடை இயல்.

உழவர்களுக்கும் நிலமற்ற தொழிலாளர்களுக்கும் கூடுதல் வருமானம் தரக்கூடிய கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் தீவன உற்பத்தி இவற்றைப் பற்றிய ஆராய்ச்சிகளை நான்கு கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு ஆராய்ச்சி நிலையங்கள் செய்து வருகின்றன.

நடப்பு ஆண்டில் முட்டை மற்றும் இறைச்சிக்கென வாத்துக்களையும் ஜப்பானிஸ் குயில்களையும் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சிக்கென எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. தமிழ் நாட்டுக்குகந்த உயர்ரக வாத்து இனத்தை உருவாக்க ஒரு வாத்து இனப் பெருக்கத் திட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது.

சாண்டிநெல்லாவிலுள்ள ஆடுகள் இனப் பெருக்க ஆராய்ச்சி நிலையத்தில் உழவர்களுக்கு வருவாய் தரும் இறைச்சி தரக்கூடிய முயல்களை உருவாக்க ஒரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இனப் பெருக்கத்திற்கென உபயோகப்படுத்தப்படும் காளைகளின் குறை இனப் பெருக்கத் திறன் மற்றும் மலட்டுத் தன்மைக்கு காரணம் எனக் கருதப்படும் குரோமோசோம்களின் குறைகளை அறிய, சென்னை கால்நடைக் கல்லூரியின் மரபியல் துறையில் உட்கருவியியல் ஆராய்ச்சியில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தற்போது கிடைக்கும் கால்நடை நோய் நச்சுயிர் தடுப்பு மருந்துகளின் தரத்தை உயர்த்தவும் சிறந்த தடுப்பு மருந்துகளை உருவாக்கவும், சென்னை கால்நடைக் கல்லூரியில் ஒரு புதிய தடுப்பு மருந்து ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது



1984 மார்ச் 21]

கீழ்க்காணும் புதிய திட்டங்கள் 1984-85-ல் நிறைவேற்றுவதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ளன :—

(1) சென்னை கால்நடைப் பராமரிப்பு—புள்ளியியல் துறையை விரிவுபடுத்துதல்.

(2) கால்நடை வினையியல் துறையில் டாக்டர் பட்டப் படிப்பைத் தொடங்குதல்.

(3) இராமநாதபுரத்தில் மண்டல ஆடு வளர்ப்பு ஆராய்ச்சி மையம்.

(4) தஞ்சாவூர் மாவட்டத்தில் கால்நடை ஆராய்ச்சி மற்றும் பால்வள நிறுவனம் ஏற்படுத்துதல்.

(5) (i) பால் பண்ணை தொழிலில் நுட்பவியல்;

(ii) பால் பண்ணை நுண்ணுயிரியல்; மற்றும்

(iii) பால் பண்ணை வேதியியல் ஆகிய துறைகளில் மூதறிவியல் பட்டப் படிப்பைத் தொடங்குதல்.

(6) புரோட்டு ஜுவாலஜி மற்றும் ஹில்மின்தாலஜி ஆகிய துறைகளில் தனிப் பகுதிகளை உருவாக்குதல்.

(7) அறுவை சிகிச்சைப் பகுதியில் உள்ள கதிர் இயக்கப் பகுதியை விரிவாக்குதல்.

(8) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் உடல் கூறியல் துறையில் திசுவியல் மற்றும் திசுவேதியியல் பகுதிகளை அமைத்தல்.

### 1984—85 ஆம் ஆண்டுக்கான திட்டம்.

நடப்பில் உள்ள திட்டப் பணிகள் 1984-85-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**விரிவாக்க கல்வி :**

1983-84 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், 10½ டன் நெல், 1 குவிண்டால் சிறு தானியம், 24 டன் பயறுவகை, 60 குவிண்டால் பருத்தி, 32 டன் நிலக்கடலை, 7 டன் சூரியகாந்தி, 50 டன் கரும்பு, 2 குவிண்டால் காய்கறி சம்பந்தமான ஆராய்ச்சி விதைகளை உற்பத்தி செய்தது.

136238

தொடர்ந்து 1984-85லும் வேளாண்மை அறிவியல் நிலையமும், [illegible] மையங்களும், பயறு வகை, எண்ணெய் வித்து தீவிர ஆராய்ச்சி பயிற்சித் திட்ட வல்லுநர்களும் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பின் தங்கியவர் மேம்பாட்டுத் திட்ட அலுவலர்களும், ஆய்வுக்கூடத்திலிருந்து பண்ணை திட்ட நிபுணர்களும் தத்தம் திட்டங்களைத் தீவிரமாகச் செயல் படுத்துவார்கள்.

பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தின்கீழ் 36 பயிற்சிகள் 12 தலைப்புகளில் நடத்தப்படும். மேலும் அதிக அளவு பதிவு நாடா பாடங்களும் ஸ்லைடுகளின் மறுபதிப்பும் திட்டமிடப் பட்டுள்ளது. வானொலி, தொலைக்காட்சி மூலம் செய்திகளைப் பரப்பும் திட்டம் தீவிரமாக்கப்படும்.

**தமிழ்நாடு கரும்புப் பண்ணைக்கழகம், வடபாதிமங்கலம்.**

1974-ல் நிறுவப்பட்ட தமிழ்நாடு கரும்பு பண்ணை கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடிகள் ஆகும். இது பங்குத்தொகை ஒன்றுக்கு ரூ. 100 வீதம் இரண்டு லட்சம் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இன்றுவரை இக்கழகத்திற்கு அரசிடமிருந்து வழங்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 27.50 இலட்சங்களாகும்.

V211.31 N84

இக்கழகத்தின் வசம் உள்ள மொத்த நிலத்தின் விஸ்தீரணம் 4,051.74 ஏக்கர்கள் ஆகும். 13 மையங்களாகப் பிரிக்கப் பட்டுள்ள இந்த நிலங்கள் அனைத்தும் தஞ்சாவூர் மாவட்டம், நீடாமங்கலம், திருத்துறைப்பூண்டி மற்றும் திருவாரூர் தாலுக்காக்களில் அடங்கியுள்ளன.

N84-[illegible]-2 [illegible]

இக்கழகம் தோன்றிய காலந்தொட்டு, 1974-75, 1980-81-ம் ஆண்டுகள் நீங்கலாக, மற்றைய ஆண்டுகளில் நஷ்டத்தையே அடைந்துள்ளதால், 1981ஆம் ஆண்டு இக் கழகத்தின் நடைமுறைகளைப் பரிசீலனை செய்ய நிபுணர்கள் குழு ஒன்றை அரசு அமைத்தது. இக்குழு கழகத்தின் செயல்முறைகளை நன்கு ஆராய்ந்து இக்கழகத்தின் தேவைகளை அரசுக்கு பரிந்துரை செய்ததுடன் இக்கழகம் அதன்படி செயல்பட்டு நன்கு முன்னேற்றம் அடையவும் வழி வகுத்துள்ளது. நிபுணர்கள் குழுவின் பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன.